
# அருளமுதம்

ஒரு ஆவணத் தொகுப்பு



இது ஒரு சாதாரண
புத்தகமல்ல,
தாய் மண்ணின்
சரித்திர ஆவணம்.

தொகுப்பாசிரியர்:
கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா, டென்மார்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே................


1. வேண்டுதல் ... ... ... 6
2. வேலணை பெருங்குளம் முத்துமாரி ... ... ... 7
3. அன்னைக்கே படையல் ... ... ... 8
4. சமர்ப்பணம்
5. முன்னுரை ... ... ... 9
6. ஆசிச் செய்தி ... ... ... 11


## வாழ்த்துக்கள்


7. திரு. ஆ. சிவநேசச்செல்வன் அளித்துள்ள வாழ்த்துச் செய்தி ... 12
8. திரு. எஸ். பீ. சாமி அளித்துள்ள வாழ்த்துச் செய்தி ... 16
9. Dr. சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் (அவுஸ்திரேலியா) ... 18
10. திரு. ம. கணேசக்குருக்கள் (மாவை ஆதீனம்) ... ... 19
11. திரு. க. சிற்றம்பலம் (கனடா) அளித்துள்ள வாழ்த்துச் செய்தி ... 21
12. திரு. கி. செ. துரை (டென்மார்க்) அளித்துள்ள வாழ்த்துச் செய்த... 22
13. திருமதி. சத்தியபாமா சிற்றம்பலம் (கனடா)... ... ... 23
14. திரு. ச. குமரேசையா (கனடா) அளித்துள்ள வாழ்த்துச் செய்தி... 24
15. திரு. மனோவசந்த் (டென்மார்க்) அளித்துள்ள வாழ்த்துச் செய்தி... 25
16. திரு. க. சரவணநாதன் (தபாலதிபர்) அளித்துள்ள வாழ்த்துச் செய்தி 29
17. ந. ஜெகநாதன் (வே. பெ. மு. அ. கோவில் - தலைவர்) ... 31
18. திருமதி. விக்னா பாக்கியநாதன் B.A (ஜேர்மனி) ... ... 33
19. **தொகுப்பாசியரின் இதயத்திலிருந்து...** ... ... 34
20. **வரலாற்று தொகுப்பு** ... ... ... 40


## தொண்டால் நிலைத்த தொண்டர்கள்


21. ஞானி ஸ்ரீலஸ்ரீ இ. சோமசுந்தரஐயர் (கறுவல் ஐயர்) ... 55
22. பிடி அரிசி தொண்டர் பிள்ளையினார் ... ... ... 57
23. சிவபக்தர் செல்லப்பா சாமியார் ... ... ... 60
24. திருத்தொண்டர் க. தில்லையம்பலம் ... ... ... 62
25. ஸ்ரீலஸ்ரீ பிரம்மஸ்ரீ பொன்னுச்சாமி குருக்கள் ... ... 66




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மன் பற்றிய கட்டுரைகள்


26. அன்னை முத்துமாரியும் (சோமாஸ்கந்தக் குருக்கள்)... ... 69
27. வேலணை நெடுங்குள முத்துமாரி அம்மை (ச. மகாலிங்கம்)... 73
28. எங்கள் முத்துமாரி அம்மைக்கு (பண்டிதர் மா. மாணிக்கம்) ... 77
29. அன்னையின் கருணை (ம. கணேசக்குருக்கள் - மாவை ஆதினம்) 80
30. பெருங்குளத்தில் அன்னை முத்துமாரியின் அருளாட்சி (க. நவரட்ணம்) 86
31. **வேலணைக்கிராம சிறப்பின் பங்காளிகள் (பொன்னண்ணா)** 92


## முத்துமாரிஅம்மன் பக்திப் பஜனை பாமாமலைகள்


32. சீர்தங்கு வேலணை பெருங்குளம் ... ... ... 101
33. முத்துமாரி அம்மன் பெயரில் திருவூஞ்சல் ... ... 102
34. தேரேறி வீதி வரும் முத்துமாரி ... ... ... 107
35. மாரி வாறாவாம் முத்துமாரி வாறாவாம் (பொன்னண்ணா) ... 109
36. அம்மா வரமது தந்திடுவாய் (பொன்னண்ணா) ... ... 110
37. பெருங்குளத்து மாரியம்மன் புகழ் பாடுவமே (பண்டிதர் க. இராசையா) 111
38. வருவாய் வருவாய் முத்துமாரி (பொன்னண்ணா) ... ... 113
39. தாயே முத்துமாரி (பொன்னண்ணா) ... ... ... 114
40. அம்மன் வேண்டுதல் (பொன்னண்ணா) ... ... ... 115
41. தேர் அமரும் முத்துமாரி (வைத்திய கலாநிதி சி. இராசரட்ணம்).. 116
42. வினைதீர்ப்பாள் அடிபணிவோம் (கவிஞர் தில்லைச்சிவன்) ... 119
43. வரமளிப்பாய் தாயே (விக்னா பாக்கியநாதன்) ... ... 121
44. எங்கள் முத்துமாரி (சிவாஜி) ... ... ... 122
45. வேலணை முத்துமாரி அம்மன் கீர்த்தனை (பொன்னண்ணா)... 125
46. முத்துமாரி கீர்த்தனை (பொன்னண்ணா) ... ... ... 129
47. பெருங்குளத்தம்மையும் பெருங்கலைச் சுடர்களும் (ச. குமரேசையா) 130
48. திருவிரட்டை மணிமாலை (ச. குமரேசையா) ... ... 133
49. அம்பாள் கீர்த்தனை பாடல் (பொன்னண்ணா) ... ... 140
50. ஸ்ரீ முத்துமாரி அம்மன் அந்தாதி ... ... ... 141
51. தவிடுதின்னி பிள்ளையாரே (பொன்னண்ணா) ... ... 143
52. பெரும்படை ஐயனார் (பொன்னண்ணா) ... ... ... 144
53. கற்பகவல்லி (மா. த. ந. வீரமணிஐயர்) ... ... ... 145




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. பாப்பா பாட்டு (பாரதியார்) ... ... ... 146
55. வேலணை திருநாடு (பொன்னண்ணா) ... ... ... 147
56. ஒற்றுமை கீதம் ... ... ... 148
57. கற்பூர நாயகியே ... ... ... 149
58. தையும் பிறக்க ... ... ... 152
59. எடுப்பு (கவிஞர் பரம்) ... ... ... 153
60. தலபுராணம் ... ... ... 154

## வேலணைக் கலைக் கோவில்கள்

61. வேலணை கிழக்கு ம.வித்தியாலயம் (மு. அதிபர் க.சிவராமலிங்கம் - கனடா) 155
62. வேலணை மத்திய மகாவித்தியாலயம் (சு. சீவரட்ணம் - வேலணை) ... 161

## சிந்தனைத் தொகுப்பு

63. சின்முத்திரை ... ... ... 166
64. தீயசக்திகள் (பொன்னண்ணா) ... ... ... 168
65. ஐயம் தெளிவோம் (சிவஸ்ரீ சோமாஸ்கந்தா குரு) ... ... 170
66. கோவிலில் ஏன் தேங்காய் உடைக்கின்றோம் (சிவஸ்ரீ சோமாஸ்கந்தா குரு) 171
67. தற்கொலை செய்வது பெரும் பாவம் (பொன்னண்ணா) ... 172
68. உங்கள் வாழ்க்கை (அன்னை சாரதாதேவி) ... ... 173
69. நடராஜர் திருத்தாண்டவம் ... ... ... 175
70. சைவத்தால் வளர்கிறோம் சைவத்தை வளர்ப்போம் ... 176
71. கடவுளை எப்படி வாழவைப்பது ... ... ... 180
72. எது தமிழ்த் தொண்டு (என் ஸ்ரீநிவாஸன்) ... ... 182
73. காஞ்சி ஸ்ரீசங்கர மடம் ... ... ... 184
74. ஸ்ரீ சாரதா தேவியார் உபதேசங்கள் ... ... ... 186
75. கலாபீடம் ... ... ... 187
76. பூச்சியத்துக்குள்ளே ஒரு இராச்சியம் ... ... ... 189
77. பிள்ளையாரிடம் மாட்டிக்கொண்ட சனீஸ்வரனார் (பொன்மணி) 191
78. பிரம்மத்தை அறிந்தவன் பிராமணன் (Dr. ஸ்ரீதரன் - U.K) ... 193
79. சிரிப்பை மறந்த மனிதர்கள் ... ... ... 198



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவில் வழிபாட்டு வழிகளும் திருமண கலாச்சார முறைகளும்


80. திருக்கோவில் பூசை வழிபாட்டு முறை ... ... ... 202
81. பிரார்த்தனைகள் ... ... ... 212
82. வழிபடும் முறை (கிருபானந்த வாரியார்) ... ... ... 214
83. தினவழிபாட்டுமுறை (பொன்னண்ணா) ... ... ... 216
84. கும்பாபிஷேகம் ... ... ... 219
85. திருவிளக்கு பூசை (R.P.B.S. மணியன்) ... ... ... 221
86. உருவவழிபாடு (ஸ்ரீ அபிநய வித்யா தீர்த்தர்) ... ... 223
87. ஸ்ரீ ராமன் ... ... ... 225
88. சிவனுக்கு விருப்பமான நாள் ... ... ... 229
89. திருமண பொருத்தம் (த. ம. இராமகிருஷ்ணன்) ... ... 230
90. இந்து சமய திருமண சடங்கு பற்றியது .. ... ... 231


## சான்றோர் சொல்லமுதம்


91. சான்றோர் சொல்லமுதம் ... ... ... 242
92. தத்துவ முத்துக்கள் (க. மனோகரன் வீபோ) ... ... 243
93. பூ என்றால் அன்பு (சிவஸ்ரீ சோமாஸ்கந்தா குரு) ... ... 244
94. மறுபிறவி (சிவஸ்ரீ சோமாஸ்கந்தா குரு) ... ... ... 245
95. வாழைப்பழம் (பொன்மணி) ... ... 246
96. புங்கையூர் கண்ணகி அம்மன் கோவில் வரலாறு... ... 247
97. பாவமே வராமல் இருக்க வழி இல்லையா? ... ... 248
98. வாழ்க்கை ... ... ... 249
99. முக்கியமான மூன்று ... ... 250
100. மூன்று எச்சரிக்கைகள் ... ... ... 251
101. குருத்தோலை மாவிலைத் தோரணங்கள் (S. தேவதாசன்) ... 252


## ஆன்மீக கட்டுரைகள்


102. விநாயகர் வடிவில் சில விபரம் ... ... ... 255
103. சர்வம் சத்திமயம் (தம்பி புவனேந்திரன் - ஜேர்மனி ... ... 262
104. திருக்கோவில் (குன்றக்குடி அடிகளார் - தமிழ்நாடு)... ... 265




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105. இந்து மதம் கூறும் பாவச் செயல்கள் (பொன்னண்ணா) ... 273

106. இந்து சமயத்தில் பெண்களின் கடமையும் இடமும் ... 277
(மனோன்மணி சண்முகதாஸ் M.A)

107. நமது சமயங்கள் (சீ. கிருஷ்ணன் - சிங்கப்பூர்) ... ... 285

108. கந்தபுராணம் ஓர் அறிமுகம் (பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியம்)... 291

109. விஞ்ஞான நோக்கில் இந்துமதம் (பிரம்மஸ்ரீ விஸ்வ நாராயண சர்மா) 298

## பஞ்சபுராண பதிகங்கள்

110. பஞ்ச புராணம் ... ... ... 302

111. விநாயகர் அகவல் ... ... ... 305

112. சிவபுராணம் ... ... ... 307

113. திருப்பள்ளி எழுச்சி ... ... ... 310

114. திருவெம்பாவை ... ... ... 313

115. திருப்பொற்சுண்ணம் ... ... ... 319

116. அபிராமி அந்தாதி . ... ... 324

117. சரஸ்வதி துதி (சகல கலாவல்லி மாலை)... ... ... 336

118. வெள்ளைத் தாமரை ... ... ... 339

119. கந்தசஷ்டி கவசம் ... ... ... 340

120. திரு ஏகம்பமாலை ... ... ... 348

121. கோவில் திருவகவல் ... ... ... 349

122. மீனாட்சி பிள்ளைத்தமிழ் ... ... ... 350

123. அபிராமி அம்மைப்பதிகம் ... ... ... 351

124. திருவங்கமாலை ... ... ... 352

125. மங்களம் மங்களம் ... ... ... 354



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டுதல்



வேழமுகத்து விநாயகன் அடிதொட்டு
வாழ்ந்த மண்ணின் வரலாறு பதிந்திட
கேட்டேன் உன்துணை பார்பதிபாலகா
காத்தருள் தந்திடு கஜமுகநாதனே.....!



தாயே கலைவாணி வெண் தாமரைப் பூவாணி
தாய் மண்ணின் பெருமைதான் எழுத - உன் பிள்ளை
தலை நிமிர்ந்து வந்(து) உள்ளேன் தாயே
தட்டாமல் என் நினைப்பில் தமிழாக நின்றிடம்மா.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலணை ஸ்ரீ பெருங்குளம் முத்துமாரி**
**அம்பாள் பெயரால் பாடப்பட்ட**
**பக்திப் பஜனைப் பாமாலையும்**
**தேவார, தோத்திர, அம்பிகை பதிகங்களும்**
**வேலணை, அம்மன் ஆலய வரலாறும் கொண்ட**

# "ஒரு ஆவணத் தொகுப்பு"

தொகுப்பாசிரியர்

**வேலணையூர் கவிஞர் பொன்னண்ணா**

அவர்கள்

வெளியீட்டாளர்

**திருமதி. பொன்மணி அவர்கள்**

அறிவகம்

டென்மார்க்

அன்பளிப்பு

**பொன்னண்ணா குடும்பம்**

(பொன். தியாகராஜா)

(டென்மார்க், லண்டன், இலங்கை)

*உரிமை*

*வேலணை முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபையினர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்னைக்கே படையல்

அன்னை மடியிலே தினமும் தவழ்ந்தோம்
அன்னை அருளிலே தினமும் நனைந்தோம்
இன்றும் அன்னையை நெஞ்சில் நினைத்தோம்
இன்பத் தமிழிலிலே அன்புபடையல் படைத்தோம்.....!
ஏற்றிடு தாயே அருள்கரம் நீட்டி
காத்திடு தாயே தமிழ் அமுதூட்டி !

**வேலணையூர் பொன்னண்ணா**
**குடும்பம்**
**டென்மார்க் இலண்டன்**

சீர்தங்கு வேலணை பெருங்குளம் உறைந்த
பேர்பராசக்தி பெருங்குளம் முத்து மாரி.....!
பார்பதி பராசக்தி பரமசிவன் தேவி
பங்கயர்க்கன்னி உன் அபயம் அருள் தாயே !
கார்முகில் காணாத பயிராகி நொந்தால்
காப்பாற்றவே உன் அருள் ஊற்றைச் சுரப்பாய் உன்னடியர்
நீர்வற்று குளமாகி நின்று துயர் உற்றால்
நின்கருணை அருள்மாரி தந்திடுவாய் தாயே.....!


ஓம் சக்தி ஓம்....! ஓம்சக்தி ஓம்....! ! ஓம்சக்தி ஓம்....! ! !
ஓம் பராசக்தி....! ஓம் பராசக்தி....! ! ஓம் பராசக்தி....! ! !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

திரு. பொன். தியாகராசா (பொன்னண்ணா) அவர்கள் எனது வேலணைக் கிராமத்தைச் சேர்ந்தவர். சிறுவயது முதல் அவரைத் தெரியும். அவர் துடிப்பும், கிராமப் பற்றும், தொழில் முயற்சிகளில் சிறந்த ஈடுபாடு கொண்டவர். நாட்டு நிலைமைகளால் இடம் பெயர்ந்து டென்மார்க்கில் குடியேறி அங்கு அவரது முயற்சியால் சமூகத்தில் முன்னிலை வகிப்பதையறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். தனக்கு புதிய நல்வாழ்வு கொடுத்த டென்மார்க்கின் மீது மிகுந்த பற்றுக் கொண்டவராக இருப்பினும், தான் பிறந்த நாடு, பிறந்த கிராமம், தனது இனம், சமயம் ஆகியனவற்றை மறக்காமல் அவைகளை வளம்படுத்த வேண்டுவது தனது கடமையாகவும், விருப்பமாகவும் கொண்டு செயல்படுகின்றார். டென்மார்க்கில் இருந்து கொண்டு அவர்களுக்கு பிரச்சினைகள் கொடுக்காது, அவர்களின் உதவியுடன் எம்மவர்களையும் ஒற்றுமைப்படுத்தி, தமிழ், தமிழர் கலாசார விழுமியங்களை முன்னெடுப்பதில் வெற்றி கண்டுள்ளார். சமூக சேவையில் முன்னணிக்கு வந்து கொண்டிருக்கின்றார்.



வேலணைக் கிராமத்தில் அமைந்துள்ள பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலயம் பற்றி, அதனது வரலாறு, அதனுடன் இணைந்த சிவாச்சாரியர்கள் குறிப்பாக **"வேலணை மக்களால் அன்புடன் அழைக்கப்படும் கறுவல் ஐயர்"** சோமசுந்தரம் ஐயர் பற்றியும், பெரியோர்கள் பற்றி எழுதவேண்டுமென்ற முயற்சியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை எழுதினார். இந் நூலை எழுதுவதற்கு, தரவுகள் சேர்ப்பதில் பெரும் சிரமத்துக்குள்ளானார்கள். இத்தகைய கடின முயற்சியால் வெளியிடுவது எல்லோருக்கும் மிக்க மகிழ்ச்சியாகும். இந்நூலில் சில தரவுகள் விடப்பட்டிருக்கலாம். ஆனால் இதனைத் தொடர்ந்து வரும் நூல்கள் இதனை அடியொற்றி மேலும் பல தரவுகளை, உண்மைகளை வெளிக்கொணர வழிவகுக்கும். இவரது முயற்சி பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலயம், அதனுடன் இணைந்த சிவாச்சாரியர்கள், வேலணை மக்களின் பக்தி கோயிற் திருவிழாக்கள், சமூகச் சடங்குகள், சமூக ஊராட்டம் போன்றவற்றை விளங்கிக் கொள்ள உதவிபுரியும்.

மேலும் இந்நூலில் சைவ சித்தாத்தம், மற்றும் தேவாரம், திருவாசகம், தெரிவு செய்த பக்தி பாடல்கள் இடம்பெற இருப்பது மிகவும் பயனுடையதாகும்.

பல நெருக்கடிக்குள், நேரம் ஒதுக்கி, இந்நூலை சிறப்பாக எழுதி வெளியிட்ட பொன் தியாகராசாவுக்கு (பொன்னண்ணா) சைவத் தமிழ் உலகமும், வேலணை மக்களும் குறிப்பாக பெருங்குளம் அம்பிகை அடியார்களும் பெரும் கடமைப்பட்டவர்களாவர். இவர் மென்மேலும் பல நூல்களை தமிழிலும், டானிஸ் மொழியிலும் வெளிக் கொண்டுவர அம்பிகை அருள் அவருக்கு கிட்ட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

***பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை***

*புவியியற் பேராசிரியர்*

*முன்னாள் துணை வேந்தர் 1996 - 2003*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,*

*யாழ்ப்பாணம், இலங்கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராம ஜெயம்

# ஆசிச் செய்தி

கொழும்பு முகத்துவாரம் அருள்மிகு ஸ்ரீ பூமிநீளா பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் **"சிவாச்சாரிய திலகம்"** பிரம்மஸ்ரீ பொ. வரதராஜ சிவாச்சாரியார்.

ஈழத்திரு நாட்டின் மிகப் பழமை வாய்ந்த, மிகச் சக்தியுடைய திருவருள் பொழியும் ஆலயங்களில் யாழ் மாவட்டம், ஊர்காவற்றுறைத் தொகுதியிலே வேலணை என்னும் கிராமத்தில் வேண்டுவார் வேண்டுவதை வாரி வழங்கும் அன்னை அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகி பாமர ஜன பாலினி அருள் மிகு அன்னை **"ஸ்ரீ முத்துமாரி அம்மன்"** தேவஸ்தானம் முதன்மையானது. இங்கு மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற வகையில் கீர்த்தியுடன் விளங்கும் இவ்வாலயம் உலகில் ஆன்மாக்களுக்கு அருள் மழை பொழியும், அருள் மாரியாக வேலணை பதியிலே கோவில் கொண்டு எழுந்தருளி பரிபாலனம் செய்து வருகின்றாள். இதன் படி இவ்வாலய வரலாறு மலராக வருவது மிகவும் அவசியம். நமது சைவ மக்கள் செய்த புண்ணியமாக இந்த மலர் மலருகின்றது. அம்பிகையின் கீர்த்தியையும், அருளையும் உலகம் முழுவதும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் அறியும் வண்ணம் செய்வதற்கு இது ஓர் செயலாகும். இதனை அம்பிகை அடியவர் ஒருவர் வரலாற்று மலராக வெளியிட எண்ணிய எண்ணமே அம்பிகையின் அருள் கடாட்சமாகும். அவருக்கும், அன்னாரின் குடும்பத்தாருக்கும், ஆலய நிர்வாகஸ்தர்களுக்கும் சைவப் பெரும் மக்களுக்கும் இவ்வாலயத்தில் எனது தந்தையார் அமரர் பிரம்மஸ்ரீ பொன்னுச்சாமிக் குருக்கள் அவர்களுடன் நானும் சிறு பிராயத்தில் இருந்து அன்னையின் அரவணைப்பில் வளர்ந்து இன்று ஓர் சிவாச்சாரியார் ஆக இருக்கிறேன் என்ற வகையில் அம்பிகையின் பரிபூரண கிருபாகடாட்சம் கிடைக்க பிரார்த்தித்து வாழ்த்தி ஆசி கூறி அமைகின்றேன்.


**"ஓம் சக்தி"**

*இல. 100, ஆலய வீதி, முகத்துவாரம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்த மண்ணை மனதார நேசிக்கும் கவிஞர் பொன்னண்ணாவின் ஆவணத்தொகுப்பு



இப்பொழுது புலம் பெயர்ந்த வாழ்வின் மத்தியில் வாழும் பல்லாயிரக் கணக்கான மக்கள் தமது முகவரிகளைத் துலைத்த மனிதர்களாகிப் போயுள்ளனர். உலகில் எங்கு தான் வாழ்ந்தாலும், சொந்த மண்ணை நினைத்து ஏங்கும் ஏக்கங்கள் நெஞ்சுள் புதைந்த நினைப்புகளாகிப் போயுள்ளன. தமிழ் பேசும் மக்கள் இன்று வரலாற்றைத் தேடும் மக்களாகிப் போயுள்ளனர்.

தொலைந்து போய் கொண்டிருக்கின்ற, அரசியல் சமூக பொருளாதார கலாசாரங்களின் மத்தியிலே, வேலணை பெருங்குளம், முத்துமாரி அம்மன் கோயில் கொண்டிருக்கும் பிரதேசத்தை மையமாகக் கொண்டு கவிஞர் பொன்னையா தியாகராஜா, மேற்கொண்ட ஆவணத் தொகுப்பு **அருளமுதமாக** வெளியிடப்பட்டுள்ளது. கவிஞராகவும் எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் வாழ்ந்து சிந்தனைத் தெளிவோடு செயற்படுபவர் தான் யாவராலும் அன்போடு அழைக்கப்படும் கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா.

நீண்ட காலம் டென்மாக்கில் வாழ்ந்தாலும் அவர் இந்த ஆவணத் தொகுப்பின் மூலமாக மேற்கொண்டுள்ள முயற்சி, சென்ற காலத்தின் பழுதிலாந் திறத்தையும் தாம் பிறந்து வளர்ந்த மண்ணையும், மண்ணின் மைந்தர்களையும், ஆணிவேர்களையும் தேடும் ஒரு அரிய முயற்சியாகியுள்ளது. சற்று கூர்மையாக அலசினால், கவிஞர் பொன்னண்ணா, தமது "பொக்குள் கொடியை" அறவிடாது தாய் மண்ணின் புகழை விளக்கும் மாமனிதராகியுள்ளமையை நினைவுகூரவேண்டும்.

சில ஆண்டுகளின் முன்னர் வேலணையூர் தந்த கவிஞர் தில்லைச்சிவன் வேலணைத்தீவு புலவர்கள், அறிஞர்களின் வரலாற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்க வெளியீடாக வெளியிட்டிருந்தார். அன்பர் தில்லைச் சிவனோடு இணைந்து நீண்ட காலத்தின் முன்னர், **"தமிழன்"** என்ற பத்திரிகையை வெளிக்கொணர்ந்த தியாகராஜா என்ற இளைஞர் தான் இந்தக் கவிஞர் பொன்னண்ணா.

சொந்த பந்தங்களை எல்லாம் இழந்து வாழ்க்கைச் சுழலில் சிக்கியுள்ள தமிழ் பேசும் மக்கள், வடகிழக்குப் பிரதேசங்களில் குவிந்துள்ள முள்ளுப் பற்றைகளின் மத்தியில் வாழ்வின் அத்திபாரங்களையே தேடவேண்டிய கால கட்டம் இது. இலங்கையின் பாரம்பரிய கலாசார வரலாற்றையே சீரழித்த போர்த்துக்கேயராட்சிக் காலம் முதல், ஜனநாயகம் என்ற பெயரிலான இப்போதைய பேரினவாத ஆட்சிக் காலம்வரை தமிழினம் எதிர்நோக்கியுள்ள கலாசாரச் சீரழிவுகளில் இருந்து விடுபடுவதற்கு, நிறுவன ரீதியான முயற்சிகளுக்கு அப்பால் தனி மனித முயற்சிகள் தான் அவசியமானவை. இதற்கு ஒரு முன்னோடியாகவும், வழிகாட்டாகவும் அன்பர் கவிஞர் பொன்னண்ணாவின் இந்த அருமருந்தன்ன தொகுப்பு முயற்சி அமைந்துள்ளது.

வேலணையூர் பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோயில் வரலாறு பழமை வாய்ந்தது. எவ்வளவுதான் நெருஞ்சி முள்ளுப் பற்றைகள், நாகதாளிகள், மண்புற்றுக்கள் வளர்ந்து மூடினாலும், அம்மனின் அருளாட்சி அங்கு தொடர்கின்றது. எங்கள் வாழ்வும் வளமும், மங்காத தமிழும், சைவமும், கலாசாரமும் தான் என்று கூவவேண்டும் என்ற ஆதங்கத்தோடு கவிஞர் பொன்னண்ணாவின் ஆவணத்தொகுப்பு, எதிர்காலத் தேடல் முயற்சிகளுக்கெல்லாம் அடியெடுத்துக் கொடுக்கும் பெருவித்தாகவும் விருந்தாகவும் அமைந்துள்ளது.

வாழ்வு தேடி வீட்டைவிட்டு ஓடினாலும், தாய்தந்தையுடன் வாழ்ந்து நின்று நிலாவி விளையாடிய மண்ணை, நிலத்திலே குந்தியிருந்து கூத்தாடிய வேப்பமர நிழலை, குடியிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டை, கும்பிட்ட கோவிலை, படித்த பள்ளிக்கூடத்தை, யாவற்றுக்கும் மேலாக சொந்த ஊரையும், உறவுகளையும் நினைத்து ஏங்கும் ஒரு "ஏக்கப் பிரயாணத்தின்" அற்புதமான வெளிப்பாடாக இந்த அருளமுதம் தொகுதியை கவிஞர் பொன்னண்ணா அரிதின் முயன்று தொகுத்துள்ளார்.

எல்லாமே இப்பொழுது விடுபட்டுப் போயுள்ள நிலைமையிலே புலம் பெயர்ந்து வாழ்பவர்கள் அனைவருமே ஒருவரை ஒருவர் காணும்போது "ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்பதும், உசாவுவதும், கலங்குவதும் வழமையாகிப் போய்விட்டது.

ஈழத்தின் பண்டைய வரலாற்றைத் தொல்பொருளாய்வுகளும், வரலாற்றாராய்ச்சிகளும் தெளிவுபடுத்தி வருகின்றன. பெருங்கற்காலப் பண்பாட்டைச் சேர்ந்த காலம் முதல் இக்காலம் வரை நடைபெற்ற, நடைபெற்றுவரும் விடயங்கள் எல்லாம் இதுவரை காலமாக சரிவர ஆவணப்படுத்தப்படவில்லை. சுருங்கக் கூறினால் "வடகிழக்குப் பிரதேசம் வாழ்விழந்த பிரதேசம் அல்ல" என்பதை நிறுவும் வகையிலே, ஊர் பெயர் வரலாறுகள், பிரதேச வரலாறுகள், பழமையான வரலாற்றுச் சின்னங்கள், ஆலய வரலாறுகளைத் தேடுதலும், தொகுத்தலும், பேணுதலும் என்ற வரிசையிலான காரியங்கள் மிகமிக அவசியமானவை.

யாழ்ப்பாண இராச்சிய வீழ்ச்சியின் பின்னர், போத்துக்கேய, ஒல்லாந்த ஆங்கிலேயே மேலாண்மை அரசியல் நடவடிக்கைகள் நீண்ட கால வரலாற்றுப் பெருமை மிக்க கலைச் செல்வங்களையும் வரலாற்றுச் சான்றுகளையும் அழித்துள்ளன. இப்பொழுது தொடரும் பேரினவாத அரசியல் கூடக் கடந்த கால வரலாற்றை புதைக்க முற்படுகின்ற தருணத்திலே, தமிழீழ வரலாற்றை மீட்டெடுப்பது அவசியமானதொரு பணியாகும். ஊர் வரலாறுகள், ஊர்ப்பெயர் வரலாறு பற்றிய முயற்சிகள் பல்கலைக்கழக மட்டத்திலே மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழினம், பண்பாட்டுப் பாரம்பரியங்களை இழந்த இனமாகவும், மறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனமாகவும் போய்முடியக் கூடாது.

கவிஞர் பொன்னண்ணா, வேலணையூர் பெருங்குளம் முத்துமாரியம்மன் சக்தியின் துணையோடும் நம்பிக்கையோடும், மேற்கொண்ட தேடல்முயற்சி வெளிக்கொணர்ந்துள்ள இந்த ஆவணத்தொகுப்பு, புலம் பெயர்ந்து வாழும் மக்களுக்கும் அறிவுஜீவிகளுக்கும் கூட ஓர் ஆதர்சமாக அமையும் என நம்பலாம்.

தனது ஒவ்வொரு மூச்சிலும், கலை, இலக்கியம், சமூகப்பணி என்ற உயிர்ப்போடு வாழும் பொன்னண்ணா டென்மார்க் நகரில் வாழ்ந்த காலங்களில் எல்லாம் அவரது உணர்வுகள் ஒவ்வொரு கணமும் பிறந்த மண்ணையே நேசிப்பதாக இருந்தமையை இந்த ஆவணத் தொகுப்பு வெளிப்படுத்துகின்றது. பொன்னண்ணா, தெய்வ சக்தியை மட்டுமல்ல, தான் பிறந்த மண்ணையும் மனிதனையும் மதிக்கும் ஒரு கவிஞர் என்பதை ஈழத்துத் தமிழகம் நினைவுகூருவது அவசியமானது.

"வேலணையூர் பெருங்குளத்தின் தென் கரையிலே, நின்று நித்தம் தவம் புரிந்து மோனத்தில் இருக்கும் முத்துமாரி அம்பாளின்" அருளாசியோடும், அருளாணையோடும் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த "**அருளமுதம்**" என்ற தொகுப்பு முயற்சி பொன்னண்ணாவினதும், அவரது பாரியார், குடும்பத்தினரதும் பெரும்பணியாகியுள்ளது.

இந்தக் கையடக்கமான நூல் வேலணையூர் பெருங்குளம் முத்துமாரியம்மன் பெருமைபேசும் நூல் என்பதற்கு அப்பால், புலம் பெயர்ந்து வாழ்பவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ்பேசும் மக்களின் சமய கலாசார பாரம்பரியங்களை அறிய விரும்புபவர் களுக்கு எல்லாம் பெரு விருந்தாகவும் அமைகின்றது.

***ஆ. சிவநேசச்செல்வன்***
*பிரதிப் பணிப்பாளர்*
*(இலங்கை இதழியல் கல்லூரி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்னண்ணா பணி தொடர என் வாழ்த்துக்கள் !



***"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவ வகை செய்தல் வேண்டும்"*** என்ற மஹாகவி பாரதியாரின் கனவு ஈழத்தமிழரின் புலப்பெயர்வினூடாக இன்று நனவாகிக் கொண்டு வருகின்றது. நாட்டு நிலைவரத்தினால் தமிழர் தேசத்திலிருந்து புலம்பெயர்ந்து பல்வேறு வெளிநாடுகளுக்கும் சென்ற நம்மவர்கள் தமிழை மட்டுமல்லாது எமது பாரம்பரிய கலாசார முறைமைகளையும் சர்வதேசமெங்கும் பரவச் செய்து வருகின்றனர். இந்த வகையில் வேலணையூர் பொன்னண்ணா அவர்களின் **"அருளமுதம்"** எனும் ஆவணத்தொகுப்பின் வரவு மிக முக்கியமானதொன்றாகும்.

வேலணை ஸ்ரீ பெருங்குளம் முத்துமாரி அம்பாள் பெயரால் பாடப்பட்ட பக்தி பஜனைப் பாமாலை வேலணை அம்மன் ஆலய வரலாறு, தேவார தோத்திர அம்பிகைப் பதிகங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ள இந்நூல் சடங்குகள் பற்றிய பாரம்பரிய கலாசார முறைகள் இந்து சமய தத்துவங்களில் உள்ள விஞ்ஞான விளக்கங்கள், ஆலயவழிபாட்டு உண்மைகள் கிரியைகளின் தன்மைகள் போன்றவை பற்றியும் பேசுகின்றது.

புலம் பெயர்ந்தோரின் இனிவரும் தலைமுறையினர் நமது பாரம்பரிய பண்பாட்டுக்கோலங்களையும், தாய் மண்ணின் பெருமைகளையும் அறிந்து கொள்ள சிறந்த உசாத்துணையாக இந்நூல் விளங்கவல்லதோடு, தமிழர் கலாசாரங்களையும் பண்பாட்டு விழுமியங்களையும் அவர்கள் பெருமையோடு பின்பற்றவும் வகைசெய்கின்றது என்றால் மிகையாகாது.

புலம் பெயர்ந்து சென்ற பின்பும் தாய் மண்ணின் மீது கொண்ட பற்றுறுதியில் பொன்னண்ணா போன்றவர்கள் ஆற்றிவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய கலைச்செயற்பாடுகளினால் தான் இன்றும் தமிழினம் சிறப்போடு தன் தனித்துவத்தை இழக்காது தலைநிமிர்ந்து நிற்கின்றது.

தாய்மண்ணின் சரித்திர ஆவணமாகத் திகழவல்ல இந்நூலிற்கான தரவுகளை சேமிப்பதற்கு பொன்னண்ணா அவர்கள் எடுத்த பெருமுயற்சி அவரது ஆளுமையினை அடையாளப்படுத்தி நிற்கிறதெனலாம்.

கலைச்செயற்பாடுகளுக்கு அப்பால் ஒரு தனிமனிதனாக சிறுபராயம் முதலே நான் பொன்னண்ணா அவர்களை நன்கறிவேன். அவரது துடிப்பு மிக்க செயற்பாடுகளையும் கொண்ட பணிகளில் உள்ள ஆர்வத்தினையும், கொடுமைகள் அநீதிகளை கண்டு கொதித்தெழும் பண்புகளையும், முற்போக்கான சிந்தனைகளையும், பேசும் மொழியையும், பிறந்த மண்ணையும், தன்னினத்தவரையும் நேசிக்கும் உயர் பண்பினையும், கண்டு வியந்திருக்கின்றேன். இத்தகைய அவரின் தனிமனித இயல்பே இத்தகு ஆவணத்தை இன்று அறுவடை செய்ய அவருக்கு உறுதுணையாக இருந்திருக்கிறது எனலாம்.

புலம் பெயர் தொடர்பான புனைகதை இலக்கியங்கள், கவிதைகள், கட்டுரைகள், ஆய்வுகள் இவற்றிற்கும் அப்பால் இப்பேர்ப்பட்ட தாய்மண்ணின் சரித்திர ஆவணங்களின் தேவையினை அறிந்து செயற்பட்டிருக்கும் பொன்னண்ணாவின் முயற்சி போற்றுதற்குரியது மட்டுமல்லாது பிறருக்கு முன்மாதிரியாகவும் திகழவல்லது என்றால் மிகையாகாது.

பொன்னண்ணா அவர்களின் முயற்சி மென்மேலும் பரந்துபட்டு புலம்பெயர் இலக்கிய முயற்சிகளுக்கு வளம் சேர்க்க வாழ்த்துகின்றேன்.

பெருமை கொள்ள எல்லாம் வல்ல வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

*எஸ். பி. சாமி*
*ஸ்தாபகர் - தினக்குரல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## கவிஞர்
## வேலணையூர் பொன்னண்ணாவின்
## தமிழ்ப் பணிக்கு
## சர்வதேச இந்துக் குருபீடத்தின்
## நல் வாழ்த்துக்கள் !

சிவாகமக்கலாநிதி, சித்தாந்த பண்டிதர், சிவாகம வித்துவான்
**Dr. சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் M. I. H Dip,**
**Represent in Australia for International Hindu religious Guru peedam**
**Hindu Minister & Australian Marriage Celebrant,**
**Director, Modern Hindu Cultural Art Works**

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்ந்து தமது இளஞ்சந்ததியினருக்கு நமது மொழி கலை கலாச்சாரங்களைப் புகட்டுவது எப்படி? எனக் கவலை கொள்ளும் நம்மவர்க்கு ஒரு விடிவெள்ளியாக கவிஞர் பொன்னண்ணா அவர்களின் முயற்சிகள் பெரிதும் உபயோகமாகின்றது. அன்னாரின் அரிய கவிதைகள் படிப்போரின் உள்ளத்தில் தாயக நினைவுகளையும் பெருமைகளையும் மீள நினைக்கத் தூண்டுகின்றது. தாயக மண்ணை மிதியாத இளஞ்சந்ததியினரும் இவற்றைப்படித்தால் உள்ளத்தில் தமது மூதாதையரைப்பற்றி உயர்வான கருத்தை உருவாக்க ஏதுவாயும் அமைகின்றது எனலாம். அவரது படைப்புக்கள் அத்தனைக்கும் சிகரம்போல விளங்குவது அவர் உருவாக்கிய புதுமைக் கவிதை வெளியீடாகிய தமிழ்க் ஹைக்கு என்னும் பச்சை இறகு என்னும் கவிதை நூல் என்பதில் ஐயமில்லை. கார்ட்டூன் படங்களைப் பார்த்துப் புரிந்து மகிழும் சிறார்களுக்கு இது மிகவும் பிடித்தமான படைப்பாகத் திகழுகின்றதைப் பார்த்து மகிழ்ந்தேன். பொன்னண்ணாவுக்கு **“கவிதாவாரிதி”** என்னும் விருதை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகிறேன். வாழ்க பொன்னண்ணா! வளர்க அவர்தம் சமூக, சமைய தமிழ்ப்பணி என சர்வதேச இந்துக் குருபீடத்தின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

அன்புடன் வாழ்த்தும்,


**நா. சோமாஸ்கந்தக் குருக்கள்**
இயக்குனர்
சர்வதேச இந்து குருபீடம் - அவுஸ்திரேலியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஸ்ரீ கணபதிதுணை

# வாழ்த்துரை



இன்பத்திருநாடாம் ஈழத்திருநாட்டில்
வீணா கானபுரி என்றழைக்கப்படும்
யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்துள்ள
தமிழும் சைவமும் வளம் கொழித்திடும்
வேலணை யம்பதியில் அவதரித்த
தண்டமிழ்க் கவிஞராம் பொன்னண்ணா
அவர்களின் பாங்குடை கவிதைத் தொகுப்பு !

அவர் தம் கவிதை தரும் செய்திகள் பலப்பல
போராளிகளின் வீரங்கள் !
தாயகத்தின் துன்பங்கள் !
சிங்களக் கொடுமைகள் !
அகதிகளின் அவலங்கள் !
நாட்டு நடப்புகள் !
அத்தனையும் வருங்காலத்
தமிழர்க்காய் அவர் தந்த
நன் முத்துக்குவியல் !

அம்முத்துக்குவியலிலே
அவரின் அகம் தெரிந்தது
அகத்தினிலே தமிழர் அக்கறை தெரிந்தது
அழகாய் பிரகாசித்தன
அழகுத் தமிழ் நடை

எவர்க்கும் விளங்குவதாய்
என்றும் இனிப்பதாய்
எங்கும் மணப்பதாய்
எதிலும் தன்னிகரற்றதாய்
ஏறின அவை வெளியீட்டுவிழா அரங்கினிலே

வெளியீட்டு விழாவினிலே
தமிழ் மணம் கமழ்ந்தது
தமிழ்க்கலை தெரிந்தது
தமிழ்ப்பண்பாடு கனிந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரும் அவர் கவிதை வாழ்வினிலே
அவர் கண்களினோரம் கண்ணீர்த்துளிகள்
அதன் காரணம் தமிழ்ச்சிறாரின் இறைபக்தியற்ற நிலை
அந்நிலை கண்டு கவன்றது அவர்மனம்
அழுத அவர் மனதினிலே அரும்பியது அருளமுதம்
அவ்வமுதினிலே மலர்ந்தன பக்திப்பாமாலை
அம்மாலைகள் பரப்பின நறுமணம்
அப்பக்தி மணம் சென்றிடும் தமிழ்ச்சிறார்க்கு
அருந்தமிழ்ச்சிறார் போற்றிடவேண்டும் அதனை

அப்பக்தி மாலையிலே
அன்னையைப் பார்க்கின்றேன்
அருள்மாரியைப் பார்க்கின்றேன்
அன்புசெயும் பாங்கினை வியக்கின்றேன்
அருள் மொழியைப் போற்றுகின்றேன்
அவர் தம் அன்பினிலே திளைக்கின்றேன்

தாங்கள் தமிழுக்காய் ஆற்றும் பணி சிறக்க
தன்னொளி பயக்கும் மாரியம்மன் பக்தி சிறக்க
தங்கத் தமிழரின் பாரம்பரியம் சிறக்க
தரணிவாழ் தமிழர் தம் வாழ்வு சிறக்க
தமிழுயிர்க்காய் தம்முயிர் ஈந்த மாவீரர் ஆன்மா சிறக்க
தலை முறை தலை முறையாய் பொன்னண்ணா குடும்பம் சிறக்க
தமிழ் பக்தி தனை பறைசாற்றிடும் அவர் அருளமுதம் சிறக்க

வாழ்த்துகின்றோம் நீடுழி வாழ்க
வாழ்க வாழ்க அனைத்துயிரும்
குறைவிலா நிறை செல்வம் பெற்று
மாவைக் குமரன் அருளால்
பெருவாழ்வு வாழ்கவே.

இங்ஙனம்
மாவை முருகனடிமை
**ம. கணேசக்குருக்கள் குடும்பம்**
மாவை ஆதீனம்

நன்றி
வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பொன். தியாகராஜா அவர்கள்

**(வேலணையூர் பொன்னண்ணா)**

தாங்கள் தமிழ்ப் பணியில், தாய்மண் பணியில் வளர்ந்து
சிறந்து விளங்கி வளங்கண்டு நீடுழி, வாழ்க...! வாழ்க...!
வாழ்கவென

**வாழ்த்துகின்றோம்.....**

வேலணைத்தாய் திருவதன நுதல் விளங்கு
விரைகலந்த குங்குமம்போல் வித்தகன் நீ
காலமதைக் கணித்தறிந்தே கவிகட் கூடாய்
கண்ணியமாய்க் கருத்துக்களை களையாய்க் கட்டி
கோலமுற விளைவு கண்டு கொடுத்தே ஓயா...
கொடைக் கவிஞன் எனக்கண்கள் குதுகலிக்கும்
சீலநெறி தியாகராஜா, வேலணையூர் பொன்னண்ணா நின்...
சிறப்பெல்லாம் செந்தமிழ்க்கோர் திலகம்போன்றே...!

ஆய்வாளன், அறிவாளன் அறிஞர் தம் முன்
ஆசனம் தந்து உபசரிக்க ஆவல் கூடும்
தாய் நாட்டின் பற்றும், செந்தமிழ்க்கோர் பணியும்
புலம்பெயர்ந்தும் தழைத் தெழுந்தே தலைகூடும் தனையனாகி
ஓய் வறியாது உழைத்து கவிநூல்கள் நாடகங்கள்,
பட்டிமன்றம், கவியரங்கு, உரைமொழியாய்ச் சொற்பெருக்கே உடையோனாக
காய்வறியாச் தமிழ் குலத்தை கருணை யாலே
கனித்துவக்கும் கற்பகமே நீ வாழ்க...! நீடுழி வாழ்க...!

எழுத் தினிக்கும் செஞ்சொற்கள் இனித்து இனித்தே
என்றும் அணைத்தெடுத்து உச்சி மோந்து கொள்ளும்
பழுத்த பெரும் பண்பாடு இளமை தனில்
பார்த்தாரே வாழ்த்தி நிற்கும் பரிசு பூத்தாய்
விழுத் துணையே பொன்னண்ணா விறலே, தெய்வம்
விழைந் தெமக்குள் அளித்தவொரு விளைவே என்று
தொழுதென்றும் பெருங்குளத்து முத்துமாரி திருத்தாள் போற்றி
தோத்தரித்தே நிற்கின்றோம் நீவீர் வாழ்க ஊழிபலஊழி...!

அன்புடன் வாழ்த்துபவர்,

**வைத்தியகலாநிதி க. சிற்றம்பலம் R.S.M.P அவர்கள்**

ஓய்வு பெற்ற அதிபர் சைவப் புலவர்
(இலவச விஷேட விசக்கடி மருத்துவ சிந்தாமணி)
சித்த வைத்திய சாலை, டொரன்டோ, கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து.....!

நல்லதைச் செய்யும் பொன்னண்ணா !

டென்மார்க்கில் கடந்த பதினெட்டு ஆண்டுகளாக வாழ்ந்து கலை, இலக்கியம், சமூகப்பணி என்று பொன்னண்ணா அவர்கள் ஆற்றிவரும் பணிகள் நிறைந்த நம்பிக்கை தருவன. புலம் பெயர் வாழ்வில் இருந்து சாதிக்க முடியும் என்பதற்கு சான்றாக வாழ்ந்து வரும் ஒரு படைப்பாளி.

டென்மார்க்கில் அதிகமான வெளியீடுகளை செய்தவர் என்ற போற்றுதலுக்குரியவர். நம்பிக்கையுடன் வாழ்பவர். தாயகத்தின் மீது நிறைந்த பற்றுக் கொண்டு துணிச்சலான கவிதைகள் பலதை எழுதிக் கொண்டிருப்பதால் அவருடைய கவிதைகளின் கூர்மை தொடர்ந்து அனைவரையும் திரும்பிப் பார்க்க வைக்கிறது.

புலம் பெயர் சூழலில் பக்தியை வளர்க்க பொன்னண்ணாவின் தொகுதியொன்று டென்மார்க்கில் ஏற்கனவே வெளியாகியுள்ளது. இப்போது தனது ஊரின்பால் நேசம் கொண்டு, அங்கு வீற்றிருந்து அனைவருக்கும் அருள்பாலிக்கும் அம்பாளை நேசித்து இம்மலர் வருகிறது. ஊற்று இல்லாமல் நதியில்லை. வேர் இல்லாமல் மரமில்லை. தான் பிறந்த ஊர் மீது நேசமில்லாவிடில் வாழ்வில் எதுவும் இல்லை என்பதையும் அவர் உணர்ந்து நிற்பது நினைந்து பாராட்ட வேண்டிய விடயமாகும்.

பொன்னண்ணாவுடன் அவருடைய பாரியாரும் இணைந்து அவர் முயற்சிகளை ஊக்குவித்து வருவது குறிப்பிடத்தக்கது. அவருடைய ஒவ்வொரு முயற்சியின் பின்னாலும் சக்தியாக அவர் இருந்து வருகிறார். இந்த மலரிலும் அவர் பங்குண்டு.

பொன்னண்ணா தெய்வத்தை நேசிக்கிறார். அதனால் அவர் மனிதனை நேசிக்கிறார். அவருடைய ஒவ்வொரு படைப்பிலும், ஒவ்வொரு செயலிலும் இதை நாம் தெளிவாகக் காணலாம். இந்த ஐரோப்பிய மண்ணில் இறுதிக்கிரியைகள் நடக்குமிடமெல்லாம் தோன்றி பாடலிசைத்து வழியனுப்பி வைக்கும் அவருடைய பணி மனித நேயத்திற்குரியது.

நான் படைத்த உலகிற்கு நல்லதை மட்டும் செய்யவே நீங்கள் அனுப்பப் படுகிறீர்கள் என்பதே மனிதன் முன் ஆண்டவன் வைத்துள்ள கட்டளை. அதை உணர்ந்து அனைத்து நல்ல கருமங்களிலும் ஈடுபடும் பொன்னண்ணா எது செய்தாலும் அது நலமாக அமைகிறது. அதுபோல அன்னையரின் அருள் பெற்று இந்த நற்பணியும் சிறப்படையும் என்பதை சொல்லவும் வேண்டுமோ.

**கி.செ. துரை,** *ஆசிரியர். டென்மார்க். 12-02-2004*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளமுத வாழ்த்துக்கள்

**வெண்பா**

பெருங்குளத்தாள் பேரருளால் பெற்றபொன் அண்ணா
அருளமுதம் தந்தான் அறிஞர் ~ பொருளுவந்து
வாழ்த்துகின்றார் ஆசி வழங்குகின்றார் அஃதின்
சூழ்ந்த பொருள் இன்பச் சுரப்பு

அருளமுதம் ஆன்றோர் அறிவமுதம் தேர்வோர்
பொருளமுதம் கொண்டுவப்பர் பூத்துத் ~ தருமமிழ்தத்
தேன்பிலிற் றிப்பெருகும் தெய்வச்செந் தாமரைபோல்
சான்றோன் பொன் னண்ணா தந் தான்

கல்வி கலைவிளக்குக் காணும் அறிவொளியில்
இல்லங்கள் ஒவ்வொன்றும் எம்மூரில் ~ நல்லாய்
இலங்கிவர வேண்டுமெனும் ஏந்தல் பொன் னண்ணா
நலங்கிளரத் தந்தான் நன் னூல்

வாழ்க அருள்அமுதம் வாழியவே நல்லுரைகள்
வாழ்கபொன் னண்ணா வனப்புயர ~ சூழ் பொருள்கள்
தேம்பிப் பொருள் பொழிக தேனித்து சிந்தையெலாம்
ஆம்பல்தேன் தான் சொரிந்தே

**வாழ்த்துகிறார்**

*சைவப் புலவர்*

***திருமதி. சத்தியபாமா சிற்றம்பலம் அவர்கள்***

*கனடா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளமுதம் சிறக்க எங்கள் நல் வாழ்த்துக்கள்



**ஆசிரியர் விருத்தம்**

ஆதியில் கோவில் கொள் அம்மைதிருத் தெய்வீக
அம்புயம் இதழ்வி ரிக்க
ஆங்குபெருக் கெடுக்கும்தேன் பொருட்பெருக் கதனிலே
அறிஞருளம் உவந்து நிற்கச்
சுவர்ணமணி தரளமணி சேர்ந்தொளிரும் குவையெனச்
சிறந்தகட் டுரைகள் தேம்ப
ஒதிநூல் அறிவொளிர் உடுக்கள்சூழ் நிலவென
ஒளிருமோர் கவிஞன் ஆன
உயரறிஞன் வேலணையூர் பொன்னண்ணா என அன்பர்
உவக்கும் பொன். தியாகராசா
சாதித்த நூலாக எங்கெல்லாம் அருளமுதம் வெளிவந்து
சாண்றோர்கள் ஆசி தரவே
சால்பினால் ஒளிர்ந்துமேன் மேலுமொளிர் சாதனைகள்
சமர்ப்பிக்க வாழ்த்து கின்றோம்

**அன்புடன் வாழ்த்துபவர்**

பண்டிதர் வித்துவான்

***ச. குமரேசையா அவர்கள்***

முன்னாள் அதிபர் - நாகேஸ்வரி வித்தியாலயம் சரவணை

கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பொன்னண்ணா அவர்களுக்கு வாழ்த்து !

எங்கள் வளமும், வாழ்வும், தமிழ் மக்கள் நலமும், உயர்வும், மங்காத தமிழ் என்றும் சங்கே முழங்கு. நலமாக இருக்கின்றீர்களா? நீங்கள் உடல் நலமும், உள்ள நிறைவும் பெற்று வாழ ஆண்டவனை வேண்டுகின்றோம்.

கற்பூரமாக சில மூளைகளும் ஈர விறகுகளாக சில மூளைகளும் இருக்கத்தான் செய்கின்றன. தெளிந்த நீரோடையாக சிலருக்கும் குழம்பிய குட்டையா பலருக்கும் எண்ணங்கள் அமைந்துதான்போகிறது. அழகிய பூக்கோலமாக சிலரின் வாழ்வும் குழந்தையின் கிறுக்கல்களாக சிலரின் வாழ்வும் சிதறித்தான் போகிறது. தொட்டாச்சிணுங்கியாக சில உள்ளங்களும் இரும்புக்கோட்டையாக சில உள்ளங்களும் உலவிக்கொண்டுதான் இருக்கின்றன.

சிறந்தது மட்டுமே வீற்றிருக்க பூமி ஒன்றும் சிம்மாசனம் அல்லவே. நீயும், நானும் சிறந்தும், தாழ்ந்தும் சேர்ந்து வாழும் தேன் கூடு. விளை நிலம் ஒன்றாகிலும் விளைச்சலில் வேறுபாடுகள் என்றும் வாடிக்கை. ஏற்றமும் தாழ்வும் இயற்கை அன்னையின் இரட்டைக் குழந்தைகள்.

முரண்பாடுகள் உன் வாழ்க்கைக் கூட்டை பிரித்து வீசாமல் இருப்பதும் இல்லாததும் உன் கையில் என்று முற்றுப் புள்ளியாகாது முரன்பாடுகள் என்ற கருத்தை திண்ணைப் பத்திரிகையில் படித்தேன்.

இவற்றைப் படிக்கும்போது கவியரசு கண்ணதாசனின் பாடல் ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது. நல்ல அறிவோடு வாழ்ந்தாரும் உண்டு வந்த விதியோடு சென்றாரும் உண்டு. அந்த சினம் என்றும் சேர்ந்தாரைக் கொல்லும் நல்ல மனம்தானே எந்நாளும் வெல்லும். இது நீரோடு செல்கின்ற ஓடம் இதில் நியாயங்கள் யார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லக்கூடும்? எந்த நெஞ்சங்கள் எதனாலே ஆறும் எந்த குற்றங்கள் எதனாலே தீரும். சித்தம் அதிகாரம் செய் என்று சொல்லும். ரத்தம் அது பாவம் வேறென்ன செய்யும்.

இதன்படி பார்த்தால் நாம் செய்த வினைக்குரிய பயனை உடலோடு உலகில் வாழும்வரை அனுபவித்தே தீரவேண்டும். விதி யாரை விட்டது என்று கூறுவது பொருத்தமாகுமா? என்ற கேள்விக்கு இல்லை பொருத்தமற்ற வாதம் மட்டுமன்றி பொறுப்பற்ற பேச்சாகும் என்கிறார் காரையூர் நா. பொன்னையா. உறுதியான நம்பிக்கையுடன் உருகிப் பக்தி செய்து வருவோமாயின் நிச்சயம் இறைவன் நமக்கு ஊட்டும் வினைப் பயனை நமது உடம்புக்கு ஏற்ற முறையில் சிறிது சிறிதாகக் குறைத்தருள்வான்.

எங்கள் எதிரியை நாம் தண்டிக்கத் துணிகிறோம் ஆனால் அவன் தனது பிழையை ஒத்துக்கொண்டு வருந்தினால் நாம் எண்ணிய தண்டனையை மனமிரங்கி குறைத்துவிடுகிறோம். மனிதரால் செய்யப்பட்ட தண்டனைகள் இவ்வளவு கருணையுடையதாக அமைந்தால் கருணையே வடிவமாகிய பரம் பொருளின் சட்டம் எவ்வளவு தூரம கசிந்து கொடுக்கும் என்பதை சிந்திக்க வேண்டும். சிந்தனை செய் மனமே செய்தால் தீ வினை அகன்றிடுமே. சிவகாமி மகனை சிந்தனை செய் நெஞ்சமே.

புலி சின்னத்தில் தலைவலி மருந்து, சிங்கம் சின்னத்தில் பியர், பூனை சின்னத்தில் பட்டரி, நாகபாம்பு சின்னத்தில் வாசனைத்திரவியம், யானைச் சின்னத்தில் குளிர்பானம், ஆனால் மனித மண்டையோடோ அபாய சின்னம். எனவே கொடிய பிராணிகளை விட மிகக் கொடுமையானவன் மனிதன் தான் என்கிற காயத்திரி சித்தர் முருகேசு சுவாமிகளின் வார்த்தைகள் கவியரசு கண்ணதாசனின் மற்றுமொரு பாடலை நினைவுக்குக் கொண்டுவருகின்றது.

மனிதரில் நாய்கள் உண்டு மனதில் நரிகள் உண்டு பார்வையில் புலிகள் உண்டு பழக்கத்தில் பாம்பு உண்டு. நாயும், நரியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலியும், பாம்பும் வாழும் பூமியிலே மானம் கொண்ட மனிதனைக் காணவில்லை. யாரடா மனிதன் இங்கே கூட்டிவா அவனை இங்கே !

மனிதன் மனிதனாக வாழ என்ன வழி? எண்ணங்கள், சொல், செயல்களைத் தூய்மைப்படுத்த வேண்டும். எங்கு வாழ்ந்தாலும் இனியோராய் வாழ்வதிலே இன்பம் உண்டு. தொண்டாற்று, சேவைசெய், தொல்புகழை நிலை நாட்டு துயரமில்லை. நம் சிந்தனையை ஊக்குவித்து நல்லெண்ணங்களை அருளித் தூய்மையான செயல்களைப் புரிய இயக்கும் சக்திக்கும், சைவத்திற்கும், தமிழிற்கும் சேவைசெய் ஆங்கங்களைத் திரட்டும் பொன்னான உள்ளத்திற்கு வாழ்த்துக்கள்.

சத்தியம் என்பது ஒரு பெரிய மரத்தைப்போன்றது. அதை நீர் ஊற்றி நாம் வளர்க்க, வளர்க்க அது மேலும் மேலும் கனிகளை அதிகமாகக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றது. சத்தியத்தின் சுரங்கத்திலே மேலும் ஆழத்தில் போய் நாம் தேடத் தேட அதில் பொதிந்து கிடக்கும் மேலும் மேலும் அதிக விலை மதிப்புள்ள ரத்தினங்களைக் காண்கிறோம். பல வகைகளிலும் சேவைசெய்வதற்கு ஏற்படும் வாய்ப்புகளே அந்த ரத்தினங்களாகும். அதேபோன்று சத்தியத்தை வளர்த்து அதன் மூலம் மக்கள் சேவையே மகேசன் சேவை என்று கருதி மக்களுக்கு பல வழிகளிலும் பயன்தரக் கூடிய வகையிலும், தமிழுக்கும், சைவத்திற்கும் அளப்பெரிய தொண்டாற்றி வரும் பொன்னணண்ணா குடும்பத்தார்க்கு நாங்களும் அணைக்கட்டில் இராமபிரானுக்கு உதவிய அணில்போல் எம்மால் முடிந்ததும் படித்து, சுவைத்த பயன்தரக் கூடிய ஆக்கங்களை இத்துடன் இணைத்துள்ளோம்.

**எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

அறியாமை, மோகம், பேராசை, நான், எனது என்ற அகங்காரம் நீங்கி வாழ்ந்தால், கஷ்டம் குறையும். விருப்பு வெறுப்பற்ற முறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றும்போது மனம் நிம்மதியடையும். நமக்கு தற்போது அந்த அமைதிதான் தேவை. விவேகமற்றவன் சிந்திப்பதில்லை. விவேகமுள்ளவன் மனப்பக்குவம் அடைகிறான். இரண்டிற்கும் இடைப்பட்டவன் வாலிபால் பந்துபோல் அலைக்கழிக்கப்படுகிறான். அந்த மென்மையான, இன்பமான மன அமைதியும் நிறைவும் பெற கீதைபோன்ற இந்துமதத்தின் ஆணி வேர்களே இனிய பொக்கிஷங்கள். கடமைகளைச் செய்து அதன் பலனை பகவானுக்குச் சமர்ப்பித்துவிட்டால் அவர்களுக்கு நல்லருளும் இன்பமான வாழ்க்கையும் அமையும். இத்துடன் பின்வரும் ஆக்கங்களை (படித்ததில் சுவைத்தவை) வைத்துள்ளோம்.

1. நமது சமயங்கள்.
2. இந்து சமயத்தில் பெண்களின் கடமையும் இடமும்.
3. திருக்கோயில்.
4. திருக்கோயில், விக்கிரக அமைப்புகளும் பூசை வழிபாட்டு முறைகளும்.
5. கும்பாபிஷேகம்.
6. கலாபீடம்.
7. உருவ வழிபாடு.
8. பூஜ்யத்துக்குள்ளே ஒரு ராஜ்யம்.

இன்றைய வாழ்க்கை அனைவருக்கும் மிகவும் சிக்கல் வாய்ந்ததாகத்தான் இருக்கின்றது. யதார்த்த வாழ்க்கையில் ஒரு மனிதனை நோக்கினால் முகத்தில் ஏதோ ஒரு சோகம் அவனை வாட்டிக்கொண்டே இருப்பது புரியும். இதற்குத் தீர்வுதான் என்ன?

மனதை ஒரு நிலைப் படுத்தினால் மார்க்கம் பல பெறலாம். இதற்குத் தேவை தியானமே.

**அன்புடன் மனோவசந்.**
டென்மார்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

தீவகத்தில் உள்ள ஆலயங்களிலே மிகவும் பழமை வாய்ந்ததும் பிரசித்தி பெற்றதுமான வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்பிகையின் தோற்றம் வரலாறு என்பவை காலத்தின் நியதியால் மறையப் பெற்று இருந்த வேளையில் தேர் திருப்பணிச்சபையினரின் பெரும் கருணையினால், தேர் மலரின் மூலம் அம்பிகையின் வரலாற்றின் நடுப்பகுதி மட்டும் எமது மக்களின் கைகளில் கிடைக்கப் பெற்றது. அத்துடன் ஆலயத்தின் வரலாறு அற்றுப்போய் விடுமோ என ஏங்கிய வேளையில்,

இந்து மதத்திலே வேதங்களையும் உபநிடதங்களையும் இறைவன் ரிஷகன் மூலம் அளித்தது போல் அம்பிகையின் பூரண அனுக்கிரகத்தைப் பெற்ற பொன்னண்ணா மூலம் வேலணை பெருங்குளம் அம்பிகையே இந்நூலினை வெளியிடுவதற்கு அருள் பாலித்து இருக்கிறாள் எனக் கருதுகின்றேன்.

இந்நூல் ஆனது ஆலயத்தின் ஆரம்பம் முதல் இற்றை வரையிலான வரலாறு, இந்து தெய்வங்களின் அவதாரங்கள், சிறப்புக்கள், மகிமைகள், அம்பிகையைப் பற்றிய விளக்கங்கள் அத்துடன் பன்னிரு திருமுறைகள் போன்ற பல அரிய விடயங்களை தன் அகத்தே கொண்டிருப்பதுடன் சைவ மக்களின் கிரியை முறைகள் மருவி செல்லும் இவ்வேளையில் இதன் பூரண விளக்கத்தையும் அதன் செயல்பாட்டினையும் மிகவும் எளிய முறையில் விளக்கக்கூடியதாகவும், இன்னும் பல சிறப்பு அம்சங்களை உள்ளடக்கி இருப்பதினாலும் இந்நூல் ஆனது சைவ மக்கள் மட்டும் அல்லாது வேலணை கிராமத்து மக்கள் அனைவர்க்கும் ஓர் பெருமை தரும் நூல் என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் என்றதும் ஒன்றைச் சொல்ல வேண்டும்.

தரையிலே நிற்கும் சிறுவனை வானத்தில் பறக்கும் பட்டத்தோடு தொடர்பு படுத்துவது நூல். இந் நூலே பட்டத்தை திசை திருப்ப உதவுகின்றது. பெரியமரத்தை கோடிட்டு நேராக அறுத்தெடுக்க கோடிட உதவுவது நூல். கிழிந்து விட்ட உடையில் விழுந்துவிட்ட பொத்தானை மறைத்துவிட உதவுவது ஊசியிலே கோத்த அந்த நூல். இப்படியாக நூல் என்றதும் அது மனிதனை தெய்வத்தோடு இணைப்பதாக வாழ்வை கோடிட்டு நெறிப்படுத்துவதாக அறியாமை, பேதமை என்ற பொத்தல்களை பொத்துவதாக அமையப்பெற்ற இந்த அரும் பெரும் நூலினை,

அம்பிகையின் அருட்டிறனை வெளியிடும் அபிராமிப்பட்டரின் நூல்களைப் போல் பொன்னண்ணாவினால் ஆக்கப் பெற்ற **அருளமுதம்** எனும் இந்நூலும் எம்மவர் வாழ்வை உமையவள்பால் திருப்பும் என எண்ணுகின்றேன்.

இப்படியான தெய்வீக நூலினை ஆக்கி வேலணை பெருங்குளம் முத்துமாரியின் சிறப்பினை வேலணையிலும் இலங்கையிலும் உலகிலும் பரவச் செய்த பொன்னண்ணாவும் அவர் தம் குடும்பமும் சிறப்புற வாழவும், மென்மேலும் இத்திருத் தொண்டினை சிறப்புற செய்யவும், வேலணை வாழ் மக்கள் சார்பாக வேண்டுவதுடன் எமது நல் ஆசிகளையும் தெரிவிக்கின்றோம்.

நன்றி.

***க. சரவணநாதன்***
*தபால் அதிபர்*
*(முன்னாள் தலைவர் வேலணை*
*பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

தமிழர்கள் இம்மண்ணின் அநாதிக் குடிகள். அவர்களின் தோற்றத்துடன் இந்துக்களின் வரலாறும் இணைந்துள்ளது. இருந்தபோதிலும் எங்கள் முன்னோர்களின் சரித்திர வரலாறுகள் ஆற்றிய சாதனைகள் தகுந்த முறையில் ஆவணப்படுத்தல் இன்மையால் அழிந்து கால ஓட்டத்தில் அமிழ்ந்து போய்விட்டன.

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் வரலாறும் போர்த்துக்கேயர் வருகைக்கு முன்பே இருந்ததாக கச்சேரி பதிவுகள் சான்று பகிர்கின்றன. அந்நியர் படை எடுப்பில் பெரும்பாலான இந்துக்கோயில்கள் அழிக்கப்பட்டன சிதைக்கப்பட்டன. அதற்கு எமது ஆலயமும் விதிவிலக்காக இருக்கவில்லை. எவ்வாறாயினும் கருவறையில் உள்ள அருமையான அம்மன் விக்கிரகம் கொடியவர்களின் கரம் படுமுன் அடியவர்களினால் பாதுகாப்பாக மறைத்து நொச்சி செடிகளுக்கு இடையில் வைக்கப்பட்டிருக்கலாம் என கருதமுடிகின்றது. இவ்விக்கிரகமே பிற்காலத்தில் அடியவர் கட்டைமாதனால் எடுக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டதாக அறியமுடிகின்றது.

இம் மண்ணில் பிறந்து வளர்ந்து அம்மனின் திருப்பணிகளில் இணைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் பொன்னண்ணா அவர்கள் முன்னோர் விட்ட வரலாற்றுப் பிழையை நாமும் விடக்கூடாது என்ற நன்நோக்கில் இம் மலரினை வெளியிடுவது மிகவும் மகிழ்ச்சியான விடயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றை மட்டும் தொகுக்காமல் அம்மனின் புகழ்பாடும் பதிகங்கள், அருட்பாக்கள் என்பவற்றையும் மலரில் புகுத்தியமை சிறப்பாக உள்ளது.

அத்துடன் இந்து சமய தத்துவங்களில் காணப்படும் விஞ்ஞான ரீதியான விளக்கங்கள், ஆலய வழிபாட்டு உண்மைகள், கிரியைகளின் தன்மைகள் இணைக்கப்பட்டுள்ளன.

பலவித சிரமங்களின் மத்தியில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழும் சமய அறிஞர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களின் பெறுமதியான ஆக்கங்களை பெற்று இம்மலரினை ஒரு காத்திரமான நூலாக வெளியிட்டுள்ளார்.

ஒவ்வொரு இந்து சமயியினதும் வீடுகளில் இருக்க வேண்டிய அரும் பெரும் பொக்கிசமாக இந்நூல் அமையப்பெறுகின்றது. இதை ஆக்கித் தந்த அன்பரின் தமிழ்ப்பணி, சமயப்பணி மேலும் சிறக்க அன்னை முத்துமாரியை வேண்டுகின்றோம்.

**ந. ஜெகநாதன்**
*தலைவர்*
*வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னடிமை பொன்னண்ணா பணிதொடர வாழ்த்துக்கள் !

*பெருந்தேவி பெருங்குளத்தாள் பெற்றதாயானவளை – இன்று*
*பாமாலையில் பக்திததும்பும் பாவிலிலே கூற*
*பெருங்கருணைப் பேறு பெற்ற பொன்னண்ணா அவர்கள்*
*தாய்க்கு பெரும் சிறப்பை தருகின்றார் **அருளமுதம் ஏட்டில்.***

*அன்னையவள் அருட்சக்தி அவரிஹூற – அவள்*
*அற்புத அவதார புதுமை பெருமைகளை*
*இன்றெமக்கு எடுத்துக்காட்டி அவளருளாலே*
*இன்று ஒன்றிட வைத்திட்ட தொண்டர்தானே.....!*

*பெருங்குளத் தம்மன் பெருமைதனைப் பேசிட – தம்*
*பெருங்குணத் தாலே முன்வந்த பொன்னண்ணா*
*வருங்கால சந்ததியும் அன்னையருள் அறிந்திட – இன்று*
*வழங்குகின்ற அன்னையருள் **அருளமுதம்** புகழ்மாலை ஆகும்.*

*தேசங் குலைந்தாலும் பார்த்து அவற்றை – இது*
*தீங்குமிகு ஊழிக்காலம் என்பதாலே.....*
*நாசகாரரின் கரமோங்க வைக்காதே அம்மா !*
*தேசம் செழித்தோங்க, நேரக்கரமோங்க பொங்கிடுவாய்யம்மா !*


*பொன்னண்ணா பெருந்தொண்டு, பொதுத்தொண்டு – மேலும்*
*பொலிந்திடப் புரிந்துணர்வு கொடுதாயே.....!*
*உன்னருளைத் தாங்கி தமிழ்ப்பணி செய்யும்*
*உன்னடிமை பொன்னண்ணா நீடுழி, நீடுழி ! வாழ்க ! வளர்க !*
*வாழ்த்துகின்றேன்.*

*அன்புடன் வாழ்த்தும்*
***திருமதி. விக்கினா பாக்கியநாதன் - B.A***
*ஜேர்மனி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுப்பாசிரியரின் இதயத்தில் இருந்து.....!



ஓம்சக்தி துணை.....!

சக்தியின் பெருமைகளை பற்றிப் பேசும் சக்தி அடியேனுக்கேது. சக்தி இருந்தால் செய் இல்லையேல் சிவனே என்று இரு என்பார்கள் பெரியோர். சிவனே என்று இரு என்பதின் அர்த்தமே சும்மா இரு என்பதேயாகும். வேறு என்ன செய்யலாம் சக்தி இருந்தால்தானே ஆடலாம், பாடலாம், பரவலாம். சக்தி இருந்தால் தானே கூடலாம், குழையலாம். எனவே எதற்கும் தேவை சக்தி என்று தெரிந்த பின்னும் நாம் சக்தியை நாம் தேடாது நம்மைத் தேடி சக்தி வரமுடியாது என்பதை உண்மையான செய்தியாக, அருள் பார்வையாக நெஞ்சை நிறைத்து விட்டது.

இதனால்தான் இருக்கோ.....! இல்லையோ.....! என்ற ஆய்வில் தடம் பதிக்காமல் அன்னை தருவாள் மகனுக்கு சக்தி என்ற அவள்மீது ஏற்பட்ட திடமான நம்பிக்கையோடு, நான் இந்த திரட்டை அன்னைக்கு திரட்ட முயன்றிருக்கின்றேன் என்பதே உண்மை. அன்னை பராசக்தியின் கடைக்கண் பார்வை மட்டும் போதுமே. இந்த உலகத்தில் எதைத்தான் சாதிக்க முடியாது. இந்த கடைக்கண் பார்வையை அன்னை முத்துமாரி எனக்கு தருவாள் என்ற நம்பிக்கையில் நான் இந்த பயணத்தைத் தொடர்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவும்தரும் நெஞ்சில் வஞ்சகமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.....!

என்ற பாடலுக்கமைய இப்படி கண்பார்வையைக் கொண்டே தம்மை ரட்ஷிக்கும் தேவிகள். காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி, நீலாயதாட்சி ஆகியோரிடம் கரம் கூப்பி நிற்கின்றேன்.

பண்டைய காலத்தில் பயத்தின் மூலமே பிறந்தது இறையுணர்ச்சி என்ற உண்மை, இவ்வுலகில் கண்கள் காணும் பஞ்ச பூதங்களான நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம், போன்றவையோடு பாதக, இனவாத செயல்பாடுகள் மூலமாகவும் வாழ்க்கை பயமாக மாறி தெய்வத்தை நாடி நிற்கின்றோம். இத்தனை செயல்பாடுகளும் சாந்தமாகி மானிட வாழ்க்கையின் அர்த்தத்தை புரியும் காலம் நாளை வரவேண்டும். அன்பு பேராறாய் பெருக்கெடுத்து ஓடவேண்டும் என்ற வேண்டுதலின் நோக்கிலேயே நாம் இன்று அன்னையைத் தோத்தரித்து க்ரம்கூப்பி நிற்கின்றோம்.

தான் பெற்ற சாபம் நீங்க தேவி தவம் செய்தாள், அறம்காத்தாள். அது அனைத்து மட்டத்திலும் இருள்சூழ்ந்து இருந்தது. இன்று அன்னை பூசித்த லிங்கத்தில் பாதியாகி அலிங்கனம் செய்து சிவனுடன் ஐக்கியமான அர்த்தநாரீசுவர தத்துவமாக தோற்றமெடுத்து பக்தரைக்காண புதுப் பொலிவுடன் புறப்பட்டு விட்டாள். இனி நாடும் வீடும் ஊரும் உறவுகளும் உயர்வுபெறுவது திண்ணம் என நம்பலாம்.

பகவத் கீதையை தெய்வமெனப் போற்றும், இந்து மக்களின் பெரும்பகுதியினர் கீதையை பிரித்துப் பார்க்கவே பயங்கொள்கின்றார்கள். காரணம் பகவத் கீதையில் எழுதப் பட்டுள்ள வசனங்கள் அனைத்தும் சாதாரண மக்களால் புரிந்து கொள்ள தெரிந்து கொள்ள முடியாத நிலையில் எழுதப்பட்டு உள்ள வேதப் பாராயண சொல்வழங்கலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களால் கருத்தை புரிந்து, தெரிந்து கொள்ள முடியாத நிலையால், அவர்களால் மதத்தின் ஆணிவேரான கருவை படித்தறிய ஏற்குமா...? என்ற கேள்விக் குறிகள் இந்த மலரை எழுதவேண்டும் என்ற எண்ணம் என் நினைவில் நாட்டில் வாழும்காலத்திலும் எழவில்லை. நான் பிறந்த மண்ணகன்று தப்பி ஓடி வெளிநாட்டில் வாழும் காலத்திலும் எனது இதயத்தை தொடவில்லை. ஆனால் நான் டென்மார்க் மண்புகுந்து அகதி அட்டைக்காக அந்த நாட்டு மொழியை படிக்க வேண்டும் என்ற கட்டாயத்தின் போது அந்த நாட்டு நடைமுறைப்படி அந்த நாட்டில் பிரஜா உரிமை எடுக்க ஒருவர் விண்ணப்பிக்கும் போது அவர் அந்த நாட்டு சட்ட திட்டங்கள், கலாச்சார பண்பாட்டு வாழ்க்கை முறைகள், அந்த நாட்டு வரலாறுகள், நாட்டின் மக்கள் தொகை, நாட்டின் வருமான வழிமுறை உற்பத்தி பொருட்கள் போன்ற பல வகையான வழிமுறைகள் தெரிந்திருக்க வேண்டும் என்ற கட்டாய நியதி உண்டு. இவைகளை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் படிக்க தொடங்கும் போது தான் எனக்கு அந்த நாட்டின் வரலாறு படிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அதைத் தேடல் செய்யும்போது விபரங்கள், கட்டுரைகள் கொண்ட ஆவணங்களை புத்தகமாக்கி ஒவ்வொரு நூல் நிலையத்திலும் இருக்கும் நிலையை நான் காண நேர்ந்தது. இதே போல அங்குள்ள கிறிஸ்தவ ஆலயங்களுக்கும் தனித்தனி வரலாறு புத்தகமாக வடிவமைத்து உள்ளது. இவைகளை கண்ணுற்ற எனது எண்ணத்தில் எனது மண்ணுக்கும் அம்மன் ஆலயத்துக்கும் ஒரு வரலாற்று ஆவணத் தொகுப்பு இருந்தால் சிறப்பாக இருக்குமல்லவா... இதை யார் செய்வார்கள். இது ஒரு வரலாறு படித்த, பட்டம் பெற்ற ஒருவரால் தானே முடியும் என்ற எண்ணத்தில், எழுந்த பயத்தில்,

அதுபற்றிய எண்ணத்தை என் மனதுக்குள் ஏற்பட்ட ஆதங்கத்தோடு பக்கங்களை மூடி விட்டேன் என்பது தான் உண்மையான செய்தி. நினைத்தது நல்ல நினைப்பு. செயல்படுத்த வேண்டிய கட்டாயமான ஒன்று. ஆனால் அது என்னால் முடியுமா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்தாலும் சமூகம் சரி என ஏற்குமா...? என்ற கேள்விக் குறிகளோடு...! நெஞ்சுக்குள் புதைந்த நினைப்பு என் இதயத்தை அடிக்கடி தட்டிக் கேட்ட வண்ணமே இருந்தது. இப்படி காலம் உருண்டு ஓட நாட்டில் சமாதானம் வந்தது எனது இரண்டு சகாப்த வெளி உலக வாழ்க்கையில் ஒரு திருப்பம் வந்தது. நான் விட்டுவிட்டு வந்த என் தாய் நிலத்தில் குந்தி இருந்த வேப்பம் மரத்தை, குடி இருந்த வீட்டை, கும்பிட்ட கோவிலை, படித்த பள்ளிக் கூடத்தை எல்லாவற்றுக்கும் மேலாக எனது ஊரின் உறவுகளை, மக்களை பரம்பரைக்கென நாங்கள் சேர்த்த சொத்தை காணும் ஒரு சந்தர்ப்பமாக இந்த பிரயாணம் இருக்கும் என்ற மனம் நிறைந்த ஆசையோடு ஆவலோடு, முகிலைக் கிழிக்கும் வேகத்தில், என்மனம் எனது மனைவியோடு எனது இருபது வருடம் கண்ட இருண்ட வாழ்க்கைக்கு விடிவாக என்மண் இதமாக இருக்காதா? என்ற இதயக் கேள்வியோடு தான் தாய் மண்ணை மிதித்தேன். அங்கு என் கண்கள் கண்ட காட்சியோ! டென்மார்க்கில் என்இதயம் மூடிய பக்கத்தை திறக்க வைத்தது. ஆலயத்தில் திருவிழா நடந்தது. மண்டபம் நிறைந்தது. மடத்தில் அன்னதானம் நடந்தது. மக்கள் உண்டனர், சென்றனர். அங்கு வந்த மக்கள் எவர் எங்கு பிறந்தவர் என்ற முகவரியை துலைத்த மனிதராகவும் எங்கு இருக்கின்றேன் என்று சொல்ல முகவரி இல்லாத மக்களைத் தான் காணமுடிந்தது. தெரிந்த சில முகங்களும் முகவரியை தடவிய வண்ணமே வாழ்ந்தார்கள். நான் மண்ணகன்ற போது என்னை வழியனுப்பி வைத்த மண்ணின் சொந்த முகங்களை காணமுடியவில்லை. மண்ணில் வாழ்ந்த போது எங்கள் சொத்தாக இருந்த வீடுகளின் அத்திவாரத்தையே தேடிக்கண்டு கொள்ளவேண்டிய நிலையில், நடந்த பாதைகளில் குவிந்த முள்ளுப்பத்தைகள் என்ற அழிவுநிலை மாற்றங்கள். மக்கள் மண்ணுக்கு மணம் கொடுக்க மக்கள், ஆலய வளர்ச்சியில் வாழ்ந்த மக்கள் ஆலய வரலாறும் வேலணை வரலாறும் எழுதப்படவேண்டும். எமது அடுத்த தலைமுறை எங்கு வாழ்ந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தாய் மண்ணுக்கு வரும்போது படித்தறிவதற்காவது எம்மால் இயன்றவரை ஏதோ ஒன்று செய்து வைக்கவேண்டிய அவசியத்தை உணர்த்தி குமுறி எரிந்த எனது இதயத்தில் வெடித்து கிளம்பிய ஒரு சிறு பொறியே இந்த மலராகும்.

அன்னைமுத்துமாரியிடம் அருள் கேட்டேன் அடுத்தமுறை உன்னைக் காண வரும் போது உன் தமிழ் மலரோடு வர சக்தி தா தாயே என வேண்டி நின்றேன். புதிய உணர்வாக புதிய நம்பிக்கையாக என் உள்ளத்தில் நின்றாள்.... இல்லை நின்கின்றாள். இப்பணியை தொடர்கின்றேன்.

இந்த கடமையை இங்கு என்னைவிட எத்தனையோ பட்டப்படிப்பை முடித்தவர்கள் இருக்கின்றார்கள். இதை அவர்கள் செய்யவேண்டிய கடமைதான் என்றாலும் அவர்களின் இதயத்தில் ஏற்பட்ட துன்ப நிகழ்வுகள் எழுதாமல் இருந்திருக்கலாம். அல்லது அவர்கள் வாழ்ந்த கால கட்டத்தில் நாட்டில் நிகழ்ந்த அவல வாழ்வு, அலங்கோலநிலை, அகதிநிலை, மனதில் ஏற்படுத்திய வடுக்கள் இதுபற்றி சிந்திக்க தடுத்திருக்கலாம். ஆகவே மற்றவர்களை குறை நினைக்காமல் குறை சொல்லாமல் முடிந்தால் இன்னமும் காலம் கடந்து விடவில்லை. இதை அத்திவாரமாக்கி.....! தொடரலாம்.

எனது அறுபத்தியாறைக் கடந்த வயதில் இருபத்தி ஐந்து வருட மண்ணின் மணத்தை இழந்த நிலையில், கிராமத்தின் எல்லைகளையே தவறவிடும் நிலையில் என்ஞாபக சக்திக் கேற்ப இந்த மலரை அன்னை முத்துமாரியின் பாதக்கமலத்தில் சமர்ப்பிக்க எண்ணி துணிந்து செயல்வடிவம் கொடுத்து உள்ளேன். இதில் முழுமையான திருப்தியை நாம் காணமுடியாது என்பதையும் ஒத்துக்கொண்டு இதில் விடுபட்டவர்கள் யாராவது இருந்தால் விடுபட்ட விடயங்கள் ஏதாவது இருந்தால் அனைத்தும் எனது ஞாபகம் இன்மையால் ஏற்பட்ட தவறாகவே அல்லது தகவல் திரட்ட முடியாத நிலையாகவே தான் இருக்கும். இதை யாராவது திட்டமிட்டு தப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதினால் இது அவர்களின் அறியாண்மை என்றே கருதலாம். இந்த மலரை அடிப்படையாகக் கொண்டு ஊக்கமுடையவர்கள் இன்னும் முயலலாம். அதுவே எனக்கும் எனது முயற்சிக்கும் திருப்தியானதாக நிறைவானதாக இருக்கும்.

அந்த நிலப்பாட்டின் அத்திவாரமாகவே இந்த மலரும் உருவெடுத்திருந்தால் ஆச்சரியப்பட நியாயமில்லை என்பதே என் கருத்துமாகும். இன்னும் சாதாரண மக்கள் சில சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் நிறைவேற்றுவது தான் மதக்கடமையென நம்பிக்கொண்டு அரிச்சனைத்தட்டுடனும், தேங்காயுடனும் தங்கள் மதக்கடமை முடிந்து விட்டதாக எண்ணி நிறைவு கொள்கின்றார்கள். அம்பிகையின் மனம் குளிர செய்யவேண்டிய தேவார திருவாசகங்களையோ, பஞ்சபுராணங்களையோ பாடி, பஜனைப் பாக்களை பாடி, பக்தி உருவாக்க வேண்டிய நிலைகளை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியத்தை எவரும் மக்கள் முன் கடமையாக்காத நிலையும் அதற்கு காரணமாகலாம் என்பதை உணர்ந்த நிலையே இதன் நோக்காகவும் அமையலாம். இந்த நிலையை திருத்தி அமைத்தால் நன்மை பிறக்கும் என்ற விருப்பே புத்தக வடிவில் அன்னையின் பாதகமலத்தில் இந்த மலரை சமர்ப்பணம் செய்ய விரும்பினேன் என்பதே என்கருத்தாகும்.

***“இயற்கை சொல்லிக் கொடுக்கும். வாழ்க்கை கற்றுக்கொடுக்கும். கற்றது கை மண்ணளவு. கல்லாதது உலகளவு”***

**ஒன்றே குலம் ஒருவனே தேவன் ஓம் சக்தி**

**மதத்தை நேசிப்பவன் மதிக்கவேண்டியது மதத்தை.**

அன்புடன்,


**வேலணையூர் கவிஞர் பொன்னண்ணா**

அறிவகம் - டென்மார்க்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை பெருங்குளம்
# ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வரலாற்றுத் தொகுப்பு



ஈழவள நாட்டிலே தமிழர்கள் வழிபட்டு வரும் ஆலயங்களிலே மிகவும் பழமைவாய்ந்த புராதனமானவற்றில் பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயமும் ஒன்றாகும். இந்த ஆலயம் ஒல்லாந்தர் காலத்து பத்திரங்களிலிருந்து தொகுக்கப்பட்டு ஆங்கிலேயர் சேகரித்து வைத்திருக்கும் அரச பதிவேடுகளில் இந்த ஆலயத்தின் சிறப்புக்களும் பதியப்பட்டு இருப்பதை இன்றும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது அரசகச்சேரி பதிவேடுகளில் இருந்து தற்போது இருக்கும் கர்ப்பக்கிரகம் 1875ம் ஆண்டளவில் கட்டப்பட்டதாக அறிகிறோம்.

அகிலாண்ட கோடி ஈன்ற அன்னையை இன்னமும் கன்னி என்றே ஓதுகின்றன வேதங்கள். இதுவோர் அற்புதமான சிந்தனைக் கோட்பாடு. இந்த கோட்பாடு இந்து மதத்துக்கு மட்டும் உரித்தான ஒன்றல்ல. இதே கோட்பாட்டு சிந்தனையை பிற மதத்தவரும் செயல்பாட்டில் கையாளுகின்றார்கள் என்பதற்கு அறிகுறியாக இயேசுநாதரின் திருத்தாயை பரிசுத்த கன்னிமேரி அன்னை என்று வணங்கும் கிறிஸ்தவ மத வழக்கத்தையும் நாம் இன்று கண்ணாரக் காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை பராசக்தியை பற்பல திருக்கோலங்களில், பற்பல நாம கர்ணங்களிலும் பக்தர்கள் வழிபடுவது வழக்கம். அவையாவன காளி என்றும், துர்க்கை என்றும், ஈஸ்வரி என்றும் இன்னும்பல நாமங்களில் அழைப்பதோடு அவர் நம்பிக்கைக்கு ஏற்ப ஆலயம் அமைத்தும் வணங்குகிறார்கள். அவற்றுள் முத்துமாரி என்ற மூர்த்தமும் ஒன்று. மிகப் புராதன காலம்தொட்டு தொற்றுநோய், பஞ்சம், வரட்சியான துன்ப நிகழ்வுகள் மக்களை ஆட்கொண்டு ஆட்டிப்படைக்காமல் பாதுகாக்கும் தெய்வமாக (மாரி) முத்துமாரி நாமம் கொண்டு வழிபடுகின்றார்கள். இந்த வடிவம் இந்துக்களின் ஒரு நம்பிக்கைவடிவமாக ஆதிகாலம் தொட்டு வழங்கிவருகின்றது என்பதற்கு ஆதாரங்கள் பல உள்ளன.

ஆனால் கோவில் எப்போது ஸ்தாபிக்கப்பட்டது? எவ்வளவு காலமாக இந்த ஆலயம் இருந்து வருகின்றது. ஆதிகாலத்தில் இருந்து என்ன வடிவத்தில் இருந்து வருகின்றது? ஆதிகாலம் தொட்டு இந்த இடத்திலேதான் இருந்து வருகின்றதா? இல்லை வேறு இடத்தில் இருந்து இங்கு தற்போது இருக்கும் இடத்துக்கு மாற்றப்பட்டதா? என்பனவெல்லாம் பழமை என்ற பனிப்புகாருக்குள் மூடி மறைக்கப்பட்ட நிலையிலேயே இன்னமும் தொடர்கின்றது. காரணம் ஆதிமுதல் அதை பரிபாலனம் செய்து வந்த நிர்வாகிகளால் எழுத்துருவமான எந்த ஆதாரத்தையும் ஆக்கமுடியாமல் போனதாலும், அதன் பின்வந்தவர்கள் அந்த வரலாறு அறியவேண்டும் என்ற ஆவல் இல்லாதிருந்ததாலும் இந்தநிலை எமக்கு ஏற்பட்டு உள்ளது. ஏதோ கிடைத்ததைக்கொண்டு மகிழ்வோம், அறிவோம்.

இந்த நிலையை எண்ணும்போது இந்துக்கள் ஆவணக் காப்பு இல்லாதவர்கள். இதிகாச உணர்வுகள் இல்லாதவர்கள் என்று சில ஆராச்சியாளர்கள் கூறும் கூற்றை, ஏற்றாகவேண்டிய நிலையில் இன்றைய சந்ததி நிற்கின்றது. ஏனைய மதத்தினர்களைப் பார்க்கும் போது தங்களின் வரலாறுகளை வடிவங்களாக ஆவணப்படுத்தி ஓலைச்சுவடிகளாகவும், பத்திரிகைப் படிவங்களாகவும், செப்பு ஏடுகளாகவும், கருங்கலில் எழுத்துக்களாகவும், வெள்ளித்தட்டிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதி பாதுகாத்து ஆவணப்படுத்தி வைத்து சென்றிருக்கும் நிலைகளை நாம் இன்று பார்க்கும்போது, அறியும்போது அவர்களின் கூற்று நியாயமாகப் படுகின்றது. இருந்தாலும் நம்மை விடவும் அதல பாதாளத்தில் இன்னும் பலர் இருக்கையில் தமிழ் மொழியும், தமிழர் வரலாறும் பாதுகாக்கப்படுவது மதரீதியில்தான் குறைந்திருப்பதை சிந்திக்கும்போது நாம் நம் மூதாதையர்கள் பற்றி பெருமைப்படக் கூடியதாகவே உள்ளது.

இருந்தும் சில அரச பதிவேடுகளை வாசிக்கும் போது இந்த ஆலயத்தில் இருபதாம் நூற்றாண்டின் முதற் பகுதிவரை பண்டுதொட்டு மிருக பலி இட்டு வணங்கும் வழக்கம் இருந்து வந்ததாக எமக்கு முந்திய பெரியவர் ஒருவருக்கு அவரின் தந்தையார் சொன்னதாக அறியக்கிடக்கின்றது. இதை பார்க்கும் போது நாம் இன்றும் படிக்க முடிந்த சில வரலாறுகளில் மிருக பலியும், குரவைக் கூத்தும் நம் வழிபாட்டு முறைகள் என்பதை அறிய முடிகிறது. இதனால் ஆலயம் பழமையானது என்பதையும் ஏற்றுக்கொள்ள முடிகின்றது. திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம், புறநானூறு போன்ற எமது சங்ககால இலக்கிய நூல்களின் பாடல்களில் இந்த வழிபாட்டு முறையை உறுதிப்படுத்துவனவாக இருக்கின்றது. இந்த வரிசையில் தான் இந்த முத்துமாரி அம்மன் ஆலயமும் எங்கோ ஒரு காட்டு மூலையில் வேலணைப் பகுதியில் ஒரு மரத்தின் கீழ் இருந்திருக்க வேண்டும் என நாம் எண்ணலாம். அதற்குரிய சில ஆதாரங்களும் நமக்கு கிடைத்துள்ளது.

நடைமுறையில் தமிழ் அரசர் காலத்தில் ஒரு கருங்கல்லில் அம்மன் சிலையை செதுக்கி ஒரு மரத்தின் கீழ் வைத்து அதற்கு சிறிதாக ஒரு கோவில் அமைத்து பிரதிஷ்டை செய்து நாள் தோறும் வழிபட்டு வந்ததாகவும் ஒல்லாந்தர் காலம் முதல் கர்ணபரம்பரை வரை ஆதாரமற்ற ஒரு கதை விடாப்பிடியாக நிலவி வருகின்றது. ஒல்லாந்தர் ஆட்சிகால நடுப்பகுதியளவிலே பெருங்குடி மகன் கட்டமாதன் என்னும் ஒருவர் வேலணை பெருங்குளத்து வடகரையில் உலாவி வரும்நேரம், கற்புலம் என்ற பகுதியில் ஆவரசம், நொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றை ஒன்றினுள் முத்துமாரி அம்மன் கற்சிலை ஒன்றை கண்டெடுத்தார் என்றும், அந்த கட்டமாதனும் ஊர் மக்கள் சிலரும் சேர்ந்து, அந்த கற்சிலையை அவ்விடத்தில் இருந்து தூக்கி சென்று தற்போது ஆலயம் உள்ள பகுதிக்கு தெற்கே நெடுங்கேணி என்று பெயருடைய காணித் துண்டில், குடிசை அமைத்து அதனுள் அம்மன் சிலையை பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்ததாகவும், அதன் பின் பெரிய ஆலயம் அமைக்கும் கருத்துக்கொண்டு, தற்போது உள்ள இடத்துக்கு கொண்டு வந்ததாகவும் கர்ண பரம்பரை வரலாறு பகர்கின்றது. ஆனால் அப்படியாயின் அந்த பழைய ஆலயம் அந்த பெருங்குளத்தின் வடகரையில் இருந்ததா? அந்த கோவிலுக்கு என்ன ஆயிற்று என்பது பற்றி எந்த தடையமும் இன்னும் இல்லை. தேடல் செய்கின்றோம்.

ஆனால் இலங்கையின் சரித்திரத்திலே போத்துக்கீசர் படையெடுப்பின் பின்னால் நிகழ்ந்த இந்துக்கோவில்கள் அழித்த அட்டூழியங்களின் போது, அந்த பழைய கோவிலுக்கு ஏதாவது நடந்திருக்கலாம். அதன்பின் அம்மன் விக்கிரகத்தை அவர்கள் குளத்தின் வடகரையிலுள்ள அந்த நொச்சி, ஆவரசங் பற்றைக்குள் வீசி எறிந்திருக்கலாம். அல்லது இந்த ஆலய அழிப்பு செய்தியை முன்னரே தெரிந்து கொண்ட அம்மன் பக்தர்கள் சிலர் அந்த கொடியவர் கரம் அம்மனில் படக்கூடாது என்ற நோக்கில் அம்மன் விக்கிரகத்தை நேரத்தோடேயே வெளியே எடுத்து பாதகரின் பாதம் படாமல் பாதுகாக்கும் நோக்கில் வெளியே எடுத்து பாதுகாப்புக்காக பற்றைக்குள் மறைத்தார்களோ...! என்று இன்றுவரை பக்தர்கள் நம்பிக்கையுடன் எண்ணிப் பார்க்கின்றார்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டிலே மறைக்கப்பட்ட அம்மன் விக்கிரகம், பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஒரு கட்டமாதனால் கண்டு பிடிக்கப்பட்டு, பெருங்குளத்தின் தென்கரைக்கு கொண்டுவரப்பட்டு, பெருங்குளத்தின் தென்கரையில் 1500 யார் தூரத்தில் நெடுங்கேணி என்ற பேர்கொண்ட காணியில் ஒரு கொட்டிலில் வைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு செய்யப்பட்டது. குடிசையில் வீற்றிருந்த அம்பாள் திருப்தி கொள்ளாத நிலையில், புங்குடுதீவில் வாழ்ந்த ஒரு செல்வந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. காசித்தம்பி என்ற வள்ளலின் இதயம் புகுந்து, தனக்கு புதியதோர் திருக்கோவிலை அமைக்கச் செய்தாள். பதினெட்டாம் நூற்றாண்டு பத்தொன்பதோடு தொடங்கிய காலத்தில், வேளாண்குல காசித்தம்பி வள்ளலார் கோவில் தற்போதுள்ள இடத்தில் அறுபது பரப்பு காணியை வாங்கி அம்பாளுக்கு அன்பளிப்பு செய்து அந்த இடத்திலேயே, அம்பாளுக்கு கல்லினாலும், சுண்ணாம்பினாலும் சாதாரண கோவில் அமைத்து அந்த நொச்சி, ஆவசம் பற்றைக்குள் கண்டெடுத்த அம்மன் விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்து மக்கள் வழிபாட்டுக்கு ஏற்ற முறையில் ஏற்பாடு செய்தார். அன்று முதல் இன்று வரை வேலணை கிழக்குப் பகுதியில் அன்னை ஸ்ரீமுத்துமாரி பெருங்குளத்தின் தென்பகுதி கரையில் வீற்றிருந்து நித்தம் தவம் புரிந்து பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகின்றாள். ஆம் நாம் காணும் கோவிலுக்கு வயது இருநூறுக்கு மேல் என்று சரித்திரரீதியாக சொல்லலாம். தீவகப்பகுதியில் உயர்ந்து நிற்கும் அம்பிகை ஆலயங்களில் இரட்டைப் பஞ்சாங்கமுறை ஆலயங்களில் இதுவும் ஒன்று எனலாம். ஆனால் இந்த ஆலயமே இன்றும் இதுவரையும் ராஜகோபுரம் இல்லா கோவிலாக இருப்பது அந்த அம்பாள் பக்தர்களின் நெஞ்சைத் தொடும் ஒரு விடயமாக இருப்பது கண்கூடு. இதற்கு முந்திய வரலாற்று கணக்கீட்டை ஆதாரரீதியாக கணக்கிட முடியாத நிலையில் இன்னும் அம்பாளின் பக்தி மிக்க சரித்திர வல்லுனர்கள் தேடல் செய்கின்றார்கள்.

இந்த இருநூறு வருட காலமாக அம்பாளின் திருக்கோவில் பல மாறுதலை கண்டு வளர்ச்சி கண்டு வருகின்றது. காசித்தம்பி வள்ளல் கட்டிய கோவில் என்பது பல ஆண்டுகள்வரை நிலைபெற்று நின்றது. அதன்பின் 1885 - 1890 ஆம் ஆண்டளவில் யாதவராயர் இராமநாதன் பெயர்கொண்ட வள்ளல் இருந்த கோவிலை இடித்து விட்டு அதே இடத்தில் . தூபி, அர்த்தமண்டபம், சபாமண்டபம், மாமண்டபம் ஆகியவை கொண்ட ஒரு அழகான ஆகமவிதிப்படி அமைந்த புதிய கோவிலை கட்டி எழுப்பினார் என்றும்

ஆனால் இத்தனை கட்டியும் கட்டிடம் மட்டுமே கட்டப்பட, மேல்கூரை ஓடற்ற நிலையில் தென் ஓலையால்தான் வேயப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் குறையை நிவர்த்தி செய்ய 1890 - 1895 ஆண்டளவில் கதிர்காமர் ஆறுமுகம் என்னும் வள்ளல் முன்வந்து தென்ஓலையால் வேய்ந்திருந்த ஆலயத்தைக் குலைத்து ஓடுகள் போட்டு அழகு படுத்தியதோடு, ஆலயத்துக்குள் கொடிஸ்தம்பம் ஒன்றும் கட்டி ஆலயத்தை மெருகேற்றினார். அதே காலப் பகுதியில் வயிரமுத்தர் என்ற வள்ளல் யாகமண்டபம் ஒன்றும் கட்டினார். அதே காலப்பகுதியில் வேலணையூர் விஸ்வகரும குல திலகர்கள் முன்வந்து அம்பாளுக்கு வசந்த மண்டபம் ஒன்றை அமைத்து காணிக்கை ஆக்கினார்கள்.

அடுத்து வேலணை செட்டிபுலத்து பரத குலதிலகர்கள் முன்வந்து குறையாக கிடந்த சுற்றுமதிலை கட்டி முடித்து அம்பாளுக்கு காணிக்கை ஆக்கினார்கள். அதைத்தொடர்ந்து சுந்தர் வயிரவநாதர் என்னும் வள்ளல் சித்திரங்கள் கூடிய சித்திரத்தேர் ஒன்றை காணிக்கையாக்கினார் அம்பாளுக்கு என்று சிலர் கூறுகின்றார்கள். ஆனால் சித்திரத்தேர் இருந்தது உண்மை அது யாரால் அன்பளிக்கப்பட்டது என்று உறுதி செய்ய முடியாதுள்ளது என்று சிலரும் தெரிவிக்கின்றார்கள்.

அந்த சித்திரத்தேர் பழுதடைந்து பாவனைக்கு இயலாத நிலை கண்டு பின் தொண்டர் பிள்ளையினாரின் முயற்சியினாலும் பலரின் பேருதவியினாலும், ஒரு கட்டுத்தேர் அமைக்கப்பட்டே அம்பாள் வீதி உலா வந்ததாகவும் முன்னையவர்கள் கூற கேட்ட பெரியவர்கள் சொல்ல கேட்டு தெரிந்து கொள்ள முடிகின்றது. 1973ம் ஆண்டு புதிய சித்திரத்தேர் உருவாகும் வரை.

இந்த தொடரில் இந்த 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே 1910ம் ஆண்டு அளவில் ஐயம்பிள்ளை காத்திகேசு என்னும் வள்ளல் முத்துமாரி அம்பாளின் உள் வீதியில் வட மேற்கு மூலையில் தனது காணிக்கையாக ஒரு சுப்பிரமணியர் கோவிலும், அதன் அருகே ஒரு சனியேஸ்வரர் கோவிலும் அமைத்து கொடுத்ததோடு ஆலயத்தையும் பெருப்பித்து கொடுத்தார். 1915ம் ஆண்டளவில் ஆலயத்துக்கு நிரந்தர வருமானம் இருக்க வேண்டும் என்ற நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கில் முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் பெயரில் 25 - 11 - 1915ம் திகதி ஆலம்புலம் என்ற பெயருடைய மூன்று துண்டு காணியை தர்மசாதனம் எழுதி மானியமும் கொடுத்தார். இன்றும் காணி பாவனையில் உள்ளது.

1930ம் ஆண்டளவில் யாதவராயர் இராமலிங்கம் அவர்கள் கட்டிக் கொடுத்த கோவிலை இடித்து ஊர்ப் பொதுமக்கள் ஒன்று சேர்ந்து பணம் திரட்டி இராமலிங்க உடையார் தலைமையில் புதிய கோவில் ஒன்றைக் கட்டினார்கள். கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், சபாமண்டபம், மாமண்டபம், பலிபீடம் ஆகிய சகலதும் வெள்ளைக்கல் திருப்பணியாக அமைக்கப்பட்டன. இந்தத் திருப்பணியில் வானத்து சந்திரன் போல் ஒளியாக உறு துணையாக நித்திய பணியாற்றியவர் திருத்தொண்டன் பிள்ளையினாராவார். அவரின் பணி என்றும் மக்களால் போற்றப் படுவதாகும். பொன்னெழுத்தால் பொறிக்கப்பட்ட பணியாகும். அந்த திருப்பணியில் தூபிவேலைச் செலவில் பெரும்பகுதியை முத்துத்தம்பி என்ற வள்ளல் ஏற்றுக் கொண்டார். திருப்பணி யாவும் திருப்தியாக நிறைவேறி 1936ம் ஆண்டுப் பகுதியில் ஆலயம் கும்பாபிஷேகம் நடந்தது.

1938ம் ஆண்டில் தொண்டர் பிள்ளையினார் அவர்கள் வெள்ளைக் கற்களால் ஆலய உள்வீதியில் தென்மேற்கு மூலையில் ஒரு பிள்ளையார் கோவிலைக் கட்டி முடித்தார். அடுத்த பத்து வருடத்துக்குள் உள்வீதி மண்டபமும், மடப்பள்ளியும், வாகனசாலையும் அமைத்து இவை அனைத்துக்கும் கூரை போட்டு, ஓட்டினால் வேய்ந்து திருப்பணியை நிறைவு செய்தார்.

1940ம் ஆண்டளவில் த. சிவகுருநாதன் என்ற வள்ளல் தேர் முட்டியையும், அதன்பின் யாழ்வர்த்தகர் காசிலிங்கம் என்ற வர்த்தக வள்ளல் கோபுர வாசல் வெளிமண்டபத்தையும் கட்டி முடித்தார்கள். அந்தகால எல்லையில் திருத்தொண்டர் க. தில்லையம்பலம் அவர்களால் புகையிலை சேகரித்து உள்வீதி அனைத்தும் சீமெந்து காறை போட்டு பூசி ஆலயம் மெருகூட்டப்பட்டது.

1948ம் ஆண்டளவில் மெய்யடியார் செல்லப்பா சுவாமி அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாளுக்கு தெற்பக்குளம் அமைத்து நாலு சுற்றும் கல்லால் கட்டி முகப்பில் மடம் ஒன்று கட்டி அதற்கு நால்வர் மடம் என்று பெயரிட்டு, மடத்தின் வடக்கு தொங்கலில் சிவன் விக்கிரகம் அமைத்து கோவிலாக்கி, மடத்தின் மத்தியில் தெற்பக்குளத்தை பார்த்தபடி பெரிய லிங்கம் ஒன்று அமைத்து லிங்க வழிபாடு செய்ததோடு மேற்குப்புறம் நீட்டுக்கு வாழைத்தோட்டமிட்டு அம்பாளின் ஆலய வெளிப்புறத்தைப் பொலிவுறச் செய்தார்.

1936ம் ஆண்டு யாதவராயர் அவர்கள் தலைவராக இருந்து நடாத்தப்பட்ட ஆலயத்தின் கும்பாபிஷேகத்தின் பின் 1986ம் ஆண்டு திருவாளர் வ. ஐயாத்துரை அவர்களும் நிர்வாகமும் தலைமையேற்று 10 - 09 - 1986ல் நடந்த ஆலய புனரமைப்பும் கும்பாபிஷேகமும் நடந்தகாலம் வரை எந்த விஷேட நிகழ்வுகளை ஆலய வரலாற்றில் தேடிப்பெற முடியவில்லை. அதற்கு முன் வேல்ணை கிழக்கு ஆலய சுற்றாடலில் வாழ்ந்து வந்தவரும் காவத்தை பிரபல வர்த்தகருமாகிய திருவாளர். சின்னத்துரை அவர்கள் கிட்டத்தட்ட 1949 - 50ம் ஆண்டளவில் அம்மன் ஆலயத்தில் தெற்குப் புறத்தில் மக்களின் பாவனைக்காக இருந்த வாசலை திருத்தி அமைத்ததோடு அந்தப் பகுதியில் ஆலய குருவானவர்கள் தங்கி இளைப்பாறக் கூடிய மண்டபத்தோடும் தெற்கு வாசல் மண்டபத்தை அமைத்து அம்பாளுக்கு காணிக்கையாக அளித்ததாகவும் அறியமுடிகிறது. வேலணையைச் சேர்ந்த அம்பாளின் தென்வாசல் கல்லூரியின் அதிபர் கந்தர் காங்கேசு அவர்கள் பாடசாலையின் பக்கமாக அமைந்திருந்த மூன்று கடைகளைக் கொண்ட இடத்தையும் அம்பாளின் சந்நிதானத்திற்கு காணிக்கையாக வழங்கினார்.

1971ம் ஆண்டளவில் காரியாதிகாரி வினாயகலிங்கம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தேர்த்திருப்பணிச் சபையின் செயல்பாட்டாலும், திருத்தொண்டர் தில்லையம்பலம் அவர்களின் தூக்கமில்லா பேருழைப்பாலும் ஓர் அழகான சித்திரத்தேர் 1973ல் அமைக்கப்பட்டு அம்பிகை சித்திரத் தேர் உலா வந்தாள். அதே காலப்பகுதியில் திருத்தொண்டர் தில்லையம்பலம் அவர்கள் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த செலவில் ஆலய வடக்கு வீதியில் ஒரு அன்னதான சுரபி ஒன்றையும் மனைவியின் நினைவால் கட்டிமுடித்தார்.

1965ம் ஆண்டு வேலணைக்கிராமத்தில் வசித்தவரும் நிக்கவரட்டியாவில் பிரபல வர்த்தகருமாக விழங்கிய திருவாளர். சண்முகம்பிள்ளை அவர்கள் அம்பாளின் பூசைக்கு மலர் தேடி பூசகர்கள் அவலப்படும் நிலை உணர்ந்து நிரந்தர பூந்தோட்டத்தை அம்மன் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைத்துக் கொடுத்தார் என்றும், அதன்பின் 1972ம் ஆண்டளவில் அவரின் மனைவி திருமதி ச. பொன்னம்மா அவர்கள் கணவனாரின் நினைவாக ஆலயத்தின் மாமண்டபத்தின் வட திசையில் ஒரு நடேஸ்வரர் விக்கிரகத்தை அமைத்து பிரதிஸ்டா செய்து வைத்ததாகவும் அதேகாலப் பகுதிக்கு சிறுகாலம் முன்னதாக செல்வன் மு. பஞ்சலிங்கம் அவர்கள் தண்டேஸ்வரர் ஆலயத்தைக் கட்டிக் கொடுத்ததாகவும், இதற்கும் முன்னதாக தா. கந்தையா அவர்கள் வயிரவ கோயிலைக் கட்டிக் கொடுத்து அன்பளிப்பு செய்ததாகவும் அறியவருகின்றது.

அத்தோடு வேலணை இரண்டாம் வட்டாரத்தில் வசித்துவந்தவரும் விசக்கடி வைத்தியருமான முருகேசு கதிரவேலு என்னும் அம்பிகை அடியார் நீண்டகாலமாக தேர்த்திருவிழா அன்று வருடம் தவறாது அடியார்களுக்கு தாகசாந்தி செய்துவந்ததாகவும், அதற்கு ஒரு நிரந்தரமான கட்டிடத்தை அவரின் மகன் கதிரவேலு சிற்றம்பலம் என்பவர் 1972ம் ஆண்டு நிரந்தரமாக ஆலயமுன்றலில் அமைத்து கொடுத்ததாகவும் தெரியவருகிறது. அதே காலப்பகுதியில் அம்பாளின் ஆலயத்திற்கு அவசரமாக தேவைப்பட்டிருந்த நவக்கிரக தெங்வங்களுக்கான ஒரு கோவிலை தங்கள் காணிக்கையாக வேலணையை பிறப்பிடமாகவும், நாரந்தனையை வதிவிடமாக கொண்ட திருவாளர் குமாரசாமி செல்லம்மா குடும்பத்தார் 1972ல் அமைத்துக் கொடுத்ததாகவும் அறியமுடிகின்றது. அதேபோல் 1964ம் ஆண்டில் வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்கத்தினரால் அடியர்களின் நலன் கருதி ஒரு நிரந்தர தண்ணித்தொட்டியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்பாளின் எழுந்தருளி அலங்காரக் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகைக்கு காணிக்கையாக ஆலய முன்றலில் உள்ள கிணற்றுக்கு அருகாமையில் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

1978ம் ஆண்டளவில் வவுனியா வர்த்தகர் மு. கைலாசபிள்ளை அவர்களால் அம்பாளுக்கு இரண்டு ஒலிபரப்பிகளும் அவற்றை இயக்க உதவும் உபகரணங்களையும் அன்பளிப்பு செய்யப்பட்டது.

அம்பிகையின் திருவிழாக் காலங்களில் இரவு நிகழ்ச்சியில் வடக்குவீதியில் அம்பிகையை வாகனத்தில் அமரவைத்து, நிகழ்ச்சி நடாத்தும் அன்றைய நிகழ்வுக்கேற்ப அவ்வூர் இளைஞர்கள் சிலர் சேர்ந்து அம்பிகை நலம்புரிச் சங்கம் அமைத்து திரு. நா. அருளானந்தசிவலிங்கம், செ. பாஸ்கரன் போன்றோர்கள் தலைமையில் பணம் சேகரித்து ஆலயத்தின் வடக்கு வீதியில் தேர்முட்டியின் வடக்குபுறமாக செல்லமுத்து மடத்துக்கும், நால்வர் மடத்தின் வெளிக் கிணற்றுக்கும் இடைப்பட்ட நிலத்தில் நிர்வாகத்தின் அனுமதியோடு ஒரு நிகழ்ச்சி மண்டபம் அமைக்கும் திட்டத்திற்காக அடித்தளமேடை அமைக்கப்பட்டது. அதை அந்த சபை சிந்தித்து செயல்படுத்துவது ஆலய நிகழ்வுகளுக்கு சிறப்பைக் கொடுக்கும் எனலாம். புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் மேற்படி அமைப்பின் நிர்வாகிகளின் சிந்தனைக்கு இச்செய்தியை படிக்கட்டாக்குகின்றேன். தொடரட்டும் அம்பாளின் திருப்பணிகள்.

இந்தக் கால எல்லை வரை கோவிலின் நிர்வாகம், ஒரு நிர்வாக அமைப்பாக நடந்ததாக எங்கேயும் எம்மால் அறிய முடியவில்லை. ஆனால் இராமலிங்க உடையாரின் தனிநிர்வாகத்தின் கீழ் 8ம், 9ம், 10ம், 3ம், 6ம், திருவிழா உபய காரரின் பிரதிநிதித்துவ முறையில் ஆலய நிர்வாகம் நடைமுறைப்படுத்தப் பட்டு வந்ததாகவும் அறியக்கிடக்கின்றது. சில வயதானவர்கள் கூற்றுப்படி, இதில் நீண்ட காலத்தை அன்றைய பெரியார்களான பெரியவாத்தியார் என அழைக்கப்பட்ட இளையதம்பி ஆசிரியரும், செல்லையா ஆசிரியரும் கிட்டினர். கதிரவேலு போன்றவர்கள் பங்கு செலுத்தி உள்ளார்கள் எனவும் சில பெரியவர்களின் வார்த்தை மூலமாக கிடைக்கும் செய்திகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடயமாக கிடைக்கின்றன. இவர்களின் நிர்வாகியாக இராமலிங்க உடையாரே அவர் காலம் வரை நிர்வகித்தார் எனவும், திருவிழாக் காலங்களில் மேல்படி உருத்தான திருவிழாக் காரர்களில் பிரதிநிதிகள் மேலதிகமாக சேர்க்கப்பட்டு திருவிழாக்கள் நடந்தேறி வந்தன என்று மட்டும் அறிய முடிகின்றது. இதன் பிற்பட்ட கால எல்லைகளில் ஆசிரியர் சி. இராசரத்தினம் அவர்கள் திரு. பு. சுப்பிரமணியம் அவர்கள் திரு. வே. பி. கந்தையா அவர்கள், திருத்தொண்டர் க. தில்லையம்பலம் அவர்கள் போன்றோர் தலைமையிலும் நிர்வாகம் நடந்ததாக அறியக்கிடக்கின்றது.

மேலதிகமாக ஆலயத்தில் புனரமைப்போ, புனிஸ்தாபனமோ நடந்ததாக அறிய முடியவில்லை. 1971ம் ஆண்டளவில் கோவில் நிர்வாகிகளுக்கிடையில் ஏற்பட்ட கருத்து தடுமாற்றங்களால், கிட்டத்தட்ட கோவில் 15 ஆண்டுகளுக்கு மேல் சிக்கலுக்குள் தள்ளப்பட்டு நீதி மன்ற முடிவை எதிர் நோக்கி இருந்ததாகவும், அதேகால கட்டத்தில் ஆலயத்தின் நிர்வாகியாக திருத்தொண்டர் தில்லையம்பலம் அவர்களும் அவரின் மரணத்திற்குப் பின் அவரின் மகன் தி. இரத்தினம் அவர்களும் ஆலயத்தில் எந்தவித குறையும் வந்துவிடக்கூடாது என்ற நினைப்போடு காரியங்களை செயலாற்றி வந்ததாகவும், அந்த நீதிமன்றத் தீர்ப்பே ஒரு நிர்வாக அமைப்பு முறையை உருவாக்கியது என அறியவும் முடிகின்றது எம்மால்.

அதன்பின் நாட்டில் நடந்த மக்கள் புலம்பெயர்வால் ஏற்பட்ட கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் மக்கள் ஆலயத்தைப் பற்றி சிந்திக்க முடியாத அவல நிலையில் இருந்தும் அம்பிகையின் அடியார்கள் அம்பிகைக்கு துன்பத்தில் மீண்டெழுந்து வந்தும் பல திருப்பணிகளை செய்துள்ளார்கள். கொடிமரப் புனரமைப்பு, உள்வேலைகள் புனரமைப்பு, புதியசப்பறம், சப்பறக்கொட்டகை போன்ற பல திருப்பணிகளை அன்றைய கால கோவில் தலைவர்களான திரு. க. சரவணநாதன் அவர்களும், திரு. ந. ஜெகநாதன் அவர்களும் மற்றும் நிர்வாகிகளும் திருவிழா உபயகாரர்களின் பேருதவியோடு திருப்பணியாக செய்து முடிப்பு பணிசெய்துள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாளின் ஆலய தெற்குப்புறத்தில் நீண்டகாலமாக இயங்கிவந்த அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 1974ம் ஆண்டளவில் பல அரசியல் போராட்டத்துக்கு பின் மக்களின் ஒற்றுமைக்கு பாலமாக வேலணை கிழக்கு மகாவித்தியாலயமாக உருவாக்கப்பட்டு பெருவளர்ச்சி கண்டு பெரியதோர் கலைக்கோவிலாக நிமிர்ந்து நிற்கின்றது. இதைக் காண்பவர்கள் கலைக்கோவிலால் திருக்கோவில் அணிகலன் பெறுகின்றதா? இல்லை திருக்கோவிலால் கலைக்கோவில் அணிகலன் பெறுகின்றதா? என்ற ஆச்சரிய வினாக்களை எழுப்ப வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள். வடக்கே பெருங்குளத்தின் நீர்ப்பரப்பு பரந்திருக்க, அன்னதான மடம் உயர்ந்திருக்க கிழக்கே தெற்பக்குளமும் நால்வர் மடமும் சிவலிங்க சிலையும் காட்சிதர தெற்கே கலைக்கோவிலான மகாவித்தியாலயம் மகுடம் போட மேற்கே அம்பாள் ஆலயம் அணிசெய்யும் கண்காட்சி பார்ப்போர் கண்களுக்கு பெருவிருந்தாக காட்சி தரும். இப்படியான ஒரு இயற்கை அமைப்பைக் கொண்ட ஆலயத்தை இலங்கையில் எங்கும் காணமுடியுமா என்பது கேள்விக்குறியே.....!

## சண்டாளப் பிரதிஷ்டா அபிஷேகம்

அதைத் தொடர்ந்து நாட்டில் 1990ம் ஆண்டில் ஏற்பட்ட இராணுவ கெடுபிடி காரணமாக ஆலய சுற்றாடல்களில் வாழ்ந்த மக்கள் புலம்பெயர்ந்த காரணத்தால் கிராமத்தில் மக்கள் மிக சிறு தொகையினரே வாழ்ந்து வந்ததாகவும் அப்போது அந்த மக்கள் ஆலயத்தை சுற்றியே வாழ்ந்தார்கள் என்றும், அப்போ ஆலயக் கதவு பூட்டியபடியே கிடந்ததாகவும், அந்த நேரத்தில் அங்கிருந்த அம்பாளின் பக்தரான திரு. கார்த்திகேசு குலசேகரம் என்பவரே வெள்ளி செவ்வாய் நாட்களில் அங்குள்ளவர்களிடம் அரிசி சேகரித்து அம்பிகையின் ஆலய முகப்பில் பொங்கி மற்றவர்களோடு சேர்ந்து பகிர்ந்துண்டு அம்பாளை ஆதரித்து வந்ததாகவும் அறியப்படுகின்றது.

அந்த காலத்திற்கு சற்றுமுன்னதாக அம்பாளுக்கு கோபுரம் அமைப்பதற்கான செயல்பாட்டில் கோபுர திருப்பணிச்சபை வெட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 அடி ஆழம்கொண்ட அத்திவார கிடங்கு அப்படியே கிடந்ததாகவும் அதனால் மக்களுக்கும் ஆலயத்துக்கும் பெரும் இன்னல் ஏற்படும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, எதிர்பாராமல் அங்கு விஜயம் செய்தவரும் அம்பிகையின் பக்தரும் அக்கிராமத்தை சேர்ந்தவரும் தற்போது கொழும்பில் வசிப்பவரும் பிரபல வர்த்தகருமான திருவாளர் கந்தையா கந்தசாமி என்ற பண்பாளர் அந்த கிடங்கினால் ஆலயத்துக்கு ஏற்படும் எதிர்கால பாதிப்பை கருத்தில் எடுத்து தனது சொந்தப் பணத்தில் 250 க்கு மேற்பட்ட உழவியந்திர பெட்டி மணலை மண்கும்பான் பகுதியில் இருந்து தருவித்து அந்த கிடங்கை நிறைத்து பாதுகாத்ததால் ஆலயமும் அப்பகுதியும் இராணுவத்தின் கெடுபிடியில் இருந்து காக்கப்பட்டது எனவும் அதற்கு அன்றைய நிர்வாகமும், உதவியதாகவும் பிற்காலத்தில் அந்த மணலே கோபுரம் அமைக்க பயன்படுத்தப்பட்டதாகவும் அறியமுடிகின்றது.

இப்படியே ஆண்டுபல கடந்து போக கெடுபிடிகளும் கொஞ்சம் தளர 1996ம் ஆண்டளவில் புலம்பெயர்ந்த மக்களும் மீண்டும் தம்தேசம் தேடி வந்தமர எண்ணி வரத்தொடங்க கொழும்புவாழ் மக்களும் தம்தாய்மண் நோக்கிய தம் சிந்தனையை போடத் தொடங்குகையில் அம்பிகையின் அடுத்த கட்ட நிகழ்வு ஆரம்பமாகியது. கிராமத்தின் சாதாரண மக்கள் நடைமுறையை அவதானித்த அந்த கிராமத்தில் பிறந்தவரும் தவிடுதின்னி பிள்ளையார் ஆலய நிர்வாகியும் கொழும்பில் வாழ்பவரும் அம்பிகையின் பக்தருயான வர்த்தகர் செல்லையா நாகராசா அவர்களின் சிந்தனையில் அம்பிகையின் ஆலயம் பற்றிய விடயம் இளையோடியதாம். இந்த சிந்தனையை செயல்படுத்த எண்ணிய அவர் தனக்கு தெரிந்த அம்பிகையின் பக்தர்களை அணுகி விபரம் கூறி விளங்க வைக்க செயல்பாடு தொடங்கியது. அந்த காலத்தில் கொழும்பில் அரசபணியில் இருந்த அம்பிகையின் பக்தர் கந்தையா சரவணநாதன் (பாலன்) அவர்களை அணுகி தனது சிந்தனையை சொல்ல அவரும் அதற்கு இணங்கிவர மற்றும் சில அம்பிகை அடியார்களும் சேர்ந்து வேலணை சென்று பூட்டிய ஆலயத்தை திறந்து அயல்கிராம ஆலய நிர்வாகிகள், குருக்கள் துணையுடன் **சண்டாளப் பிரதிஷ்டா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அபிஷேகம்** நடாத்தி காலத்தின் கோளாறால் ஆலயத்தில் ஏற்பட்ட குறைபாடுகளுக்கு எல்லாம் சாந்தி செய்து, தொடர்ந்து ஆலயத்தை செயல்படுத்த வழி அமைக்கப்பட்டது எனவும் அறியப்படுகின்றது.

நீண்டகால இன்னலின் பின் அம்பிகை தனது திருவிளையாட்டை மெருகூட்டி அருள்விளையாட்டு காட்டி நிற்கின்றாள். அன்னை 2002ம் ஆண்டு வருடாந்த ஆடிமாத உற்சவ காலத்தில் நிகழ்ந்த ஒரு அருள்விளையாட்டு. கடந்த பல ஆண்டுகளாக பாவனையில் இருந்து வந்த மடல் சம்பறம், கடந்த மக்கள் புலம்பெயர்வால் பாவிக்க முடியாத நிலைக்கு வந்ததால், திருவிழா உபயகாரரால் ஒரு புதியமடல் சம்பறம் செய்து இம்முறை பாவனைக்குரியதாக்கி தந்தார்கள். சம்பறம் அனைத்துப் பாகங்களும் பொருத்தப்பட்டது. 9ம் திருவிழா இரவு அதை இழுக்க வேண்டும். அன்று திருவிழா ஏழு. தற்காலிகமாக தேர்வடத்தைப் பாவிக்க எண்ணிய நிர்வாகம், தேர்வடத்தை வெளியே கொண்டுவர முயற்சிக்கும் வேளையில் தேர்வடம் பாவிக்க முடியாத நிலையில் காணப்பட்டது. நிர்வாகத்துக்கு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. மறுநாள் சப்பறம் இழுக்க வேண்டும். புதிதாய்த் தேர்வடம் வாங்க குறைந்தது 100,000.00 ரூபா பணம் வேண்டும். போய்த்தேடி வாங்க நிர்வாகத்துக்கு நேரம் பற்றாக்குறை. இந்த நிலையில் பெருங் கவலையுடன் இம்முறைக்கு பக்கத்தூர், கோவிலில் கடன் வாங்குவோம் என்ற முடிவோடு இரவு கழிந்தது. காலை நேரம் எட்டுமணி. வாய்பேசமுடியாத 18 - 20 வயது மதிக்கத்தக்க இரண்டு இளைஞர் ஓட்டமாய் ஓடிவந்து ஆலய குருக்களின் கதவைத் தட்டி தாங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு கொண்டிருக்கும்போது பாம்பு போல் ஒரு பொருள் தமக்கு தெரிந்ததாகவும், தட்டி பார்க்க அது தேர்வடம்போல் தெரிவதாகவும், இழுக்க முடியவிலை இயன்றவரை இழுத்து வந்து கரையில் ஒரு பகுதியில் சேர்த்துள்ளோம். ஆட்கள் வந்தால் மிகுதியையும் இழுத்து ஏற்றிவரலாம் என்று எழுத்தில் எழுதி ஆலய குருவிடம் காட்ட குரு நிர்வாகத்திடம் தெரிவிக்க, நிர்வாகம் உழவுயந்திரமும், ஆட்களும் கொண்டு சென்று கரையை அடைய கடலில் கிடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுதியை இழுத்தெடுக்க, வந்தது 750 மீற்றர் நீளமான தேர்வடம். இதை அறிந்த மக்கள் ஆலயத்தை நாடி அம்பிகையின் அருளை திருவிளையாட்டை கண்டும், கேட்டும் பரவசமாகினர். அடுத்தநாள் காலையில் வெளிவந்த அத்தனை பத்திரிகையும் தேர்வடப் படத்துடன் செய்திகளை வெளியிட்டு அம்பாள் அருளை பறைசாற்றினர் எனலாம். இத்துணை அருள் கொண்ட அம்பிகையின் ஆலயத்துக்கு இராஜகோபுரம் இல்லாத குறை பெரும் வேதனை தரும் நிலையில் இருப்பதை உணர்ந்த இன்றைய புதிய நிர்வாகம் இந்த குறையை நிவர்த்தி செய்யும் பெரும் நோக்குடன் அண்மையில் இராஜகோபுர திருப்பணிச் சபை ஒன்றை உருவாக்கி கிராமத்தை சேர்ந்த வர்த்தகப் பெருமக்களின் உதவியுடனும், அம்பிகையின் மேல் பற்றுகொண்ட புலம்பெயர் மக்களின் உதவியுடனும் நிறைவேற்றி முடிக்கலாம் என்ற பெரிய நம்பிக்கையோடு தம் பணியைத் தொடர்ந்து அத்திவாரம் போடப்பட்டு வெள்ளைக்கல் வேலைகளை ஆரம்பித்துள்ளார்கள் என்ற நல்ல செய்தி கிடைத்துள்ளது. இந்த செய்தி அறிந்து புலம் பெயர்ந்தாலும், அம்பிகையின் நினைப்பில் வாழும் அம்பிகை அடியாருக்கு பெருமகிழ்ச்சி தரும் செய்தியாகும். அப்பணி நிறைவேற அம்பிகை அருள்புரிந்து அனைவரின் உள்ளங்களிலும் நிறைவுதந்து அடுத்த ஆண்டு மஹோற்சவ கால எல்லைக்குள் திருப்பணி நிறைவு காண நாம் அனைவரும் பணிபுரிவோமாக. அம்பிகை அருள் புரிவாளாக.

**ஓம் சக்தி ஓம்**

**கோபுர தரிசனம் கோடி புண்ணியம்**
**காலநேரத்துக்காக அம்பாள் காத்திருக்கின்றாள்**
**அம்பிகை அருள் பொங்கி வழியுமென நம்புவோமாக.**
**தொடரட்டும் பணி பெருகட்டும் அருள்.....!**

தேடித்தொகுத்தவர்
***வேலணையூர் பொன்னண்ணா***
டென்மார்க்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டால் நிலைத்த தொண்டர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணை சாட்டி என்னுமிடத்தில் அமைந்துள்ள
ஞானி ஸ்ரீலஸ்ரீ இ. சோமசுந்தர ஐயர் அவர்களின் சமாதி



## கறுவல் ஐயர் என்று மக்களால் அன்போடு அழைக்கப்பட்டு பின் சமாதியான ஞானி ஸ்ரீலஸ்ரீ இ. சோமசுந்தர ஐயர் அவர்கள்

இன்று உலகத்தில் பலஞானிகள், பல முனிவர்கள், பல தெய்வீக தீர்க்கதரிசிகள் பலர் தோன்றினார்கள், மக்களுக்கு பல போதனைகளை செய்தார்கள் என்றெல்லாம் கேள்விப்பட்டு இருக்கின்றோம். ஆனால் கண்ணால் காணவில்லை. ஆனால் வேலணை மக்களின் தெய்வீக அருள் கொண்ட வாழ்க்கை முறை, மதநம்பிக்கை அவர்களுக்குள்ளேயே ஒரு உள்ளொளி பெற்ற உத்தரமான ஒரு ஞானியை, ஒரு தெய்வ சிந்தனையாளனை, ஒரு சிறந்த உண்மையான அம்பிகை பக்தரை அவர்கள் சந்தித்து, வணங்கி ஆசீர்வாதம் பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் பாக்கியத்தை அன்னை முத்துமாரி கொடையாக்கி இருந்தாள்.

இவரை கறுவல் ஐயர் என்று மக்கள் அன்பாக அழைப்பார்கள். இவர் சில ஆண்டுகளாக அம்மன் ஆலயத்தில் பூசகராக கடமைபுரிந்தவர். பிற்காலத்தில் இவர் துறவியாகி சித்தர்கள் வாழ்க்கை முறையை கைக்கொண்டு ஞானபோதனைகளுக்குள் பிரவேசித்து, இவரின் வலதுகையால் பிரசாதம் பெற்றால் பெரும் புண்ணியமும் காரிய சித்தியும் ஏற்படும் என்ற நிலையில் மக்கள் நம்பிக்கை வைத்து செயல்பட ஆரம்பித்தார்கள்.

இவரின் மூதாதையர் சிலர் இந்த அம்மன் ஆலயத்தில் பூசகராக கடமை புரிந்தவர்கள் என்றபடியால் இவரும் வேலணை மண்ணிலே அவதரித்த ஒரு அவதார பூசகராக நம்பலாம். இவர் பற்றற்ற ஞானியாகி பிற்காலத்தில் ஒரு ஞானியின், ஒரு சித்தரின் நிலைக்கு உள்பட்டவராகி பல பக்தர் கூட்டத்தை உள்வாங்கியவராக இருந்தார். அவருக்கு பக்தரால் வழங்கப்படும் உணவு, உடை, பழவகை போன்ற அனைத்து பொருட்களையும் அங்கு கூடும் அடியவர்க்கே கொடுத்து வருவாய் கருதாத தொண்டாக தன் மதக் கடமைகளை செய்து வந்தார். இவரின் அவதார வாழ்க்கை முறை அம்பிகையின் பெருமைக்கும் அருளுக்கும் பெருங் கொடையாக விளங்கியது எனலாம்.

இவர் தன் தாயாரையே கோவிலாக தெய்வமாக நெஞ்சில் நிறுத்தி பெரும் பணி செய்தார். இறுதியாக இவர் தனது எண்பது ஆண்டுகள் வரை இந்த பூவுலகில் வாழ்ந்த மகானாக, கடைசியாக புங்கையூருக்கு சென்ற இடத்தில் அங்கேயே அம்பிகை மடி சேர்ந்தார். அவரின் நிழல்படம் கிடைக்காத காரணத்தால் அவரை வேலணை மக்களால் சாட்டியில் சமாதி வைத்த இடத்தை நிழல்படமாக்கி இந்த மலரின் மூலம் அவரின் நினைவை நன்றியுணர்வோடு மலரவைக்கின்றோம்.

அன்புடன்

**- வேலணையூர் பொன்னணண்ணா -**

டென்மார்க்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நினைக்கின்றோம்
## பிடி அரிசி தொண்டர் பிள்ளையினார்

நாம் அறியா காலத்தில், அம்பாள் பணிக்கென்றே பிறவி எடுத்தவராய் ஊரார் உள்ளங்களில் நிறைந்த தொண்டராய் விளங்கி வீடுவீடாக அம்பாளின் விளக்கெரிய எண்ணைக்காக பிடி அரிசி சேகரித்து விளக்கெரிய வைத்து ஒளிகொடுத்த தொண்டர். பிற்காலத்தில் முழுநேர திருத்தொண்டராகி அம்பாளின் திருப்பணிக்காய் பெரும் தொண்டாற்றி வைரக்கல்லால் அம்பாள் ஆலயத்துக்குள் தென்கோடியில் பிள்ளையார் ஆலயத்தை உருவாக்கி தான் தன் கண்ணால் பூசை கண்டு வழிபட நேரே முகப்பில் யன்னல் வைத்து வணங்கிவந்த தொண்டர் பின் அம்பாளுக்கு கட்டுத்தேர் ஒன்றையும் செய்தார் எனவும் அறிகின்றோம். அவரின் நிழல்படம் கிடைக்காத நிலையில் அவரின் ஞாபகமாய் புதிய சித்திரத்தேரில் நினைவுச் சிலையாய் செதுக்கிய சித்திரத்தை படமாக்கி பயன் படுத்துகின்றோம்.

ஓம் சக்தி ஓம்

**ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடிஅரிசித் தொண்டன் பிள்ளையினார்

அம்மைசெந்தா மரைப்பதங்கள் ஆட்சி செய்யும்
அகமுடையான் இராப்பகலாய் அந்தத் தொண்டன்
செம்மையுறப் பனையோலை எடுத்தே வார்ந்து
சிறப்பமையப் பிடியரிசிக் குட்டான் செய்து
எம்மனையும் தவறாதூர் ஊராய்ச் சென்றே
எம்தாய்க்கே பிடியரிசி நாள்நாட் சேகரித்தே
நம்மையாள் பிராட்டிதலத் தொண்டிற் காக
நான்வருங்கால் உதவுங்கள் நலமே வாழ்வீர்

பெருங்குளத்தாய் அருள்பொலியும் புனிதத் தொண்டன்
பிள்ளையான் எனும்நாமம் பூண்ட அன்பன்
திருத்தொண்டால் உளம்மகிழ்ந்தே திருத்தாள் போற்றத்
தன்வாழ்நாள் அர்ப்பணித்த தகமை யாளன்
அருளாளன் அடியார்க்கே அடியன் என்னும்
அகன்றஅகம் உடையானே அஃது முன்செய்
பெருந்தவத்தால் ஆனதுவே பெருமாட் டிப்பேர்
பேறருள வந்தானூர்ப் பெரும்பே றாக

வேலணைத் திருப்பதிக் கிழக்கிலே பிறந்தவன்
விறலுயர் அம்மை அடியான்
விருப்பெலாம் அவள்பதம் கொட்டிக் குவித்தவன்
விடலைமிக அழகா னவன்
காலங்க ளெலாமவன் கருத்தா யிருப்பவன்
கவச்சிகர மான காளை
கட்டுமட் டானஉடல் காத்திர மேமுழங்
காலுக்கு மேலான வேட்டி
கோலமார் தோள்களில் கொளுவிய சாக்குகள்
கொலுகொலு வாம்முத்தச் சிரிப்புக் .
கொண்டவன் கருநிற மேனியன் நெற்றியில்
கோதிலா வெண்ணீறு துலங்கல்
போலவே உள்ளமும் வெள்ளையே நந்தனார்
புகுந்தனன் பிள்ளை யினாரென்
பெயர்கொண்டே அம்மையே புகவெனக் கொண்டதோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத் துள்வீதி தென்மேற்கு மூலையில்
அமைத்துமே பிள்ளையார் ஆலயம்
ஆங்குதான் உட்புகுந் தஞ்சலி செய்வதற்
காதிதிரா விடத்த டையால்
சாலவே ஆலய முகப்பது மதிலிலே
சாளரம் அமைத்தஞ் சலித்தான்
சாற்றருள் தேவாரம் பாடியே துதித்தனன்
சற்குணம் ததும்பு சீலன்
ஏலவே அம்மைக் கிருந்தசித் திரத்தேர்
இயங்கா திருத்தல் கண்டு
ஏற்புடைத் தானதோர் கட்டுத்தேர் ஆக்கியே
ஈந்தனன் அம்மை அடியானிக்
காலத்தில் அத்தேரில் ஆரோ கணிப்பவன்
ஆனைமுகக் கடவுளாவான்
கண்ணிறைந் தேகண்டு களித்துளம் நிறையுமே
கண்ணியத் திருத்தொண் டதனால்

வெள்ளைக்கல் திருப்பணிகள் வியனுறும் காலத்தில்
வேளைதவ றாத தொண்டு
விறலுயர் பெரும்பக்தி வேட்டுமே குடிகொண்ட
விண்ணகம் ஒளிரும் நிலவாய்
உள்ளகா லம் முழுதும் ஒளிக்காது தேயாது
உவகையது கொப்ப ளிக்க
உத்தமன் ஊராரின் உள்ளங்கள் ஒளிர்த்தவன்
உண்மைசால் பிள்ளை யானாம்
தெள்ளிய உள்ளமது திருத்தகு புனிதமார்
திறலுடன் உதவி வந்தான்
தெய்வமே தந்தவோர் திருமகன் அவனுளம்
தேவியது சந்நி தானம்
என்னுமோர் சிந்தையது அள்ளூறி அவன்சேவை
ஏத்தவே இலங்கி நிற்கும்
எம்பெரு மாட்டிக்கோர் இனியவன் இளஞ்சேயாய்
இருந்துவகை ஈந்த இளவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நால்வர் மட ஸ்தாபகர்
# சிவபக்தர் செல்லப்பா சாமியார் !

வேலணையை பிறப்பிடமாக கொண்டவரும், சிவபக்தருமான திருவாளர் செல்லப்பா சாமியார் என்ற பெயரைக் கொண்டவருமான இவர், தனது சிவபக்தியின் காரணமாக பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வரத்தில் எழுந்தருளி இருக்கும் சிவனின் ஆரம்பகால சிவத்தொண்டராய் பணிபுரிந்து, பிற்காலத்தில் தாய்மண்ணின் மகிமை துலங்க நால்வர் மடத்தையும் தீர்த்தக் கேணியையும் உருவாக்கி சிவப்பணியை ஆரம்பித்ததோடு அந்த மடத்தில் வடகரையில் சிவனுக்கு சிறு ஆலையமும் அமைத்து நிர்வகித்து வந்தவர். இவர்காலத்தில் அம்பிகையின் சுற்றாடலில் அத்தனை விஷேட சமய தினங்களுக்கும் விஷேட விழா நடாத்துவதோடு பேச்சாளர்களையும் வரவழைத்து மக்களுக்கு சமய அறிவு வளர பணிபுரிந்தவர். சிவன்ராத்திரி தினத்தில் பெருவிழா நடாத்தி சாட்டிக் கடற்கரைவரை சிவனுக்கு தேர்பவனி நடாத்தி மக்கள் நெஞ்சங்களில் நீங்கா இடம் பிடித்தவர் எனலாம். நாமும் நன்றி மறக்காது அவரை நினைப்போமாக !

***ஆசிரியர்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பா சுவாமிகள்

செந்தூரச் சிவகாம சுந்தரிச் சிலம்பதிர்
சீறடிச் செந்தா மரைகள்
செல்லப்ப சுவாமிகள் உள்ளத்தில் மலர்ந்துமே
சுரந்ததேன் பக்தி வெள்ளம்
வந்தூறி நின்றருள் வளர்ந்துமே திருப்பணி
வழிகளில் கொண்டு செல்ல
வகுத்துமே கோவில்முன் தெப்பக் குளமதை
வனப்புற நான்கு திசையும்
தந்தகற் கட்டுடன் முகப்பினில் மடமொன்று
தகவுற நிறுவி அதற்கு
தன்னருட் செல்வர்க்காம் நால்வர் மடம்என
தகைமைசால் நாம மிட்டு
சிந்தையது சிவமய மாகிய சுரப்பினால்
சிவன்விக் கிரகம் மடத்தில்
சிறப்புற வடதிசைத் தொங்கலில் தாபனம்
செய்தனன் கோவிலாக

தோன்றாத் துணையெனும் திருவருள் பரந்துமே
திகழ்கின்ற மண்ட பத்தின்
திருவொளிர் நடுவணே இருந்துமே துதிப்போரைத்
துரந்ததீ வினைகள் தீரச்
சான்றதோர் பெரியதோர் இலிங்கதா பனம்செய்து
சார்ந்தசீர்த் தெப்பக் குளத்தைச்
சால்புற நோக்கிய வண்ணம் இருக்கின்ற
சாயலது கருணை பொழிய
ஆன்றபேர்ப் பத்தியின் தூய்மைசுடர் எறிக்கவே
அகல்விளக் கேற்றி நிற்க
ஆக்கியே அம்பாளின் மேற்றிசை நீண்டதோர்
அயலகம் வாழை
ஈன்றஇலை கனியெலாம் அர்ச்சனைக் காகவே
எடுத்தளிக் கின்ற எண்ணம்
இருந்துகுடி கொளவாழ்ந்த இயல்பினன் செல்லப்பா
இறைவியடி சேர்ந்தான் இனிதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# திருத்தொண்டர்
# க. தில்லையம்பலம் அவர்கள்

வேலணை மக்களின் பெரும் மதிப்புக்குரியவரும் சமய, சமூக அரசியல் செயல்பாட்டில் மக்கள் நம்பிக்கையாளராக கிராமத்தில் திகழ்ந்தவரும், ஆலையத்தின் நீண்டகாலமாக ஆயுள்காலம் வரை தலைவராக இருந்தவரும் மக்களிடம் புகையிலை வாங்கி ஆலையத்தின் உள்வீதி நிலம் காறை போட்டவரும், பிற்காலத்தில் தேர்த்திருப்பணிச் சபையின் தலைவராக இருந்து சித்திரத்தேரை உருவாக்குவதற்காக நேரகாலம் பார்க்காமல் முழுநேர தொண்டராய்..... இலங்கை பூரா வலம்வந்து ஊர்மக்கள் உதவியோடு சித்திரத்தேர் உருவாக மூலகாரணமாக இருந்தவரும், கோவில் வடக்கு வீதியில் வளர்ந்து நிற்கும் தில்லையம்பலம் செல்லமுத்து ஞாபகார்த்த அமுதசுரபியை தனது மனைவியின் நினைவாக உருவாக்கியவரும், இன்றும் வேலணை மக்கள் மத்தியில் நினைவில் நிற்பவருமாவார். இவரையும் நாம நன்றி உணர்வோடு இந்த மலரில் நினைப்போமாக !

**ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அம்பிகையின் அருந்தொண்டர்
## அமரர் திருத்தொண்டர்
# கந்தையா தில்லையம்பலம்

*(வேலணை, பெருங்குளம் முத்துமாரி அம்பாள் கோவிலின் பரிபாலன சபை முன்னாள் தலைவர்)*

## திரு. வ. நவரத்தினம்

*(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஊர்காவற்றுறை)*

காலத்தையும் கற்பனையையும் கடந்தவள் எங்கள் முத்துமாரி. பல்லுயிரையும் காத்தவாறு வேலணையூர் பெருங்குளத்தின் தென் கரையிலே நின்று தவம் புரிந்து மோனத்தில் இருப்பவள் எங்கள் முத்துமாரி.

காலத்துக்குக் காலம் தன் திருக்கோவிலுக்குத் திருப்பணிகள் தேவையென்று திருவுளங் கொள்ளும் சமயங்களிலெல்லாம் தவறாமற் திருத்தொண்டர்களை உற்பயவிப்பாள் அம்பிகை. திருத்தொண்டர்கள் பலர் அவ்வப்போது தோன்றி அம்பிகையின் திருக் கடாட்சத்தைப் பெற்றுத் தேவ கைங்கரியத்தில் தம் வாழ்நாளைக் கழித்தமையின் பலனாகவே இப்போதிருக்கும் எழுச்சியுற்ற திருக்கோவிலை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. **காசித் தம்பி** என்றும், **அம்பலவாண உடையார்** என்றும், **இராமலிங்க உடையார்** என்றும், **யாதவராய இராமநாதர், கதிர்காமர் ஆறுமுகத்தார், வைரமுத்தர், வைரநாதர், ஐயம் பிள்ளை கார்த்திகேயபிள்ளை** என்று இன்னோரன்னார் செய்துவந்த திருப்பணிகளை இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த நந்தனார் குலத்தோன்றலாகிய **"பிள்ளையான்"** என்னும் திருத்தொண்டர் தொடர்ந்து நடத்திவந்தார். இந்தத் திருத் தொண்டர் வரிசையில் வந்தவர் தான் **கந்தையா தில்லையம்பலம்** என்னும் மெய்யடியார்.

இற்றைக்கு அறுபத்துமூன்று வருஷங்களுக்கு முன் வேலணைக் கிராமத்திலே சைவவேளாண் குலத்திலே நாகப்பர் கந்தையா என்ற சிவபக்தருக்கும் அவரது தர்மபத்தினியாகிய தையல்முத்து அம்மையாருக்கும் ஐந்தாவது குழந்தையாகப் பிறந்தார் நமது தில்லையம்பலத் திருத்தொண்டர். இளமைப் பருவத்திலேயே அம்பிகையின் திருக் கடைக் கண்பார்வை இவர்மீது படிந்தபடியால் அம்பிகையின் தாசனானார். கோயில் வீதியில் விளையாடும் பருவத்திற்கூடக் கோவிற் பிரகாரத்தைச் சுத்தம் செய்வதை விளையாட்டோடு விளையாட்டாகச் சேர்த்துக்கொள்ளுவார். ஒத்த வயசினரோடு சேர்ந்து கோயில் வீதியிலேயே காலத்தைக் கழிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்க பருவத்திலே செல்லமுத்து அம்மையாரைத் திருமணம் செய்து எல்லோரையும் போல லௌகிக வாழ்க்கையில் ஈடுபட்டார். குல மரபைப் பின்பற்றி உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து வாழ்க்கை நடத்தினார். இன்முகத்தோடு விருந்தோம்பி, சேக்கிழார் கண்ட திருத்தொண்டர்கள் வாழ்ந்த வழி வாழ்ந்தார். 1972ஆம் ஆண்டு ஆடிமாதம் 15ஆந் திகதி இவரது சகதர்மிணி இவரை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்தார். லௌகிக சம்பிரதாயத்துக்கு ஈர்த்துப் பிணைத்திருந்த கடைசிப் பற்று இற்றதுடன் தான் துறவு பூணக் காலம் வந்துவிட்டதெனக் கருதினார் நமது தில்லையம்பலத்தார். அன்றிருந்து காஷாயம் பூண்டு திருத்தொண்டர் கூட்டத்திற் சேர்ந்து கொண்டார்.

கடந்த பல ஆண்டுகளாக வேலணை பெருங்குளத்து ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோவிலில் நடந்துவரும் திருப்பணி வேலைகளையும் பூசைச் சிறப்புகளையும் நித்திய நைமித்தியங்களையும் திருவிழாத் திருக் கோலங்களையும் அவதானித்து வந்தவர்கள் தில்லையம்பலத் திருத்தொண்டரின் அம்பாள் பக்தியையும் அவரது கண்டிப்பானதும் சுயநலமற்றதுமான நிருவாகத் திறமையையும் பெரிதும் வியந்து பாராட்டாமல் இருக்கமுடியாது. புகழேந்திகளும் சுயநலவாதிகளும் மலிந்து போய், கோவில் மணியகாரன் என்றும் பொதுநல ஸ்தாபனங்களில் உத்தியோகத்தர்கள் என்றும் மக்கள் பிரதிநிதிகள் என்றும் பதவிகளை நாடித்திரிந்து, அப்பதவிகளின் மூலம் தத்தம் சுயநலத்தையும் தமது குடும்பத்தின் நலத்தையும் முன்னேற்றம் அடையச் செய்யும் சுயநலப் பித்தர்களையே எந்தப்பக்கம் திரும்பினாலும் காணக்கூடியதான இந்தக் காலத்தில் திருத்தொண்டர் தில்லையம்பலத்தார் ஓர் அபூர்வப் பிரகிருதியாவார். அவருக்கு அம்பாள் தான் சர்வமும். நான், எனது என்ற சொற்கள் அவரது அகராதியிலேயே கிடையா. சுயநலம், மமகாரம் என்பவை அவரை அணுகமாட்டா. அம்பாள் திருக்கோவிலின் உள்வீதிக்கு ஊர்மக்களிடம் தண்டிச் சீமெந்தினால் தளம் அமைத்தார். அந்தத் திருப்பணியைத் தில்லையம்பலத்தார் செய்தது என்று ஊரார் சொன்னபோதிலும் அவரே **"அம்பாள் செய்து தந்தாள்"** என்று தான் சொல்லுவார். செய்ய முடியாத கருமத்தைப் பொறுப்பு ஏற்கும்போதும் **"அம்பாள் முடித்துத் தருவாள்"** என்று அம்பாள்மீது உரிமை கொண்டாடித் துணிகரமாகப் பேசுவார்.

கோவிற்திருப்பணிக்காக எதைக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளுவார். சிலர் புகையிலை முடிச்சுகளைக் கொடுப்பார்கள். அந்த முடிச்சுகளை மூட்டையாகக் கட்டித் தன் தலை மீதே சுமந்துகொண்டு போவார். சிலர் வாழைக்குலைகளைக் கொடுப்பார்கள். அவற்றைத் தன் தோள் மீதே சுமந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வார். பிடியரிசிக் கடகத்தைத் தன் தலையிலே சுமந்து வீடு வீடாகத் திரிவார். உழவாரம் ஏந்திய கையினராகிய அப்பர் சுவாமியைப் போலவே தில்லையம்பலத் திருத்தொண்டரும் ஜீவன் முக்தர் நிலையை அடையும் பரிபக்குவத்தை அணுகிக்கொண்டிருக்கிறார் என்பதற்கு அறிகுறியாக அம்பாள் சேவையே ஆண்டவன் கட்டளை என்று சிரமேற்கொண்டு முழுநேரத் தொண்டனானார்.

இவரது தூய்மையான பக்தி கலந்த சேவையுள்ளத்தைக் கண்ணுற்ற ஊர்மக்கள் நிர்வாக சபைத் தலைவராகத் தெரிவுசெய்து அம்பாள் கோவிலின் நிர்வாகத்தை இவரிடம் ஒப்படைத்தனர். கோவில் நிர்வாகமே இருபத்துநான்கு மணித்தியாலச் சுமையாக இருக்கும்பொழுது இன்னுமொரு பொறுப்பையும் தன் தலைமேல் சுமக்கவேண்டி நேரிட்டது. தேர்த் திருப்பணிச் சபையின் தலைவராக ஊர்காவற்றுறைக் காரியாதிகாரியாக (D.R.O. Kayts) இருந்த திருவாளர் எஸ். விநாயகலிங்கம் அவர்கள் அங்குரார்ப்பணக் கூட்டத்திலே தெரிவு செய்யப்பட்டு வழிநடத்தி வந்தார். 1970ஆம் ஆண்டிலே அவர் மாற்றலாகச் சென்ற பின்பு திருத்தொண்டர் தில்லையம்பலத்தாரே தலைவராக வழிநடத்தி வருகிறார். தேர்த் திருப்பணிச் சபையின் ஜீவநாடிபோல் இயங்கும் செயலாளர் **சதாசிவம் மாணிக்கவாசகர்** புதுச் சித்திரத் தேர் அமைக்கும் மாபெரும் திருப்பணிப் பொறுப்பின் பெரும்பாகத்தை ஏற்று நடத்தி வந்தமையால் தலைவரின் பாரம் சற்று இலேசாக இருந்துள்ளது. திருத்தொண்டர் தில்லையம்பலத்தாரின் நிழல்போன்றவர், சதாசிவம் மாணிக்கவாசகர். அசலும் நிழலும் சேர்ந்து உழைத்துப் பெற்றதன் பெறுபேறே அம்பாளின் புதிய சித்திரத் தேராக அமைந்துள்ளது. இதனைக் கைகூட வைத்த பிராட்டியின் திருவருளைப் பரவிக் கொண்டிருக்கிறார் நமது திருத்தொண்டர்.

பெருங்குடிப் பிறப்பினால் வந்த பண்பாடும், முற்றிய பரிபக்குவத்தினால் வந்த சாந்தமும், நிறைகுடம் போன்ற மெய்ஞ்ஞான பூரணத்துவத்தினால் வந்த அடக்க ஒடுக்கமும் ஒருங்கு சேர்ந்து இவரது துறவுக்கு மெருகூட்டுவனவாக அமைந்துள்ளன. உண்மைத் துறவிகளுக்கே உரிய குழந்தையுள்ளமும், இன்முகமும் அம்பாள்மேல் வைத்த அழியா நம்பிக்கையும் மக்களைத் தன்வயப்படுத்தும் ஆயுதங்களாக இவரிடம் அமைந்துள்ளதனாற் கோவிற்றிருப்பணி நிதிக்குவைக்குப் பஞ்சமே நேர்ந்ததில்லை.

சைவம் தழைக்கவும், தமிழ் ஓங்கவும், வேலணையின் எழிலார்ந்த ஏற்றமிகு நல்வாழ்வு செழிக்கவும் தில்லையம்பலத் திருத்தொண்டர் அம்பிகையின் அனுக்கிரகத்தைப் பெற்றுச் சிரஞ்சீவியாக வாழட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஸ்ரீலஸ்ரீ பிரம்மஸ்ரீ பொன்னுச்சாமி குருக்கள் அவர்கள்

ஸ்ரீலஸ்ரீ பிரம்மஸ்ரீ பொன்னுச்சாமி குருக்கள் அவர்கள் வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய வரலாற்றில் நாம் அறியக் கூடியதாக நீண்ட நாட்கள் அம்மனுக்கு பெரும் பணியாற்றியவராவார். 1961ம் ஆண்டு சாதாரண கோவில் பூசகராக பணிதொடர்ந்த இவர் அம்பிகையின் பக்தர்களின் பெரும் மதிப்பைப் பெற்றதோடு ஆலய சுற்றுவட்ட மக்களிடமும் நன்மதிப்பைப் பெற்று ஆலயத்தின் அருகிலேயே குடியிருந்து பின் ஆலையத்தின் குருவாக வளர்ந்து ஆலயத்தின் வருடாந்த உற்சவ காலங்களில் பல ஆண்டுகள் பிரதமகுருவாக கடமையாற்றி உள்ளார்.

இவர் ஆலயம் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பார்த்து பின்னடைவைக் கண்ட நேரம், திருத்தொண்டர் க. தில்லையம்பலம் அவர்களுக்கு பெரும் உதவியாய் இருந்தார். பின் கிட்டத்தட்ட 1984ம் ஆண்டளவில் ஆலயத்தின் புதிய நிர்வாகத்துக்கும் அவருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் ஆலயத்தை விட்டு பெரும் துயரத்தோடு விலகி சென்றார் என்றும் அறியமுடிகின்றது. அவரின் பணியையும் இந்த நேரத்தில் நன்றி மறவாத உணர்வோடு எண்ணிப்பார்ப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்பாள் தேவஸ்தான முன்னாள் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ பொன்னுச்சாமி குருக்கள் அவர்களின் வாழ்க்கை வரலாறு

சிவபூமி, சொர்ணபூமி என பல திருப்பதிகங்களை தன்னகத்தே கொண்ட இலங்கைத் தீவின் ஈழத்திருநாட்டின் வட பகுதியாம் யாழ்ப்பாணத்தில் வடமராட்சி துன்னையூர் என்னும் கிராமத்தில் பிரம்மஸ்ரீ சங்கரஐயர் சின்னாச்சி அம்மாள் தம்பதிகளுக்கு தவப்புதல்வனாக **16-11-1911**ம் ஆண்டு பூமியிலே அவதரித்தார். இவர் தனது இளமைக் கல்வியை பருத்தித்துறை காட்லி கல்லூரியில் ஆரம்பித்தார். அவ்வேளை குடும்ப நிலைமை காரணமாக தனது கல்வியை இடைநிறுத்தி தன்னை சமயப்பணிக்காக அர்ப்பணித்தார். இத்துடன் வியாபாரத்தையும் திறம்பட நடத்தி வந்தார். அவ்வேளை **1940**ம் ஆண்டு குருவாக 29வது வயதிலே ஆசாரிய அபிஷேகம் செய்து குருத்துவம் பதவியை ஏற்றார். அவ்வழியிலே இவரது சமயப்பணி தொடர்ந்தது. இவர் தனது **40**வது வயதிலே ஆவரங்காலை பிறப்பிடமாகக் கொண்ட பிரம்மஸ்ரீ குமாரசாமிக் குருக்கள், சொர்ணம்மா அவர்களின் சீமந்த புத்திரியான நவரட்ணாம்பிகை அம்மாவை கரம் பிடித்தார். பின்பு இவர் **45**வது வயதில் யாழ்ப்பாணம் இணுவில் மஞ்சத்தடி கந்தசாமி கோவில் நித்திய நைமித்திய பூசைகளையும் குருத்துவத்தையும் சன்னாசியாரின் துணையுடன் நடாத்தி வந்தார். அதன் பின்பு **1956**ம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் உப்புக்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தில் பணிபுரிந்தார். பின்பு **1961**ம் ஆண்டு யாழ் வேலணையை பிறப்பிடமாகக் கொண்ட கிட்னர், கதிரவேலு போன்றவர்களின் முயற்சியில் இவரது பணி பெருங்குளம் முத்துமாரி அம்பாளுக்கு தொடர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது அன்னையின் ஆலயம் புனருத்தாரண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. **1964**ம் ஆண்டு அம்பிகையின் புதிய ஆலய ஜீர்ணோத்தாரண புனராவர்த்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகத்தை தலைமை ஏற்று நடாத்திய பெருமையும் இவரைச் சாரும். இதைவிட வேலணை கிராமத்தில் அமைந்துள்ள தவிடுதின்னிப் பிள்ளையார், பெரும்படை ஐயனார், அரசடி வைரவர், இலந்தை வனம் சித்தி விநாயகர் ஆலயம் போன்ற ஆலயங்களில் இவரது சமயப்பணி தொடர்ந்தது. இவரை கிராமத்தில் உள்ள அனைவரும் எங்களுடைய ஐயா என்று செல்லமாக அழைப்பார்கள். இவர் நாட்டு நிலைமை காரணமாக பல இடங்களுக்கு இடம்பெயர்ந்து இறுதியில் சாவகச்சேரி என்னும் ஊரில் வாழ்ந்து வந்தார். **14-11-1991**யில் இவர் இயற்கையின் நிமிர்த்தம் இறைவனடி சேர்ந்தார். இவர் இந்த கிராமத்தில் இல்லாத போதும் கிராமமக்கள் இவரை மறக்காமல் அன்னையின் ஆலயத்தில் அவரது உருவம் அம்பாள் மூலம் தரிசித்து மனசாந்தி அடைகின்றார்கள்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மன் பற்றிய கட்டுரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**வேலணை பெருங்குளம் அருள்மிகு அன்னை முத்துமாரி ஆலய முன்னாள் பிரதம பூசகர் கறுவல் ஐயரும் நம்பினோரை காக்கும் சௌந்தரிய தேவகி.....!**

# அன்னை முத்துமாரியும்.....!

சிவாகமக்கலாநிதி, சித்தாந்த பண்டிதர், சிவாகம வித்துவான்
சிவஸ்ரீ **Dr. N. சோமாஸ்கந்தக் குருக்கள் M. I. H Dip,**
**Hindu Minister & Australian Marriage Celebrant,**
**Director, Modern Hindu Cultural Art Works**
**Represent in Australia for International Hindu religious Guru peedam**



ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்து விளங்கும் சப்த தீவுகளுக்கு சிகரம் வைத்தால்போல் திகழுவதும், ஆங்கிலேயரால் லைடன் தீவு எனப் பெயரிட்டு அழைக்கப்பட்டு வந்ததுமாகிய தீபகற்பத்தின் திலகமாக விளங்குவது வேலணை என்னும் திருவூராகும். நல்லறிஞர்கள் பலரையும், கலைஞர்கள் பலரையும், தந்த வேலணையின் சிறப்புக்கு அங்கு உள்ள மகாவித்தியாலயமும் ஒரு முக்கிய காரணம் எனலாம். அங்கு படித்த பழைய மாணவர்கள் பல்துறையிலும் சிறந்து வளர்ந்து இன்று உலகெங்கணும் நிறைந்துள்ளார்கள்.

இது தவிர வேலணையூருக்கு இன்னொரு முக்கிய தனிச்சிறப்பு அங்கு உள்ள பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் என்றால் மிகையாகாது. நான் வேலணையில் மத்தியமகாவித்தியாலயத்தில் மாணவனாக இருந்த காலம்முதல் இக்கோவிலுக்கு சென்று பணிபுரியும் வாய்ப்பு கிட்டியதைப் பெரும் பாக்கியமாக கருதுகிறேன். பின்னர் 1960 களில் நான் சிவாச்சாரியராகிய காலத்தில் அக்கோவில் மஹோற்சவம், மஹா சங்காபிஷேகம் போன்றவற்றை நடாத்திவைத்து அங்குள்ள சைவ நன்மக்களின் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் அந்த அன்னை தான் என்னை ஆளாக்கி வைத்து நல்லருள் புரிந்தாள் என மனப்பூர்வமாக நம்புகிறேன்.

மதிப்புக்குரிய பழைய நண்பரும், இன்றைய உலகம் போற்றும் கவிஞருமாகிய வேலணையூர் பொன்னண்ணாவின் தூண்டுதலும் வேண்டுதலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மனின் ஆலயச் சூழலை மனத்திரையில் கொண்டு வருகிறது. பொன்னண்ணாவுக்கு எனது இதயபூர்வமான நன்றிகள்.

வேலணையின் பழைய பஸ் டிப்போ அனைவருக்கும் நன்கு பரிச்சயமான இடமாகும். அதற்கு அண்மையில் செல்லும்போதே நீண்ட நீர்ப்பரப்பைக் கொண்ட பெருங்குளம் என்னும் திருக்குளம் நமது கண்ணில் தென்படும். சற்றுத் தொலைவில் பெரிய கோபுரத்துடனும் விமானங்களுடனும் ஸ்ரீ முத்துமாரியம்மனின் ஆலயத்தின் பின்புறத் தோற்றம் கம்பீரமாகத் தென்படும். தூரத்திலிருந்து பார்க்கும்போது பெருங்குளத்தின் மத்தியிலே அமைந்த கோவில்போன்று காணப்படும். இதனைப் பார்த்துக்கொண்டே ஆலயத்தெருவீதியில் பயணிக்கும் ஒவ்வொரு தடவையும், ஸ்ரீசக்கர மஹாயந்திர பூஜையின்போது அன்னையின் இருப்பிடத்தை வர்ணிக்கும் பரசுராம பத்ததியில், தேலோகத்திலுள்ள ஸ்ரீ நகரம் என்னும் திருநகரில் அரிச் சந்தனம், பாரிஜாதம் மந்தாரம் முதலிய பூ பவனச் சோலைகளின் நடுவில், அமிர்தமயமான வாரியொன்று உண்டு எனவும், அதன் மத்தியில் தங்கமயமான அரண்மனை போன்ற ஆலயத்துள் நவரத்தினமயமான சிம்மாசனத்தில் சௌந்தரிய தேவதையாகிய அன்னை உல்லாசமான புன்முறுவலுடன் வீற்றிருந்து உலகம் முழுவதையம் அருளாட்சிபுரிவதாக வர்ணித்திருக்கும் அற்புதமான வரிகள் எனது மனத்தில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். அத்தகைய திருமஞ்சன தீர்த்த வாரிதான் பெருங்குளம் என்னும் பெயருடன் விளங்குகின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச் சிறப்புக்களில் இது முதலிடம் வகிக்கின்றது. மூர்த்தியைப்பற்றி கேட்கவே வேண்டாம். அன்னையின் திருவருள் அங்குள்ள முதியோர்களின் அனுபவங்களை கேட்டாலே எல்லோருக்கும் நன்கு புரியும். அன்பர்களின் துயர் துடைக்கும் அருந்துணைபோல் உரிய நேரங்களில் எல்லாம் அவரவர் இருப்பிடம் நாடி வந்து கருணையுடன் காத்தருள் புரிபவள் அன்னை.

உண்மை அன்பு கொண்டு தொழும் அடியவர்களுக்கு சிறுமியாகவும், வாலைக் குமரியாகவும், பூரண சுமங்கலியாகவும் வெவ்வேறு தெய்வீக அழகுத் திருவுருவந்தாங்கி மனிதவுருவில் வந்து பேருதவிபுரிந்து மறைந்த கதையை மறுநாள் கோவிலுக்கு வந்து அந்த அடியார்கள் ஆனந்தக்கண்ணீரும் கம்பலையுமாகக் கூறிப்புளங்காங்கிதம் அடைவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கண்ணாரக் கண்டு அனுபவித்ததொன்றாகும். அன்னையின் தியானங்களில், யௌவனாரம்பரூடாம் எனவும், நித்ய யௌவனாம் எனவும். கிஞ்சித் சலிதயௌவனாம் எனவும் அவளது இளமை அழகுத் தோற்றங்களை மூன்று வகையாக வர்ணித்திருப்பதைப் பார்க்க முடிகிறது.

இத்தகைய மூன்று வகைப் பருவங்களுடனும் பெருங்குளத்து அன்னை அவ்வப்போது காட்சிகொடுத்திருப்பதை கேட்டதும் எனது கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது. பலவிதமான மனச்சங்கடங்களுடன் தனது சன்னதியில் வந்து முறையிட்ட வேறு பலருக்கு, அக்காலத்தில் வாழ்ந்த அடியவர்களான திரு. கிருட்டினர், திரு. செல்லையா, திரு. கதிரவேலு, திரு. தில்லையம்பலம் மற்றும் அன்னைக்குச் சாத்துப்படிசாற்றுகிற திரு. சாம்பசிவ ஐயர் போன்ற ஆண்களின் உருவிலும் அன்னை அவ்வப்போது கனவில் தோன்றி பல கட்டளைகளையும், பரிகாரங்களையும் தெரிவித்து இன்னல்களைப் போக்குவதுண்டு. ஆதியில் இந்தக் கோவில் சிறியதாக இருந்த காலத்தில் பூசகராகவிருந்த கறுவல் ஐயர் என்னும் ஒரு சித்தர் பெருமகனார், பூசைப்பொறுப்பை வேறு அந்தணரிடம் ஒப்படைத்துவிட்டு, தனது வயோதிபத் தாயாருடன் வாழ்ந்த காலம் எனக்கு இன்னும் நன்கு நினைவிலுள்ளது. அந்த மஹான் மஹாசித்துக்கள் கைவந்த தனது தாயாரை குருவாகவும் தெய்வமாகவும் மதிப்பவர். தானாக நகர இயலாத முதிய வயதுடைய தனது தாயாரை ஈ, எறும்பு, பூச்சி, பூரான்களிடமிருந்து காப்பாற்ற வெள்ளைக் கடற்கரைக்கு அருகேயிருந்த தனது குடிசையினுள் ஒரு ஊஞ்சல்கட்டி அதிலே உட்காரவைத்துவிட்டு, பெருங்குளத்தாளே நீ பார்த்துக்கொள் என்று கூறிவிட்டு, சுடலையிலும், கடலினுள்ளுமாக ஜெபத்தில் மணிக்கணக்காக அமர்ந்துவிடுவார். தாயாரும் தியானத்தில் ஈடுபட்டுவிடுவார். திரும்ப வந்ததும் தாயாரை யாரோ குளிப்பாட்டி உடைமாற்றி உணவூட்டி உட்காரவைத்திருப்பதைப் பார்த்துத்தனக்குள்ளே சிரிப்பார். அப்போது கிழவி, அடேய் நீ அனுப்பினதாக பெருங்குளத்தாள்தான் வந்து எனக்கு எல்லாப் பணிவிடையும் செய்துபோட்டு இப்போ தான் போறாள் என்று கூறுவார். அதற்கு கறுவல்ஐயர் என்ற சித்தர், அதுதான் மல்லிகைப் பூ வாசனையிலேயே அவள் வந்து போன விடயம் எனக்குத் தெரிந்துவிட்டதே என்பார். இது ஒரு நாள் நான் அவரைத் தரிசிப்பதற்காக காத்து நின்றபோது காதினால் கேட்ட சம்பாஷனை. இதுபற்றி பின்னர் அவரிடம் நான்கேட்ட போது அவர் இது சர்வசாதாரணம் என்றுகூறி அன்னையின் அற்புத சஹாயங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி சிறிது கூறினார். சாதாரண மனிதர்களுடன் ஒட்டி உறவாடுவது போல மஹா ஞானிகளான இவர்களுடன் அன்னை உறவாடுவதையறிந்து எனக்கு மிக ஆச்சரியமாக இருந்தது. இதிலிருந்து தாயேயாகி வளர்த்தனை போற்றி என்று மணிவாசகர் பாடியதைப் போல, கருணைத்தெய்வமான ஸ்ரீ முத்துமாரி அம்மன் அந்த சித்தர்களுக்கு ஆற்றிய சேவையையும், அவர்களின் தவச் சிறப்பையும் அறிந்து எனக்குக் கிடைத்த உபதேசம் என எண்ணி உளம் பூரித்தேன். அவர் எனக்கு பூட்டனார் முறைகொண்ட கொள்ளுத்தாத்தா ஆவார். அவர் சுடலைச் சாம்பலை யெடுத்து எனக்கு நெற்றியில் பூசி, பேரா! நீ கூப்பிட்ட இடமெல்லாம் கடவுள் வந்து உக்காருவாரடா. உலகமெல்லாம் போய்ச் சுற்றிவாடா என்று வாழ்த்தினார். பின்னர் தான், கும்பத்தாலோ அல்லது விக்கிரகத்திலோ அல்லது அக்கினியிலோ ஆவாஹனம் செய்யலாம் என்பது புரிந்தது. சித்தர் வாக்குகள் சிலேடையாகத்தான் காணப்படும். இற்றைக்கு சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் சமாதியில் அமர்ந்து விட்டார். ஆனால் அன்னையின் அருளாலும் அந்த மஹானின் வாக்கினாலும் அன்றுமுதல் இன்றுவரை நான் உலகம் முழுவதும் சுற்றிக்கொண்டே காலம் கடத்துகிறேன். இது முற்றிலும் உண்மை. மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்கள் அமைந்த வேலணை ஸ்ரீ முத்துமாரி அன்னை உலகம் முழுவதும் அமைதியும் ஆனந்தமும் அமைதியும் பெற்று ஆனந்தமாக வாழ என்றென்றும் அனைவர்க்கும் நல்லருள் புரியும் அன்னை அவள் சிறப்புக்கு மலர் வெளியிடும் கவிஞர் பொன்னண்ணா அவர்கள் குடும்பத்தையும் காப்பாள் என்ற பூரண நம்பிக்கையோடு கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

**நம்பினோர்க்கு அருள் சுரப்பாள்**
**நம்பிக்கை நாயகி அன்னை முத்துமாரி**

நன்றி.

***Dr. நா. சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள்***
*நிர்வாகி*
*(சர்வதேச இந்து குருபீடம் - அவுஸ்திரேலியா)*

**சுபம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை - நெடுங்குளம் முத்துமாரி அம்மை

**- ஸ்ரீமத் ச. மகாலிங்கம் அவர்கள் -**
(வேலணை சைவத் தமிழறிஞர்)

இருபது ஏக்கருக்குச் சிறிது கூடுதலான விஸ்தீரணமுடையது வேலணை நெடுங்குளம். இதனை இக்காலத்தில், பெருங்குளம் என அழைப்பர். பெருங்குளம் என்பது ஒரு தடாகம்.

இலங்கைத்தீவு அகில உலகுக்கும் எவ்வாறு கேந்திரத் தானமாக மதிக்கப்படுகிறதோ, அவ்வாறு யாழ்ப்பாணத்தின் பக்கத்தே உள்ள தீவுப்பகுதிக்கு, வேலணை ஒரு கேந்திரத் தானமாக உள்ளது.

ஒரு நூற்றாண்டிற்கு மேலாக ஏழு தீவுகளும் உரிய மணியகாரர் வசித்து வந்த இடம் வேலணை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தீவுப்பகுதியிலே ஒரே ஒரு பிரக்கிராசியார் இருந்தது வேலணையில் என்பது உலகப் பிரசித்தம். தில்லைவாழ் அந்தணர்களுள் ஒருவரும் சந்தானாசாரியார்களுள் ஒருவரும் ஆகிய உமாபதிசிவாசாரிய சுவாமிகள் **"உபயகுலம்"** எனப் போற்றிய வேளாண் குலத்தினர் உரிய பல வரிசைகளுடன் வனம் பெருக்கி வாழுமூர் வேலணை. (வேளாண்மை என்பது உபகாரம்; உபயம் என்பதும் அதுவே. அரிதுணர் பொருளதுவாய் வேளாள குலத்தை உபயகுலம் எனக் குறித்தது பாராட்டற்குரியது.)

இத்தகைய சிறப்பினதாகிய வேலணைக்கு இன்னும் ஓர் அழகு வாய்க்கப்பெற்றது. அது சைவம், தமிழ் இரண்டையும் பேணி வளர்க்கப் பெருந்துணையாய் உள்ள குரு மரபு.

இந்தியாவிலே சைவத்தையும் தமிழையும் வளர்க்கத் திருவாடுதுறை முதலாய பல ஆதீனங்களுள்ளன. அவற்றுள் ஒன்றாகிய வேதாரணிய ஆதின பரிபாலகர்கள் ஈழத்திலே கரணவாயில் உள்ள திருக்கைலாய பரம்பரைச் சைவ குருமார் ஆவர். இற்றைக்கு எழுபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் வடதேசத்தார் இந்த உடமைக்கு மாறாக ஒரு பிராது தொடுத்த பொழுது இக்குருமாரின் சார்பாக சேர் பொன். இராமநாதன் அவர்கள் இந்தியாவில் நீதிமன்றத்திற் போய் அந்த வழக்கில் வெற்றியீட்டிக் கொடுத்தவர். கலைக்களஞ்சியமாகிய வடமராட்சியில் கரணவாய் என்னும் ஊரிலே உள்ள அந்தக் குருமார் பல நூற்றாண்டாக, வேலணையில் உள்ளோருக்குக் குலகுருவாக அமைந்து இன்றும் தீசைஷ முதலிய ஆன்மார்த்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியைகளைச் செய்து வருவது எல்லாச் சிறப்பிலும் மேலாய் இலங்குகிறது.

இந்த வேலணை என்பது டச்சுக்காரரால் ஒரு கோவிற் பற்றாகவும் வேலணை கிழக்கு, வேலணை மேற்கு என இரு கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. கோபுரத்தடி என்பது டச்சுக்காரர் காலத்தில் இருந்த கிறிஸ்தவ கோயிலின், சிதைவுபட்ட இடம். வேலணை கிழக்கிலே மிக நீண்டதொரு குளம் நெடுங்குளம் எனப் பெயர்பெற்றது. அதுவே இப்பொழுது பெருங்குளம் என அழைக்கப்படும் தடாகம்.

இதன் தீரத்திலே தென் திசையில் அமைந்துள்ளது முத்துமாரி அம்மையின் ஆலயம். இது பழமையானது. சரித்திரப் பெருமை வாய்ந்தது. குளம் வளைவானதால் கோயிலுக்கு கிழக்கும், வடக்கும் நீர்நிலை உண்டு. திருச்செந்தூர் என்னுந் தலமும் இவ்வாறு கிழக்கும், வடக்கும் நீர்நிலை உள்ளது. ஆனால் அது சமுத்திர நீர். இந்த ஆலயத்தை நோக்கும்போது விருத்தாசலம் என்னும் திவ்விய தலத்தின் நினைவு வருதல் இயல்பு. அங்கு மணிமுத்த நதி சந்நிதானத்தில் இருப்பது தரிசித்தார்க்குப் புலனாகும்; மூர்த்தி, தல, தீர்த்த விசேடம் உணரற்பாலது.

இந்த அம்மையின் ஆலயம் பலநூற்றாண்டுகளுக்கு முன் உண்டானது. இது உண்டான விதத்தைக் கர்ணபரம்பரையாகச் சொல்லும் கதைகளால் அம்மை தானே வந்து எம்மைத் தலையளித்தாட்கொள்ளும் கருணையே வடிவானவள் என்பது தெள்ளிதிற் புலனாகும். இப்பொழுது உள்ள ஆலயம் பஞ்சாங்க சிற்ப விதிப்படி கட்டப்பட்டது.

அம்மை, தாய், அன்னை, மாதா, ஆயி என்பன ஒரு பொருட் பல சொற்கள். நாமெல்லாம் ஆச்சியுடன் எதையும் சொல்ல, கேட்கக் கூசுவதில்லை. தந்தையிடம் சொல்லுவது அல்லது கேட்பது என்றால் அச்சமும், தயக்கமும் உண்டாதல் வழக்கம். தாயின் கருணை இருந்தபடி அது, சிவத்தின் திருவருளே சக்தி ஒன்றாமிருக்கும் பதிப் பொருளாகிய சிவம் இரு திறமாய் சிவமும் சக்தியுமாதல் "நன்றாவிகட்கு நலம் புரிவதற்கே" என்கிறது கந்தபுராணம். அடியார்களுக்கு அநுக்கிரகம் செய்ய எழுந்தருளும் வரலாறுகளைப் பெரியபுராணம் முதலிய நூல்களிற் படிக்கும்போது அம்மையும், சிவமும் இடபத்தில் இவர்ந்து வெளிப்படும் தன்மை பல பல இடங்களில் அறிகின்றோம். "அம்மையே அப்பா" என்னுந் திருவாசகத்தில் அம்மை என முதலில் அழைக்கின்றார் மணிவாசகப் பெருமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்கள் தநு, கரண, புவன போகங்களைப் பெற்று உடம்பில் நின்று போக போக்கியங்களை அனுபவிக்குமாறு செய்வதும், பக்குவமடைந்த ஆன்மாக்களை சிவத்தோடு கூட்டுவதும் சத்தியாகிய அம்மையின் செயலே. ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தில் முன்னையது "ந" காரத்தாலும் பின்னையது "வ" காரத்தாலும் அறியக் கூடியது.

பெருங்குளத்தில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் முத்துமாரி அம்மையின் திருவருட் பெருமையை நான் எட்டு வயதில் அறிந்து கொண்டது எப்படியெனில் இரண்டு மைல் தொலைவில் வசித்து வரும் எனது வீட்டிலும், அயலிலும் பாற் பசுக்களுக்கு வரும் நோய் தீருவதற்கு நேர்த்தி செய்து அபிடேகத்திற்குப் பால் கொண்டுபோய்க் கொடுத்துச் சுகம் பெற்றதனாலும், இன்னும் பசுக்கள் ஈன்ற போதெல்லாம் முதலாவது பால் சுரந்து அம்மைக்கு அபிடேகத்திற்குக் கொடுத்த பின்பே வீட்டு உபயோகிப்புக்குப் பால் எடுப்பதனாலும் ஆகும்.

இந்த முத்துமாரியம்மையின் கோயிலில் நித்திய பூஜை வழுவின்றி ஊரவர்களால் நடாத்தப்பட்டு வருகின்றது. வருடந்தோறும் நைமித்தியமாகிய உற்சவம் சோர்வின்றி நிகழ்கின்றது. இங்கு ஆயிரக்கணக்கான அடியார்கள் பல இடங்களாலும் உற்சவகாலங்களில் வழிபட வருவார்கள். தண்ணீர்ப்பந்தல், அன்னதானம் ஆகிய தருமங்கள் தவறாது நடைபெறுவதை உற்சவ காலத்தில் எவரும் காணலாம்.

நயினை நாகபூஷணி அம்மையின் ஆலயம், நல்லூர் கந்தசாமி கோயில், இந்த முத்துமாரியம்மன் கோயில் எல்லாம் கோப்பாய் சிவஸ்ரீ வைரவநாதக் குருக்கள் அவர்களை உற்சவ குருவாக ஒருகாலத்தில் வைத்திருந்தது எனக்கு நினைவில் இருக்கிறது. மேற்படி குருக்கள் பிரபல்யமான சிவாகம உணர்ச்சி மிக்கவர். பிரார்த்தக் கிரியைகள் செய்வதிற் சதுரர்.

இந்த அம்பாள் பேரில், வரகவியாக விளங்கிய அனலைதீவு முத்துக்குமரப்புலவர் ஒரு பதிகம் இரட்டையாசிரிய விருத்தங்களாகப் பாடியுள்ளார். அதில் சில செய்யுட்கள் முதியோர் சிலர் சொல்ல எனது இளமைக் காலத்திற் கேட்டிருக்கிறேன். இன்று அந்தப் பாடல்களில் ஒன்றாவது வாய்ப்பாடமாகச் சொல்ல யார் வருவாரோ அறியோம்.

மேலும் ஐம்பத்தாறு வருஷங்களுக்கு முன்னே நயினை வாசி, சைவத் தலைமைத் தமிழ்ப் பேராசான் பண்டிதர் ஸ்ரீமான் ச. நா. கந்தையா அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்திரசக் கீர்த்தனங்கள் சில பாடி அச்சாகி வெளிவந்தது. 1951 ஆம் ஆண்டிலே மும்மணிகளாகிய திரு. க. சோமசுந்தரப் புலவர் அவர்களும், பண்டிதமணி பிரம்மஸ்ரீ சு. நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்களும், வித்துவமணி பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்களும் சில தோத்திரங்கள் செய்திருக்கிறார்கள். இவைகளும் அச்சாகி வெளிவந்தன.

முடிவுரையாக நான் ஒன்று கூற விரும்புகிறேன். அதை கூறாவிடினும் ஒரு குறைவாக இதனைப் படிப்போர், கேட்போர் நிச்சயமாக எண்ணுவார்கள். முத்துமாரி அம்பிகையின் ஆலயத்தை நீண்டகாலமாக ஊரில் உள்ள யாவரும் உவந்து மதிக்கதான் தருமபரிபாலன கர்த்தாவாகச் செவ்வனே நடாத்தி வந்தவர் வேலணை கிழக்கில் உடையாராக உத்தியோகம் வகித்த ஸ்ரீமான் அம்பலவாணர் இராமலிங்கம் அவர்கள். இவருக்குமுன் இவரது தந்தையார் அம்பலவாண உடையார் பராமரித்து வந்தவர். தந்தையும், மைந்தனும் வேலணை கிழக்கில் வேளாண்குலத் தனிப்பெருஞ் சிரோரத் தினங்கள். இவர்களுக்குப் பின், இவர்களின் மைந்தனாகிய இராமலிங்க உடையார் அவர்கள், தமக்குப் புத்திரப்பேறில்லாமையால், வயது முதிர்ந்த பருவத்திலே, ஊரில் உள்ளவர்களிடம் கோயிற் பரிபாலனப் பொறுப்பைச் சுமத்தி விட்டார்.

வேலணை கிழக்கிலே பல்லாண்டுகளாக நித்திய நைமித்தியங்களும் வருடாந்த மகோற்சவமும் குறைவற நடைபெற்று வருவதாய் பரிவார மூர்த்திகளும் உடையதாய் சிற்ப விதிக்கிணங்கக் கட்டப்பட்டதாய் உள்ள ஒரு திருக்கோயில் பெருங்குளம் முத்துமாரி அம்மையின் ஆலயம்.

## வெண்பா

நில்லாது காயம் நிலையா திருஞ்செல்வம்
எல்லாரு மோர்ந்து பொருளீயுங்கள் - நல்ல
பெருங்குளத்து மாரியம்மை பீடார் குடமுழுக்கு
விரைந்தியற்றுமாறு விழைந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் முத்துமாரி அம்மைக்கு பெருங்குளத்தில் ஓர் அருட்கோவில்

- பண்டிதர் மா. மாணிக்கம் -
(வேலணை)

இந்த அம்மை கோவில் வேலணை கிழக்கில் அமைந்திருக்கிறது. மாரி காலத்தில் அரை மைல் நீளமும் கால் மைல் அகலமும் கொண்டது பெருங்குளம். நீர் நிறைந்திருக்கும்போது அதன் கரையில் அமைந்திருக்கும் இக்கோவிலின் காட்சி வணங்குவோருக்கு தெய்வ பக்தியைக் கூட்ட வல்லது. மூர்த்தி, தலம், தீர்த்தம் இம்மூன்றும் ஒருங்கமைந்த திருக்கோவில் இது என்பதை யாரும் உணரலாம்.

இந்த அம்மையின் கோவில் வேலணையில் (லைடன்தீவு) ஆதியான கோவிலாக இருக்கக்கூடும் என எண்ணவேண்டியுள்ளது. இக்கோவில் தேர்த்திருவிழாவுக்கு முதனாளில் கரம்பன், நாரந்தனை, மண்கும்பான் முதலிய தூரமான கிராமத்திலுள்ள பக்தர்கள் மாட்டு வண்டிகளிலும், மோட்டார் இரதங்களிலும் நெய்வேத்தியத்திற்குரிய பொருள்களைக் கொணர்ந்து வைத்து அடுத்தநாட் காலையிற் பொங்கி தேரில் அம்மை வீதி வரும்போது படைத்துப் பக்தி பரவசமாய் வணங்குவதை ஒவ்வோர் ஆண்டுங் நாம் காண்கின்றோம். இதனால் இக்கோவில் வேலணையில் உள்ள எல்லா கிராமத்தவருக்கும் பொதுவான, ஆதியான கோவிலாக இருக்கக் கூடும் என்று எண்ண இடமுண்டு.

இக் கோவில் நிர்வாகம் பல வருடங்களாக வேலணை கிழக்கின் வடபாகத்தில் வசித்த கனம். எஸ். இராமலிங்க உடையார் தலைமையில் இயங்கி வந்ததைக் கண்டிருக்கிறோம். அந்த இராமலிங்க உடையார், இந்தப் பெருங்குளத்து அம்மையிலே அளவற்ற பக்தி உடையவராக, உள்ளத்தூய்மையுடன் கருமம் ஆற்றியதை எங்கள் கண்குளிரக் கண்டிருக்கிறோம். ஒவ்வொரு திருவிழாக் காரரும் இவருக்குப் பணிவுடன் கூடிய ஒத்துழைப்பு நல்கினர்.

ஏறக்குறைய நாற்பது வருடங்களுக்கு முன், இந்த உடையாருடைய தலைமையில் இக் கோவிலின் மூலஸ்தான வேலைகள் புதுப்பிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது ஒவ்வொரு திருவிழாக்காரரும் ஒவ்வொரு வரிக்கருங்கல் வேலையைப் பொறுப்பேற்றுச் செய்து முடித்தனர். தூபி வேலைக்கான செங்கல் முழுவதையும் திரு. எஸ். முத்துத்தம்பி அவர்கள் கொடுத்துதவினார். இந்தத் தூபி வேலைகள் இரட்டைப்பஞ்சாங்க முறையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் இருந்து வந்த சிற்பாசிரியர்கள் இவ்வேலையைத் திறமை விளங்க ஆற்றியுள்ளார்கள்.

இக் கோவிலில் நடைபெற்ற வேலைகளை நினைக்கும்போது முன் குறிப்பிட்ட இராமலிங்க உடையார், கிளாக்கர் திரு. ச. நாகலிங்கம், திரு. சி. கதிரவேலு, திரு. நா. இளையதம்பி (தலைமை ஆசிரியர்) என்பவர்கள் எங்கள் கண் முன்னே வந்து நிற்கிறார்கள். இன்னும் ஒரு சிலர் இதில் ஈடுபட்டிருக்கக் கூடும். யான் அப்போது சிறு வயதினனாய் இருந்தமையால் அவர்களைத் தெரிந்து கொள்ள இயலவில்லை.

இக்கோவில் திருத்தொண்டில் ஈடுபட்டவர்கள் அனைவரிலும் மேலாக ஒருவர் என்னுள்ளத்தில் பதிந்திருக்கிறார். என்னுள்ளத்தில் மாத்திரமல்ல, வேலணையில் உள்ள அனைவர் உள்ளத்திலும் அவர் நிலைபெற்றிருக்கிறார். அவர்தான் உண்மைத் தொண்டர் "பிள்ளையான்" இவர் இக்கோவிலுக்கு நேர் கிழக்கிலே கால் மைல் தூரத்தில் கரிசனர் குலத்திற் பிறந்தவர். பெருங்குளத்தம்மை தன் கோவிற்றொண்டுக்காக இவரைத் தோன்றச் செய்தார் என்றே நம்பலாம். கருமையான மேனி உயர்ந்த அகலமான உடம்பு, முழங்காலுக்கு மேல் வேட்டி அரையிற் கட்டிய முழத்துண்டு. திருவாயில், "பெருங்குளத்தம்பாளுக்கு இயன்றது கொடுங்கள் விளக்கெண்ணெய்க்கு" என்ற அன்பு மொழி. இதுதான் அப்பிள்ளையானுடைய தோற்றம். இவர் ஓலைக்குட்டான் இழைத்து வீடுதோறும் கொடுத்து பிடியரிசி பெற்று அதை விற்று எண்ணெய் வாங்கிக் கோவில் விளக்கெரிய வழி செய்தார். வேலணையில் மாத்திரமல்ல யாழ்ப்பாணம் வந்து நகரத்திலும், நாட்டுப் புறங்களிலும், விளக்கெண்ணெய்க்கு நிதி சேர்த்தார். இப்பணத்தின் மிகுதியால் கோவில் உள் வீதியில் வயிரக்கல்லால் ஒரு பிள்ளையார் கோவில் ஆக்கி, அப்பிள்ளையாரை வெளியில் நின்று தான் வணங்க கோவில் முன் வாயில் மதிலில் ஒரு யன்னலும் ஆக்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமலிங்க உடையாருக்குப் பின் இக்கோவில் பஞ்சாயத்து முறையில் இயங்கி வருகின்றது. எல்லாத் திருவிழாக்காரரின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியது இப் பஞ்சாயம். இப்பஞ்சாய முறையில் இயங்கி வருங்காலத்தில் கோவில் உள் மண்டபம் ஆக்கப்பட்டுள்ளது. நிலக்காறையும் போடப்பட்டுள்ளது.

பொருட்பற்றில்லாத "கறுவல் ஐயர்" என்ற மகான் இக்கோவிலில் அன்போடு அம்மனுக்குப் பூப்போட்டு இனிய கணீர் என்ற குரலில் சுலோகங்களைப்பாடி அர்ச்சித்தமை இக்கோவிலின் உயர்ச்சிக்கு ஒரு காரணமாகும்.

தனிப்பட்ட முறையில் அன்பர்கள் உள்வீதியில் முருகன் கோவில், சனீஸ்வரர் கோவில், சண்டேஸ்வரி கோவில், நவக்கிரக விக்கிரகங்கள், நடராசர் கோவில் என்பனவற்றை அமைத்திருக்கிறார்கள்.

முன்பு திரு. எஸ். மருதையனார் என்ற பெரியார் கோவிலின் தென் புறத்தில் பல இனப்பூக்களைத் தரும் நந்தவனத்தை ஆக்கியிருந்தார். இப்போது அம்மை, அன்பன் திரு. க. சண்முகம்பிள்ளை அவர்கள் வடப்பகுதியில் நந்தவனம் ஆக்கியுள்ளார்.

இக்கோவிலின் முன் புறத்தில் பெருங்குளத்தின் நடுவில், யாரும் அதிசயப்படக்கூடிய முறையில் ஏறக்குறைய நூற்றைம்பது அடி நீளமும், முப்பதடி அகலமுங் கொண்ட நால்வர் மடம் திரு. க. செல்லப்பா அடிகளின் முயற்சியால் ஆக்கப்பட்டு இக்கோவிலுக்கு அழகு செய்து நிற்கின்றது. இம்மடத்தின் வடபகுதியில் நடராசப் பெருமானின் விசேட தினங்களிலும் வழிபாடுகள் நிகழுகின்றன. அம்மை கோவிற் திருவிழா நடைபெறும் பத்து நாட்களிலும் இம்மடத்தில் சமயப் பிரசங்கங்கள் நடைபெற்று வருகின்றன.

இத்தகைய சிறப்புக்களெல்லாம் அமைந்திருப்பதை உற்று நோக்கும் போது வேலணை பெங்குளத்தம்மை கோவிலில் (அம்மை) திருவருள் சுரக்கிறாள் என்பதை யாரும் உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ கணபதி துணை

# அன்னையின் கருணை



வணக்கம் !

எல்லா ஞானிகளுக்கும் மகான்களுக்கும், அருளாளர்கட்கும், அடியார்கட்கும் அடியேன் சிரம் தாழ்த்தி வணங்கி அடியேனுடைய சிற்றறிவுக்கு எட்டியபடி அன்னை பராசக்தியின் கருணையை இக்கட்டுரையில் அவளருளாலே விபரிக்க முயலுகிறேன்.

முதற்கண் இந்துமாக்கடலின் முத்தாக விளங்கும் இலங்கைத் தீவின் வடபாகத்தே அமைந்துள்ள வேலணை முத்துமாரியம்மன் ஆலயத்தைப் பற்றி சிறிது அறிவோம். மழையை வணங்குவது தான் மாரியம்மன் வழிபாடு ஆக மலர்ந்தது என்று சான்றோர் கூறுவர். தமிழில் மாரி என்றால் மழை என்று பொருள். கற்புடை மகளிரால் மழை பெய்கிறது என்பது தமிழர் நம்பிக்கை. இம்மழை வளம் குறைந்து வெப்பம் மிக அதிகமாகும் போது பெரியம்மை. சின்னம்மை, (சின்னமுத்து, கொப்புளிப்பான்) போன்ற நோய்கள் தோன்றுகின்றன. இந்நோய் கொண்டவர்கள் குணமடையும் பொருட்டு மாரியம்மனுக்கு நேர்த்திக்கடன் செய்வது இன்றும் தமிழரிடை நிலவிவருவது கண்கூடு. இந்த வேலணை முத்துமாரியம்மன் ஆலயம் போர்த்துக்கேயர் வருகைக்கு முன்பதாகவே இருந்து வருகின்றது. இவ்வாலயத்தைப் புனரமைப்புச் செய்து ஆலயத்துக்காக தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து திருத் தொண்டைச் செய்தவர் திருத்தொண்டர் தில்லையம்பலம் அவர்கள். இவ் வருட்செல்வரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆலயம் புதுப்பொலிவுடன் திக்ழ்கின்றது என்றால் மிகையாகாது. இவ்வருட் செல்வர் நமது கவிஞர் பொன்னண்ணா அவர்களின் மாமனாரும் திருமதி. பொன்னண்ணா அவர்களின் தந்தையாரும் ஆவார். இவ்வாலயத்தின் இன்னொரு அற்புதம் என்னவென்றால் இப்பகுதியில் எத்தனை படையெடுப்புகள் நடந்தபோதும் இவ்வாலயம் பாதிக்கப்படவில்லை என்பது. எனவே இவ்வாலயத்தைப் பற்றி திரு. பொன்னண்ணா அவர்கள் **"அருளமுதம்"** என்ற புத்தகம் வெளியிடுவது மிகவும் பொருத்தமானதே. இனி நாம் அன்னை பராசக்தியின் கருணை பற்றி ஆராய்வோம்.

நமது முன்னோர்கள் அன்னையின் கருணையைப் பலவாறாக வர்ணிக்கிறார்கள். எங்கும் நிறை பரப்பிரம்மமான இறைவனைத் தாயாக வழிபடும் மரபு அதாவது சக்தி வழிபாடு புராதன காலந்தொட்டு இன்று வரை நிலவி வருவது அனைவரும் அறிந்ததே. இவ்வாறு இறைவனைத் தாயன்புடன் நோக்கும் பாங்கினை நாயன்மார்களின் தேவார திருவாசகங்களில் பரக்கக் காணலாம். "தாயிற் சிறந்த கோயிலுமில்லை" "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று ஔவையார் பாடிப் பரவுகிறார். சங்கீத மும்மூர்த்திகள் சுப்பிரமணியபாரதியார், பாபநாசம் சிவன், நெமிலி எழில்மணி முதலிய பல பக்திமான்களும் அன்னையினுடைய கருணையை வியந்து போற்றி இருக்கிறார்கள். அன்னையின் கருணை எத்தகையது என்பதை அவர்களின் பாடல்கள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

அன்னையின் கருணைக்கு உதாரணமாக ஒரு எளிய விளக்கத்தை அடியேன் தருகிறேன். ஒரு பையன் தன் தந்தையிடம் பணம் பெற வேண்டும். பாடசாலைக்குப் பணம் கட்டாவிட்டால் பரீட்சைக்குப் போகமுடியாது. தந்தையிடம் நேரடியாகக் கேட்கவும் பயம். எனவே தாயை அணுகி அவள் மூலமாக அப்பணத்தைப் பெற்றுவிடுகிறான். ஒரு சாதாரண தாய்க்கு இத்துணை கருணை இருக்குமாயின் இவ்வுலகத்தைக் கட்டிக்காக்கும் பராசக்தியின் கருணை எத்தகையது என்பதை நாம் வார்த்தையால் விளக்குதல் மிக அரிது. முழு முதற் கடவுளான சிவபெருமான் கூட இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தைப் படைப்பதிலும், காப்பதிலும், அழிப்பதிலும், அருளலிலும், மறைத்தலிலும் சக்தியின் சம்பந்தத்துடனேயே செய்கிறார் என்பது பிரசித்தம். ஒரு முறை மும் மூர்த்திகளும் தேவியைத் தரிசிக்கும் போது "இரண்டல்லாத ஒன்றே பிரம்மம் என்றால் அது நீயா? பரம சிவமா? நீ ஆணா? பெண்ணா?" என்று வினவுகிறார்கள். அதற்கு அம்பாள் எனக்கும் பரமசிவத்துக்கும் பேதமில்லை. நாங்கள் இருவரும் ஒன்றேயாவோம். அவரே நான். நானே அவர். மதிமயக்கத்தால் பேதம் கற்பிக்கப்படுகின்றது. உலக உற்பத்திக்காலத்தில் பேதம் தோன்றுகிறது. அப்போது பிரம்மாவும் தோன்றுகிறார். தோற்றமும் மறைவுமாகிற இவ்விரண்டுமுள்ளவரை இந்தப் பேதமும் உண்டு. உலக சம்ஹாரகாலத்தில் நான் ஆணுமன்று, பெண்ணுமன்று, அலியுமன்று. எல்லா தேவர்களிடமும் நான் பல பெயர்களைத் தரித்துக் கொண்டு அந்தந்த சக்தியாக விளங்கிப் பராக்கிரமச் செயல்களைப் புரிகின்றேன். கௌரி, ப்ராஹ்மீ, ரௌத்ரீ, வாராஹீ, வைஷ்ணவி, சிவா, வாருணீ, கௌமாரி, நார சிம்ஹீ, வாஸவீ எல்லாம் நானே என்று கூறுகிறாள். இதுதான் தேவி தத்வம். அது சரி ! இந்த தேவியின் தத்துவத்தை எவ்வாறு புரிந்து கொள்வது? அவளின் அன்பை எவ்வாறு அறிவது? இந்த இரு வினாக்களுக்கும் பதில் இதோ! சாதாரண மனித தத்துவத்தில் ஒரு குழந்தைக்குத் தாய் தான் உலகம். அதே போன்று குழந்தைகளான நமக்கு இந்த பராசக்தி தான் தாய். அந்தத் தாயின் அன்பைப் பெறவேண்டுமென்றால் அவரை ஜகன்மாதாவாகவும் நம்மைக் குழந்தைகளாக்கிக் கொள்ள வேண்டும். அதாவது நாம் குழந்தைகளாகி விட வேண்டும் என்று பிரஹதாரண்யக உபநிடதம் கூறுகின்றது. வேதங்கள் "மாத்ரு தேவோ பவ" என்று அதாவது "தாயை தெய்வமாக மதி" என்று கூறுகின்றன. இறைவனைக் கருணையுள்ள தாயாகப் பார்த்ததனாலன்றோ மாணிக்கவாசகப்பெருமான் "தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்றும், "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" என்றும் சொல்கிறார். திரு. ஞானசம்பந்தப் பெருமான் கூட "தாயினும் நல்ல தலைவன்" என்று கூறுகிறார். அப்பர் சுவாமிகள் "அப்பன் நீ அம்மை நீ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று துதிக்கிறார். இவ்வாறு இறைவனுடைய தாய்மையை அனுபவித்துத்தான் இவர்கள் பாடியிருக்கிறார்கள்.

எனவே பரப்பிரம்மமே பராசக்தி என்று உணர்ந்துவிட்டால் எப்பிறப்பிலும் எக்காலத்திலும் எந்நேரத்திலும் எல்லாப் பிராணிகளுக்கும் தாயாராக இருக்கும் அந்தப் பராசக்தியின் திருவடிகளைப் பற்றிக் கொண்டோமானால், அவளிடம் மாறாத அன்புகொண்டால் எமது வாழ்க்கையே நிறைந்து பரிபூரணத்துவம் அடைந்து விடுகிறது. அம்பாளுடைய தியானம் இடைவிடாத ஊற்றாகப் பெருக ஆரம்பித்தால் எல்லாப் பாவங்களும் அகன்று விடுகின்றது. நாம் பராசக்தியை தியானிக்கும்போது அன்புவடிவமாக நாம் மாறி அனைத்து உயிரினங்களையும் உடன் பிறப்புக்களாக நினைக்கும் பக்குவம் வந்து விடுகின்றது.

இனி அம்பாளின் ரூபங்களைப் பார்க்கும் போது அவற்றுள் சில சௌம்யமாக, சில உக்ரமாக, சில இரண்டுங்கலந்து காட்சியளிக்கின்றன. காளியாக வந்து தீயவர்களை அழித்து நல்லவர்களைக் காக்கின்றாள். சௌம்யமாக இருந்து எந்நேரமும் கருணையைப் பொழிகின்றாள் திரிபுரசுந்தரி. "நான் எத்தனையோ தெய்வ வடிவங்களை வணங்கியிருக்கின்றேன். ஆனாலும் திரிபுரசுந்தரி மாதிரி ஒரு அழகு ரூபம் எங்குமே பார்த்ததில்லை" என்று ஆழ்ந்து அனுபவித்துக் கூறுகிறார் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

எங்கும் நிறைந்த பராசக்தியானவள் காஞ்சியிலே காமாட்சி, காசியில் அன்னபூரணி, மதுரையிலே மீனாட்சி, குமரியிலே பகவதி, திருவானைக்காவில் அகிலாண்டேசுவரி, திருக்கடவூரில் அபிராமி, திருவேற்காட்டிலே கருமாரி, சமயபுரத்திலே மாரி, மைசூரில் சாமுண்டேஸ்வரி, மும்பையில் மகாலட்சுமி, கல்கத்தாவிலே காளி, இலங்கை வேலணையில் முத்துமாரி, மாத்தளையில் முத்துமாரியாக காட்சி அளிக்கின்றாள். அவளுடைய நாம ரூபங்களை வர்ணிக்க எழுத்துமில்லை, வார்த்தையுமில்லை. அன்னையாகிய பராசக்தி கருணை ரூபமுள்ளவள் என்றால் அவள் ஏன் காளிரூபம் கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்? என்ற வினா எழுவது இயற்கை. தீயவர்களுக்கு அவள் பயங்கரயான காட்சியைக் காட்டியே திருத்தவேண்டும். இதுவும் அவளது கருணையே. அதாவது மறக்கருணையாகும்.

ஆகையால் தான் அவள் கோரரூபமாக வந்தாலும் அன்புவெள்ளமாக காட்சி தருகிறாள். இல்லாவிட்டால் மேற்கு வங்காளத்திலும், கேரளத்திலும் இப்படி சகல ஜனங்களும் காளியம்மாவை பக்தியுடன் வழிபடுவார்களா? என்பதை நாம் சிந்திக்க வேண்டும். அத்தோடு அம்பாளுக்கு சில ரூபங்களில் அபயஹஸ்தம் இல்லை மற்றைய தெய்வங்களைப் போல. அப்படியென்றால் அம்பாள் கைகளால் அபயம் தரமாட்டாளா? அவள் அபயாம்பிகை என்ற கொண்டவளாயிற்றே. இதற்கு பகவான் ஆதி சங்கரர் "அவள் திருவடியை பக்தர்கள் நாடி வரும்போது, அவள் தன் திருப்பாதங்களாலேயே எல்லா இஷ்ட சித்திகளையும் தந்து விடுகிறாள்" என்று "ஸௌந்தர்யலகரி" மூலம் பதில் தந்து விடுகின்றார்.

எனவே இப்படிப்பட்ட அன்பே உருவான பராசக்தியாகிய தாயாரின் கருணை வெள்ளத்தை வார்த்தையால் வர்ணிக்க இயலாது. இருந்தபோதிலும் அவளின் கருணையை ஒரு வரலாற்றின் மூலம் அறியத்தருகிறேன். அவள் சண்டிகா தேவியாக மகிஷாசுரனை வதைத்து தேவர்களைக் காத்தாள். மகாலட்சுமியாக வந்து தங்க நெல்லிக்கனிகளைப் பொழிந்து கருணை புரிந்தாள். சரஸ்வதியாக வந்து கவிப்பேரரசர் கம்பருக்கு அருள்புரிந்தாள். இவற்றில் தங்கநெல்லிக்கனி பற்றிய வரலாற்றை மிகச் சுருக்கமாகக் காண்போம்.

ஸ்ரீ ஆதிசங்கரர் சாட்சாத் சிவபெருமானின் அவதாரம் என்பது உலகறிந்த விடயம். அவர் தம் குருகுல வாசத்தின் போது பிட்சையெடுப்பதற்காக ஒரு அந்தணர் வீட்டிற்கு வந்து "பவதி பிட்சாந்தேஹி" என்கிறார். ஆனால் அந்த அந்தணரின் அம்மணியிடமோ கொடுப்பதற்கு பாதி அழுகிய நெல்லிக்கனியைத் தவிர்த்து வேறு ஒன்றும் இல்லை. அதனை எவ்வாறு கொடுப்பது? வந்திருப்பதோ "பிரம்ம தேஜஸ் பொருந்திய பிரம்மச்சாரி" என்ன செய்வது? என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலுக்கு வருவதும் உள்ளே போவதுமாக இருந்தாள். அப்பெண்மணியுடைய விசனத்தைப் புரிந்து கொண்டார் ஆதிசங்கரர். அவர் மகாலட்சுமியை "கனகதாராஸ்தவம்" என்ற ஸ்தோத்திரத்தினால் துதித்தார். பரம கருணாநிதியாகிய மகாலட்சுமி தங்க நெல்லிக்கனிகளாக அப்பெண்மணியின் முற்றத்தில் பொழிந்து தள்ளிவிட்டாள். என்னே பராசக்தியின் கருணை.

இவ்வாறே அபிராமிப்பட்டரின் பக்தித்திறனை வெளிப்படுத்தும் பொருட்டு அமாவாசையிலே பூர்ணசந்திரனை உதிக்கச்செய்தாள். அவளின் கருணைக்கு எல்லையே இல்லை என்பதற்கு இவ்வரலாறுகளே சான்று பகருகின்றன.

இதேபோன்று நாம் பராசக்தியின் வடிவமாக அமைந்த வேலணை முத்துமாரி அன்னையை "நம் தமிழ் மக்களின் இன்னல்கள் தீரவேண்டும்" என்றும் உலகெங்கணும் போர் ஓய்ந்து சாந்தி நிலவ வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்து அவள் திருவடிகளைப் போற்றிப் பரவி இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வோமாக.

**"இன்பமே சூழ்க"**
**"எல்லோரும் வாழ்க"**

இங்ஙனம்
அன்பன் மாவைக் குமரனடிமை
***ம. கணேசக்குருக்கள்***

**தவறிய உள்ளம் திருந்தினால் வாழ்வு மலரும். உடற்பயிற்சி உடலுக்கு உரமும் நீடிய ஆயுளும் தரும். ஆனால் தெய்வ பக்தியோ உன்னை மனிதனாக்கி இறைவனிடம் சேர்ப்பிக்கும்**

**- ஓர் அறிஞர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “பெருங்குளத்தில்” அன்னை முத்துமாரியின் அருளாட்சி

பெருங்குளத்தில் பலநூற்றாண்டுகளாக அன்னை முத்துமாரியின் அருளாட்சி. அரச ஆவணங்களும் ஏடுகளும் காட்டி நிற்கும் உண்மையிது. ஆனாலும் இக்கோவிலின் ஆரம்பகாலம், ஆதி கோவிலின் இருப்பிடம், ஆரம்பகர்த்தாக்கள் பற்றி எவையும் சரியான செய்திகளைத் தந்தனவா? இது ஆராய்ச்சிக்குரியது. கட்டமாதன் என்பவர் பெருங்குளத்தின் வடகரையிலே உள்ள நொச்சிப்பற்றைகளினூடேயிருந்து கட்டமாதா ! கட்டமாதா ! என்று தன்னை யாரோ அழைப்பதுபோல உணர்ந்து பற்றைகளினூடே போய்ப் பார்த்தபொழுது அம்மன் சிலையொன்று இருப்பதைக் கண்டு பரவசப்பட்டு, அச்சிலையை ஊராரின் உதவியோடு எடுத்துவந்து சிறுகுடிசை அமைத்து வழிபட்டதாகவும், காலத்திற்கு காலம் அடியவர்களின் உதவியாலும், முயற்சியாலும் கோவில் வளர்ச்சிபெற்றதென்பதும் கர்ணபரம்பரையான கதை. கட்டமாதனின் வாழ்வுக்காலம் 19ம் நூற்றாண்டெனக் கொள்வோமாயின் (ஒல்லாந்தரின் ஆட்சியில்) நாம் காணும் இன்றைய கோவிலின் ஆரம்பம் 18ம் நூற்றாண்டுக்கு முன்பட்டது என்றே நம்பலாம். ஏனெனில் 18ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரின் படையெடுப்பினால் நம்மண்ணில் ஏற்பட்ட அனர்த்தங்களை நாம் படித்திருக்கிறோம். எனவே கோவிலின் முன்னைய வரலாறு அவர்களின் அராஷகத்தால் அழிந்து போயிருக்கலாம்.

அன்னை பராசக்தியின் மூர்த்தங்களில் முத்துமாரி என்பதும் ஒன்றாகும். தொற்று நோய், பசி, பஞ்சம் தீர முத்துமாரி அம்மையையே பண்டைய தமிழர்கள் சரணடைந்தார்கள் என்பது வரலாறு. அதற்கேற்ப அயல் கிராமங்களிலிருந்தும் ஏன் தீவகம் முழுவதிலுமிருந்தும் வருடந்தோறும் அன்னையின் பெருவிழாக் காண கூடும் அடியவர்களின் பெருங்கூட்டம் மெய்ப்பிக்கும். தேர்த்திருவிழாவன்று நான்கு வீதிகளிலும் பொங்கல், படையலிட்டு அன்னையை மெய்யுருகி வழிபட்டதை நாம் கண்டிருக்கிறோம். இன்றும் சூழ்நிலைகள் காரணமாக பொங்கல், படையல்கள் குறைவடைந்திருப்பினும் முற்றாக நின்றுவிடவில்லை.

கோவிலின் பழமைபற்றி நாம் செவிவழி அறிந்ததே. நேரில் கண்டவை பற்றியும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டேயாகி வேண்டும். நாம் சிறுபிள்ளைகளாக இருந்த நாட்களில், **“பிள்ளையான்”** என்று அழைக்கப்படும் தொண்டர் வீடு, வீடாகச் சென்று அன்னையின் திருப்பணிக்கு நிதி, பொருள் சேர்த்ததும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலைக்குட்டான் ஒவ்வொரு வீட்டிலும் தந்து பிடி அரிசி சேர்த்ததும் நாம் கண்டவை. அவரின் இடைவிடாத பெரு முயற்சியால் ஆலயத்தின் திருப்பணி வேலைகள் பல நிறைவெய்தியதோடு, பிள்ளையார் கோவில் வெள்ளைக்கற்களினால் அமைக்கப்பட்டதையும் குறிப்பிடலாம். அன்னைக்கிருந்த சித்திரத் தேர் பழுதடைந்து விட்டதால், தொண்டர் பிள்ளையானின் முயற்சியால் அமைக்கப்பட்ட கட்டுத்தேரிலேயே பலவருடங்கள் தேர் உற்சவம் நடைபெற்றதும், பின் நாளில் அன்றைய அறங்காவலர் சபைத் தலைவர் "தொண்டர்" திரு. க. தில்லையம்பலம் அவர்களின் தலைமையிலமைந்த தேர்த்திருப்பணிச்சபையினரின் இடைவிடாத உழைப்பினால் அன்னைக்கு அழகான சித்திரத்தேர் ஒன்று அமைந்ததும் வரலாறு. அந்தச் சித்திரத்தேரிலே திருத்தொண்டர் பிள்ளையானின் உருவத்தைச் செதுக்கி காலம், காலமாக அவரின் தொண்டினை சைவமக்கள் நினைவுகூர வைத்திருப்பதையும் குறிப்பிடவேண்டும்.

அன்னை கோவிலின் பூசகர்களிலே குறிப்பிடப்படவேண்டியவர், வேலணையின் "சித்தரும்" கறுவல்ஐயர் என்று அனைவராலும் அன்பாகவும், பக்தியாகவும் அழைக்கப்பட்டவருமான சோமசுந்தர ஐயர் அவர்கள் கோவிலின் வளர்ச்சியிலே மிக அக்கறை கொண்டவர் மாத்திரமல்ல அவரின் காலத்திலே கோவில் வளர்ச்சி கண்டதுபற்றியும் நம் முன்னவர்கள் சொன்னதோடு நாமும் கண்டிருக்கிறோம். அம்பிகையுடன் நேரில் பேசும் பாக்கியம் பெற்றவர் என்பதோடு இவரின் காலத்தில் கோவில் சூழல் பெருவளர்ச்சி கண்டதும், எவருக்கும் எதுவித துன்பமும் அணுகாமை பற்றியும் கூடச் சொல்வார்கள். எமக்கும் இக்கறுவல் ஐயர் பற்றி ஓரளவு தெரியும். அம்பாளை "அவள்" "இவள்" என்று சொல்லியே பேசுவார். பக்தியின் நெருக்கம் அவர் பேச்சிலே தொனிக்கும். தனது இறுதி நாட்களிலே வெள்ளைக் கடல் கரையிலே தியான சாலையமைத்து தியானம் செய்து வந்தோர் பிணி நீக்கியவர். அவரின் தியானசாலை அமைந்த இடத்தில் அந்தப் புனிதம் இன்றும் நிலவுவதும், அவரின் "ஓம்" காரம் இன்றும் ஒலிப்பது போலவும் உணரும் பொழுது நமக்குள் சிலிர்ப்பு ஏற்படுகிறது. அவரது சமாதி சாட்டியிலேயுள்ள அவரது காணியிலே அவரது தாயாரின் சமாதிக்குப் பக்கத்திலே அமைந்துள்ளது.

பழமையும், பெருமையும் நிரம்பிய அன்னையின் கோவிலிலே திருப்பணி வேலைகள் காலத்திற்குக் காலம் இடம் பெற்றாலும் நீண்டகாலமாக குடமுழுக்கு நடைபெறாத குறையிருந்து வந்தது. இக்குறையினைப் போக்க 1986ம் வருடத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு குறுகிய நாட்களில் மண்டபங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவும் மெருகூட்டப்பட்டும், விமானங்கள் திருத்தி வர்ணம் பூசப்பட்டும், முருகன் ஆலயம், உற்சவ மூர்த்தி ஆலயம், வசந்த மண்டபம் ஆகியவை புதிதாக அமைக்கப்பட்டும், மகா ஸ்நபனமண்டபங்கள் மணிமண்டபங்களாக மாற்றியமைக்கப்பட்டும், கொட்டகைத்தூண்கள் அழகிய வேலைப்பாடமைந்த தூண்களாக அமைக்கப்பட்டும், தரைகள் யாவும் சீமெந்து பூசப்பட்டும் பல லட்சரூபாவுக்கான திருப்பணி வேலைகள் நிறைவு செய்யப்பட்டு 10 - 09 - 1986ல் குடமுழுக்குப் பெருவிழாவும் தொடர்ந்து நாற்பது தினங்கள் மண்டலாவிஷேகமும் இடம்பெற்று நிறைவெய்தியமை சைவ மக்களுக்குக் கிடைத்த பெரும் பேறாகும். இப்பெரும் பணி நிறைவுக்கு திரு. வ. ஐயாத்துரை அவர்களின் தலைமையின் கீழ் இயங்கிய அன்றைய அறங்காவலர் சபையினரது அயராத உழைப்பும், பணம், பொருள் தந்து' தருமம் செவ்வனே நிறைவெய்தி வழிகாட்டிய அன்பர்களின் தாராள சிந்தையும் யாவுக்கும் மேலாக அன்னையின் பேரருளும் துணை நின்றன என்றே சொல்ல வேண்டும்.

நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த அன்னை கோவிலிலே இராஜ கோபுரம் அமையாதது அடியவர்களின் மனதிலே நீண்ட நாட்களாக நெருடலாக இருந்ததன் விளைவாக இராசகோபுரத் திருப்பணிச் சபையொன்று அமைக்கப்பட்டு, இராக கோபுரத்திற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. துரதிர்ஷ்டவசமாக *1990∴1991ல்* தீவகத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் தீவகமக்கள் யாவரும் இடம்பெயர்ந்து யாழ்நகரையும் வேறு இடங்களையும் தஞ்சமடைந்து அல்லல் பட்டதும் தொடர்ந்து யாழ்நகரிலும் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் வன்னி மற்றும் தூர இடங்களுக்கும் இடம்பெயர்ந்ததும் வரலாறு. இந்நிலையில் இராசகோபுர வேலைகள் தடைப்பட்டன. கோபுரஅடிக் கட்டுமானத்திற்காக வெட்டப்பட்ட பாரிய குழி கோவில் கட்டடங்களுக்கு அச்சுறுத்தலாகவிருந்த நிலையில் தோவிலை அண்டிய பகுதியில் மக்கள் எவருமில்லாத நிலையிலும், பெரும் சிரமத்தின் மத்தியில் ஒரு சில அன்பர்களின் உதவியோடு அப்பாரிய குழியை காட்டி மணல் கொண்டு தனது செலவிலேயே மூடுவதற்கு ஏற்பாடுகள் செய்த அன்பர் திரு. க. கந்தசாமி அவர்களது பணி குறிப்பிடப்படவேண்டியது. இப்பணிக்காக அவர் கொழும்பிலிருந்தே ஆட்களை ஒழுங்கு செய்ததும், குழியை, மூடப்பாவித்த மணல் (சுமார் 200 லோட்) தற்பொழுது நடைபெறும் வேலைகளுக்குப் பயன்பட்டதும் யாவரும் அறிந்தது. 2002ம் வருடத்தில் அமைதிச் சூழல் ஏற்பட்டபடியால் இப்பகுதி மக்களும் ஓரளவுக்கு மீளக்குடியேறியதின் பலனாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல்நிலைமைகள் மாற்றமடைந்து திருப்பணி வேலைகளை ஆரம்பிக்கக் கூடியதாகவிருந்தபடியால் திரு. ந. ஜெகநாதன் அவர்கள் தலைமையிலமைந்த திருப்பணி சபையினரால் கட்டுமானப் பணிகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டு வெள்ளைக்கல், கருங்கல் வேலைகள் பூர்த்தியாகும் நிலையிலுள்ளது. அம்பிகை அடியார்களின் அளப்பரிய ஒத்துழைப்போடு மேற்தள வேலைகளையும் வருமாண்டு (2005) பெருவிழாவுக்கு முன்னர் நிறைவு செய்ய வேண்டுமென்ற அவாவோடு திருப்பணிச் சபையினர் உள்ளனர். இதற்கு அன்னையின் அருள் கிட்ட அனைவரும் வேண்டிநிற்போம். மேற்தள வேலைகளை தமிழ் நாட்டின் புகழ்பூத்த சிற்ப பாரம்பரியத்தையுடைய மாமல்லபுரத்தைச் சேர்ந்த ஸ்தபதி திரு. ஞானமூர்த்தி அவர்களும் குழுவினரும் செய்யவுள்ளார்கள். தமிழ் ஈழத்தின் தலைசிறந்த இராசகோபுரங்களில் ஒன்றாக இது அமையும் என்று நம்பலாம்.

கோவிலின் வருடாந்தப் பெருவிழா பன்னிரண்டு தினங்களும் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கும் பணி பல வருடங்களாக செவ்வனே நடைபெற்றுவருகிறது. முன்னை நாள் இந்து கலாச்சார அமைச்சர் திரு. மகேஸ்வரன் அவர்களின் உதவியினால் ஒவ்வொரு வெள்ளியும் தொடர்ந்த அப்பணி, தற்பொழுது கொழும்பு வாழ் இவ்வூர் சைவ அன்பர்களின் உதவியினால் தொய்ந்துவிடாமல் தொடர்ந்து நடைபெறுவதையும் குறிப்பிடவேண்டும்.

வேலணை கிழக்கு மகாவித்தியாலய முன்னைநாள் அதிபரும் அன்னையின் அடியவருமாகிய திரு. காங்கேசு வாத்தியார் அவர்கள் கோவிலின் தெற்கு வீதியிலுள்ள காணியையும், கட்டிடத்தையும் அம்பாளுக்கு மானியமாக வழங்கியிருந்தார். பழமையான அக்கட்டிடம் திருத்தக்கூடிய நிலையிலில்லாததால், அகற்றப்பட்டு அவ்விடத்திலே கோவில் குருக்களுக்கான அழகிய வீடும், ஐந்து கடைகள் கொண்ட தொகுதியும் அமைக்கப்பட்டிருப்பது சூழலுக்கு மெருகூட்டுகிறது. கடைத்தொகுதிகளுக்கு மேலே கலியாண மண்டபம் ஒன்று அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வடக்கு வீதியிலே திருத்தொண்டர் தில்லையம்பலம் அவர்களின் துணையியார் திருமதி. செல்லமுத்து அவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட மடத்திலே வருடந்தோறும் தேர் உற்சவத்திலன்று அன்னதானம் நடைபெறுவது யாவரும் அறிந்ததே. இவ்வருடம் பெருவிழாவுக்கு முன்னதாக அம்மடம் பல இலட்சரூபா செலவிலே சகல வசதிகளும் கொண்ட "செல்லமுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதசுரப்பி" மண்டபமாக அவரின் பிள்ளைகளாலே மாற்றி அமைக்கப்பட்டு அடியவர்கள் பசிபோக்கும் பணி தொடரவிருப்பதையும் குறிப்பிடவேண்டும்.

ஒரு கோவிலின் அமைவிடம் வாய்ப்பது வரப்பிரசாதம் என்றே சொல்லவேண்டும். அந்தவகையிலே பெருங்குளத்தம்மையின் கோவிலமைவிடமும் ஒரு வரப்பிரசாதமே. வடக்கிலும் கிடக்கிலும் நீண்டு கிடக்கும் தெளிந்த நீர்ப்பரப்பும், தெற்கிலே சோலையினூடே அமைந்து அறிவொழியூட்டும் கலைக்கூடமும், தேவாரப்பண்ணிசையால் உலகத்தைப் பாவித்த நால்வரின் பெயர் தாங்கிய "நால்வர் மடம்" கிழக்கிலே அமைந்திருப்பதும், அடியவர் பசிபோக்கும் "அமுதசுரபி" வடக்கிலே நீண்டிருப்பதும் ஆலயச் சூழலை இரம்மியமாக்குகின்றன. மொத்தத்தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமைந்திருப்பது இவ்வூர் மக்களுக்குக் கிட்டடிய பெரும்பேறாகும்.

அற்புதங்கள் நிறைந்தவள் அன்னை முத்துமாரி என்று நம் முன்னவர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோமே தவிர அவளின் அற்புதம் எதனையும் நேரில் காணும் பாக்கியம் நேற்றுவரை எம் போன்றோருக்குக் கிட்டவில்லை. இன்று எமக்கும் அந்தப் பாக்கியம் கிட்டியுள்ளது. அதனை இங்கு குறிப்பிடாமல் விடுவது எனது பணியை நிறைவு செய்ததாக அமையாதென்பதால் அதனையும் குறிப்பிடவிறைகிறேன். **2003**ம் வருடப் பெருவிழாவின் பொழுது, அம்பிகையின் சித்திரத் தேரின் வடங்கள் பழுதடைந்த நிலையிலிருந்ததால், அதற்கான புதிய வடங்களைப் பெறுவதற்கு எவ்வளவு முயன்றும் முடியவில்லை. என்ன செய்வதென்று அனைவரும் கலங்கியிருந்த வேளை, திருவிழாவுக்கு மூன்று நாட்கள் முன்பாக தேர் சப்பரத்திற்குப் பொருத்தமான வடம் வெள்ளைக்கடலிலே கிடைத்தது. செட்டிபுலத்தைச் சேர்ந்த இரு இளைஞர்கள் கடலிலே தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை அவர்களிடம் அம்பிகை இவ்வடத்தை ஒப்படைத்தாள். பெரும் சிரமத்தின் மத்தியிலே இதனைக் கரைசேர்த்து பின்னர் அயலவரின் உதவியோடு கோவில் நிருவாகத்திடம் ஒப்படைத்தார்கள். திருவாளர்கள் சின்னராசா யோகராசா, சோமசுந்தரம் கனகேஸ்வரன் ஆகிய இவ்விரு இளைஞர்களுமே வாய்பேச முடியாதவர்கள். அம்பிகைமீது அபார நம்பிக்கையும், பக்தியும் கொண்டவர்கள். தன் அடியவர் துயர்நீக்க பொருத்தமான வேளையில், பொருத்தமானதை அதுவும் தனது பக்தர்களிடம் தந்து பெற்றுக் கொண்ட அன்னையின் கருணையை என்னென்பது. நாம் நேரில் கண்ட இந்த ஒரு புதுமையே பல நூற்றாண்டுகாலமாக தாயின் அற்புதங்கள் பற்றி வழங்கிவரும் கர்ணபரம்பரையான கதைகளை மெய்பிக்கப் போதுமானதல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுரையாக அன்னை கோவிலின் இராசகோபுரத் திருப்பணி வேலைகள் நிறைவெய்தியதும், இன்னும் நிறைவு செய்யப்பட வேண்டிய பல பணிகள் உண்டு. எனினும் கோவில் முன் "மணிமண்டபம்" உள்வீதிகள் யாவும் அகலித்தல், தீர்த்தக்கேணி திருத்தம் என்பன முதன்மைப் படுத்தப்படுகின்றன. அடியவர்கள் தாராளமாக நிதியுதவிபுரிந்து இப்பெரும் பணி நிறைவெய்த வழிகாட்டி, அன்னையின் அருட்கடாட்சத்தைப் பெற்றுய்வீர்களாக.

"பொன் நிறை வேலணைக்கள் புகழ் மணிக் கோயில் கொண்ட
அன்னையே முத்துமாரி அடியவர் தொண்டர் எல்லாம்
உன்னுயர் கோபுரத்தை உவந்தினிதமைக்க நீயே
இன்னருள் புரிவாய் அம்மா இணையடி போற்றி போற்றி"

- அருட்கவி -

*க. நவரெத்தினம்*
*பொருளாளர் - ஆலய பரிபாலன சபை*

*செயலாளர்*

***இராசகோபுரத் திருப்பணிச் சபை***
*வேலணை பெருங்குளம் முத்துமாரி*
*அம்மன் கோவில்*
*(01 - 10 - 2004)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணைக்கிராம சிறப்பின் பங்காளிகள்....!

யாழ்ப்பாணக் குடா நாட்டின் தென்மேற்கே கிட்டத்தட்ட10 மையிற் கற்கள் தூரத்தில் உள்ளது வேலணை என்னும் கிராமம். இது சப்த தீவுகளில் ஒன்றாகும். இது ஒருகாலத்தில் அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு போன்ற கிராமங்களை உள்ளடக்கி லைடன் தீவு என்ற பெயரில் விளங்கி வந்தது. இடைக்காலத்தில் மண்டைதீவு கடலால் சூழப்பட்ட கிராமமாய் இருந்தாலும் தனியாக பிரிந்து செல்ல மக்கள் விரும்பியதாலும் அன்றைய பாராளுமன்ற பிரதிநிதியால் தனிக்கிராமச் சபையாக்கி செயல்பட தொடங்கியது. பின் அல்லைப்பிட்டி மக்களின் நீண்டகால வேண்டுதலின் பின் அல்லப்பிட்டியும் தனிக் கிராமச் சபை நிர்வாகமாக மாற்றப்பட்டது. அதன் பின்புதான் வேலணை தனிக்கிராமச் சபையாக ஒன்பது வட்டாரங்களைக் கொண்ட ஒரு கிராமச்சபையாக வேலணை என்னும் பெயரில் விளங்கி வருகின்றது.

இந்த வேலணையின் எல்லைகள் கிழக்கு மண்கும்பானில் அரைவாசியும், சாட்டி வீதியும், மேற்கு சரவணையில் அரைவாசியும், புளியங் கூடல் சுருவில் வீதியும், வடக்கு ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம் பிரதர்ன பாதையும் அராலி கடலின் பரந்த தரவைப் பகுதியும் தெற்கு புங்குடுதீவு வேலணை கடல் துறைமுகமும் கடலுமென எல்லை நிர்ணயம் செய்து தனி கிராம அலகாக விளங்கி வருகின்றது. இங்கே வசித்த மக்கள் தொகை கிட்டத்தட்ட 1980 வரையில் கிட்டத்தட்ட பன்னீராயிரம் மக்கள் தொகையைக் கொண்ட கிராமமாக விளங்கி வந்தது. வேலன் என்ற பெயர் கொண்ட ஒரு பிரித்தானியன் இக்கிராமத்தை நிர்வாகம் செய்து வந்ததால் இதன் பெயர் வேலணை என்று வந்ததாக சிலரும், இல்லை கடல் எல்லைக்கடலில் ஒரு முருக வேல் வந்து அடைந்ததால் வேலணை என்ற பெயர் வந்ததாக வேறு சிலரும், இல்லை வேல் வடிவத்தில் ஒருவகை முள்ளுச்செடி பரவலாக அனைத்து பகுதியிலும் முளை கொண்டிருந்ததால் வேலணையென்ற பெயர் வந்ததாக சிலரும் சொல்லி வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர் ஊர்காவற்றுறையைக் கைப்பற்றிய பின்னர் தமது ஆட்சியை நிலை நிறுத்த எண்ணி வங்களாவடிச் சந்திக்கு கால் மையில் தூரத்தில் ஒரு கோபுரத்தைக் கட்டி கடலால் வரும் அன்னியரை கங்காணித்து வந்தனர். இக்கோபுரத்தின் சிதைவை 1978 வரை காணமுடிந்தது. வேலணை இன்று தீவுப்பகுதியின் மத்திய இடமாக திகழ்ந்து வருகின்றது. காரணம் நெடுந்தீவு மக்களும் புங்குடுதீவு மக்களும் நயினாதீவு மக்களும் புங்குடுதீவு யாழ்ப்பாண பாதையால் பிரயாணம் செய்தால் வேலணை ஊடாகவே செல்ல வேண்டும். அடுத்து அனலைதீவு, எழுவைதீவு மக்கள் ஊர்காவற்றுறை வந்து யாழ்ப்பாணம் செல்வதென்றாலும் வேலணைக்கு வந்து தான் செல்லவேண்டும் என்ற நிலையில் பயணப்பாதை இருப்பதால் வேலணை ஒரு மத்திய இடமாக விளங்கி வருகின்றது.

வேலணையில் மூன்று மதத்தினரும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றார்கள் என்பதற்கு உதாரணமாக சாட்டிப் பகுதியில் கடற்கரை ஓரமாக உயர்ந்து விளங்கும் முஸ்லீம் மக்களின் வழிபாட்டு நிலையமான மசூதியும், கிறிஸ்தவ மக்களின் வழிபாட்டு நிலையமான சாட்டிமாதா கோவிலும், அதன் அருகில் உயர்ந்து நிற்கும் இந்துமத ஐயனார் ஆலயமும், மக்களின் பண்பட்ட வாழ்க்கை முறைக்கு உதாரணமாக திகழ்வதை இன்றும் காணலாம். வேலணையில் அன்று முதல் இன்றுவரை தமிழ் வளர்த்த பெரியார்களும், பண்டிதர்களும், வித்துவான்களும், புலவர்களும் பரம்பரையாக வாழ்ந்தார்கள் என்பதற்கும், பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் இந்த கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் என்ற பெருமைக்கும் வேலணை காரணமாகின்றது. வேலணையின் வளர்ச்சியில் பலர் பின் கவனம் செலுத்தினாலும், ஆரம்பத்தில் ஆங்கிலேயர் ஆட்சியில் சட்டசபையில் சபாநாயகராக இருந்தவரும் பிரபல சமூகசேவையாளருமான திருவாளர் சேர். வை. வைத்திலிங்கம் துரைச்சாமி அவர்கள் பெரும் பணியாற்றினார். தனது சொந்த நிலத்தின் பெரும்பகுதியை பொதுச் சொத்தாக்கி மக்கள் நல சேவை நிலையங்கள் கட்டுவதற்கு பேருதவி புரிந்தார். அவரின் நல்ல பணிக்கான அத்தாட்சியாக வேலணை பிரசவவிடுதியும் அதன்பின் அவரின் வழித்தோன்றல்கள் சிறு தொகை பணத்துடன் சரஸ்வதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை, உதவி அரசாங்க அதிபர் பணிமனை, கமத்தொழில் சேவைநிலையம், போன்ற இன்னும் பல கட்டிடங்கள் கட்டப்பட காணிகளைக் கொடுத்து உதவினர். இதற்கு நன்றிக்கடனாக அவரின் நாமத்தை வேலணை மத்திய மகா வித்தியாலயமாக திகழ்ந்த பாடசாலைக்கு மக்கள் அவரின் பெயரைச் சூட்டி துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயம் என பெயர்சூட்டி உள்ளார்கள். இவரோடு இன்னுமொருவர் ஆசிரியர் மருதையினார். வேலணையின் வளர்ச்சிக்காக பாடுபட்ட பெரியார்களின் வரிசையில் பெரும்பங்கை, கந்தர்காங்கேசு ஆசிரியர் அவர்களும், மருதையினார் ஆசிரியர் அவர்களும் சி. இராசரத்தினம் ஆசிரியர் இந்த மூவரும் முயற்சி எடுக்காது இருந்திருந்தால் இன்று வேலணை துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயம் வேலணைக்கு கிடைத்தே இருக்காது என்பதோடு வேலணை கிழக்கு மகாவித்தியாலயமும் கிடைத்திருக்காது.

வேலணையின் வளங்கொடுக்கும் வளங்களாக பனைவளமும், விவசாயமும், கடல்தொழிலும் என்றென்றும் உறுதுணையாக விளங்கி வருகின்றன. தோட்டப்பயிர்களும் உண்டு. காசுப் பயிரான புகையிலைப் பயிரே முன்னுரிமை பெறுகின்றது.

கல்வி வளர்ச்சிக்கு 9 வட்டாரம் கொண்ட வேலணைக்கு வட்டாரத்துக்கொரு பாடசாலையாக 7 பாடசாலைகள் அமைக்கப்பட்டு கல்வியின் அவசியம் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை வட்டார ரீதியில் உள்ள தமிழ்ப்பணியாளர்கள் கடமையாற்றியதின் பயனாக குறிப்பிட்ட கால எல்லைக்குள் அடுத்தடுத்து இரண்டுபேர் இந்த கிராமத்தில் பிறந்து படித்த இருவர் திருவாளர் வே. அ. கந்தையர் பிரபல சட்டவாதி அவர்களும் திருவாளர் கா.பொ. இரத்தினம் உலகத் தமிழர் சங்கத் தலைவரும் தமிழ் மறைக் கழகத்தலைவர் அவர்களும், பாராளுமன்றப் பிரதிநிதிகளாக செல்ல முடிந்தது. இன்று வேலணை துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயம் ஒரு தீவக தீபமாக தீவக மக்கள் அனைவருக்கும் கல்வியூட்டும் கலைக்கோவிலாகவும், அறிவுச்சாலையாகவும் விளங்க, வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் கிராம மகாவித்தியாலயமாகவும் செயல்படுகின்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய வளர்ச்சியில் பல பெரியார்கள் பெரும்பணியாற்றி உள்ளார்கள் அதில் குறிப்பிடக் கூடிய முறையில் பணியாற்றியவர்கள் பிரபல வர்த்தகர் சிற்றம்பலம் அவர்கள் நால்வர் மட இயக்குனர் செல்லப்பா சாமியார், பெருங்குள முத்துமாரி அம்மன்கோவில் முன்னாள் தலைவர் திருத்தொண்டர் தில்லையம்பலம் அவர்கள், திருவாளர் அருணகிரிநாதன் என்னும் வர்த்தகர், சமூகத்தொண்டர் சிவலை நாகலிங்கம் அவர்கள், கார்த்திகேசு தம்பிஐயா அவர்கள், கிராமச்சபை உறுப்பினர் திருவாளர் வீரசிங்கம் சண்முகலிங்கம் போன்ற இன்னும் பலர் பெருந்தொண்டாற்றி ஒன்பது வட்டாரத்திலும் கிட்டத்தட்ட பதினெட்டுக்கு மேற்பட்ட ஆலயங்கள் அமைத்து ஆன்மீகத்தின் தத்துவத்தையும், ஆலயவழிபாட்டு வழிமுறைகளையும், பக்தி நெறிகளையும் வளப்படுத்தி வழிபாடு பற்றியும் விளக்கி மக்களை நல்வழிப்படுத்தியதன் பயனே சைவமும் தமிழும் தழைத்தோங்கும் வேலணை என்று 1956ல் வேலணையில் நடந்த திருமறை விழாவில் தவத்திருகுன்றக்குடி அடிகளார் கூறுமளவுக்கு பெருமைகொண்டு துலங்கியது. இதன் சிறப்பில் புத்திரன் கொண்டார் மணியகாரரும், அவரின் பரம்பரையும் சமயப் பணிக்கு உதவி உள்ளனர். வேலணையின் ஆலயங்களில் பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயமே பழமை வாய்ந்த இரட்டைப் பஞ்சாகமுறை கோவிலாகும். 200 வருட பழமை வாய்ந்தது எனலாம்.

தமிழ்ப்பணியில் வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்கம் என்ற இளைஞர் அமைப்பு ஒன்று தன்பணியில் 1960ல் மூன்று நாள் முத்தமிழ் விழாவை நடாத்தி, தமிழ் அறிவுப்போட்டிகள் நடாத்தி, தமிழை வளர்த்ததோடு 1962ல் திருக்குறளுக்கு விழாவும் எடுத்து இந்தியாவில் இருந்து பேரறிஞர்கள் திரு. சாலை இளந்திரையன் அவர்களையும் திருமதி கனகசவுந்தரி இளந்திரையன் அவர்களையும் டெல்லி பல்கலைக்கழக பேராசிரியர் ஐயன்பெருமாள் கோனார் அவர்களையும் வரவழைத்து தமிழின் சிறப்புக்கு பெருமை சேர்த்தார்கள். இதனால் தமிழும் அங்கே வளர வாய்ப்பாய் வளம்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்களாவடி என்ற பெயர் 1890ல் ஆங்கிலேயர் தமதாட்சியை நிர்வகிக்க அராலியைச் சேர்ந்த முத்தையா என்பவரை நியமனம் செய்து, தீவுப்பகுதியை நிர்வாகம் செய்ய மணியகாரராக நியமித்தார்கள். இவர் அராலியில் இருந்து வேலணைக்கு வந்து போய் நிர்வாகம் செய்தார். அந்த கஷ்டம் குறைக்க வேலணையில் காரியாலயத்தை வங்களாவடியில் அமைத்ததோடு ஆங்கிலேயர் கொழும்பிலிருந்து வந்தால் தங்கிச்செல்ல வாடிவீடு ஒன்றும் அமைக்கப்பட்டது. அதனால் தான் வங்களாவடி என்ற பெயரும், தீவகத்தின் சகல நிர்வாக அமைப்புக்களும் வேலணையில் இருந்ததால் அன்றே வேலணை தீவகத்தின் மத்திய நிலையமாகி விட்டது எனலாம்.

கிராமவளர்ச்சியில் பங்கெடுத்து கிராமத்தின் பணியை திறம்பட செய்தவர்களில் பலர் உள்ளனர். அவர்களில் வைத்தியர் சி. இராசரட்ணம் ஆசிரியர் அவர்கள் முன்னாள் கிராமச்சபை தலைவர் பு. சுப்பிரமணியம் அவர்கள் இன்னொரு கிராமச்சபைத்தலைவர்.

இஞ்சினியர் சதாசிவம் இவர்களோடு வர்த்தகப்பெருமக்களான எ. மாணிக்கம் பிரதர்ஸ், ந. சண்முகம் அன் கொம்பனி, தினக்குரல் பத்திரிகை நிறுவனர் எஸ். பி. சாமி அவர்கள், பிறவுண்சன் இன்டஸ்ரீஸ் உரிமையாளர் வேலணை வீரசிங்கம், Jaffna Grocery சி. முத்துத்தம்பி போன்றோருடன் முன்னாள் தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளர் நடராசா பாலசுப்பிரமணியம் அவர்களும் இணைகின்றார். சமூக, சமய தொண்டில் பணிசெய்த ஏ. கந்தையா ஸ்டுடியோ பி. எஸ். நாதன், க. நவரத்தினம் அவர்கள், ஆ. சிவராசா அவர்கள் மற்றும் முன்னாள் கிராமச்சேவையாளர் ச. கனகலிங்கம் அவர்கள், திருத்தொண்டர் தில்லையம்பலம் போன்றோரின் பணியும் பாராட்டுக்குரியதே. திரு. தில்லையம்பலம் அவர்கள் வேலணை மக்கள் மத்தியில் இன மத, பேதமற்ற சமூக, சமய அரசியல் பணியாற்றியதில் குறிப்பிடத் தக்கவர்.

இன்று வேலணையின் சிறப்பின் ஆதாரமான கல்விமான்களாக உலகம்பூரா பலர் பரந்துள்ளார்கள். இன்னும் சிலர் மண்ணின் மைந்தர்களாக வாழ்கின்றார்கள். அவர்களில் செ. பாலச்சந்திரன் அவர்கள், பொன் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் இ. சிவச்சந்திரன் அவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச. சத்தியசீலன் ஆகியோர் பேராசிரியர்களாகவும் மற்றும் சு. இரத்தினராசா அவர்கள் கல்விச்சேவையிலும் திருவாளர் ச. மாணிக்கவாசகர் ஆசிரியர் அவர்கள், திரு. மு. வினாசித்தம்பிவைத்தியர் அவர்கள், திரு. ந. ஜெகநாதன் ஆசிரியர் அவர்கள் க. சரவணநாதன் தபாலதிபர் அவர்கள் ஆசிரியர் பொ. நடராசா அவர்கள் மற்றும் சட்ட துறையில் நீதிபதி மா. இளஞ்செழியன் அவர்கள், நீதிபதி சரோஜினிதேவி இளங்கோவன் அவர்கள், நரம்பியல் வைத்திய நிபுணர் நா. யோகநாதன், முன்னாள் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில் வடிவேல் அவர்கள், க. சித்திரவடிவேல் அவர்கள், கணக்காளர் மற்றும் பொதுப்பணியாளர் ஆ. சிவராசா, வ. ஐயாத்துரை அவர்கள், வைத்தியர் ஐயம்பிள்ளை மற்றும் சரவணை சிவசம்பு வைத்தியர் அவர்கள், அவரின் மக்கள் பலர் என்று என் ஞாபகசக்தியை தாண்டி சிறப்பு வளம் கொண்டு நிற்கின்றார்கள் பலர். கல்விச் சிறப்பில் வேலணை சிறப்பின் ஏணியில் நிற்கின்றது. உலகம் பூரா பரந்து கிடக்கின்றது.

தமிழ் இலக்கிய பணியில் பண்டிதர் வித்துவான் திரு. தில்லைநாதப்புலவர், பண்டிதர் இராசையா அவர்கள், பண்டிதர் பொன். ஜெகநாதன் அவர்கள், பண்டிதர் மா. மாணிக்கம் அவர்கள், பண்டிதர் பொ. கேதாரநாதன் அவர்கள், திரு. தில்லைச்சிவன் அவர்கள், திரு. பொன். தியாகராஜா அவர்கள், திருமதி. விக்னா பாக்கியநாதன் அவர்கள், வேலணை வேணியன் அவர்கள், வாசுதேவன், கருணாநிதி, A. S. ராஜா (Paris) போன்றோரின் தமிழ் இலக்கியப் பணியால் வேலணை இன்று உலகத்து மூலை, முடுக்கு எங்கணும் தமிழ்ப்பணியில் தலை நிமிர்த்தி நிற்கின்றது.

அரசியல் பணியால் வேலணையை உயர்த்தியவர்களில் திருவாளர்கள் சேர். வைத்தியலிங்கம் துரைச்சாமியைப் போல் பெரும்பங்காற்றிய பெருமை திரு. கா. பொ. இரத்தினம் அவர்களையும் திரு. வே. அ. கந்தையா அவர்களையும் என்றும் வேலணை கிராமம் மறக்காது.

## சனசமூக வளர்ச்சித்திட்டம்

காலா காலமாக வேலணைக் கிராமச்சபைக்கு தெரிவு செய்யப்பட்ட தலைவர்களால் நன்கு கிராம நலன் கருதி வட்டாரத்துக்கொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனசமூக நிலையங்களை அமைத்து அவ்வாட்டார இளைஞர் சமூகத்தை பத்திரிகை, நூல்கள் படிக்கும் ஒரு பொது அறிவு மேம்பாட்டை உடைய சமூகமாக வளர்த்தெடுக்க பெரும் பணி ஆற்றி உள்ளனர். அதை இன்றும் வளர்ந்த சமுதாயம் எண்ணிப்பார்க்கின்றது. ஆசிரியர் மாணிக்கவாசகரையும் அவர் சேவையையும், தூரத்தே தேசம் கடந்து நின்றபடி, மேற்படி பணிக்கு பெரும் பங்காற்றியவர்களாக ஆரம்பகால கிராமசபைத் தலைவர் திரு. மருதையினார் ஆசிரியரும், திரு. செல்லையா ஆசிரியர் அவர்களும் இன்னும் பலரும் என்றும் மக்கள் நெஞ்சத்தில் உயர்ந்தே நிற்கின்றார்கள். இவர்கள் காலத்தில் கிராம வட்டத்தில் விளையாட்டுத் துறையும் வளர்ச்சி கண்டது.

## கலைப்பணி

கலைப்பணியில் வேலணை சதாசிவம் வில்லுப்பாட்டு குழு என்ற அமைப்பை உருவாக்கி வேலணையின் பெயரை துலங்க வைத்தார். இவரின் பணியால் நான் சிறுவனாக இருக்கும் போதே கவரப்பட்டவன். உதவியாளராக இருந்தவர்கள் திரு. நாகரத்தினம் அவர்கள், திரு. நரேந்திரன் அவர்கள். இவர்கள் முதுமையடைய இந்தப்பணியை தொடர்ந்தவர்கள் கா. காசிலிங்கம், தேவதாசன் சுந்தரலிங்கம் அவர்கள், சம்மந்தன் சிவராசா, நவம், தவயோகராஜா போன்றோர்களாவர். இது எனது ஞாபகத்தில் உள்ள சிலருடன் இன்னும் பலர் சிறப்பு செய்வதில் உயர்ந்தே நிற்கின்றார்கள்.

## கூட்டுறவு முறையில் மக்கள்பணி

ஐக்கிய நாணய சங்கமாக தொடங்கப்பட்ட கூட்டுறவுச் சங்கத்துக்கு ஆரம்பத்தில் தலைமை ஏற்ற அ. பொன்னுத்துரை ஆசிரியரும், திரு. சி. இராசரத்தினம் ஆசிரியர் அவர்களும் சுயநலம் இல்லாத பொதுநல நோக்கோடு பெரும்பணி ஆற்றினார்கள். அந்த கால கட்டத்தில் அவர்களோடு திரு. பொ. நடராசா ஆசிரியரும் மற்றும் பலரும் இணைந்து செயல்பட்டார்கள். மக்கள் நலன் பெற்றார்கள். அதன்பின் ஐக்கிய நாணய சங்கம் கலைக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமா ஆட்சி காலத்தில் கூட்டுறவுச் சங்கமுறை அமுலுக்கு வந்த போதும் இதே பணியாளர்கள் பணிதொடர்ந்த காலம் போக தேர்தல் முறை தெரிவு அத்தாட்சி நிர்வாகம் தொடரும் போது போட்டி நடைமுறை தென்பட்டது. இருந்தும் நல்லவர்கள் நிர்வகித்த வேலணை கமத்தொழில் சேவைநிலையம், பயிர்ச் செய்கைக்குழு, கிராம முன்னேற்றச்சங்கம் போன்றவற்றின் மூலம் மக்களுக்கு நற்பணிகள் செய்யப்பட்டது என்பது மகிழ்ச்சி கொண்ட சிறப்பேயாகும்.

## சமையவளர்ச்சிப்பணி

வேலணையில் சமயசங்கீதப் பணியை பாதுகாத்து வந்தவர்கள் பலர். மேற்கைச் சேர்ந்த யாழ் பல்கலைக்கழக முதுமானி பட்டதாரி ஆசிரியர் அப்பாத்துரை சந்திரசேகரம் அவர்களோடு தில்லைநாதப்புலவர், பௌராணிகர் தில்லையம்பலம், கிராம அதிகாரி மகாலிங்கம் மற்றும் சகோதரர்கள் பௌராணிகர் பேரம்பலம்பிள்ளை, திரு. பசுபதிப்பிள்ளை போன்றவர்களின் சேவை இறந்தும் இறவாப்புகழை தாய்மண்ணுக்கு கிள்ளித் தெளித்தவண்ணம் உள்ளது எனலாம்.

ஒரு கர்னாடக சங்கீத மேதை. அந்த கால கட்டத்தில் ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்தில் சைவசமயத்துக்கு பெரும்பணி ஆற்றும் செய்தி கண்டு ஆசிரியர் சந்திரசேகரம் அவர்களும் வேலணையில் பெரும்பணி ஆற்றினார். அவரின் சமயப்பணியின் அடையாளச் சின்னமே வேலணை சைவப்பிரகாசாலை நாமம் கொண்ட பாடசாலையாகும். அங்கே அவரால் கர்நாடக சங்கீத வகுப்புக்கள் நடத்தப்பட்டு மக்களிடம் சமய, சங்கீதம் கல்வி வளர்ச்சிக்கு பெரும் துணை நின்றார் எனலாம்.

## வைத்தியம்

வேலணையின் சிறப்புக்கு வைத்திய துறையில் பணி புரிந்தவர்களான கீழ்கண்டோரும் பெரும் துணையாக நின்றனர். விஷக்கடி வைத்தியரான கதிரவேலு அவர்களும், அவரின் மகளான இளையதம்பி அனுசம்மா அவர்களும், செங்கமாரி வைத்தியர் ஆசிரியர் சி. இராசரத்தினம் அவர்களும், மற்றும் ஆயுள்வேத வைத்தியத்தில் திரு. வினாசித்தம்பி அவர்கள், திரு. ஐயம்பிள்ளை அவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. முருகேசு அவர்கள், ஐ. கந்தையா அவர்கள், சரவணை சிவசம்பு அவர்கள், செ. சின்னத்துரை போன்றோரின் பரந்து பட்ட சேவையும் பெரும் பங்களிப்பை கொடுத்தது என்பதை மறுக்க முடியாத உண்மை எனலாம்.

வேலணையின் அதிமுக்கிய சிறப்பு மூன்று மதத்தினரும் ஒற்றுமையாக வாழ்வதும், கடற்கரையின் பத்து மீற்றர் தூரத்தில் நல்ல குடிதண்ணீர்க் கிணறு காட்சி தருவதும், அத்தோடு தீவகத்தின் அனைத்துப் பகுதிக்கும் கோடை காலத்தில் குடிதண்ணீர் வழங்கக் கூடியதாக சாட்டி மாதாங்கோவில் கிணற்றில் எத்தனை பம் வைத்து அடித்தாலும் வற்றாத நீர் ஊற்றை வருடம் பூராகத் தரும் நன்னீர் கிணறும் உள்ளது. அத்தோடு சாட்டி கடற்கரை பள்ளிவாசலடி ஒரு உல்லாச பயணிகள் வரும் இடமாக பிரசித்தி பெற்று இருப்பதுமாகும். தற்போது ஆய்வுக்குரிய பண்டைய கால பொருள்களும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

இவை சிறப்புக்கு மெருகூட்டி நிற்பதோடு தீவகத்தின் பொதுவான அறிவகமாக வேலணை துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயமும் வரலாற்று பழமைமிக்க முத்துமாரி அம்மன் ஆலயம் உயர்ந்து நிற்பதுவுமே பெரும் காரணமாகும் எனலாம். இதனால் வேலணை இன்று மகுடம் சூட்டிய மன்னனாய் தீவகத்தின் தலைநகரமாய் நிமிர்ந்து நிற்கின்றது என கூறினால் பொய்யாகாது எனலாம்.

**இத்தொகுப்பில் என் ஞாபகசக்திக்கு எட்டியவரை என்னால் தேடமுடிந்தவரை தேடி தொகுத்து வழங்கி உள்ளேன். குறை காண்பவர்கள், தவறைத் திருத்த விரும்புவோர்கள் தயவு செய்து என்னுடன் தொடர்பு கொண்டு அடுத்த பதிப்பில் பிழையைத் திருத்த உதவுங்கள் என கேட்டு நிற்கின்றேன்.**

நன்றி வணக்கம்.

தொகுத்து வழங்கியவர்,

***கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா***

அறிவகம் - டென்மார்க்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துமாரி அம்மன் பக்திப் பஜனைப் பாமாலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீர்தங்கு வேலணை பெருங்குளம் உறைந்த
பேர்பராசக்தி பெருங்குளம் முத்து மாரி.....!
பார்வதி பராசக்தி பரமசிவன் தேவி
பங்கயர்க்கன்னி உன் அபயம் அருள் தாயே !
கார்முகில் காணாத பயிராகி நொந்தால்
காப்பாற்றவே உன் அருள் ஊற்றைச் சுரப்பாய் ~ உன்னடியர்
நீர்வற்று குளமாகி நின்று துயர் உற்றால்
நின்கருணை அருள்மாரி தந்திடுவாய் தாயே !

ஓம் சக்தி ஓம்...! ஓம் சக்தி ஓம்...!! ஓம் சக்தி ஓம்...!!!
ஓம் பராசக்தி...! ஓம் பராசக்தி...!! ஓம் பராசக்தி...!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துமாரி அம்மன் பேரில் திருவூஞ்சல்

நூல்

என் சிராசிரிய விருத்தம்

## பிள்ளையார் வணக்கம்

பூவாரும் சோலையளி நாதம் செய்யும்
பொற்பீழ மண்டலஞ்சேர் யாழ்ப்பாணத்தில்
தேவாரும் வேலணைப்பெருங் குளத்தின் மேவித்
திருக்கோயில் கொண்டமுத்து மாரி மீது
பாவாரும் ஊஞ்சலிசை யினிது பாட
பண்ணவர்கள் கணந்தோறும் பணிந்து கூட
காவாரும் கரிமுகத்தான் கை கையைந் துள்ளான்
கணபதிதன் சேவடிகள் காப்ப தாமே 1.

உருவோங்கு நால்வேதம் தூண்க ளாக
உலகோங்கு சிவாகமங்கள் விட்ட மாக
அருவோங்கு ஞானகலை வடங்க ளாக
அருளோங்கு நாதவிந்து பலகை யாக
குருவோங்கு பிரணவமொண் பீட மாக
குளிர்மென்பூ மெத்தையறம் தலையணை யாக
மருவோங்கு வாணிலட்சுமி வடந்தொட் டாட்ட
மன்னுவேலணை முத்துமாரி யாடீ ரூஞ்சல் 2.

பண்ணமைய நாரதர்சங் கீதம் பாட
பாங்காகக் கந்தருவர் பக்கம் பாட
விண்ணமைந்த வரம்பையர்கள் நடனங் காட்ட
விளங்குமணித் தீபவொளி யிருளை யோட்ட
பண்ணமைந்தே தேவாரம் பக்தர் பாட
பார்மகளோ டரமகளிர் பணிகள் செய்ய
வண்ணமைந்தே வேலணைப்பெருங் குளத்து வாழும்
வண்ணமுத்து மாரியம்மே யாடீ ரூஞ்சல் 3.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனையோ டிந்திரனார் கவிகை தாங்க
வாயுதேவ னிடத்தால வட்ட மோங்க
அந்தரர்கள் சொரியுமலர் எங்கும் தேங்க
அஞ்சவரு நோய்வறுமை யனைய நீங்க
விந்தைமிகு பிரமனுயர் வேதம் பாட
விளக்கமா யுன்வித் தாரம் பேச
பந்தபாச மறவருளைப் பெருங்குள மிருந்தே
பாலிக்கு முத்துமாரி யாடீ ரூஞ்சல் 4.

சூரியசந் திராதிநாள் பொழுது சொல்ல
சோமனுயர் நிதிக்கிழவோன் அடைப்பை தாங்க
சீரியலுந் தென்றிசைக்கோன் படிகந் தாங்க
சேயவனுங் கணபதியுந் திருமெய் காப்ப
ஆரிசைசேர் தும்புருவர் அணியாழ் மீட்க
அடல்வலியார் வாயுதேவனங் கவரி வீச
ஏரியலும் வேலணைப்பெருங் குளத்தின் மேவும்
எழில்முத்து மாரியம்மே யாடீ ரூஞ்சல் 5.

காப்பாகும் திருநீற்றுப் பொலிவி னோடும்
கருதுசிவ வுருத்திராக்க மணியும் பூண்டு
நாப்பொலிய வஞ்செழுத்து முறையா யோதும்
நலம்படைத்த சிவதொண்டார் நன்கு போற்ற
நீப்பரிய நின்னருளே நிலையாய் நிற்க
நெல்வளமும் பல்வளமும் நிறைந்து தேங்க
மாப்பொழிலார் வேலணையூர் வாழ்வு செய்யும்
மன்னுமுத்து மாரியம்மே யாடீ ரூஞ்சல் 6.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்குலவு மரமகளிர் களபம் பன்னீர்
மலர்புனுகு மான்மதம்சவ் வாதும் வார்த்து
கணங்குலவு கங்கையிள நீர்பால் ஆட்டி
கவின்குலவு பட்டாடை கலன்கள் பூட்டி
குணங்குலவு முனிவரர்பல் லாண்டு வாழ்த்த
குதூ கலங்கொண் டமர்ந்நறை மலர்கள் தூவ
இணங்குலவு வேலணையிற் பெருங்கு ளம்வாழ்
இறைவிமுத்து மாரியம்மே யாடீ ரூஞ்சல் 7.

நயமார்ந்த அந்தணர்நான் மறைக ளோத
நால்வர்தரு திருமுறைகள் நன்கு பாட
வயமார்ந்த நின்வாசல் வந்து கூடி
வாழ்த்தெடுக்கும் மெய்த்தொண்டர் மகிழ்வு
வியமார்ந்த திருப்பணிகள் விழாவே பூசை (மார்ப்ப
விருப்பமுடன் புரிவோர்கள் விழைந்தாங் கெய்த
கயமார்ந்த வேலணைப்பெருங் குளத்தில் மேவும்
கனகமுத்து மாரியம்மே யாடீ ரூஞ்சல் 8.

சீரணியும் நாகசுரம் தவிலு மார்ப்ப
ஜெயசங்கு பேரிகையும் முரசு மார்ப்ப
பேரணியும் கண்டைகொம்பு தவண்டை யார்ப்ப
பெரியவால யமணிகைத் தாள மார்ப்ப
தாரணியுங் கின்னரர்தும் புருவு மார்ப்ப
தகைமைபெறு மந்தரதுந் துபியு மார்ப்ப
வாரணிநீர்ப் பெருங்குளத்தே வாழ்வு செய்யும்
மாதுமையே முத்துமாரி யாடீ ரூஞ்சல் 9.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னுசிவ னுறைகயிலை யிருந்து வேலணை
வந்துபெருங் குளக்கரையின் வளர்ந்து வாய்ந்து
துன்னுநொச்சிக் கூடலிற்றான் றோன்றி யாகித்
தொல்தவத்தால் அவ்வழிசேர் கட்டை மாதன்
தன்னையழைத் தொருகுடிசை சமைத்திட் டாங்கே
தனிமுதலா யெழுந்தருளி யிட்ட தாயே
முன்னவளே பின்னவளே மூவாத் தேவி
முத்துமாரிப் பெருந்தகையே யாடீ ரூஞ்சல் 10.

## வாழி

மன்னுமறை வாழிமறை யோர்கள் வாழி
வாண்டிருநீ றானினங்கள் கண்டிகை வாழி
துன்னுமழை பெய்யுமுகி னிரைகள் வாழி
தொல்லுலகில் மன்னவர்செங் கோலும் வாழி
மன்னுகவிப் புலவோர்கள் சைவம் வாழி
வளமான திருப்பணிகள் செய்வோர் வாழி
நன்னருறு பூசைவிழாப் புரிவோர் வாழி
நாகமணி முத்துமாரி யருளும் வாழி. 11.

## எச்சரிக்கை

திருவேவள ருமையேமக மாரீ யெச்சரிக்கை
தேவர்தொழு வாமீசிவ காமீ யெச்சரிக்கை
கருவேலையின் துயர்நீக்கிடு கௌரீ யெச்சரிக்கை
கயிலைக்கிறை தன்னொடுறை கன்னீ யெச்சரிக்கை
உருவேநினை யடியாரக வொளியே யெச்சரிக்கை
உதயந்தரு மதிவேணியர் புடையா யெச்சரிக்கை
மருவார்பொழில் வேலணைப்பெருங்குளத்தா யெச்சரிக்கை
வணங்குபவர்க் கருள்செய்முத் துமாரீ யெச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

திங்களணி புரிசடையோன் தேவீ பராக்கு
சேயவனைக் கணபதியை யீன்றாய் பராக்கு
பொங்கடல் புவியனைத்தும் பூத்தாய் பராக்கு
புண்ணியமாம் எண்ணன்கும் புரிவாய் பராக்கு
துங்கமிகும் மலையரசன் தோகாய் பராக்கு
தொல்லைவினை யல்லலவை துடைப்பாய் பராக்கு
சங்கைமிகு வேலணைப்பெருங் குளத்தின் மேவும்
சர்வசுபம் அருளுமுத்து மாரீ பராக்கு

## மங்களம்

சுத்தபரி பூரணிக்கு மங்களம் - தூய
சோதிவடி வானவருட் தேவியர்க்கு மங்களம்
அத்தனொடு பங்கினட்கு மங்களம் - ஆய
அண்டமெல்லாந் தந்தவருள் அம்பிகைக்கு மங்களம்
நித்தகரு மேனியட்கு மங்களம் - நின்ற
நீலிசிவ காமிப்பேர் நிமலிக்கு மங்களம்
வித்தகிசு மங்கலிக்கு மங்களம் - மேவு
வேலணைமுத் துமாரித்தே வியர்க்கு மங்களம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரேறி வீதி வரும் முத்துமாரி.....!

தேரேறி வீதி வரும் முத்துமாரி - உன்
தேசநிலை கண்டிடம்மா முத்துமாரி.....!
பாராண்ட உந்தனினம் முத்துமாரி
அம்மா.....! முத்துமாரி
பாரெல்லாம் அகதியம்மா முத்துமாரி.....இங்கே
பார் எல்லாம் அகதியம்மா முத்துமாரி.....!

வேப்பிலைக்குள் ஒளிந்திக்கும் முத்துமாரி
அம்மா முத்துமாரி - தமிழர்
வேதனையை தீர்ப்பதெப்போ முத்துமாரி
தாயே முத்துமாரி.....!

சிங்கத்தில் வீற்றிருக்கும் முத்துமாரி
அம்மா முத்துமாரி - தமிழர்
சீரழிவைத் தடுப்பதெப்போ முத்துமாரி
தாயே முத்துமாரி.....!

குங்குமத்தில் குளித்துவரும் முத்துமாரி
அம்மா முத்துமாரி - எங்கள்
குழந்தைகளை காத்திடம்மா முத்துமாரி
தாயே முத்துமாரி.....!

சந்தணத்தில் குளித்துவரும் முத்துமாரி
அம்மா முத்துமாரி - எங்கள்
சந்ததியை காத்திடம்மா முத்துமாரி
தாயே முத்துமாரி.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரினிலே வீதிவரும் முத்துமாரி
அம்மா முத்துமாரி - ஈழத்
தேசம்மீட்க வரம்கொடம்மா முத்துமாரி
தாயே முத்துமாரி.....!

அகதியான உன்னினந்தான் முத்துமாரி
அம்மா முத்துமாரி
அகிலமெலாம் சிதறிவிட்டார் முத்துமாரி
தாயே முத்துமாரி.....!

அனைவரையும் இணைத்திடவே முத்துமாரி
தாயே முத்துமாரி - உன்
அருள் மழையை பொழிவதெப்போ முத்துமாரி
அம்மா முத்துமாரி.....!

ஆக்கம் : ***வேலணையூர் பொன்னண்ணா***
டென்மார்க்

சம்சாரம் ஒரு வலை போன்றது. அதில் தூண்டில், முள்ளைக் காமன் போட்டிருக்கிறான். அதன் நுனியில் இருக்கும் ஐம்புலன்கள் மாமிசத்துக்கே ஒப்பாகும். அதற்கு ஆசைப்பட்டுத் துள்ளினேன். கழுத்தைத் திருகிப் போட்ட மீன் போலத் துடிக்கிறேன். லட்சுமிநரசிம்ம மூர்த்தியே, என்னைக் காத்தருள்வீராக.

- ***ஆதிசங்கரர்*** -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரி வாறாவாம் முத்துமாரி வாறாவாம்!

வாறாவாம், மாரி வாறாவாம்
வாறாவாம் மாரி வாறாவாம்
தாறாவாம் அருளைத் தாறாவாம்
தாறாவாம் அருளைத் தாறாவாம்

மல்லி முல்லை பூமணக்க
மாரி வாறாவாம்.....!
முத்துமாரி வாறாவாம்.....!
சித்திரத்தேர் ஏறி நம்மைத்
தேடிவாறாவாம், மாரி ஓடிவாறாவாம்.....!
முத்துமாரி வாறாவாம், தேடி, ஓடிவாறாவாம் !
(வாறாவாம் மாரி)

கற்பூரசட்டிக்குள் எரிகின்ற நெருப்பாக
காலமெல்லாம் காத்திடவே ஓடிவாறாவாம்
காவடி சுமந்து, நேர்த்திக்கடன்செய்யும் பக்தனை
கரம்தந்து காத்திடவே தேடி வாறாவாம்
தேரடி அழிக்கின்ற பக்தர்களை காத்து
தேறுதல் தந்திடவே நாடி வாறாவாம்
மாரி தேடிவாறாவாம், மாரி ஓடிவாறாவாம்.....!
(வாறாவாம் மாரி)

மாரி மாரி மாரியிவா முத்துமாரி
மாநாமம் பலகொண்ட அன்னைமுத்துமாரி
பொட்டு வைத்த புங்கைபதி.....!
காத்திருக்கும் கண்ணகியும் மாரிதான்
புளியம்பதி காத்து நிற்கும்
மாரியளும் மாரிதான்.....!
நீண்டகடல் தாண்டி, நயினைபதி
காத்து நிற்கும் நாகேஸ்வரியும் மாரிதான்
சமயபுரம் வாழும் முத்துமாரியளும் மாரிதான்
மாரி மாரி மாரியிவா முத்துமாரி
நாமம்பல கொண்ட அன்னை முத்துமாரி.....!
(வாறாவாம் மாரி)

**ஓம் சக்தி ! ஓம் சக்தி !! ஓம் சக்தி !!!**

ஆக்கம் : **வேலணையூர் பொன்னண்ணா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா வரமது தந்திடுவாய்.....!

## பஜனைப்பாடல்

அம்மா பெருங்குள முத்தாச்சி.....!
அருள்வாய் எமக்கு அருளாச்சி.....!
அன்பாய் எம்மை ஆதரித்து
அல்லல் களைந்து காப்பாற்று.....!

அன்னை தேவி பராசக்தி
என்னைப் படைத்தது உன்சக்தி.....!
வாழ்வைத் தந்து வளம்தந்து
வாழ்க்கைக் கடலில் கரையேத்து.....!

தில்லை கூத்தன் பத்தினியே
திருநடம் புரியும் உத்தமியே.....! உன்
திருவடி தேடி ஓடி வந்தோம்
திருவருள் தந்தெம்மைக் காப்பாற்று.....!

ஓங்காரப் பொருளும் நீதானே.....!
உலகம் என்பதும் நீதானே.....! கண்
காணும் இயற்கைக் காட்சிகளும்
காற்றும் மழையும் நீதானே.....!

அம்மா தாயே உனைவேண்டி
அழுதிடும் எம்மைக் காத்திடுவாய்.....!
அன்புடன் ஞானப் பாலூட்டி
அகத்தின் இருளைப் போக்கிடுவாய்.....!

உள்ளக் கோயில் உன் கோவில்
உயிரும் மூச்சும் உன் உருவம்
பேச்சும் செயலும் உன் பெயரில்
பெருகிட வர மது தந்திடுவாய்

- வேலணையூர் பொன்னண்ணா -
டென்மார்க்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருங்குளத்து மாரியம்மன் புகழ் பாடுவமே

- பண்டிதர். க. இராசையா -

1. உலகை ஈன்றாள் பெருந்தாயாம் – அவள்
உவந்தே கோயில் கொண்டாளாம்
வேலணைப் பெருங்குளத் தம்மனவள் – கொலு
வீற்றிருந் தருளும் விழுமியதாம்

2. விழுமிய தலமது தொன்மையதே – பெருமை
விள்ளத் தகுமோ விஞ்சியதே
குழுமிய அன்பர் குரம்பையெலாம் – குதறிக்
கலைக்கும் செய்தி கழறியதே

3. மூர்த்தி தலத்தொடு தீர்த்தமென – பேசும்
முதன்மை மிக்க திருத்தலமாம்
கீர்த்தி ஈழத்தில் கிளர்ந்தெழுமே – எங்கும்
கிளைக்கும் பேரருள் திருத்தலமாம்

4. அன்னை அம்மன் அருள் பொழியும் – அன்பு
அடியார் வணங்கும் திருத்தலமாம்
முன்னை வினைகள் செய்வினைகள் – எல்லாம்
முளைகெடும் முத்தித் திருத்தலமாம்

5. பொங்கல் படைத்தல் பெற்றதலம் – அன்பர்
காவடி தீக்குளிப்புக் கண்டதலம்
பொங்கருள் பூத்துக் குலுங்குதலம் – பதுப்
பொலிவொடு தேரோடும் புண்ணியதலம்

6. ஆலமர் கிளிகள் அழுகொலியும் – அயலே
பயிலுஞ் சிறார்கள் பாட்டொலியும்
நால்வர் மடத்தில் புராணஒலியும் – நாத
மோகனச் சூழல் மேவியதாம்

7. உள்ளம் தூய்தாய் உருகுமன்பர் – பேதம்
உதறிச் சமமாய்த் தொழுமொலியும்
கள்ளங் கபடம் களைந்தடியார் – அம்மன்
திருப்பணித் தொண்டுகள் செய் ஒலியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. அரோகரா அம்மனுக்கு அரோகரா – என்றே
ஆர்த்தெழுமடியார் அன்பொலியும்
சரோருகப் பள்ளி அமர்ந்தாளை – இங்கு
சால மகிழ்விக்கும் திருத்தலமே

9. ஆண்டு பலவாய்த் தொண்டர் பலர் – அயராது
ஆற்றுந் தொண்டால் ஆக்கம்பெற்றே
ஈண்டு மறுமலர்ச்சி எய்தியதே – புதுமை
பொலிந்து குடமுழுக்குக் கண்டதுவே

10. மாரி மகமாரி அம்மனவள் – நாம்
மகிழப் பாலித்து மகிழ்ந்தனளே
காரி துர்க்கைக் கன்னியவள் – இங்கு
கால்கொண்டு களித்தருள் புரிந்தனளே

11. பெருங்குளத் தம்மன் பெருங்கருணை – போற்றிப்
பேறுகள் பெற்றே வாழ்ந்திடுவோம்
அருங்குணம் அன்பு வீரமிவை – அவளால்
அடைந்தே வாழ்வு மகிழ்ந்திடுவோம்

12. உள்ளத்தன்பு ஊற்றெடுக்க – என்றும்
உலகம் உவக்க உழைப்போமே
வெள்ளைத் தனைய கருணையவள் – நாம்
வேண்டு மட்டும் தந்தருள்வாளே

13. தாயே மகமாரித்தாயே – என்று
தவறாமல் அழுதால் தந்தருள்வாள்
தாயே என்னைக் காப்பாயே – என்று
தவித்தே நின்றால் காத்தருள்வாள்

14. மாரி அம்மன் முத்துமாரி – என்றே
மனங்கசிந்து உருகி வணங்கிடுவோம்
மாரி போல் வணங்கிடுவாள் – அதனால்
மாரி அம்மன் புகழ் பாடுவமே

15. சக்தியும் சிவமும் ஒன்றாமே – சொல்லும்
பேதங்கள் யாவும் ஒன்றாமே
முத்தி பெறும்வழி அன்புநெறி – அம்மன்
புகழது போற்றிப் பாடுவமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருவாய் வருவாய் முத்துமாரி !

## பஜனைப்பாடல்கள்

வருவாய் வருவாய் முத்துமாரி
வந்தருள் தருவாய் முத்துமாரி
அனுதினம் வருவாய் முத்துமாரி
அனுக்கிரகம் தருவாய் முத்துமாரி.....!

சரணம் அடைந்தேன் முத்துமாரி
சௌபாக்கியம் அருள்வாய் முத்துமாரி.....!
வரமருள் தருவாய் முத்துமாரி
வந்தனம் செய்தேன் முத்துமாரி

(வருவாய் வருவாய்)

திருத்தலம் தானே தேடிவந்தேன் - உன்
திருப்புகழ்தானே பாடி நின்றேன் - உன்
திருவடி தானே காணவந்தேன் - உன்
திருமுல்லை வாசலை தேடிவந்தேன்

(வருவாய் வருவாய்)

தினம் பாடிப்பணிந்தோம் முத்துமாரி.....!
தினம் ஆடிப் பணிந்தோம் முத்துமாரி
தேடி அலைகின்றோம் முத்துமாரி.....எம்மை
நாடியே வந்திடு முத்துமாரி.....!

(வருவாய் வருவாய்)

துன்பம் சுமையாய் வந்தபோதும்
சோர்ந்து மயங்கி விழமாட்டோம்.....!
அன்னை நீயே துணை என்று
ஆறுதல் தந்திட வா இன்று.....!

(வருவாய் வருவாய்)

- வேலணையூர் பொன்னண்ணா -
டென்மார்க்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தாயே முத்துமாரி.....!

## பஜனைப்பாடல்

அமுதம் போல இனிக்குதம்மா உன்தனது நாமம்
தாயே முத்துமாரி.....! அம்மா....! தாயே முத்துமாரி
மதுவைப்போல மயக்குதம்மா உன்தனது நாமம்
தாயே முத்துமாரி.....! அம்மா.....! தாயே முத்துமாரி.....!
(அமுதம் போல)

கற்கண்டைப்போல இனிக்குதம்மா உன்தனது நாமம்
தாயே முத்துமாரி.....! அம்மா.....! தாயே முத்துமாரி....!
மலைத் தேனைப்போல சுவைக்குதம்மா உன்தனது நாமம்
தாயே முத்துமாரி அம்மா.....! தாயே முத்துமாரி.....!

மல்லிப் பூவைப்போல மணக்குதம்மா புவனேஸ்வரி நாமம்.....!
தாயே புவனேஸ்வரி நாமம் - நல்ல
முத்தைப்போல ஒளிருதம்மா முத்துமாரி நாமம்
தாயே உன் முத்துமாரி நாமம்.....!
(அமுதம் போல)

அன்னை என்று உனை அழைத்தால்
அருகில் ஓடி வருவாய்.....! அம்மா அருகில் ஓடி வருவாய் !
மாதா என்று உனை அழைத்தால்
மகிழ்வு சொல்லித் தருவாய்.....! அம்மா மகிழ்வு சொல்லி தருவாய்!

தவமணியாய் உனையழைத்தால் தாகம்தீர்த்து விடுவாய்
தாயே.....! தாகம்தீர்த்து விடுவாய்.....!
புவனேஸ்வரியாய் உனையழைத்தால் புத்திசொல்லி தருவாய்
தாயே ராஜியமே தருவாய்.....!
காயத்திரியாய் உனை அழைத்தால் கவிதை சொல்லித் தருவாய்
தாயே நல்ல கவிதை சொல்லித் தருவாய்.....!
(அமுதம் போல)

***ஓம் சக்தி.....! ஓம் சக்தி.....!! ஓம் சக்தி.....!!!***

ஆக்கம் : **வேலணையூர் பொன்னண்ணா**
டென்மார்க்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மன் வேண்டுதல்

## பாடல்

தருணமிது தாயே தயவுபுரிவாயே
கருணை மழை பொழிய
கால மின்னு மேனோ - அம்மா
காலமின்னு மேனோ

வேலணையூர் சக்தி தந்திடுவாய் முத்தி
மிதிபடுதே தாய் மண் கதிதருவாய் நீயே.....!
மதிமலரே தேனே மங்கையரின் அழகே
கதிபெறவே உன்தன் கால்பிடித் தோமே.

புவனம் முழுதாளும் புவனேஸ்வரித் தாயே
கதிபெறவே உன்தன் கடைக் கண்ணருள்வாயே !
சிவனுடைய தேவி சீரருளும் மாரி
சிந்தையிலே வைத்தால் சீர்பரவும் கேளீர்.

ஊரினிலே இருந்தோம் உனைத்தோளில் சுமந்தோம்
உன்னருளை பொழிந்து ஒளிதந்து காரு
நேரினிலேவந்து நின்று நித்தமெமைக் காரு
பவவினைகள் அகற்றி பதம் அருள்வாய்தாயே.

மண்காக்க மாண்ட மைந்தர்களை காத்து
புதுவாழ்வு காட்டி புத்துலகில் பூட்டு
பாரினிலே நாம்மின்று பலதேசக் காரர்
பாவங்கள் போக்கிடவே உன்பாதங்கள் மட்டும்.

விதியெதுவோ அறியேன் விரைந்துவந்து காப்பாய்
கதியுனது என்று கரம்தொழுதேன் காப்பாய்
சதியெதுவும் அறியேன் சரணமுனை அறிவேன்
நிதியுனது அருளே நிலத்திலெமைக் காப்பாய்

***ஓம் சக்தி.....! ஓம் சக்தி.....!! ஓம் சக்தி.....!!!***

ஆக்கம் : **வேலணையூர் பொன்னண்ணா**
டென்மார்க்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர் அமரும் வேலணை பெருங்குளத்து முத்துமாரி

## பிள்ளையார் துதி

பெற்றவளைப் போன்ற பெருங்குளத்து - மாரியினை
பற்றோடு பாடிப் பணிவதற்குன் - நற்கருணை
துங்க கரிமுகத்து தூமணியே நீதந்து
பங்கம் ஏதும் வராமற் பார்

## எண்சீர் விருத்தம்

ஆதியிலே வாழ்ந்தவர்கள் அக் காலத்தில்
அம்பாளுக் கர்ச்சனைகள் ஆற்றி வந்தார்
பீதியின்றி வாழவழி வகுத்து வந்தாள்
பின்வந்தோர் பிழைசெய்தார் என்றுதானே
நீதியினை நிலைநாட்ட வேண்டும் மென்று
நினைத்தெம்மை இடம்பெயர வைத்து விட்டாய்
ஓதியறிந் தினியுமவள் கிருபையாலே
உவந்து மனம் களித்தினிது வாழுவோமே

மண்ணுயிர்கள் மறையோதி வழிபா டாற்றி
மலந்துவகை பூத்தினிது வாழ வென்றே
தன்னுடைய தனித்துவத்தின் மகிமை யாலே
தான்தோன்றி யாகவெளிப் பட்டு வந்து
அன்னையுமை பெருங்குளத்தின் கரையி னோர்பால்
அமர்ந்திட்டாள் பலகாலம் ஆட்சி செய்தாள்
பின்னென்ன பிழைசெய்தோம் புரிய வில்லை
பிரிந்துபுலம் பெயர்ந்ததுமுன் புதுமை தானோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுமைசேர் வேலணையூர் முத்து மாரி
மூதாதை யோருன்னைத் தொழுது வந்தார்
எதுவரினும் அம்பாளிங் கிருக்கும் போது
எங்களுக் கென்னகுறை என்று ஏங்காதுன்
புதுமையினை நினைத்து வாழ்ந்திருந்தோம் அம்மா
பொல்லாத புலப்பெயர்வாற் துன்புற் றாலும்
இதுவரையும் எமக்கெந்த இடரு மின்றி
எமைக்காத்து இரட்சித்தாய் நன்றி தானே

தேரமரும் பெருங்குளத்து முத்து மாரி
திருவிழாக் காண வரும் பக்த ரெல்லாம்
பாரமைதி பெறவேண்டும் இனிமே லேனும்
பக்குவமாய் மக்களுயிர் வாழ வேண்டும்
காரணங்கள் தெரியாமல் காலை வந்து
கடமைசெய்து தரியாமற் திரும்பு வோரும்
பூரணமாய் வந்துகுடி யேறி வாழப்
பொருந்துமோர் புனர்வாழ்வு வேண்டு மம்மா

விக்கினங்கள் வராமற் காக்க வல்ல
வேலணையூர்ப் பெருங்குளத்து முத்து மாரி
அக்கறையாய் வந்துவழி பாடு செய்தே
அர்ச்சித்தால் ஆசையெலாம் பூர்த்தி யாகும்
பக்குவமாய் விழாவெடுத்துப் பூசை செய்து
பலகாலம் பூசித்து வருகின் றோர்க்குச்
சிக்கலெல்லாம் சீக்கிரமாய் தீரச் செய்து
செல்வமொடு செல்வாக்கு மருளு வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்திதலந் தீர்த்தமெனும் மகிமை யோடு
முதிர்வுற்றாய் வேலணையிற் கோயில் கொண்டாய்
கீர்த்தியினை பெருங்குளத்து முத்துமாரி
கேட்டவரம் அத்தனையும் கொடுத்து வந்தாய்
போர்க்களத்தில் சிக்கியுயிர் மீண்டு வந்தோம்
புதுமையாய் விழா வெடுத்துச் சிறப்பிக் கின்ற
நேர்த்தியினை நிறைவேற்று கின்றோ மம்மா
நிரந்தரமாய் வாழவினி விழைகின் றோமே

கோயில் குளம் குடியிருப்பு வடிகால் வாய்க்கால்
கொண்ட சம வெளிகளனி நகரம் சோலை
பூவிமிலுக் கேற்றவா றியற்கை யாக
பொருந்துமூர் வேலணையிற் கோயில் கொண்டு
தீவினைகள் தீர்க்கின்ற தீர்த்தம், மூர்த்தி
திருக்குளத்தின் மகிமைபிர சித்த மான
தேவிபெருங் குளமுத்து மாரி அம்மை
திருவடிகள் சரணடைய பிரார்த்திப் போமே

பொங்கலோ டுற்சவங்கள் விழாக்கள் செய்தே
பூசித்தோம் வேலணையூர் முத்து மாரி
சிங்கவா கனமேறும் தாயே நீயும்
சித்துகளாற் பிரசித்தி பெற்ற தெய்வம்
எங்களையேன் இடம்பெயர வைத்தாய் மேலும்
எதிர்கால வாழ்வேனுஞ் சிறக்கச் செய்து
மங்களமாய் வாழவழி வகுத்தாய் யானால்
மனநிறைவாய் உனைவாழ்த்தி வணங்குவமே.

ஆக்கம் :

***வேலணை வைத்தியகலாநிதி சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம்***

*(இளைப்பாறிய அதிபர்)*

*121, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வினைதீர்ப்பாள் அடிபணிவோம்"

- தில்லைச்சிவன் -

1. அடியார்தம் உள்ளொளியாய் அன்புடையார் நெஞ்சமெலாம்
குடியாகக் கொண்டவர்தம் குறைநோக்கா தருள்செய்து
மிடிநோயால் நலியாமல் மூனாட்சி வாழுமிடம்
கடியாரும் பெருங்குளத்துக் கரைக்கோயில் கண்டேனே

2. செக்கர்வான் ஒளிமேனிச் சிவனாரை மதியாத
தக்கன் பெருவேள்வி தடுத்தழித்த தற்பரையே
பொக்கங்கள் போக்கிமிகு பொருள்தந்து அருளுமிடம்
மக்கள் திரள் பெருங்குளத்து மதிற்கோவில் கண்டேனே

3. யாழைப் பழித்த மொழியுமையே ஞாலங்காக்க அருள்ஞான
வேலைக்கொடுத்து முருகற்கவ் வேலன் அணைந்த வேலணையூர்
சீலத்துயர ஐங்கரனைச் சேரவிடுத்து இளங்கன்றா
போலவந்து பெருங்குளத்துப் பொன்னார் கோயில் கொண்டாயே

4. வாவியுறையும் மடவனமே வண்ணத்தமிழின் இன்னிசையே
ஆவி உறையும் நினைநாளென்று அறியாப் பேதை மடநெஞ்சைக்
காவித் திரிந்தேன் இன்றுன்னைக் கண்டேன் நெஞ்சிற் கமலமலர்
மேவுந் திருவே பெருங்குளத்தூர் முதலே முத்து மாரியம்மா

5. நெஞ்சத் தலத்தில் நினைவைத்து நேயங்கொண்டு உறவாடி
அஞ்சும் அடக்கி என்சுமையுன் அடிக்கேதந்து சுதந்திரமாய்
கஞ்சமலர்த்தாள் கைப்பற்றி கண்ணீர் மல்கக் கசிந்துருகி
கெஞ்சிக் கிளர்ந்து கூத்தாடிக் கிடக்க அருள்வாய் தாயம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பொங்குமமா வாசையினைப் பூரணைநாள் ஆக்கிய நின்
சங்கதியைக் கேட்டுன் தாளைச் சரணடைந்தேன்
சிங்கத்தி லேறிவந்து சீர்சால் பெருங்குளத்தென்
பங்கத்தை நீக்கியருள் பாலிப்பாய் பராபரியே

7. திருமுலைப்பால் சுரந்தளித்த சிவகாம சுந்தரியுன்
திருவடியே சரண் என்று தேடியிங்கு ஓடிவந்து
பெருஞ்சாந்தி காணப் பெற்றேன்இப் பேற்றினுக்கோ
இருந்தவா றென்னேயான் இன்னருளார் அம்மாளே!

8. விடஞ்சேர்ந்த கண்டன் நினை வேண்ட அருட் சக்திநீ
இடஞ்சேர்ந்தாய் என்று இயம்பக்கேட் டோடிவந்தேன்
குடமுழுக்கைக் காணவென் கோடிதவஞ் செய்தேனோ
தடமெடுத்த பெருங்குளம்வாழ் தாயே தயாபரியே

9. பிள்ளையான் சாம்பன் இங்கு பெற்றநின் திருவருளை
சொல்லுவார் சொலக்கேட்டுன் சொர்ணமலர்ப் பாதம்
அள்ளித் தொழுதம்மா அபயந்தந் தாள்கவென
வெள்ளைத் தமிழ்க் கவியால் வேண்டினேன் காத்தருள்க!

10. தேரோடும் வீதி திசை யெல்லாம் தெங்கு பனை
காரோடும் பாதைக் கதிமாற்றி மழை பொழிய
நீரோடி நீண்டு நிறைந்த பெருங்குளத்தூர்
வேரோடி நின்று வினைதீர்ப்பாள் அடிபணிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரமளிப்பாய் தாயே.....!

வரமளிப்பாய் எங்கள் பெருங்குளத்து தாயே !
கரங்கூப்பி நிற்கின்றோம் கருணை புரிவாயே
பாலித்தே எமதின்னல் காத்திடுவாய் தாயே
காலமறிந் தெங்களுக்கு கரம்கொடுப்பாய் தாயே.....!

வேலணைப் பதியினிலே குடியிருக்கும் அம்மா
வேலவனை மகனாக அரவணைத்த அம்மா
பருவமழை தந்திடுவாய் காலநிலை காத்து
பாலரெமைக் காத்திடவே அருள்மழையை ஊற்று.....!

பெருங்குளத்து தாயே ! முத்துமாரி அம்மா - உன்
பேரருளை கொட்டி பக்தர்களைக் காரு.....!
குளக்கரையில் உன்தன் கோபுரம்தான் துலங்கும்.....சுற்றி
குடியிருக்கும் மக்கள் குலங்களெல்லாம் துலங்கும்.....!

கோயில்மணி ஓசை உன்நினைப்பை ஊட்ட
கோபுரத்து கலசம் ஊரையெல்லாம் காக்க
வீதிவரும் உன்தன் திருமுகமே காட்சி
வேலணையை காக்கும் அம்மாவே ஆட்சி !

பனை, தென்னை சூழ வாழ்ந்திருக்கும் தாயே
பயிரைநம்பி வாழும் பக்தர்களின் தாயே
பயிர்செழித்து வளர பருவமழை தந்து
பக்தர்களைக் காத்து பார்போற்ற காணு.....!

வேலணைந்த பேராம் வேலணையூர் பதியாம்
வீரமுத்துமாரி விளங்கும் ஊர் பதியாம்
எல்லையெல்லாம் சூழ பக்தர் ஏற்றமுடன்வாழ
காத்தருள்வாய் தாயே.....! கடைக்கண் பாத்தருள்வாய் தாயே.....!
காத்தருள்வாய் தாயே.....! கடைக்கண் பாத்தருள்வாய் தாயே.....!

**ஓம் சக்தி ! ஓம் சக்தி !! ஓம் சக்தி !!!**

*அன்புடன்,*

***திருமதி. விக்னா பாக்கிய நாதன்***
*ஜெர்மனி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எங்கள் முத்துமாரி"

**- சிவாஜி -**

1\. கரும்புகில் கரத்தினாள் வான்
    கார்முகில் வண்ணத்தாள் பொற்
பொருப்பினிற் பிறந்து முக்கட்
    பொருள் புணர் முலையினாள் தம்
விருப்பொடு வேலணைக் கண்
    பெருங்குளக் கரையடுத்து
இருப்பிடம் கொண்ட முத்து
    மாரியை இறைஞ்சும் வாரீர்

2\. இறைஞ்சுவோர் தன்மை பார்த்து
    ஏற்றவை கொடுத்தும் அன்பின்
திறம்புரிந் திரங்கி முன்செய்
    தீய நல்வினைகள் அற்று
ஒழித்திட உணர்த்தித் தானாய்
    உள்நின்று புனிதமாக்கி
கழிந்த பல் பிறவி தோறும்
    காத்தவள் முத்துமாரி

3\. முத்து மூக்குத்தி மின்னும்
    முழு நிலா வதனியான
சக்தியும் சிவனும் மேனி
    சரிசம மாகப் பெற்றெம்
பக்தியை மகிழ்ந்து முத்து
    மாரி ஆய் பெருங்குளத்தூர்
நித்திய பூசை காண்பார்
    நிலை தனைப் பரவுவோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நாக பூசணியென்றாகி
நயினையில் கோவில் கொண்டாள்
போகமார் முலையார் தேவி
புளியங்கூடலில் மாரி ஆனாள்
வீரமா காளி என்று
விளங்கு நல்லூரில் வாழ்வாள்
பேரருள் முத்துமாரி
பெருங்குளத்தமர்ந்துளாளே

5. கேட்டவை தருவார் அன்றிக்
கேளா தனவும் தந்து
ஆட்கொளும் விருப்பத்தோடு
ஆருயிர்க் குயிராய் நின்று
வேட்ட வெம் நினைவை மாற்றி
வினை வழி ஊட்டு மன்னை
நாட்ட மாயிரமும் கொண்டாள்
நமக்கருள் முத்துமாரி

6. பரவு தண் புனல்மே லேறிப்
பாய் பெருங்குளத்தி னோரம்
கரவிலார் தம்பால் மிக்க
கருணை கூர்ந்தமர்ந்து முத்து
மாரி நம் துணை இருக்க
மரணத்துக் கஞ்ச வேண்டா
மறவியை மார்க்கண்டார்க் காய்
உதைத்த கால் உமையின் காலே

7. கடுவிடம் அமிழ்த மாக்கும்
கையிலும் மாரி கையே
அடுபகை அடக்கக் கூர் வேல்
அளித்த கை அன்னை கையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடுகுபால் பிள்ளை கீய்ந்த
முலையுமை முலையே இந்தப்
படுகிழம் எழுந்து பாடப்
பணித்ததும் அவளே மாரி

8. தேவாதி தேவ மாதர்
திருவடி நோக்கி நிற்க
மூவாத முதல்வன் தாயின்
முகம்பார்த்து முறுவல் செய்ய
ஆவா வென் றடைந்த வெங்கள்
அவதி கண்டவர்கள் நிற்க
மேவாதெம் குறைகள் தீர்த்த
மேதகை முத்துமாரி

9. எத்தவம் செய்தோ மென்று
இங்குவந் துதித்தீர் மாரி
முத்தம்மா உன்னா லன்றோ
மூண்ட போரோடு ஓடிச்
செத்தோமே சிவனே என்று
திரிந்திங்கு மீண்டு வந்தோம்
அத்தனோ பாதி எம்மை
அறிந்தன்றோ இருந்தீர் வாழி

10. பெற்றவள் கண்ணீர் கோர
பெறாத் தாய்மார் மனதுநோக
உற்றவர் பார்த்துக் கண்கள்
ஊன மென்றோரம் செல்ல
நத்துறை பெருங்குளத்து
நாயகி நயனம் தந்து
சித்தளித்து வந்தீர் அந்தச்
செய்ந் நன்றிக் குருகிறேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை முத்துமாரியம்மன் கீர்த்தனை

(i)

## பல்லவி

தேரில் வருவாளோ தேவிதெருவில் வருவாளோ
தெரிசனம் தருவாளோ அர்ச்சனை செய்வோமோ

## அனுபல்லவி

ஏறிப் புதுத்தேரில் எல்லோருக் காண
இலங்கு பெருங்குளக் கரையில் விளங்குதூஉம் - தேரில்

## சரணம்

பண்ணிய தீவினை பறந்தோடிப் போக
பாவ விமோசனம் ஏதேனும் ஆக
விண்ணப் பங்களிங்கே பற்பல செய்ய
வேண்டும் வரங்கள் அநேகம் கேட்க - தேரில்

வண்ணப் புதுத்தேரில் வந்திடச் செய்ய
வாரீரோ எல்லோரும் கூடியே செய்வோம்
பொருளான பொருள் வளரு ளல்லவோ
போகுமிடத் துக்கது துணையாகு மல்லவோ - தேரில்

வாழ்வுந் தாழ்வுமவள் வகுத்தவை யல்லவோ
வந்திடு மின்பதுன்ப மவள்தந்தவை யல்லவோ
ஏழேழ் பிறப்புமவள் கருணை யிருந்திட
இழைந்திடு வோம் புதுத்தேர் உழைத்திடுவோம் - தேரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ii)

### பல்லவி

பார்த்திருக் கின்றேன் உன்னருள் நோக்கிக்
காத்திருக் கின்றேன் கால மிதுவே

### அனுபல்லவி

பார்த்துக் கொள்வாயோ அன்றி ஏழையைப்
பராமுகம் செய்து கொள்ளு வாயோ (பார்த்திருக்)

### சரணம்

தேடி யலையாமே வாடி வருந்தாமே
நாடி வந்தெமக்கு நல்லருள் புரிந்து
சிந்தா குலம்தீர்ப்பாய் இன்னே விரும்பித்
திருவடி தந்து தரிசிக்கச் செய்வாய் (பார்த்திருக்)

எண்ணுப் அரிபிரம னிந்திராதி தேவரும்
இளைத்துக் களைத்தெங்குந் தேடியுங் காணா
வண்ணப் பெருங்குளக் கரையில் வளர்தரு
பெண்ணே யுமைமுத்து மாரியே யுன்னருள் (பார்த்திருக்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்லவி

மங்கை யொருத்தி வந்திங்கயலே வங்கியிருக்கின்றாள்
மறந்து கொள்ளாதே அவளன்பைத் துறந்துகொள்ளாதே

## அனுபல்லவி

உண்டுறங்கி நல்ல உயர்ந்த ஆடை அணிகள்
கண்டணிந்து கொண்டு நீவிர்களித்தால் போதுமா

## சரணம்

ஒவ்வொரு பேரையும் உற்று நோக்குகின்றாள்
உன்னன் பின்தரத்தை யளந்து பார்க்கின்றாள்
போலியும் மெய்மையும் புரியுமே யவட்கு .
பொல்லாங்கும் நல்லாங்கும் புரிவாள் யாவர்க்கும் (மங்கை)

மன்னு கயிலை இருந்தாள் முன்நாள்
வந்து பெருங்குளம் இருந்தாள் பின்நாள்
வையம் முதலா அண்டமெல் லாமவள்
வைத்தமன வண்ணம் வாழ்வது கண்டீர் (மங்கை)

தேரொன்று வேண்டும் ஏறி வெளிவீதி
தெரிசனம் தந்தெமை ஆண்டுகொண்டருள
பாரொன்று மக்கள் எல்லீரும் வாரீர்
படைத்திடு வோமது நம்பங்கினைக் கொடுத்தே (மங்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துமாரி கீர்த்தனை

## பல்லவி

அம்மா தாயே... முத்து மாரி
இம்மா... னிலத்தின் உயிர் மாரி

## அனுபல்லவி

பற்றைக்குள் வாழ்ந்த... பார்பதியே - ஈசன்
பாதி உடலான சதிபதியே...!
(அம்மா தாயே முத்துமாரி)

## சரணம்

நொச்சிப் பற்றைக்குள் உயிர் வாழ்ந்தாய் - பக்தர்
நோய்நொடி தீர்ந்திட அருள் வார்த்தாய்...!
ஆயிரம் கண் கொண்ட அருள்நிதியே...
ஆனந்த அருள் மழை தருபவளே...!
(அம்மா தாயே முத்துமாரி)

கட்ட மாதன் கண் பட்டதனால்
நெடுங்கேணி(க்) கரை கோவில் கொண்டாயே...!
பட்ட துயரில் மனம் நொந்தினால் - அந்த
பக்தன் காசிலிங்கம் நெஞ்சு புகுந்தாயே...!
(அம்மா தாயே முத்துமாரி)

பெருங்குளத் தென் கரை அமர்ந்தாயே
பெரும் பக்தர்படை சூழ வாழ்ந்தாயே...!
குண்டின் ஒலியில் பூசை கண்டாயே - இன்றுயர்
கோபுரம் கண்டுதான் மகிழ்ந்தாயே...!
(அம்மா தாயே முத்துமாரி)

சுபம்

***கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா***
*டென்மார்க்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துமாரி கீர்த்தனை

## பல்லவி

விடுதலை வேள்வி நடக்குதம்மா - உன்
வெற்றிக்கு கரம்தா...! காளியம்மா...!

## அனுபல்லவி

வீரர்கள் உள்ளத்து - வலுவாக
வீற்றிருதாயே...! வெற்றிக் கொடியாக
(விடுதலை வேள்வி நடக்குதம்மா)

## சரணம்

வா...னரச் சேனையாய் எதிரிபடை
வந்து குவியுது உன் மண்ணில்
நாளைக்கு உன் மண் அவன்கையில்
நானதைத் தடுத்திட வரம் தந்திடம்மா...!
(விடுதலை வேள்வி நடக்குதம்மா)

தர்மத்தைக் காத்திட முருகனுக்கு - அன்று
கரமது கொடுத்தாய்...! வெற்றிவேலாக - உன்
சத்தியம் காத்திடும் உன்படைக்கு - தாயே
சக்தியைத் தந்திடு சக்திவேலாக...!
(விடுதலை வேள்வி நடக்குதம்மா)

சத்தியப் போரென உலகம் சொல்லுது
சத்தியம் காத்திடும் வழியும் செல்லுது
புத்தன் படையது புறத்தே தள்ளுது
புத்தி கெட்டுத்தான் சத்தியம் கொல்லுது
(விடுதலை வேள்வி நடக்குதம்மா)

***கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா***
*டென்மார்க்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பெருங்குளத்தம்மையும் பெருங்கலைச் சுடர்களும்

## பதினான்கு சீர் கழில்நெடில் ஆசிரிய விருத்தம்

1. ஈரா யிரத்துடன் ஐந்நூறு ஆண்டுகட் (கு)
அதிகமாம் கால மதிலே
இரும்பெரும் நாகரிகத் துறையுள்வே லணையும்
இருந்ததாய் அகழ்வு செய்தோர்
ஆராய்ந் தெடுத்தன அறிஞர்கள் ஆய்விலே
அறிவித்து நிற்றல் கண்டார்
அம்மைபெரும் குளமுத்து மாரியின் ஆலயம்
ஆங்குவட திசையின் பாங்கர்
சீராய் அமைந்துமுக் காலவே ளைப்பூசை
சிறப்புற நடந்த தென்று
செப்புதல் கர்ணபரம் பரையாக ஒலிப்பதை
சிந்தைசெய் தாய்தல் வேண்டும்
ஓராத அந்நியர் இடித்தொழித் தனரெனும்
ஓசையும் ஒழிய வில்லை
உத்தம பக்தர்கள் அறிஞர்கள் உளங்கொண்டு
உண்மையை ஆய்ந்தறி வார்களே

2. அந்நியர் ஆட்சியால் அழிந்ததெம் ஆகமம்
அருந்தமிழ் நாக ரிகமும்
ஆங்காங்கே அலர்ந்தன அமெரிக்க மிஷனறி
ஆரம்பப் பாட சாலை.
இந்நிலை சிவநெறிக் கிடையூறு பலதர
எழுந்தன சைவப் பள்ளிகள்
இவ்வாறாய்ச் சைவவித்யா விருத்திக்காம சங்கமது
ஏற்றது யாழ்குடா நாட்டிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தபல பள்ளிகளில் சைவநெறி வளரவே
தமிழும்செந் தமிழாய் வளர்ந்து
தகமையுற ஆங்கிலப் பள்ளிகளு மேவர
தக்கோர்கள் தீவ கத்தில்
முந்துதரம் உயர்மகா வித்தியா லயம்பல
மொய்ம்புறச் சேவை செய்தார்
மூதறிஞ் ஞர்துரை சுவாமிவே லணையூரில்
மத்யமகா வித்தி யாலயம்
முகிழ்த்தெழச் செய்தமை தீவகம் களுக்கான
முதன்மையைத் தந்த தாமே

3. வேலணை மத்திய மகாவித்தி யாலய
விளக்கொளிர் கலைக்க திர்கள்
விறலுயர் ஏழுதீம் பொழில்களாம் தீவகம்
விளக்கிமே லோங்கப் பொதுமை
சாலவே தாபித்த கலைக்கோவில் புகுந்தருட்
சந்நிதா னமது தித்தே
சன்மானம் பெற்றசிலர் கூடவே பெருந்தொகைச்
சற்புத்ர மாண வர்கள்
காலாதி காலமாய்க் கலைகள்விஞ் ஞானமவை
கற்றுயர்ந் துத்தி யோகம்
கணக்காளர் வைத்தியக் கலாநிதி எனப்பல
கனமுயர் பதவி களிலே
மேலாண்மை உறஉச்சி மோந்துகலை அளித்ததாய்
மென்மலர்ப் பாதம் ஏத்தி
மேற்குல கங்களில் வாழ்ந்துமலர்த் தாள்சிரம்
மேலெடுத் தேத்தும் அவரே

4. ஆதியில் ஆலயம் கொண்டெழுந் தம்பிகை
அமர்ந்தனள் வேலணைப் பதியில்
அருகினில் மகாவித்தி யாலயம் நுண்கலை
அள்ளியள் ளிக்கொ டுக்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதிலவ் வாலயம் இலங்கிட அம்மையவள்
ஏடெழு திக்கொ டுக்க
இப்பொழு தது நூற்றுக் கணக்கான சிறார்களுக் (கு)
ஏடுகொடுத் துவக்க அவர்கள்
சோதியொளிர் கலைகளின் சுடரெறித் திலங்கிடச்
சூழ்ந்துபல தேசங் களிலே
சுவர்ணமணி மக்களெனச் சேர்ந்துபல துறைகளில்
சிறந்தொளிர் கீர்த்தி பெற்றுக்
கோதிலாக் குரிசில்கள் எனக்கீர்த்தி கொள்ளவே
கூர்த்தகலை அளித்த தாய்த்தான்
குவித்தகரத் துடனேத்தி என்றென்றும் போற்றுதல்
கொள்ளுமணி மாணிக் கங்களே

5. அம்மைதன் அருட்சுடர் ஒளியிலே மகாவித்தி
ஆலயம் கலையில் ஒளிர
ஆங்குகலை அமிழ்துணும் மாணவர் அம்மைசெம்
அம்புயப் பாதம் ஏந்தி
செம்மையொளிர் அறிவார்ந்த சிறப்புயர் அறிஞராய்
செல்லுமிடம் ஏற்று வக்கக்
சேய்மணிக ளெனப்பெற்ற தாயுளம் உவகையுறு
செந்நெறி ஒழுகி வாழும்
நும்மையித் தகவுற நூல்பல உளத்துற
ஓயாது ஊட்டி வந்த
நுவலரிய கலைத்தெய்வம் நும்சிந்தை கொளஅவள்
நூபுரத் தாள்கள் போற்றி
எம்மையும் நினைவினில் எங்குசென் றாலுமவள்
இருக்கைகொள இன்ப மாக
ஏற்பன அர்ச்சித்தே இலங்கிட அம்மையருள்
இனிதுற மகார்கள் வாழ்வீர்


(எம்மையும் = எக்காலமும்)

ஆக்கியோன் :

*ச. குமரேசையா அவர்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேலணை பெருங்குள முத்துமாரி அம்மை திருவிரட்டை மணிமாலை

## வெண்பா

1. முத்துமாரித் தாய்த்தெய்வம் முன்பிருந்தே வேலணையைச்
சொத்தாகக் கொண்டதவச சோதியருள் - பக்தர்கள்
பாவவினை போக்கிப் பரகதியாம் இன்பமுறச்
சேவகஞ்செய் வாளாம் சிறப்பு.

## கட்டளைக் கலித்துறை

2. சிந்தும் அருட்சுடர் திக்கெலாம் தேம்பத் திருத்தலத்தில்
தந்தாள் கருணைக் கடலது தோய்ந்து களிப்புறத்தாய்
வந்தாள் திருப்பத வண்டா மரைகள் வழியுமருட்
செய்தேன் சுரக்கும் சுரபி பெருங்குளச் சுந்தரிக்கே

3. சுந்தரியாள் தேன்பிறையைச் செஞ்சடைமேல் சூடுபிரான்
பந்தமறும் செம்பாதி பாரினிலே - எந்தம்மை
ஆட்சிசெய்து காத்தளித்தே ஆற்றா வினைபோக்கி
மாட்சியருள் தெய்வ மணி

4. மணிமுத்தம் மாணிக்கம் மாசிலாப் பொன்நிலா மாதுமையாள்
அணிதத்தும் ஆலயம் யாமறி யாக்காலம் ஆட்சிகொண்டு
பணிமுற்றும் அன்பரின் பாவங்கள் போக்கும் பராபரித்தாள்
தணியாத பற்றால் தொழுதெழல் ஊர்மா தவப்பயனே

5. தவத்திற்கும் காரணியே தாரணியில் வாழ்க்கை
நவமுறக் காரணியாம் நற்றாய் - அவனிதனில்
பூக்கும் கலைகள் புதுமைகென ஆக்கங்கள்
தேக்குமவள் தாள்தோத் திரம்

6. திறன் தரும் அபிராமியை ஏத்தும் மணம் தரும் சிந்தையிலே
உறப்பணிந் தேத்தும்சீர் உத்தம அன்பர்க் கொருபொழுதும்
அறவே அணுகாவாம் அல்லல்கள் இந்த அவனியிலே
மறவாள் அவர்களை ஒருகண மேனுமெம் மாதுமையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மாயவனார்க் கோர்தங்கை மாமலையாள் வேந்தனுக்கு
ஆயலனோர் செல்வி அரனாரே - நேயமுடன்
ஏத்தும் துணைவிமிந்த ஏழேழ் உலகமெலாம்
காத்தளிக்கும் தெய்வக் கனி

8. கடன்பல உண்டெங்கள் கற்பகத் தாய்ச்செங் கமலபதம்
தடமென் மலரிட்டுத் தாழ்ந்து வணங்கும் தலம்புதுக்கிப்
படமுடி யாத்துயர் பட்டாலும் நின்பணி எங்கடனாய்த்
தொடர அருளுக தோன்றாத் துணைத்தாயெம் தோத்திரமே

9. தோத்திரங்கள் யாம்செய் தொழில்கள் தொடர்பொழுது
மாத்திரமா ஊணுறக்க மாம்பொழுதும் - காத்திரமாய்
எண்ணி இறைஞ்சும் இதயமே எப்பொழுதும்
நண்ணும் வரமெமக்கு நல்கு

10. நல்குவாய் நான்மறை நாயகி நாவொடுமாய்ச்
சொல்லித் துதிக்கும் திருப்பதம் எம்சிரஞ் சேர்ந்தொளிர
அல்லும் பகலும் அகலாது நெஞ்சேயுன் ஆலயமாம்
வல்லமை கொள்ள வழங்கினோம் அம்மையெம் வாழ்க்கையனே

11. வானவர்கள் மண்ணவர்கள் மற்றுலகத் தோரெல்லாம்
தானவர்தம் சென்னிநின் தாமரைத்தாள் - மோனநிலை
கொண்டே உளத்திருத்திக்கூடும் ஒளிவடிவில்
கண்டுவப்பர் தாயாள் கவின்

12. கண்ணுதற் காமசக்தி கற்பனைக் கப்பால் கரையிலதாக
நண்ண முடியாது ஞாலத்தும் அப்பாலும் நாயகியாய்க்
கண்ணிற் படாதவள் என்னேஎம் மூரில் கலகலப்பாய்
அண்மைணி லுந்தான் அதிசயம் காட்டி அமர்ந்தவளே

13. அமர்ந்தவளே ஆதியிலே ஆலயங்கொண் டெம்மைச்
சுமந்தவளே நான்காம் சுருதி - விமர்ச்சிக்கும்
ஆதிசக்தி முத்துமாரி அம்மையாள் ஞானசக்தி
சோதியெமக் காக்கும் சுகம்

14. சுகம்தரும் அன்புயர் சிந்தை யடியாரைச் சூழவந்து
நிகழும் பழவினை நீக்கி அருளுமெம் நித்திலத்தாய்த்
தகவார் திருப்பதத் தாமரை கூம்பாது தண்தடமாம்
அகத்திலைக் காலும் அலரவே காப்பவர்க் காமருளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. ஆகும் அருள்பெற்றே அன்னைதிருத் தாள்நிழற்கீழ்
ஏகும் பெரும்புண்யம் எம்பிறவி - ஈருடயன்
என்றே நினைவுசெயல் எல்லாம் அவளாக
நின்றே நிறைவுறுதல் நேர்

16. நேரிழை கண்ணாதல் நேர்ந்த திருமா நிலவுமுத்தப்
பேரியல மாரியே பெய்தருள் ஊரில் பெருக்கெடுத்துச்
சீரினைப் பூத்துச் செழிப்புற வேசெயச் சிந்தையிலே
கோரியெந் நேரமும் கோகிலத் தாளன்பர் கூப்புவரே

17. கூப்பும் கரங்களுள்ளே குங்குமத்தாய் நின்னருளே
காப்பளிக்கச் சேர்ந்திருக்கம் காலமெல்லாம் - கூப்பிடவே
ஓடிவரும் தாயே ஊர்மக்கள் உன்முன்றில்
நாடித் தொழுதெழுவர் நன்கு

18. நன்கெழுந் தாளெங்கள் நாயகித் தெய்வமே நாட்களெல்லாம்
தென்தமிழ் ஊற்றாகத் தேன்சொரி வேண்டுதல் தூயபக்தி
அன்பர்கள் நெஞ்சில் அமர்ந்தே அலையலை யாய்வரினும்
இன்பெழத் தந்திரு வுள்ளம் குளிர்கொள ஏற்பவளே

19. ஏற்பாயெம் விண்ணப்பம் இன்னலெமைச் சூழ்ந்துமே
ஆற்றல் இழக்கச்செய் அப்பொழுதும் - போற்றிசெய்து
பொன்மலர்த்தாள் எங்கள் புகலெனவே. நெஞ்சேத்த
இன்னலிடர் போகும் இரிந்து

20. இரிந்துபோம் நெஞ்சத்தை இல்லிட மாயேற்றே எங்களையே
வரிந்துகொண் டேதுன்பம் வாரி வழங்குந்தொல் வல்வினைகள்
பரிந்தென்றும் நின்பதப் பங்கயம் போற்றுமோர் பக்தியினால்
சொரிந்தெழும் கண்ணீரில் தோய்ந்தே கரைந்துபோம் துன்பிலையே

21. துன்பம் துயரங்கள் தூர்த்துளமே தூய்தாக
அன்புநிலை கொண்டம்மை ஆலயமாய் - இன்புறவே
ஈந்தே அறநெறியில் எப்பொழுதும் வாழுமன்பர்க்கு
ஆந்துயர்கள் ஒன்றுமில்லை ஆம்

22. ஆதி மகாசக்தி அந்தமில் லாதவள் ஆரணத்துட்
சோதி ஒளிரும் சிவசக்தி மாரி சுரந்தபக்தி
கோதி எடுத்துக் குளித்ததே ஆகிநாம் கோகிலத்தாள்
மீதில் கலந்துபே ரின்பம் பெறுதல் முழுநிறைவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. முழுநிறைவு நாங்கூட முப்பொழுதும் ஏத்தி
அழுதழுதே வேண்டுதலுக் கப்பால் - எழும்பொழுதும்
நாமியங்கும் போதிலும் நம்முளத்தில் அம்மைபதம்
ஓமியம்மி ஏத்தல் ஒழுங்கு

24. ஒவ்வோர் கணத்துமெம் உள்ளத் தொளிதந் தொளிர்விளக்காய்
கவ்வும்பேர் ஐம்பொறிக் காரிருள் நீங்கக் கதிரெறித்து
செவ்வனே நாமேத்தும் செந்தாள் துணையாகச் செந்நெறிக்கண்
திவ்ய நிலைகொள் திறந்தரு வாயெம் திருவுமையே

25. திரையெறிந்தே தேசமெல்லாம் திக்கெல்லாம் தேம்பிக்
கரைபுரளு தென்பர் கருணை - உரைசெயலால்
அள்ளிச் சுவைக்க அறிகிலேம் எம்மையே
தள்ளா தறியவைப்பாய் தாய்

26. தாய்த்தெய்வம் எம்முட் தலங்கொண்ட தற்பரை தாக்கியெமைத்
தேய்நிலை கொள்ளச்செய் தீவினை போத்தித் திருவருளால்
சேய்நிலை ஆக்கிச் சிறப்புச்செய் தெய்வமே செந்நெறியில்
போய்நிலை கொள்ளும் பெருமை தருவாயெம் போற்றிகொளே

27. போற்றுகின்றோம் எம்முளத்தில் போதெல்லாம் பத்தியொளிர்ந்து
ஆற்றும் தியானத்தில் ஆழ்ந்திருந்து - தோற்றுமருட்
பொன்னொளியே உள்ளத்தில் பூத்தொளிர்ந்தே மாசகற்ற
அன்னைதிரு வுள்ளமன்பர்க் காம்

28. ஆக்கை இயக்கம்நின் ஆலயச் சேவை அகநினைவின்
போக்கை நினதுதாள் போற்றப் பணித்துப் புலனடக்கம்
காக்க அருள்வாய் கருணைக் கடல்தாயே கற்பகத்தின்
பூக்கை நிறைத்துப் பொழிவர்புத் தேளிரும் பூம்பதத்தே

29. பூம்பதங்கள் தூக்கிவந்தெம் பின்புமாய் முன்புமாய்
ஆம்துணையாய் அம்மைவரல் ஏனறியேம் - கூம்பாத
இவ்வுலகப் பற்றுள் இருந்தால்நாம் வந்தபயன்
எவ்வாறாய் ஆமோதான் ஈங்கு

30. ஈங்கெமை ஆள்கின்றாய் இன்னல்கள் போக்க இராப்பகலாய்த்
தூங்கா திருக்கின்றாய் துர்ச்சனர் நாங்கள் துணைப்பதங்கள்
தாங்கித் தலைக்கொண்டு தக்கநன் பக்தித் தருவுறவெம்
தீங்குகள் போக்கித் தொழும்பராய் வாழும் திறமருளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. திறமருள்வாள் எங்களது தீவினைகள் போக்கிப்
பிறவிகெடப் பக்திநெறிப் பீடே - உறத்தருவாள்
அம்மை திருப்பதங்கள் அஞ்சலித்தே ஏத்துதலே
இம்மையிங்கு வாழவந்த ஏது

32. ஏதுவாம் அஞ்சலி ஈகின்ற பக்தி இறைபதத்தில்
தாதுவாய்க் கூட்டும் தகவுண்டே அ∴தால்நாம் தாய்நினைவே
பாதுகாப் பாகிப் பழவினை போக்கும் பரிசுணர்ந்தெப்
போதும் மலர்ப்பதம் போற்றியே வாழ்தல் புகலெமக்கே

33. புரியுஞ் செயலெல்லாம் பொற்சிலம் பார்க்கும்
விரியுஞ்செந் தாமரைத்தாள் வேட்டுப் - பரிசொளிரும்
பக்திமே லிட்டொளிரும் பான்மை விளையுமெனில்
சக்தி எமைப்புரப்பாள் சார்ந்து

34. சாலும் பெரும்பக்திச் சன்மார்க்கத் தைத்தாயே தாரணியில்
மேலுமாம் ஞானயோ கங்களில் மேலாய்மேன் மேலுகப்பால்
கோலும் துயர்களுட் கூட்டி வருந்தியே குந்தகங்கள்
காலும் வினைகள் கரைந்துபோம் பக்திக் கனிவினிலே

35. கனிந்துகும் பக்திக் களஞ்சியரே ஆகின்
கனிமழலைச் சேயருளம் கண்டு - நனியன்பாய்
நாங்கள்காண் கின்றஇந்த ஞாலத்தோர் பற்றுயர்ந்த
பாங்கினர் ஆவர் பயின்று

36. பயில்கின்ற பத்தியால் பாதாம் புயம்சிரம் பற்றியேந்த
உயில்கொண் டெழுதிய வாறாய் உளமதில் ஊன்றியூக்க
அயில்கொண் டெழுதிய வாறாய் அழியா தலர்ந்திருந்து
துயில்கொளும் போதும் துதிகொண் டிருக்கும் தொடர்பருளே

37. தொழும்புகள் போற்றிச்செய் தூய்தான சோபாய்
அழும்பொழுது ஓடிவந்தே ஆற்றி - விழுத்துணைகள்
தந்தருளும் நின்மலர்த்தாள் தாழ்ந்து வணங்கவே
சந்ததமும் தூயவுளம் தா

38. தாங்கும்பொன் னார்மேனி தண்பிறை செஞ்சடை தாவுமேறே
ஓங்கும்சீர் வாகனமாய் ஓம்நம என்று ஒலிநடுவண்
பாங்காய் இருக்கும் பவளக்குன் றின்னிடப் பாகமதில்
தேங்குமோர் நீலக் கொடியாய்ப்படருஞ்சீர்த் தேவியளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. தேவரிமை யார்கண்கள் தேவிதாள் ஏந்துதற்காய்ப்
பாவவினை சேர்த்ததெமைப்பாரினிலே - நோவதென்ன
எப்பிறப்பும் ஈயாதே எம்தாயே என்றென்றே
எப்பொழுதும் கேட்போம் இரந்து

40. இரக்கின்றோம் என்றுமே ஏத்திநின் பொற்பதம் எம்முளத்தில்
பரக்கின்ற பேரருள் பாய்ச்சி மனமிருட் பான்மைகெடக்
கரக்கின்ற துர்க்குணம் கால்பறிந் தேபோகக் காலமெலாம்
சுரக்கின்ற பக்தி துளும்பும் நிலைதரத் தோத்திரமே

41. தோத்திரங்கள் எப்பொழுதும் தூய்மையுளம் நின்னருள்கொள்
பாத்திரமாய் நன்கொளிரும் பான்மையருள் - நேத்திரங்கள்
நின்பதமே பார்த்துவக்க நித்தியமாய் எம்மையெலாம்
பொன்மகவர் ஆக்கல் பொறுப்பு

42. பொறுப்புப் பலவாய்ப் பிறவிகள் தோறும் பொருப்பளவாய்
நிறுத்திய தீவினை நல்வினை யாமிவை நேர்நிலையாய்
உறுதிகொள்வோர்கள் உலகப்பற் றில்லா தொழிந்துகொளல்
அறுதியிட் டிந்நிலை ஆதற்கே அம்மைதாட் கஞ்சலியே

43. அறநெறியில் செல்லல் அகந்தூய்மை ஆக்கல்
திறமெல்லாம் தேவிதிருத் தொண்டே - உறச்செயலாம்
எண்ணமெலாம் எம்தாய்த்தாள் ஏத்தியே போற்றுதல்
தண்ணளியாய் ஈயவேண்டு தல்

44. தண்ணளி நெஞ்சம் தருவாய் அதுபோதும் தாயவளே
எண்ணள வில்லா இடர்தரும் பாவம் எமையணுகா
வண்ணம் தடுத்திங்கே வாவும் பெரும்பக்தி வாழ்வளிக்க
விண்ணவ ருங்காண வேட்கும் மலர்ப்பதம் வேண்டுமதே

45. வேண்டா தனவெல்லாம் வேரழிந் தேமறையும்
ஈண்டு பிறர்தமக்கே எள்ளளவும் - காண்காத
தீங்குசெயா வாழ்வுத் திறந்தருமத் தண்ணளியைத்
பாங்காய்க்கேட் கின்றோம் பணிந்து

46. பணிகின்றோம் அம்மையுன் பங்கயப் பாதம் பகலிரவாய்த்
தணிகின்றி லேமருள் தண்ணளி யுள்ளம் தராததனால்
மணிகுன்றாய் கைலையின் மன்னவன் சேர வருகைதந்து
கணியுரும் மக்கள்யாம் காருண்ய மாகக் கடைக்கணித்தே

47. கன்னல் நறுந்தேன் கதலிக் கனியுடன்
நன்னல் பலாமா நயந்தளித்தே - முன்னமே
தெள்ளமிழ்தம் தித்திக்கும் தென்தமி ழூற்பராவி
அள்ளவருள் வாய்தண் ணளி

48. அருள்வாய் அகிலாண்ட ஈஸ்வரி அம்மை அனல்திருக்கை
இருள்வாய் இலாதொளிர் ஏந்துகை ஈசன் இடமமர்ந்தாய்
மருள்வாய் இலாது மனந்தூய்மை ஆக்கி மயக்கமறத்
தெருள்வாய் உளமாய்த் தெவிட்டாத தண்ணளி தேர்ந்தருளே

49. தேவியே நீ எம்மையீன்ற தெய்வத்தாய் நீயிருக்கப்
பாவிகள் அல்லநாம் பாரினிலே - தாவியெழும்
சிந்தனையும் செய்தொழிலும் சீவியமும் எவ்வுயிர்க்கும்
சந்ததம்துன் பின்றித் தவிர்

50. தந்தருள் பொன்னார்நின் தாள்களெம் நெஞ்சில் தலையளிக்க
வந்தருள்
எந்தம தாஞ்சொத்து எம்மம்மை அல்லாலீமற் றேதுமில்லை
பந்தம் அறவருள் பார்பதித் தாயே பராபரியே

51. பராபரியெம் பால்நிலவே பாரீன்ற மாதா
தராததொன்று மில்லையெங்கள் தாயே - இராப்பகலாய்
அய்யையென் றேத்தி அகத்துச்செந் தாள்பதிக்கும்
மொய்ம்பருள்வாய் நீலமணி முத்து

**ஓம் சக்தி ஓம்**

இரட்டைமணிமாலை முற்றும்.

ஆக்கியோன் :

***ச. குமரேசையா அவர்கள்***

*முன்னாள் அதிபர் - நாகேஸ்வரி வித்தியாலயம் சரவணை*

*கனடா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைப்பாடல்

# அம்பாள் கீர்த்தனை பாடல்

## பல்லவி

பெருங்குளம் முத்து மாரியை நம்பு
வருந்துயர் எல்லாம் தந்திடும் தெம்பு

## அனுபல்லவி

வந்திட்ட துயருக்கு வழிதந்து துடைப்பாள்
வருகின்ற துயருக்கு கரந்தந்து தடுப்பாள் (பெருங்குளம்)

## சரணம்

அலைகடல் துரும்பாய் அலைந்திட்ட எனக்கு
படகதாய் வந்து கரமது கொடுத்தவள்...!
கரையது தெரிந்திட ஒளியது கொண்ட
கலங்கரை விளக்காய் துணையது நின்றவள்...! (பெருங்குளம்)
கரையது சேர்தவன் கடமையை நினைத்திட - நெஞ்சு

சுமையது குறைத்து துணிவதாய் நின்றவள்...!
சிங்கத்தில் இருந்து சிரித்தபடி அன்னை
சக்கரம் சுழற்றிடும் சங்கரி தாயிவள் (பெருங்குளம்)

கட்ட மாதனின் கண்விழி பட்டவள் - பக்தர்
பட்டிடும் துயருக்கு பணிவிடை செய்பவள்
சக்தியெனும் கோடி சக்தியாய் வாழ்பவள் - இவள்
சங்கரன் பதியாய் உலகத்தை ஆள்பவள் (பெருங்குளம்)

***கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா***
டென்மார்க்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமுத்துமாரி அன்னை
## அந்தாதி.....

புலம் பெயர்ந்து வந்தாலும் ஊரினிலே எம்முடைய
நலம் பெயர்ந்து போகாமல் நல்லபடி காக்கவெனத்
தலங்கொண்டு பெருங்குளத்து கரையோரம் கார்க்கின்ற
குலம் விளங்கு கோமகளே குங்குமத்தின் நாயகியே

நாயகியாய் வீற்றிருந்து நன்மையெல்லாம் எமக்களித்து
மாயமான உலகினிலே மங்களங்கள் பல சேர்த்துத்
தாயுமாய் நின்றருளித் தாங்கியெம் துன்பமெல்லாம்
மாயமாய் மறைந்திடவே அருள்புரியும் முத்துமாரியம்மா.

அம்மா என்னுமுன்னே அவலங்க ளனைத்துமே
எம்மா வளவெனிலும் எமைவிட்டு ஏகிவிடக்
கைமாறு கருதாமற் கடிதே கருணைசெய்யும்
எம்மா தவப் பயனே எம்மினிய தாய்வடிவே.

ஆதிசிவன் பாதடியில் அமர்ந்திருக்கும் உத்தமியே
ஆடிப்பூர நாளதனில் அலங்காரம் காண்பவளே.....!
தீமிறங்கி நான்னடக்க ஓடும்நீராக காப்பவளே
தீராத நோய்களையே தீர்த்து வைக்கும் தாயாரே.

கொற்றவையாய் வீற்றிருந்து கோதாட்டி எமையிங்கு
பற்றியுள்ள பாவமெல்லாம் வாரிவழிந்தோட வைப்பாய்
கற்றவர்கள் நாளுமிங்கு காதலினால் கவிபாட
பெற்றவளே பெண்வடிவில் பெருந்தகை ஆனவளே.

ஆனவளே உலகமெலாம் ஆதியுமாய் அந்தமுமாய்த்
தானமெனத் தண்ணளியைத் தரணியெலாந் தருபவளே.....!
ஊனமென ஒன்றுண்டோ உன்னழகில் உளமிழந்து
பானமெனப் பருகிநிற்கும் பக்தருக் கிவ்வுலகில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலே கண்கண்ட ஒருதெய்வம் நீயன்றோ
பலமுறை வலம்வந்து பண்பாடி வணங்கிவர
தலமொன்றாய் பெருங்குள தென்கரை அமர்ந்தவளே
வலம்வரும் தொண்டருக்கு வாரியருள் தருபவளே.

நிறைந்தவளே நினைவெல்லாம் நீள்புவியில் எம்பிறப்பை
குறைத்திடவே அருள்புரியும் குன்றின் மணிவிளக்கே
மறைந்திடவே மலம்மூன்றும் மண்ணுலகில் இறங்கிவந்த
இறைத்திருவே எமையீன்ற வேலணையூர் அன்னையளே.

வாழ்வினுடை வசந்தமே வண்டாடும் சுரிகுழலே
தாழ்சடையான் சக்தியாய்த் தாரமாய் ஆனவளே
ஏழ்மையிலும் உனைநினைத் துரிகிநிற்கு மன்பரின்
தாழ்வெல்லாந் தீர்த்துநிற்கும் தாயே பெருநிதியே.

நிதியெல்லா மிருந்தாலும் நின்கருணை நிதியின்றி
கதியொன் றுண்டாமோ கருணையம்மா மாரியளே
வேலணையூர்ப் பதியமைந்த பேர்முத்து மாரியளே
பணிந்திட்டோம் பாதம் காலமெல்லாம் கதிநீயே.....!

**ஓம் சக்தி ! ஓம் சக்தி ! ! ஓம் சக்தி ! ! !**

மனதை அடக்கி உள்ளத்தை ஒருமுகப்படுத்துதல்,
வேதம் ஓதுவதற்கும் வேள்வி செய்வதற்கும் ஒப்பாகும்.

*- தோந்ததீபம் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிடுதின்னி பிள்ளையாரே.....!
# காத்தருள வேண்டுகின்றோம்

வேலணையின் தவிடுதின்னி
தேடிவந் தமர்தவரே.....
காலனையும் காக்கவைக்கும்
கஜமுகத்து நாயகரே.....!

வேழமுகம் கொண்டு நின்று
வேண்டும் வரம் தருபவரே.....!
பாலமுது படைப்ப வர்க்கு
பாவமெல்லாம் தீர்ப்பவரே.....!

பெருங் குளத்தாள் மகனாக
பேரருளை தருபவரே.....
பேழ வயிறு கொண்ட
பெருச்சாளி வாகனரே.....!

பழிகள் எலாம் களைந்திடவே - எம்
பாவங்களைத் தான் அகற்றி
வழியொன்றை எந்தனுக்கு
வையகத்தில் தருபவரே.....!

அரசமரத்தடியில் அமர்திருந்த நாயகரே
அன்னை நல்லதங்கம் பெரும்பணியில்
கோயில் கொண்ட பிள்ளையாரே
உன்னருளை வேண்டுகின்றோம் தந்தருவாய் விநாயகரே.....!

வீரசக்தி விநாயகரே விக்கினங்கள் தீர்ப்பவரே
ஈரமுடன் தாழ்பணிந்தோம் நல்லபடிகாத்திடுவாய்
நம்பிக்கை தான்வைத்து நான்தொட்டபணிசிறக்க
தும்பிக்கைதான் நீட்டிதுலங்கிடவே செய்திடுவாய்

- **வேலணையூர் பொன்னண்ணா** -
டென்மார்க்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்படை ஐயனார் பாடல்
## ஐயப்பா அம்பிகையின் கையப்பா.....!

சீர்கொண்ட வேலணையின் தென்திசைக் கோடியிலே
பேரலைகள் கொண்ட பெருங்கடலின் அருகினிலே
பேராலம் மரத்தின்கீழ் பெரும்படை தானும்கொண்டு
பேரருள் சுரக்குமெங்கள் பெருமானே ஐயப்பா

பக்தர்கள் படைகொண்ட பரம்பொருளே ஐயப்பா
பாரா முகமேனோ பார்வதியின் கையப்பா
பாலகன் நானுனைத் தினம்வேண்டியே நிற்கின்றேன்
பறந்தோடி வந்தென்னைக் காத்தருள்வாய் ஐயப்பா

என்பணி உன்கடன் எல்லாமே உன்னருள்
பார்வதி பாலகா பரமசிவன் புத்திரா
கந்தனின் அண்ணனே.....! கணபதியின் சோதரா.....!
மாயனார் மருகனே மறந்திடா தோடிவா.....! ஐயப்பா.....!!

- வேலணையூர் பொன்னண்ணா -
டென்மார்க்.

நம் கையினால் நிகழும் பிழைகளை அவ்வப்போது திருத்திக்கொண்டு விடவேண்டும்.
நேற்றுச் செய்த பிழை இன்று மீண்டும் நிகழாமலும், இன்று செய்த பிழை நாளை நேராமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

*- வினோபா -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பகவல்லி

இசைப்பாடல்

கற்பக வல்லியின் பொற்பதங்கள் பிடித்து
நற்கதி அருள்வாயம்மா.....
பற்பலரும் போற்றும் பதிமயிலா புவியில்
சிற்பம் நிறைந்த உயிர் சிங்கார கோவில் கொண்ட
(கற்பக வல்லியின்)

நீ இந்த வேளைதனில் சேயே எனை மறந்தால்
நானிந்த மானிலத்தில் நாடுதல் யாரிடமோ....?
ஏன் இந்த மௌனமம்மா ஏழை எனக்கருள
ஆனந்த பைரவியே ஆதரித் தாளுமம்மா
(கற்பக வல்லியின்)

எல்லோர்க்கும் இன்பங்கள் எழிலாய் இரங்கியென்றும்
நல்லாக்கி வைத்திடும் நாயகியே.....! நித்தியகல்யாணியே !
காபாலியே ! காதல் புரியும் இந்த உல்லாசியே !
உமா..... உனை நம்பினேன் அம்மா
(கற்பக வல்லியின்)

நாகேஸ்வரி நீயே நம்பிடும் எனைக் காப்பாய்
பாகேஸ்வரி மாயே வாராய் இதுதருணம்
பாகேஸ்ஸ்ரீ தாயே பார்வதியே இந்த
லோகேஸ்வரி நீயே உலகினில் துணையம்மா !
(கற்பக வல்லியின்)

அஞ்சனை மையிடும் அம்பிகை எம்பிரான்
கொஞ்சிக் குலவிடும் வஞ்சியே, உன்னிடம்
தஞ்சமென அடைந்தேன் தாயே உன் சேய்நான்
ரஞ்சனியே ரட்சிப்பாய் கெஞ்சுகின்றேன் அம்மா.....!
(கற்பக வல்லியின்)

*மகாவித்துவான்*
***மா. த. ந. வீரமணிஐயர்***
*இணுவில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பா பாட்டு

பொய் சொல்லக் கூடாது பாப்பா - என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா
தெய்வம் நமக்குத் துணை பாப்பா - ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா

பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நீ
பயங் கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா

வேதமுடைய திந்த நாடு - நல்ல
வீரர் பிறந்த திந்த நாடு
சேத மில்லாத ஹிந்துஸ்தானம் - இதைத்
தெய்வ மென்று கும்பிடடி பாப்பா

சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்தமதி, கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும் - இது
வாழும் முறைமையடி பாப்பா.

- *பாரதியார்* -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணைத் திருநாடு

**எடுப்பு**

வேலணைத் திரு... நாடு....... எங்கள் வேலணைத் திருநாடு.....

**தொடுப்பு**

வீரவாலிபர் வாழும் பொன்நாடு - எங்கள் வேலணைத் திரு... நாடு

**முடிப்பு**

வற்றாத குளமாம் பெருங்குளத்து வாய்கால்வழியே நீர்பாச்சி
முத்தாக விளையும் நெற்கதிரை வேர்வை
முத்துடன் சேர்த்து வளர்த்திடும் - வீர
வாலிபர் வாழும் பொன்நாடு - எங்கள் வேலணைத் திரு.. நாடு

செந்தமிழ் மொழியினை காத்திடவே
எம்தமிழ் வளத்தினை பெருக்கிடவே
உயிரென்ன தமிழே உயர்வென்று...!
உள்ளத்தாலே உணர் வுற்று
வள்ளுவன் கண்ட உயர் தமிழாம்
அவன் குறள் வளர்க்க வழியென்று...!
திருக்குறள், முத்தமிழ், விழாகண்ட
வீரவாலிபர் வாழும் பொன்நாடு!-எங்கள் வேலணைத் திருநாடு..!

உலகத் தமிழரை ஓரணி சேர்க்க...
உயர் சங்கம் அமைத்தவன் கா.போ...!
தன்னினம் வாழ தன்னுயிர் ஈந்தான்
தானைத் தலைவன் கந்தையா...!
அன்னியர் அரசவை காலத்திலும்
உயர்சபை அமர்ந்தான் துரைச்சாமி...!
இத்தனை மாபெரும் தலைவர்களைப் பெற்ற
வேலணைத் திருநாடு, வீரவாலிபர் வாழும் பொன்நாடு

ஒன்றே குலம் ஒருவனே தேவனென்று
ஓதி உணர்ந்து உள்ளத்தால் ஒன்றுபட்டு
இந்து, கிறிஸ்தவர், முஸ்லீம் அனைவரும்
ஒற்றுமையாக சேர்ந்து வாழும்
வேலணைத் திருநாடு...வீர
வாலிபர் வாழும் பொன்நாடு...! எங்கள் வேலணைத் திருநாடு

ஆக்கம்

***வேலணையூர் பொன்னண்ணா***

*(இது 1965ம் ஆண்டு அம்மன் வடக்கு வீதியில் ஒருநாள் ஒலித்த பாடல்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை கீதம்

இந்துசமய மக்களெல்லாம் ஒன்று சேருவோம்
பந்தத்தோடு இணக்கமாக வாழ்ந்து காட்டுவோம்
எந்த மதமும் இதற்கு ஈடு இல்லை என்னுவோம்
முந்துபுகழ் இந்து தர்மம் முழங்கச் செய்குவோம் (இந்து)

ஆதி ஆதி காலந் தொட்டு வந்த மதமிது
ஆதிமூல நாயகனைக் கண்ட மதமிது
ஓதி ஓதி உண்மைதனை உரைத்த மதமிது
நீதிதேவன் கோயில் கொண்டு நிலைத்த மதமிது (இந்து)

பெற்றதாயைப் பிறந்த மக்கள் வெறுப்பதுமுண்டோ
உற்ற தந்தை இல்லையென்று உரைப்பவருண்டோ
முற்றும் உணர்ந்து இந்து தர்ம முறையறியாமல்
தெற்று கூறும் தீயர்மனம் திருந்தச் செய்குவோம் (இந்து

அன்புவழி காட்டுவதும் இந்து தர்மமே
இன்பநிலை கூட்டுவதும் இந்து தர்மமே
முன்பு உலகை உயர்த்தியதும் இந்து தர்மமே
துன்பநிலை போக்கியதும் இந்து தர்மமே (இந்து)

உனது நாடு உனது வேதம் உரிமைகாக்கவா
தனது மானம் தனது மதம் தர்மம்காக்கவா
இனியபூமி எங்கள்பூமி என்று சொல்லவா
புனிதமதம் இந்துமதம் என்று புகழவா (இந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பூர நாயகியே கனகவல்லி

கற்பூர நாயகியே ! கனகவல்லி !
காளிமகமாயி ! கருமாரியம்மா !
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா !
பூவிலிருந்த வள்ளி தெய்வயானையம்மா !
விற்கோல வேதவல்லி ! விசாலாட்சி !
விழிக்கோல மாமதுரை மீனாட்சி !
சொற்கோவில் நானமைத்தேன் இங்குதாயே !
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே ! அம்மா
(கற்பூர நாயகியே) 1

புவன முழுதாழுகின்ற புவனேஸ்வரி !
புரமெரித்தோன் புரமிருக்கும் பரமேஸ்வரி !
நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி !
நம்பியவர் கை விளக்கே சர்வேஸ்வரி !
கவலைகளைத் தீர்த்து விடும் காளீஸ்வரி !
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி !
உவமானப் பரம் பொருளே ஜகதீஸ்வரி !
உன்னடிமைச் சிறியோனை நீயாதரி ! அம்மா
(கற்பூர நாயகியே) 2

உன்னிடத்தில் சொல்லாது வேறு எந்த
உறவிடத்தில முறையிடுவேன் ! தாயே உன்றன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ - அம்மா !
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவாம்மா !
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா !
சின்னவளின் குரல் கேட்டுன் முகம் திருப்பு !
சிரித்தபடி என்னைத் தினம் வழி அனுப்பு ! அம்மா
(கற்பூர நாயகியே) 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும் !
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும் !
பண்ணமைக்கும் நாஉனையே பாடவேண்டும் !
பக்தியோடு கையுனையே கூப்பவேண்டும் !
எண்ணமெல்லாம் உன்நினைவே ஆகவேண்டும் !
இருப்பதெல்லாம் உன்னுடையதாக வேண்டும் !
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா !
மகனுடைய குறைகளை நீ தீருமம்மா ! அம்மா
(கற்பூர நாயகியே) 4

நெற்றியுனுள் குங்குமமே நிறையவேண்டும் !
நெஞ்சினுள் உன்திருநாமம் வழியவேண்டும் !
கற்றதெல்லாம் மேன்மேலும் பெருக வேண்டும் !
கவிதையிலே உன்நாமம் வாழவேண்டும் !
சுற்றமெல்லாம் நீடூழி வாழவேண்டும் !
ஜோதியிலே நீ இருந்து ஆள வேண்டும் !
மற்றதெல்லாம் நான் உனக்கு சொல்லலாமா !
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா ! அம்மா
(கற்பூர நாயகியே) 5

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ !
அருள் செய்ய இந்நேரம் ஆவதுண்டோ !
க்ண்ணுக்கு இமையன்றிக் காவலுண்டோ !
கன்றுக்கு பசுவன்றிச் சொந்தமுண்டோ !
முன்னைக்கும், பின்னைக்கும் பார்ப்பதுண்டோ !
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ ?
எண்ணைக்கும் விளக்குக்கும் பேதமுண்டோ !
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ ! அம்மா
(கற்பூர நாயகியே) 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புக்கே நானடிமை ஆகவேண்டும்
அறிவிக்கே என் காது கேட்கவேண்டும்
வம்புக்கு போகாமல் இருக்க வேண்டும்
வஞ்சகத்தை என்நெஞ்சம் அறுக்கவேண்டும்
பண்புக்கே உயிர்வாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே நான் என்றும் பணிய வேண்டும்
என்பக்கம் இவையெல்லாம் இருக்கவேண்டும்
என்னோடு நீ என்றும் வாழவேண்டும் ! அம்மா
(கற்பூர நாயகியே) 7

கும்பிடவே கை இரண்டும் போதவில்லை
கூப்பிடவோ நா வொன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய்யதனில் சக்தி இல்லை
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை
செம்பவள வாயழகி உன்னெழிலோ
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே ! உன்னை என்றும் !
அடிபணியும் ஆசைக்கோர் அளவுமில்லை ! அம்மா
(கற்பூர நாயகியே) 8

காற்றாகிக் கனலாகிக் கடலா கினாய் !
கருவாகி உயிராகி உடலாகினாய் !
நேற்றாகி இன்றாகி நாளாகினாய் !
நிலமாகிப் பயிராகி உணவாகினாய் !
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய் !
தொழுதாலும் ஜெயித்தாலும் வடிவாகினாய் !
போற்றாத நாளில்லை தாயே உன்னை
பொருளோடும் புகழோடும் வைப்பாய் என்னை ! அம்மா
(கற்பூர நாயகியே) 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச்.....

## தையும் பிறக்க...

தையும் பிறக்க வழியும் பிறக்குமே தமிழர் திருநாளில்
வையம் செழித்திடும் வானோர் மகிழ்வரே வாழ்வு மலர்ந்திடுமே
கையும் பொலிவுறும் களனி விளைந்திடும் காலமுங் கைகூடும்
ஐயம் அகன்றிடும் அன்பு பரவிடும் அருந்துணை தேடிவரும்
– நமக்கு அருந்.....

பக்தி சிறந்திடும் பண்பு செழித்திடும் பஞ்ச மினியேது
வித்தை யுயர்வுற வீணர் திருந்திட வீடுஞ் செழிப்புறுமே
சக்தி தவழுமே சாத்திர மோங்குமே சந்ததிப் பேறுவரும்
முத்தி யணைந்திடும் முனிவரும் வாழ்த்துவர் மூவர ருள்பெறலாம்
– மூவர் அருள்.....

சூரியன் தாதையே சூழ்புவிக் கென்றுமே சுந்தரத் தேரோட்டி
மாரியும் கோடையு மற்றுள பருவமும் யாவு மவன்வழிதான்
ஊருயிர் யாவினும் உள்பொரு ளாகுவன் உலகிற் கொளிதருவான்
காரிய காரண கருமவி னையவன் கைகொடுத் துய்த்திடுவான்
– கைகொடுத்.....

மண்ணுல கெங்கணும் மற்று கெங்கணும் மாபக வன்றானே
எண்ணில டங்காத ஏற்ற மளித்திடு மேந்த லவனல்லவோ
பண்ணு முதவிகள் பகர முடியுமோ பாரில வனைப்போற்றி
வண்ண வடிவுறச் செய்திடும் பொங்கல் படைத்துத் துதிப்போமே
– நாம்படை.....

சர்க்கரைப் பொங்கல் படைத்து மகிழ்ந்துநாம் பாடி வணங்குவமே
மக்களைப் பொங்கலின் மாண்பை விளக்கி மரபினைக் கூறுவமே
ஒக்கலு டன்பிறப் பத்தனை பேரையு மழைத்து வரவேற்போம்
தக்கவர் மிக்கவர் தழைத்திட வாழ்த்துகள் பாடித் துதிப்போமே
– நாம் பாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடுப்பு

நெஞ்சில் அருள்மூட்டி கண்ணில் ஒளியூட்டி
நீவரும் எழில்காண கண்கோடி வேண்டும்
(நெஞ்சில்........)

தொடுப்பு

தஞ்சம் என்றுந்தன் தாளைப் பணிந்தாரை
தாங்கியே காத்திடும் முத்துதிர் நாயகியே !
(நெஞ்சில்........)

முடிப்பு

கருணை வடிவோடு காணுமுன் திருக்கோலம்
காண்பார் கண்களுக்கு கண்ணீர் இடும்கோலம்
இருளாய் இருந்திடும் இடரெலாம் அழிப்பாய்
இன்முகம் காட்டிநல் லருளினை யளிப்பாய்
(நெஞ்சில்........)

மாரியம்மா உந்தன் மலர்முகம் பார்க்கையில்
மனதினில் பாரம் மாயமாய் மறைந்திடும்
வாரியெம் கையணைத்து வளமுறு வாழ்வை
வழங்கிக் காக்கும் வள்ளலே அம்பிகையே !
(நெஞ்சில்........)

ஆக்கியோன் : **கவிஞர் பரம்**

நூல் நிலையத்துள் பாம்பை
நுழையவிட்டாலும் பரவாயில்லை. நமது
பண்பாட்டைக் கெடுக்கிற நூல்களை
நுழைய விடக்கூடாது.

*- ஒரு நல்லவர் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவிரைவில்

வெளிவருகிறது..........!!

**வேலணை பெருங்குளம்**

**ஸ்ரீல ஸ்ரீ முத்து மாரி அம்பாளின்**

**பெயரில் பாடப்பட்ட**

# தலபுராணம்

**ஆக்கியவர்**

பண்டிதர், வித்துவான்

**திருவாளர். ச. குமரேசையா அவர்கள்**

முன்னாள் அதிபர் – நாகேஸ்வரி வித்தியாலயம், சரவணை

**ஊக்கம் கொடுத்தவர்**

**க. சிற்றம்பலம் அவர்கள்**

**சித்த மருத்துவர்**

**இலவச விஷக்கடி வைத்தியர்**

**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணைக் கலைக்கோவில்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுத் தொகுப்பு



# வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்

## (வேலணையின் இரண்டாவது உயர்கல்வி கலைக்கூடம்)



யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்கு திசையில், கடலில் பரந்து கிடக்கும் சப்த தீவுகளில் நடுநாயகமாக விளங்குவது லைடன் தீவு. ஊர்காவற்றுறை லைடன் தீவின் தலை நகராகவும், தீவுகளின் போக்குவரத்து துறைமுகமாகவும் திகழ்வதால் அதுவே தீவகத்தின் தேர்தல் தொகுதியாகவும் திகழ்கின்றது.

லைடன் தீவின் மத்திய கிராமமாக விளங்குவது வேலணையாகும். மேற்கில் சரவணை, சுருவில், புளியங்கூடல் என்ற கிராமங்களும், கிழக்கில் மண்கும்பான், வடக்கிலும் தெற்கிலும் கடல் பகுதிகளையும் எல்லைகளாக கொண்டதாகும்.

இக்கிராமத்தில் வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயம், சாட்டி மாதா கோவில், முடிப் பிள்ளையார், துறைமுக ஐயனார், சிற்பனை, வங்களாவடி முருகன், காளிகோவில், இலந்தவனம் பிள்ளையார், சாட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிவாசல் போன்ற முக்கியமான பிரதானமான ஆலயங்களும் சுற்றுலா இடமான வெள்ளைக் கடற்கரையும் திகழ்வதோடு பனை வளமும், தோட்டப் பயிர்களும், நெல்வயல்களும் கிராமத்தின் சிறப்பை கட்டியம் கூறுவது போல் பெருமை சேர்க்கின்றன. இத்தோடு தமிழும், சைவமும் சிறப்புற்று விளங்கியது வேலணை கிராமமாகும்.

இத்தோடு தமிழ் ஆசான்களான தம்பு உபாத்தியார், கந்தப்பு உபாத்தியார் போன்ற சமூக உணர்வு கொண்ட வேலணையூர் பெருந்தகைகள், தமது கிராமத்தைப் போல் மற்றைய தீவக கிராமங்களுக்கும் கல்விக்கு சுடர்ஒளியாய் சேவையாற்றினார்கள். இதனால் வேலணைக்கு ஏனைய தீவக கிராமத்து மக்களிடம் பெரும் மதிப்பும் மரியாதையும் உருவானதோடு பயணத்தின் மத்திய இடமாக வேலணை இருந்ததினால் உறவையும் வளர்த்து விபரம் தெரிந்து கொண்டார்கள்.

வேலணை கிழக்கு மேற்கு செட்டிபுலம் துறையூர் பள்ளம்புலம் என்ற பல பிரிவுகள் கொண்ட கிராமத்தில் சாட்டியில் உள்ள நன்னீர்க் கிணறு ஒரு பெரும் வரப் பிரசாதமாகும். இதனால் பல கிராமங்கள் இப்பவும் பெரும் பயன் அடைகின்றது. நீரின்றி அமையாது உலகு என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு அமைய இக்கிராமத்தை ஏனைய கிராமத்து மக்களும் எண்ணிப்பார்க்க உள்ளது எனலாம். கடலின் கரையில் உண்டாகும் நன்னீர் ஊற்று ஒரு அதிசய புதுமையாகும்.

மேற்குறிப்பிட்ட பிரதேசங்களின் மாணவர் கல்வியை மனதில் எண்ணி வேலணை மேற்கில் மத்திய மகா வித்தியாலயம், சைவப்பிரகாச வித்தியாலயம், கிழக்கில் மகாவித்தியாலயம், சரஸ்வதி வித்தியாலயம், செட்டிபுலம் அரசினர் கலவன் வித்தியாலயம், துறையூரில் அரசினர் ஐயனார் கலவன் வித்தியாலயம், பள்ளம்புலம் ஆத்தி சூடி வித்தியாலயம் போன்றவை அரசினாலும் பொதுமக்களாலும் ஆரம்பிக்கப்பட்டன.

அவற்றில் செட்டிபுலம் வித்தியாலயம், ஆத்திசூடி வித்தியாலயம், துறையூர் வித்தியாலயம் போன்றவை ஆரம்ப பாடசாலையாகவும், சரஸ்வதி வித்தியாலயம், சைவப்பிரகாசாலை, வேலணை கிழக்கு மகா வித்தியாலயம் போன்றவை இடைநிலை பாடசாலையாகவும், வேலணை மத்திய மகா வித்தியாலயம் தீவுத்தொகுதி உயர்நிலை பாடசாலையாகவும் செயல்பட்டு வருகிறது எனலாம். மாணவர்கள் தங்கி படிக்கும் வசதிகள் கூட இங்கு செயல்பாட்டில் இருந்து வந்தது. ஆனால் நாட்டில் ஏற்பட்ட அவலங்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் இடம் பெயரும் நிலை ஏற்பட்டதின் பிற்பாடு இவைகள் இங்கு உருக்குலைந்து விட்டன எனலாம்.

வளம் குறைந்த மக்களின் வாழ்க்கைக்கு கல்வியே ஒரு மூலதனமாகும். அதனால் அவை அழிக்கப்பட்டது ஒரு கவலைக்குரிய செயலாகும். தீவக மக்களின் வாழ்வில் விழுந்த பேரிடியாகும். ஆகவே நல்லவர்கள் சிந்தித்து இதன் வளர்ச்சியில் செயல்படுவது மிகமிக அவசியமே.....!

யாழ்ப்பாணக்குடா நாட்டில் கல்விக்கான அடிக்கல் நாட்டப்பட்டது முதல் முதல் வேலணையில் தான் எனலாம். 1833ம் ஆண்டு அமெரிக்க மிசன்மார் தமது முதலாவது பாடசாலையை மதரீதியான நோக்கத்தில் உருவாக்கினர் வங்களாவடியில், அதன் பின்பே இந்துப்போட் விழித்தெழுந்து சரஸ்வதி பாடசாலை, சைவப்பிரகாசாலை, ஆத்திசூடி போன்ற பாடசாலைகள் உருவாக்கம் பெற்றன எனலாம். இந்த கால கட்டத்தில் ஏழை குழந்தைகள் கல்வி பெறவும், உத்தியோகம் பெறவும் பெரும்பணி ஆற்றியதோடு இந்துக்களையும் விளிப்புற வைத்தது மிசனின் பெரும் பணியாகும் எனலாம். இந்துமதம் கல்வி, இந்து மக்கள் என்ற சிந்தனையில் தான் இந்துபோட்டும் உருவாகி செயல்பட்டது எனலாம்.

1945ம் ஆண்டில் இலங்கையின் கல்வி அமைச்சர் C.W.W. கன்னங்கரா அவர்கள் உருவாக்கிய இலவசக்கல்வி திட்டத்தால் இனமத பேதமற்ற ஒரு சமாதான அரசியல் நடைமுறை நடைபெற்ற காலத்தில், இலங்கை பூராகவும் பேதமற்ற கல்வித்திட்டம் நடைமுறையில் இருந்த காலமானதால், அரசினால் கல்வித்திட்டம் நல்லமுறையில் பேதமற்று நடைபெறுகையில் தான், வேலணைக்கும் மத்திய மகாவித்தியாலயம் அரசால் அனுமதிக்கப்பட்டதோடு துறையூர் பாடசாலையும், செட்டிபுலம் பாடசாலையும், வேலணை கிழக்கு மகா வித்தியாலயமும் அரசினரால் அமையப் பெற்றது. மற்றைய சரஸ்வதி, சைவப்பிரகாசாலை, ஆத்திசூடி போன்றவை தனியார் துறை பாடசாலைகளே ஆகும். மத்திய மகா வித்தியாலயம் ஒரு தொகுதி ரீதியான செயல்பாட்டில் அமைக்கப்பட்டது எனலாம். இலவசக் கல்வியின் தந்தையென போற்றப்படும் பேதமற்ற கல்வி முறையால் இன்றும் நினைவில் இருக்கும் C.W.W. கன்னங்கரா அவர்கள் சேவையின் நிலைப்பாட்டில் உருவான ஆங்கில தமிழ் கனிஷ்ட பாடசாலைகளும் தொகுதிக்கொரு உயர் கல்வி பாடசாலையும் என்ற திட்டத்துக்கமைய அமைந்தவையே இந்த பாடசாலைகளாகும். இவையே தீவகமக்களின் கல்விக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருதவியாக இருந்தது இந்தக் கல்விக்கலை கூடங்களே எனலாம்.

வேலணை கிழக்குப் பகுதி பெருங்குளத்து முத்துமாரி அம்மனின் பேரருள் கொண்ட பகுதியாகவே என்றும் துலங்குகிறது. அதனால் அந்த பகுதியை தேவிகோட்டம் பகுதி என்றே மக்கள் அழைப்பர். அந்த அம்மனின் துணையால் அப்பகுதியில் வாழும் மக்கள் சகல வளங்களும், நீண்ட ஆயுளும் கொண்டு வாழ்கின்றார்கள் எனலாம். அப்பகுதி மக்களின் சிறப்புக்கு அந்த அம்பிகையின் ஒளிகொண்ட அருளே துணை என்றால் மிகையில்லை.

பாடசாலைகள் பெருமளவு இருந்தாலும் மக்களின் நலன்கருதி மூன்று மைல் தூரத்திற்குள் பாடசாலை என்ற முன்னைய கால திட்டத்துக்கமைய வேலணையின் கிழக்குப் பகுதி மாணவர்கள் நீண்ட தூரம் நடந்தே வித்தியாலயத்திற்கு செல்லவேண்டிய நிலையை கண்ட கற்றோர் பெற்றோர்களின் சமூகசேவையாளர்களின் சிந்தனையில் உதித்ததே இந்த வேலணை கிழக்கு தமிழ் கலவன் பாடசாலையின் உதயமாகும்.

1946ம் ஆண்டளவில் அன்றைய பாராளுமன்ற உறுப்பினரான திரு. சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி அவர்களின் சிந்தனையிலும் சேவை மனப்பான்மை என்ற உணர்விலும் வேலணை கிழக்குக்கு ஒரு பாடசாலை உருவாக்க எடுத்த திட்டத்தை நிறைவு செய்தார். கல்விமானும் பெரும் சமூக உணர்வாளருமான ஆசிரியர் திரு. கந்தர் காங்கேசு என்ற ஒரு பெருந்தகையும் அவர் மனைவியும், பாராளுமன்ற உறுப்பினரின் பாடசாலை கட்ட வழங்கிய அங்கீகாரத்துடன் இடம் தேடி அலைந்த கிராமத்து பெரியார்களை தேடிச்சென்று தனது மாமனார் தனது திருமணத்துக்கு சீதனமாக கொடுத்த பதினைந்து பரப்பு காணியை தான் கிராமத்தின் மக்கள் நலன் கருதி அன்பளிப்பாக தருவதாகவும் அதிலே பாடசாலையை கட்டும்படியும் சொல்லி அன்பளிப்பு செய்தவர் அந்த பெரும் தகையும் துணைவியாருமாகும். இதனால் அவர் அந்த பாடசாலையின் முதல் அதிபராகவும் ஆரம்பத்தில் கல்வி அமைச்சரால் நியமிக்கப்பட்டார். அதற்காக கிராமத்து மக்கள் அன்றுமுதல் அவர் வாழும்வரை அல்லாமல் இன்றும் அவரை நினைவு கூறுகின்றனர்.

அன்று முதல் ஒரு ஆரம்ப பாடசாலையாக இயங்கி வந்த பாடசாலையில் பல ஆசிரியர்கள் கடமை புரிந்தார்கள். இப்படி பணி தொடர்ந்த பாடசாலை 1970ம் ஆண்டில் ஒரு கனிஷ்ட வித்தியாலயமாக தரமுயற்றப்பட்டு அதன் அதிபராக திரு. க. பாலசிங்கம் அவர்கள் நியமனம் செய்யப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாம் வகுப்புவரை படிப்பிக்கக் கூடிய பாடசாலையாய் திகழ்ந்தது. புதிய அதிபரின் பணியில் வளம்கண்ட பாடசாலையின் வளர்ச்சி ஊக்கம் எடுத்த அன்றைய கால பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் அன்றைய தமிழ் அமைச்சரான தபால் அமைச்சரான செல்லையா குமாரசூரியர் ஊடாக கல்வி அமைச்சருக்கு விண்ணப்பித்தது. இப்பாடசாலையை தரமுயற்றி மகா வித்தியாலயமாக்கி தரும்படி. இதன் ஆக்க முயற்சிகள் தொடரும் காலத்தில், இதற்கு எதிரான பல அரசியல்சூட்சி விளைவுகளையும் பெற்றார் ஆசிரியர் சங்கம் சந்தித்தது. எதிர் நீச்சல் பணியில் தொடர்ந்த பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று 1972ம் ஆண்டு தை மாதம் இந்தப் பாடசாலையை ஒரு மகா வித்தியாலயமாக தரமுயற்றித் தந்தது. இதில் பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் விடாமுயற்சி வெற்றி கண்டது. கிராமத்து மக்கள் பெரும் மகிழ்ச்சியோடு வேலணை கிழக்கு மகா வித்தியாலயம் என்ற பெயருடன் தபால் அமைச்சர் குமாரசூரியரால் **20 - 01 - 1972** ல் திறப்பு விழா நடாத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து பாடசாலை விஞ்ஞான ஆசிரியரோடு கூடிய பலதரப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களும் விஞ்ஞான ஆய்வு கூட வசதிகளும் மற்றும் பாடசாலையின் வளர்ச்சி கருதி சகல கல்வித் தேவைகளும் வேகமாக அன்றைய மதிப்புக்குரிய யாழ்மாவட்ட கல்வி அதிகாரி திரு. தி. மாணிக்கவாசகர் அவர்களால் துரிதமாக செயல்பட தொடங்கியது. அதிபர் க. சிவராமலிங்கம் அவர்கள் தலைமை தாங்க, நியமனம் பெற்ற ஏனைய ஆசிரியர்களின் ஊக்கமான உழைப்பினாலும், மாணவர்களின் கரிசரனையாலும், ஊக்கத்திறனாலும் பெற்றார் ஆசிரியர் சங்கத்தினரின் பேருழைப்பாலும் கல்லூரி வேலணையின் இரண்டாவது உயர் நிலைக் கல்விக் கூடமாக சிறப்போடு வளர்ச்சி கண்டது எனலாம்.

கல்விச் சாலைகளை திறப்பவன், சிறைச்சாலைகளை மூடுகிறான் என்ற முதுமொழிக்கிணங்க இந்த பாடசாலையான கல்விச்சாலையை உருவாக்கி தரமுயற்றி வளர்த்தெடுத்தவர்கள் பலர். அவர்களின் பெரும் பங்கை கிராமத்து மக்கள் என்றும் மறந்து விடாது நினைவில் வைத்துள்ளார்கள். அந்த வரிசையில் மதிப்புக்குரிய தலைமை ஆசிரியர் கந்தர் காங்கேசு அவர்களையும், அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சேர். வைத்தியலிங்கம் துரைச்சாமி அவர்களையும், பின்னைய பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ வ. நவரத்தினம் அவர்களையும், அன்றைய தபால் அமைச்சர் செ. குமாரசூரியர் அவர்களையும், அன்றைய கல்வி அதிகாரி தி. மாணிக்கவாசகர் அவர்களையும், அன்றைய பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் இணைச் செயலாளர்களான திரு. பொன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாகராசா அவர்களையும், ஆசிரியர் திரு. ச. மாணிக்கவாசகர் அவர்களையும் மற்றும் சமூக சிந்தனையாளர்களான திரு. பா. சண்முகநாதன் அவர்களையும், ஆசிரியர் திரு. மருதையினார் அவர்களையும், வித்தியாலயத்தின் முன்பகுதி மதிலை கட்டி முடிக்க நிதி உதவி வழங்கிய திரு. தில்லையம்பலம் குமாரசாமி அவர்களையும், கிழக்குப்பகுதி மதிலைக் கட்டிமுடிக்க முன்னின்றுழைத்த திரு. தம்பிஐயா குமாரசாமி அவர்களையும் அதற்கு பணஉதவி செய்த பாரிசில் வாழும் வித்தியாலய பழைய மாணவர்களையும், இன்றும் வித்தியாலயத்தை கட்டிக்காத்து வரும் இன்றைய பெற்றார் ஆசிரியர் சங்க நிர்வாகிகளின் சமூக உணர்வையும் அயராத சேவையையும் இன்றும் மக்கள் நெஞ்சத்து நினைவில் பதிய வைத்துள்ளார்கள் எனலாம்.

**என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்.**
**உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்க்கு.......!**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் பொய்யா மொழிக்கமை என்ற குறளை ஏற்று நெஞ்சத்தில் பதியவைத்துள்ளார்கள் எனலாம்.

முத்துமாரி அம்பாளின் பெரும் கருணை பெற்ற அப்பகுதி மக்களின் பெரும்பகுதி மக்கள் இன்று உலகம் பூரா பரவி பரந்து, கொடியாய் படர்ந்து உள்ளார்கள். அவர்கள் தங்கள் சிந்தனையை வளர்த்து சற்று சீர்குலைந்து அபிவிருத்தியை எதிர்பார்த்து நிற்கும் இந்த பாடசாலையின் மேல் பார்வையை செலுத்துவது ஒவ்வொருவருக்கும் கட்டாய கடமையாகும் என்பதை நினைவுபடுத்துவது என்போன்றவர்களின் கட்டாய கடமையாகும்.

அத்தோடு கடந்த 1990 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலையின் காரணங்களால் மக்கள் புலம் பெயர்வு ஏற்பட்டு, பின் 1996 இல் மக்கள் தாய் மண்ணை தேடிவந்த போதும், அடைக்கலம் கொடுத்ததும், அனைத்து பாடசாலை மாணவர்களும் ஒன்றிணைந்து இங்கேதான் கல்வி கற்க முடிந்ததுவும் இந்த பாடசாலைக்குகிடைத்த மாபெரும் பெருமையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

நன்றி வணக்கம்.

*அன்புடன்,*

***க. சிவராமலிங்கம்***


*முன்னாள் அதிபர்*

*(வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்)*

*கனடா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்பாளின் தேர்பவனியும் பக்தர்களும்



அம்பாளின் அழகிய புதிய சப்பறத்தின் அலங்காரத் தோற்றம்



அம்பாளின் 8ம் திருவிழா இரவு நடைபெறும் தீ மிதிப்புக்கான ஆயத்தத்தை காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமுதசுரபி அன்னதான மடத்தின் வெளிப்புற தோற்றம்



அமுதசுரபி அன்னதான மடத்தின் உள்புற தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்பாளின் 8ம் திருவிழா உற்சவத்தில் அடியார்கள் கற்பூர தீபம் ஏந்தி நேர்த்திக்கடன் முடிப்பதைக் காணலாம்.



தேர்த்திருவிழா உற்சவத்தில் பக்தர்களின் பக்திப் பரவசத்தை இங்கு காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள அமுதசுரபி அன்னதான மடமும் அதன் நிர்வாகிகளும்



அம்பாளின் தென்வீதியில் அமைந்துள்ள கல்விக்கோவிலின் முகப்புத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வேலணை மத்திய மகா வித்தியாலயம்

## வேலணை துரைச்சாமி மகா வித்தியாலய வரலாற்று தொகுப்பு




### தீவகத் தீபம்

இலங்கை சுதந்திரம் அடைய முன்னர் அரசாங்க சபையில் வலிகாமம் மேற்குத் தீவுப்பகுதிப் பிரதிநிதியாக பல ஆண்டுகள் இருந்து, கடைசி பத்து வருடங்கள் தலைவராக (Speaker) இருந்து இலங்கையிலுள்ள சகல இனமக்களும் பாராட்டத்தக்கவராக இலங்கைத் தமிழ் மக்களுக்கம் சிறப்பாகத் தீவுப்பகுதி மக்களுக்கும் பெருமை தேடிக் கொடுத்தவர் வேலணையைச் சேர்ந்த சேர். வைத்தியலிங்கம் துரைசாமி அவர்கள்.

வேலணை வங்களாவடியில் உள்ள இவரதும் இவரது குடும்பத்தினரதும் நிலங்களிலேயே வேலணை அரசினர் வைத்தியசாலை, தீவுப்பகுதி விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்க அலுவலகம், தீவுப்பகுதி மின்சார விநியோக அலுவலகம், தீவுப்பகுதி மிருக வைத்தியசாலை அலுவலகம் தீவுப்பகுதிக் கல்விக் கோட்ட அலுவலகம் - தீவுப்பகுதி தெற்கு வேலணைப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் முதலிய அரசாங்க அலுவலகங்கள் நிறுவப் பெற்று தீவுப்பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் யாழ்ப்பாணம் மணிக்கூட்டடியில் வாழ்ந்தாலும் தீவுப்பகுதி மக்களை நேசித்து வந்தவர்கள்.

1945 அளவில் கல்வி மந்திரியாக இருந்த திரு. C.W.W. கன்னங்கரா அவர்களால் இலங்கையிலுள்ள சகல மாணவர்களும் ஆங்கிலத்தை இலவசமாகக் கற்பதற்கு வசதியாக இலங்கையில் தொகுதிக்கொரு மத்திய கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது.

வலிகாமம் மேற்குத் தீவுப்பகுதியில் காரைதீவில் இந்துக் கல்லூரியும், சுழிபுரத்தில் விக்ரோரியாக் கல்லூரியும், வட்டுக்கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரியும் இருந்தமையால் தீவுப்பகுதி மாணவர்கள் ஆங்கிலம் கற்பதற்கு வசதியாக தீவுப்பகுதி மக்களின் போக்கு வரத்திற்கு வசதியாக புங்குடுதீவு - யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை - மண்டைதீவு மக்களின் போக்குவரத்துப் பாதைகள் ஒன்றாகச் சந்திக்கும் வேலணை வங்களாவடியில் அமைப்பது பொருத்தமாக இருக்குமெனக் கருதப்பட்டு சேர் வைத்தியலிங்கம் துரைசாமி அவர்களின் ஆலோசனைப்படி கல்வி மந்திரி திரு. C.W.W. கன்னங்கரா அவர்களும் சைவ வித்தியா விருத்திச்சங்க முகாமையாளர் திரு. சு. இராசரத்தினம் அவர்களும் வேலணை வங்காளவடியில் இருக்கும் சரஸ்வதி வித்தியாசாலையை மத்திய கல்லூரியாக மாற்றி அமைக்க எடுத்த முடிவைப் பொதுமக்களுக்கு அறிவிப்பதற்காக சேர். வைத்தியலிங்கம் துரைசாமி அவர்களின் சகோதரர் திரு. வை. பொன்னுத்துரை அவர்கள் தலைமையில் கல்விமந்திரி திரு. C.W.W. கன்னங்கரா அவர்களும் - சை. வி. வி. சங்க முகாமையாளர் திரு. சு. இராசரத்தினம் அவர்களும் பொது மக்களும் சேர்ந்து ஒரு கூட்டம் கூட்டினர்.

மத்திய கல்லூரி அமைப்பது சம்பந்தமாகக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வேலணைத் தபாலதிபர் திரு. நா. சரவணமுத்து அவர்கள் தலைவராகவும், ஆசிரியர் திரு. சி. இராசரத்தினம் அவர்கள் செயலாளராகவும், திரு. மு. சி. சிற்றம்பலம் அவர்கள் பொருளாளராகவும் கிராமரீதியாக தெரிந்த நிர்வாக சபை உறுப்பினர்களையும் கொண்ட வேலணை மாகாண சபை அமைக்கப்பட்டது.

சபையினர் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வேளையில் நாரந்தனை சரவணை புளியங் கூடல் மக்கள் "தலைமை ஆசிரியர்" இ. மருதையனார் அவர்கள் தலைமையிற் கூட்டங்கூடி சரவணை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளியங்கூடற் சந்திக்கு அருகாமையில் கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தனர்.

இதனால் இரு சாராரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சேர் வைத்தியலிங்கம் துரைசாமி அவர்கள், "தலைமை ஆசிரியர்" திரு. இ. மருதையனார் அவர்களின் உதவியுடன் வேலணை கிழக்கு, வேலணை மேற்கு, சரவணை ஆகிய மூன்று கிராமங்களும் ஒன்றாகச் சந்திக்கும் இடமாகிய வேலணை மேற்குச் சைவப்பிரகாச வித்தியசாலைக்கு அருகாமையில் உள்ள காணியில் மாணவர்கள் படிப்பதற்கு வசதியாகத் தற்காலிகக் கொட்டகைகள் போடப்பட்டு மத்திய கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அதிபர் திரு. A. K. கந்தையா அவர்களின் கீழ் ஐந்து உதவி ஆசிரியர்களுடனும், ஐம்பது மாணவர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி வருடந்தோறும் அயற் கிராமங்களில் உள்ள பாடசாலைகளில் இருந்து ஐந்தாம் வகுப்புப் படித்து முடித்த மாணவர்கள் பலர் வந்து சேர்ந்ததால் மாணவர் தொகை வருடா வருடம் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது.

1947 ல் சேர் வைத்தியலிங்கம் துரைசாமி அவர்களின் வேண்டுதலுக்கிணங்கி கல்வி மந்திரி திரு. C. W. W. கன்னங்கரா அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

தீவகத்தில் பல பாடசாலைகளில் இருந்து புலமைப்பரிசில் பெற்று வந்த மாணவர்களை, ஆரம்பத்தில் ஆண் பிள்ளைகளை வேறாகவும் பெண் பிள்ளைகளை வேறாகவும் பிரிக்கப்பட்டு தனியார் வீடுகளில் இருந்து படிக்க ஒழுங்கு செய்திருந்தனர்.

1951 ல் மயிலிட்டியைச் சேர்ந்த திரு. V. தம்பு அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் அரசாங்கம் கல்லூரிக்கென வாங்கிய நிலத்தில் புதிய கட்டிடம் கட்டுவதற்காக 1954 ல் பிரதம மந்திரியாக இருந்த சேர். யோன். கொத்தலாவலை அவர்களால் அத்திவாரக்கல் நாட்டப்பட்டு அழகான இருமாடிக் கட்டிடம் அமைக்கப்பட்டது. மாணவர்களுக்கு விடுதியும் கட்டப்பட்டது.

அதிபர் திரு. V. தம்பு அவர்கள் காலத்தில் அவரதும், அவருடன் இருந்த உதவி ஆசிரியர்களுடைய விடா முயற்சியினாலும் கல்லூரி மாணவர்கள் விஞ்ஞானம், கணிதம், சங்கீதம், பரதநாட்டியம், கைப்பணி, விளையாட்டு முதலிய பல துறைகளிலும் திறமை பெற்றவர்களாக விளங்கியதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் இருக்கும் உயர்ந்த கல்லூரிகளுக்கு நிகரான தரத்தில் தீவகத்தின் தீபமாக விளங்கியது.

இக்கல்லூரி ஆரம்பிக்கும்போது அரசினர் வேலணை மத்திய கல்லூரி எனவும், இடைக்காலத்தில் இலங்கையிலுள்ள மத்திய கல்லூரிகள் அனைத்தும் மத்திய மகா வித்தியாலயங்களாக மாற்றப்பட்டபோது வேலணை அரசினர் மத்திய மகா வித்தியாலயம் எனவும், இக்கல்லூரி வேலணையில் ஸ்தாபிக்கக் காரணமாக இருந்த சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்களுடைய ஞாபகார்த்தமாக வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம் என 1982 இலும் மாற்றம் பெற்று இன்று இப்பெயருடனேயே இயங்கி வருகின்றது.

1945 தொடக்கம் 1990 வரையும் இக்கல்லூரியிற் காலத்துக்குக் காலம் இருந்த அதிபர்களாலும் உதவி ஆசிரியர்களாலும், பொருளாதார அடிப்படை வசதியற்ற தீவுப்பகுதி மாணவர்களிற் பலர் ஆங்கில அறிவுடன் விஞ்ஞான, கணித பட்டதாரிகளாய், பல்கலைக்கழகப் பேராசிரியர்களாய், பொறியியலாளர்களாய், அரசாங்க உத்தியோகஸ்தர்களாய் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கடமைபார்த்து, கற்ற கல்லூரிக்கும், தீவகத்திற்கும் பெரும் புகழைத் தேடிக் கொடுத்தனர்.

1990ல் இலங்கை இராணுவம் தீவுப்பகுதியுட் பிரவேசித்ததும் தீவுப்பகுதி மக்கள் புலம் பெயர்ந்து யாழ்ப்பாணத்திற்கும் வெளிநாடுகளுக்கும் சென்றமையால் கல்லூரியை நடத்த முடியாமற் போய்விட்டது.

அப்போதிருந்த அதிபர். திரு. பொ. கேதாரநாதன் அவர்களும் அவருடன் இருந்த உதவி ஆசிரியர்களும் யாழ்ப்பாணத்திலிருந்த இக்கல்லூரி மாணவர்களை ஒன்று சேர்த்து யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாய வித்தியாசாலையின் ஒரு பகுதியில் நடாத்திவந்தனர்.

1990 ல் புலம் பெயர்ந்த தீவுப்பகுதி மக்களிற் சிலர் 1996 ல் திரும்பவும் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்று குடியேறியதனால் தீவுப்பகுதியில் உள்ள சில பாடசாலைகள் குறைந்த எண்ணிக்கையுள்ள மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டன.

அப்போது மத்திய மகாவித்தியாலயத்திலும் சூழலில் உள்ள வீடுகளிலும் இராணுவம் இருந்தமையால் தீவுப்பகுதிக்குத் திரும்பிய மத்திய மகா வித்தியாலய மாணவர்களை ஒன்று சேர்த்து வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்தின் ஒரு பகுதியில் உப அதிபர் திரு. பொன். ஈசனுடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. வ. சிவபாலன், திருமதி. வே. அரசரத்தினம், திரு. சு. கனநாயகம், திரு. சி. கேதீஸ்வரன் ஆகிய ஆசிரியர்கள் கற்பித்து வந்தனர்.

இக்காலப்பகுதியில் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவனுமாகிய திரு. சு. இரத்தினராசா யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளராக இருந்தமையால் அவருடைய உதவியுடன் யுத்தத்தினால் சிதைந்து போயிருந்த வேலணை சரஸ்வதி வித்தியாசாலையைத் திருத்தி அமைத்து வேலணை மத்திய மகாவித்தியாலய மாணவர்களை மேற்படி வித்தியாசாலையிற் சேர்த்துப் படிப்பித்து வந்தனர்.

இக்காலப்பகுதியில் அதிபராக இருந்த திரு. K. கணேசலிங்கம் அவர்களதும், அவருடன் கற்பித்த உதவி ஆசிரியர்களதும் தீவிர முயற்சியால் மாணவர் தொகையும் ஆசிரியர் தொகையும் ஓரளவு அதிகரிக்கத் தொடங்கியது.

வேலணை உதவி அரசாங்க அதிபர் அவர்களதும் யாழ்ப்பாணக் கல்விப்பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா அவர்களதும் முயற்சியால் மத்திய மகா வித்தியாலயத்திலுள்ள இராணுவத்தினரை விலகச் செய்து 1998 ல் இருந்து உரிய கட்டிடத்தில் நடைபெற்று வருகின்றது.

கல்லூரிச் சூழலில் உள்ள வீடுகளிலும் கல்லூரிக்குரிய விடுதியிலும் இராணுவம் நிலை கொண்டிருப்பதால் மக்கள் முன்னர் போல் தங்கள் இல்லங்களில் இருக்கமுடியாத நிலையில் மாணவர் தொகையும் முன்னர் போல் அதிகரிக்க முடியாத நிலையிலும் இன்றிருக்கின்றது.

இக்காலகட்டத்தில் கனடா, லண்டன், அவுஸ்திரேலியா, பிரான்சு முதலான நாடுகளில் இருக்கும் கல்லூரிப் பழைய மாணவர்கள் சங்கங்கள் அமைத்துப் பொருள் சேர்த்து அனுப்பிக் கல்லூரி தளப்பமின்றி நடக்க உதவி வந்தனர்.


பழைய மாணவர் சங்கங்களுள் கனடா பழைய மாணவர் சங்கமே பொருள் சேர்த்து அனுப்பி பல வழிகளிலும் கல்லூரி வளர்ச்சி அடைய உதவி வந்தது.

மேலும் மேலும் கனடாப் பழைய மாணவர்கள் பிரிவினை உணர்ச்சி இன்றி நேச உணர்வுடன் ஒன்றுகூட்டி தாங்கள் கற்ற கல்லூரி 1990 க்கு முன் இருந்த நிலைமையில் தீவகத்தின் தீபமாக விளங்க உதவி செய்து வருவது அவர்களது நன்றிக்கடனாகும்.

*சு. சீவரெத்தினம்*
*வேலணை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சின்முத்திரை

சைவசித்தாந்தத்தில் உயிர்கள் இறைவனுடன் இணையும் நிலையைக் குறிக்கும் விதத்தில் பெருவிரலையும் சுட்டுவிரலையும் சேர்த்து மற்ற மூன்று விரல்களையும் உயர்த்திப் பிரித்துக்காட்டும் ஒரு முத்திரை. Posture of the hand in which the tip of the index finger keeps touching the thump while the other three fingers are raised upwards and kept apart (to signify the union of soul with god)

சின்முத்திரை என்னும் சொற்றொடர் ஞான அடையாளம் எனப் பொருள்படும். சித்-ஞானம் முத்திரை-அடையாளம். எனவே ஞானப்பொருளின் அடையாளக்குறிப்பாகத் திகழ்வது சின்முத்திரை எனலாம். தென்முகக் கடவுளாகிய தட்சணாமூர்த்தி தம் திருக்கையால் சின்முத்திரையைக் காட்டிக் கொண்டிருக்கின்றார். வலது கைக் கட்டைவிரலும், சுட்டுவிரலும் ஒன்றையொன்று வளைந்து சார்ந்து நிற்க ஏனைய மூன்று விரல்களும் விலகித் தனித்துச் சேர்ந்து நின்று கொண்டிருக்கும் நிலை சின்முத்திரையாகும்.

நடுவிரல், மோதிரவிரல், சுண்டுவிரல் என்னும் மூன்றும் முறையே ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களைக் குறிப்பனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் தொகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவிரல் நீண்டு முளைத்து நிற்பதனால், ஆணவ மலத்தைக் குறிப்பாக உள்ளது. அதற்கு அடுத்தவிரல் கன்ம மலத்தைக் குறிப்பதாகவுள்ளது. பூர்வஜன்ம புண்ணிய பாவத்திற்கு தக்கபடி அனுபவித்து தீர்ப்பதனால் பொன் முதலியவற்றால் இயன்ற மோதிரத்தினை, அதன்கண் நாம் அணிந்து கொள்கிறோம். சுண்டுவிரல் மாயை பொய்தோற்றத்தைக் குறிக்கும். பெருவிரல் உதவியின்றி நாம் எதனையும் எடுத்தல், பிடித்தல் முதலியன செய்தல் இயலாது. ஆதலின் அது சின்முத்திரையில் பதியினைக் (ஆண்டவன்) குறிக்கின்றது. சுட்டுவிரல், தன்னியல்பில் ஏனைய மூன்று விரல்களோடு சேர்ந்து பெருவிரலைப் பிரிந்து நிற்கின்றது. அது பசு (ஆன்மா) எனப்படும்.

ஆண்டவன் என்ன சொல்கிறார் என்றால் ஆன்மாவாகிய நீ பிறப்பு - இறப்புத் துன்பங்களினின்று விடுபடுதல் வேண்டுமாயின், மும்மலங்களின் (ஆணவம், கன்மம், மாயை) தொடர்பை விட்டு ஞானத்தின் மூலமாகவோ, குருவின் அருள்பெற்றோ நீ ஞானம் பெற்று இந்த மூன்று மலங்களும் நம்மைப் பிடித்திருந்தால் ஆண்டவனை அடையமுடியாது என்ற ஞானம் பெற்று ஞானத்தை உணர்ந்து ஏதாவது ஒரு பிறவியில் இந்த மூன்றையும் விட்டு ஒதுக்கி என்னை நோக்கி நகரத்தொடங்கினால் நானும் உன்னை நோக்கி நகரத்தொடங்குவேன். ஒரு கால கட்டத்தில் ஆன்மாவாகிய நீயும் ஆண்டவனாகிய நானும் ஒன்றாகச் சேர்ந்து விடலாம். இதுவே என்னை அடையும் வழி. சுட்டுவிரலும், கட்டை விரலும் சேரும்போது வட்டம் உருவாகும். ஆத்மாவும் இறைவனும் சேர்ந்து நானும் நீயும் ஒன்று என்று உணரும் நிலை. இதுதான் சின்முத்திரையின் தத்துவம் எனலாம். ஒரு நாளி உப்பும், ஒரு நாளி தண்ணீரும் சேர்ந்து ஒரு நாளி அமுது போல் இரண்டறக் கலத்தல் என்று சிவபாக்கிய சித்தர் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீயசக்திகள்

நம் ஆன்மீக முன்னேற்றத்தில், நாம் அடி எடுத்து வைக்கும் ஒவ்வொரு முறையும், கண்ணுக்கு புலனாகாத இறைவனின் எதிரிகளான தீயசக்திகள் எம்மை பழிவாங்க முயற்சி செய்கின்றன. நம் ஆன்மாவை அவைகளால் காயப்படுத்த முடியாத போது அவை நம் உடலை தாக்குகின்றன.

ஆனால் இறைவன் நம்முடன் இருப்பதினால் அந்த தீயசக்திகளின் முயற்சிகள் எல்லாம் வீணாகப்போய் இறுதியாக அவை தோற்கடிக்கப்படுகின்றன.

தீய சக்திகளின் ஊடுருவலுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது. ஒரு சிறு உணர்வற்ற நிலையைக் கூட அவை தமக்கு சாதகமாக எடுத்துக்கொள்ளும்.

பொறாமை, சுயநலம், சார்ந்த அதிருப்தி பிறரை புண்படுத்தும். தற்பெருமை என்ற எண்ணச் செயல்பாடேதான், ஒருவரைத் தெய்வீக சக்தியின் பாதுகாப்பில் இருந்து வெளியே இழுத்து அவரின் உணர்வு நிலையைத் தீயசக்திகளின் தாக்குதலுக்கு உள்ளாக்க வழி செய்கின்றன.

இத்தகைய தவறான இயக்கங்கள் நம்முள் நடைபெற அனுமதிக்காமல் விலக்கினால் தீயசக்திகளின் பாதிப்புக்களில் இருந்தும் அதன் மோசமான விளைவுகளில் இருந்தும் நாம் நம்மை காப்பாற்றிக்கொள்ளலாம்.

தீயசக்திகளைப்பற்றி எப்போதும் நினைத்துக்கொண்டு இருப்பதும், அவற்றுக்காக பயப்படுவதும் நமக்கு ஆபத்தான பலவீனமாகும்.

நீ சொல்வது போல் தீயசக்தி முழுமையாக வெல்லப்பட்டு அழிக்கப்பட வேண்டும். ஏன் எனில் அது தன்னை வெளிப்படுத்திக் கொள்ள மனிதரை தேடிக்கொண்டு இருக்கும்.

தீயசக்திகள் உலகில் சிலவேளை மன்னிக்கப்படுகின்றன. ஏனெனில் அவை சிலநேரம் சில மனிதர்களின் நேர்மையைச் சோதிக்கின்றன. மனிதன் முழுமையாக நேர்மை உள்ளவனாக மாறும்போது அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விடுகின்றன. ஏனெனில் அவை இருப்பதற்கு காரணம் ஏதும் அங்கே இடம் இருக்காது என்பதே நியதி.

அமைதியாக அனைத்தையும் இறைவனுக்கே சமர்ப்பணம் செய்யக் கூடிய, இறைவனின் சேவையாளனாகவும், தெய்வீகத்தை வெளிப்படுத்தும் குருவின் தொண்டனாகவும் இருக்க நீ மறுத்தால், நீ உன்னுடைய தன்முனைப்புக்கு, உன் தற்பெருமைக்கு நீயாகவே கற்பித்துக்கொண்ட பொருளற்ற குறிக்கோளுக்கு அடிமையாகி விடுவாய். மேலும் பல வியப்பூட்டும் மாய தோற்றங்களை காட்டி உன்னை தன் ஆளுமைக்குள் கொண்டுவர உன்னை மயக்குகின்ற இராட்ஷத சக்திகளின் கைகளில் உன்னை பொம்மையாக்கி விடும். இதில் எப்போதும் தீயசக்தி தோற்றதாகச் சரித்திரம் இல்லை. தீயசக்தியை சரியான முறையில் நாம் எதிர்கொள்ளப்பட்டால் அசிங்கமானதும், பொய்யானதுமாகிய அனைத்தும் அழிக்கப்பட்டு அங்கே உண்மையும், நேர்மையும் ஆனந்தமுமே தங்கும்.

உன் ஆத்மா பெரும் வேட்கையுடன் விரும்பும் அந்த உயரிய தெய்வீக உணர்வின் மேல் இறையருளின் பேருதவியின்மேல், மற்றும் எல்லா புதினமான அழகான விஷயங்களில் அந்த தீயசக்தியானது அசிங்கச் சேற்றையும், அருவருப்பான விஷயங்களையும் உன்மேல் எறிவதையே தன் பொழுதுபோக்காக்கி விடும். தீயசக்திகள் சரியான முறையில் எதிர்கொள்ளப்பட்டால் மட்டுமே அசிங்கமானதும், பொய்யானதுமான அனைத்தும் மறைந்து விடும். உண்மையும் அழகுமே தங்கும்.

இதை தொடர அனுமதி அளித்தால் அது பெரும் சோகத்திலும், துன்பத்திலுமே போய் முடியும். இதற்கு முடிவு கட்ட வேண்டுமாயின் நீ திடமான உறுதியான நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். உன் ஆன்மாவின் ஒருங்கிணைந்த ஒத்துளைப்பு இதற்கு அவசியமாகும். அது விழித்தெழுந்து தன் முனைப்பை எதிர்த்தழிக்கும் முயற்சியில் உன்னுடன் இணைந்து கொள்ள வேண்டும். இதன் மூலமாகத்தான் நாம் தீயசக்திகளை வெற்றி கொள்ள முடியும்.

***ஆக்கம் :***

***வேலணையூர் பொன்னண்ணா டென்மார்க்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயம் தெளிவோம் !

**ஆலயங்களில் கடவுளை ஏன் நமஸ்காரம் (நிலத்தில் விழுந்து வணங்குதல்) செய்ய வேண்டும் ? அப்படிச் செய்வதன் முக்கியத்துவம் என்ன ?**

நமஸ்காரம் செய்வதைத் தண்டம் சமர்ப்பித்தல் என்பார்கள். தண்டம் என்றால் ஒரு தடி அல்லது கோல் என்று அர்த்தம். கையில் பிடித்திருக்கிற கோலை விட்டுவிட்டால் அது அப்படியே தடாலென்று கீழே விழுந்துவிடும். அப்படியே இந்தச் சரீரத்தை **இது நமது அல்ல, கடவுளுடையது** என்கிற எண்ணத்துடன் கீழே போடுவதுதான் நமஸ்காரம். நமது சரீரம் வெறும் மரக்கோல்தான். உதவாத பொருளை அது தண்டமாகி விட்டது என்று தான் சொல்கிறோம். அப்படித் தண்டமான பொருள்தான் நமது சரீரம். இதைத் தூக்கிப் பிடித்து நிறுத்தி வைத்து ஆட்டுகிற சக்தி இறைவன் கொடுத்ததே என்கிற எண்ணத்தோடு, அதாவது அகங்காரத்தை விலக்கிவிட்டு, அதற்கு அடையாளமாக இறைவனுக்கு முன் இந்தச் சரீரத்தைக் கீழே போடவேண்டும். அது தான் தண்டம் சமர்ப்பிப்பது என்பது.

நாம் செய்கிறோம் என்கிற எண்ணம் போய்விட்டால் அதுவே எந்நேரமும் நமஸ்காரமாகும். அந்த அனுபவம் நமக்குச் சித்திக்காத போதிலும் ஈசுவர சந்நிதியிலாவது அப்படிப் பாவித்து வணங்கித் தரையோடு தரையாக கிடக்க வேண்டும். கொஞ்சம் பொறுப்பை நமக்கு என்று வைத்துக்கொண்டாலும் கூட சுவாமி தன்னுடைய பங்கைக் குறைத்துவிடுவார். இதில் அரைகுறைக்கு இடமே இல்லாமல் நடந்துகொள்ள வேண்டும். நம்முடைய நல்லது பொல்லாதது அவ்வளவும் **அவர் விட்டபடி** என்று சகல பொறுப்பையும், அவரிடம் விட்டு விடுவதற்கு வெளி அடையாளமாக, உடம்பைத் தரையில் தள்ளி நமஸ்காரம் பண்ண வேண்டும். அப்படிச்செய்தால் நம்முடைய பாரம் அனைத்தையும் கிருபாசமுத்திரமான சுவாமியே ஏற்று அனுக்கிரகம் செய்வார்.

மனப்பூர்வமாக ஈசுவரனை நமஸ்காரம் செய்துவிட்டால் போதும். அவர் பிறப்பு, இறப்பு சக்கரத்திலிருந்து நம்மை விடுவித்துவிடுவார்.

- *ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி பரமாச்சாரியார்*
*ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரசுவதி சங்கராசாரிய சுவாமிகள்* -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோவிலில் நாம் ஏன் தேங்காய் உடைக்கின்றோம்?

நமது சமயமானது மக்கள் அனைவரும் ஞானம் பெறுவதனையே முக்கியநோக்கமாகக் கொண்டு விளங்குகின்றது. ஞானம் என்றால் அறிவு. அது எல்லோருக்கும் இயல்பாகவே உண்டு. ஆனால் அந்த அறிவை பிரகாசிக்க விடாமல், ஆணவம் என்னும் திரை மூடி மறைத்துக் கொண்டிருக்கின்றது. ஆணவம் நீங்கும் போது உள்ளே இருக்கும் அறிவு உணர்ச்சிக்கு இருப்பிடமாக தலை விளங்குவதை அறவீர்கள். ஆகவே குடுமி, கண்கள் ஆகியவற்றுடன் காணப்படும் தேங்காயை, தலையின் சின்னமாக கூறி வைத்தார்கள் நம் முன்னோர்கள். நமது அறிவை மூடி மறைத்து வைத்திருக்கும் ஆணவத்தைப்போல வெண்மையான தேங்காயை நார், தும்பு, மட்டை முதலானவை மறைத்துள்ளன. அவற்றை உரித்து, கனமான சிரட்டையை உடைத்து, உள்ளே காணப்படும் தேங்காயை நமது புனிதமான அன்புக்கு அடையாளமாக இறைவனுக்கு சமர்ப்பணம் செய்கின்றோம், என்பதை அடையாளப்படுத்தும் முறையே இந்த தேங்காயை உடைத்து சமர்ப்பணம் செய்யும் முறையாகும்.

*- சிவஸ்ரீ சோமாஸ்கந்தா குரு -*



## பசுவை தெய்வமாக வழிபடும் காரணம் என்ன..?

பசுவை தெய்வமாக போற்றுவது இந்துக்களுடைய பாரம்பரிய வழமையாகும். காரணம் பசுவின் பால் மிக சிறந்த உணவு. அதை குழந்தைகளுக்குக் கூட கொடுக்கலாம். குறை எதுவும் இல்லாதது. போஷிப்பவர்களுக்கு தாராளமாக அது பால் தருகின்றது. பசுவின் சாணம் கிருமி நாசிகளை சுத்தம் செய்யக்கூடியது. அதனால் தான் வீடுமெழுக, வாசலில் தெளிக்க பயன்படுத்துகின்றோம். பசுவின் பால், நெய், சாணம், கோமயம்தயிர் ஆகிய ஐந்தையும் பஞ்ச கௌவியம் எனக் கூறுவார்கள். இது பல நோய்களை போக்கும் குணம் உடையது. இவைகளை கண்டே பசுவை தெய்வமாக வணங்குகின்றோம்.

*- சிவஸ்ரீ சோமாஸ்கந்தா குரு -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலை செய்வது பெரும் பாவம்.....!

பிறப்பு என்பது ஆரம்பமும் அல்ல, மரணம் என்பது முடிவுமல்ல. இது இந்து மதத்தின் அழுத்தமான நிலைப்பாடு. இந்த கோட்பாட்டுக்குள் வாழ்க்கையின் ரகசியங்கள் அனைத்தும் அடங்கி இருப்பதாக சொல்லலாம்.
ஒரு இந்து மறுபிறப்பில் நம்பிக்கை உள்ளவனாக இருக்கின்றான். ஒவ்வொரு பிறப்பும் அவனுக்கு அனுபவமே.

தன்னுடைய பிறப்பினை அவன் எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்ளலாம். நல்லவனாகவும் இருக்கலாம், தீயவனாகவும் இருக்கலாம், பாவியாகவும் இருக்கலாம், மகானாகவும் இருக்கலாம், அல்லது இரண்டும் கெட்டான் வாழ்க்கை வாழும் சராசரி மனிதனாகவும் இருக்கலாம். பிறப்பை நாம் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியாது. எப்போது நாம் சாக வேண்டுமென்று முடிவெடுக்கவும் முடியாது.

பிறப்பை வேண்டுமானால் நாம் தீர்மானிக்க முடியாதது தான். ஆனால் இறப்பை நாங்கள் தீர்மானிக்கலாம் தானே தற்கொலையால்....? என்ற கேள்வி நம்முன் எழலாம். ஆனால் பிரமா படைக்கும் போதே, மண்ணில் பிறக்கும் போதே ஒவ்வொருவரின் மண்டைக்குள்ளும் பிரமாவால் எழுதி புதைக்கப்பட்டு நிர்ணயம் செய்யப்பட்டே நாம் பூமிக்கு அனுப்பப் படுகின்றோம். அந்த ஆயுள்காலம் முழுவதும் நாம் வாழ்ந்தாகத்தான் வேண்டும். இறைவனிடம் இருந்து எப்போ நமக்கு அழைப்பு வருகின்றதோ அதுவரை நாம் காத்திருந்தே ஆகவேண்டும் என்பதே நியதி.

இதற்கு மாறாக தற்கொலை செய்து தன்னை அழிக்க நினைப்பவன், இறைவனின் கட்டளையை மீறுகின்றவனாகின்றான். அவன் தன் உடலை விட்டு பலவந்தமாக உயிரை பிரிக்க முடியுமே தவிர அவனுக்கு விதிக்கப்பட்ட காலம் வரும்வரையும் அவனுடைய உயிர் அடையாத அத்தனை துன்பங்களையும் பேயாக, பிசாசாக, பூமியில் வேதனையின் எல்லை தாண்டிய நிலையில் உலவத்தான் வேண்டும். இது நியதி என்கின்றது இந்துமதத்தை நம்பும் இந்துக்களின் கூற்று.

இயற்கை மரணம் ஏற்படும் காலம் வரை உயிரைப் போக்கிக்கொள்ள எவருக்கும் உரிமை இல்லை. ஆகவே தற்கொலை செய்து கொள்வது ஒருமனிதன் செய்யும் பாவங்களில் பெரிய பாவமாகவும், மன்னிக்க முடியாத பாவமாகவும், தானே தனக்கு விலைகொடுத்து துன்பத்தை வாங்கும் முட்டாள்தனமாகவும் இந்துக்கள் நம்புகின்றார்கள்.

உடலின் துன்பங்களை விட்டு வேண்டுமானால் தற்கொலை மூலம் ஒருவன் விலகிக்கொள்ள முடியுமே தவிர, துன்பங்களில் இருந்து அவன்காலம் வரும்வரை விலகிக்கொள்ளவே முடியாது என்பது உறுதி. பல துன்பப்பட்ட உயிர்களாகி துன்பத்தில் மூழ்கித்தான் ஆகவேண்டும்.

ஆக்கம் : **வேலணையூர் பொன்னண்ணா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் வாழ்க்கை

நான் உங்களின் அறியாமையை, தன் உணர்வற்ற நிலையை, சுருங்கிய எல்லைகளுடைய தன்முனைப்பைத் தான் துறக்கச் சொல்கிறேன். ஆனால் அதற்குப் பதில் உங்களுக்கு கிடைப்பதோ அற்புதமான ஒப்பிடமுடியாத அனுகூலங்களாகும். உங்களின் வாழ்வு பயனுள்ளதாக அமையும். உங்களின் வாழ்வு உண்மையை நாடும் நிரந்தரமான தேடலாக அமையட்டும். அதுவே வாழ்க்கையின் உண்மை பொருளாகும்.

உங்களின் வாழ்க்கை முழுவதுமே பூரணமாக இறைவன் ஒருவரால் மட்டுமே வழிநடத்தப்படுவதாக அமையட்டும். உன் இறைவேட்பு ஆர்வம் உள்ளதாகவும், நேர்மையானதாகவும் இருக்கட்டும். நீ இறைவனின் குழந்தை என்பதை ஒருநாளும் மறவாதே. இறைவனின் குழந்தைகள் செய்யக்கூடாத எந்த காரியத்தையும் உன்னை செய்யவிடாது அது தடுக்கும்.

தவறைத் திருத்திக்கொள்ளுதல், அல்லது அதை அழித்துவிடல் இரண்டுமே இயலக்கூடியவை. ஆனால் இந்த இரண்டு விஷயங்களிலுமே பல்வேறு அளவுகளில் ஒருவரின் இயல்பில், குணநலனில் மாற்றம் தேவைப்படுகின்றது. தவறாக செயல்பட்டவரின் உள்ளத்தில் முதலில் மாற்றம் வரவேண்டும். அதன் பிறகுதான் அவரின் செயலால் ஏற்பட்ட விளைவை மாற்றமுடியும்.

மக்கள் உண்மையில் அவர்களின் உணர்வு நிலையில் மாற்றத்தை விரும்பினால் மட்டுமே அவர்களுடைய செயல்களையும் மாற்ற இயலும்.

## மாற்றுங்கள்.........

வெறுப்புணர்வை இணக்கமாக !

பயத்தை அஞ்சாமையாக !

பொறாமையை பெருந்தன்மையாக !

நிச்சயமற்ற தன்மையை நிலைப்பு தன்மையாக !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமையை அறிவுடமையாக !

அவநம்பிக்கையை நம்பிக்கையாக !

இருண்மையை ஒளியாக !

குழப்பத்தை தெளிவாக !

பொய்மையை உண்மையாக !

தோல்வியை வெற்றியாக !

தீமையை நல்லதாக !

போரை அமைதியாக !

*மாற்றிப்பாருங்கள்; உங்கள் வாழ்க்கை வளமானதாக, மணமானதாக மாறும். நிச்சயம் நம்புவோம்.*

***அன்னை சாரதா தேவி***

*தேடல் செய்தவர் : **பொன்னண்ணா***

# பொன்மொழிகள்

அன்பு வேண்டும் இறைவனில்
ஆசை வேண்டும் தமிழினில்
இன்பம் வேண்டும் இயற்கையில்
ஈகை வேண்டும் பொழுதினில்
உண்மை வேண்டும் உயர்வினில்
ஊக்கம் வேண்டும் செயலினில்
எளிமை வேண்டும் வாழ்க்கையில்
ஏற்றம் வேண்டும் கல்வியில்
ஐக்கியம் வேண்டும் உலகினில்
ஒழுக்கம் வேண்டும் நடையினில்
ஓய்வு வேண்டும் முதுமையில்
ஔடதம் வேண்டும் பிணியினில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடராஜர் திருத்தாண்டவம் ஆடிய ஐவகைத்தாண்டவ மூர்த்த சபைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | சித்திர சபை | குற்றாலம் | சித்திரகூடம் |
| 2. | தாமிர சபை | செப்பறை | நெல்லைமாவட்டம் |
| 3. | வெள்ளி சபை | மதுரை | வலது கால் தூக்கி ஆடிய இடம் |
| 4. | கனக சபை (பொற்சபை) | சிதம்பரம் | ஆனந்தத் தாண்டவம் |
| 5. | மரகதப்படி சபை (இந்திர சபை) | திருவாலங்காடு | அரைக்கோணத்துக்கு அருகில் – உள்ளது. |

## அஸ்டாங்க யோகம்

அஸ்டாங்க யோகமெனும் எட்டுவிதத் தன்மைகள் நம்மை எட்டி விட்டால் கிட்டாத சித்திகள் கிட்டும் என்பர் ஆன்றோர்.

அவையாவன : இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்யாகாரம் தாரணை, தியானம், சமாதி என்னும் படிகளாகும்.

ஒன்றிலே ஆழ்ந்த புலன்களை வசப்படுத்தி விட்டால் செயல் வெற்றி. அது இறைவழிபாட்டின் மூலமாகவே கிட்டும். இதற்காகவே ஒவ்வொரு படிக்கட்டாக அமைத்தனர் நம் முன்னோர். படிப்படியாக நாமும் அந்நிலை பெற எட்டில் மனதை இட்டு கொள்வோம். இதை உணர்வோம். உயர் பேரின்பம் அடைவோம்.

*- சித்திராங்கசர்மா -*

## நதிகளின் பெருமை

கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்றும், நதிகளில் மிகவும் சிறந்தவை. யமுனையில் ஒருவாரம் நீராடினால் நமது பாவங்கள் தொலையும். சரஸ்வதியில் மூன்று நாள் நீராடினால் பாவங்கள் நீங்கும். ஆனால் கங்கையில் ஒருமுறை நீராடினால் போதும் நம்பாவங்கள் தொலைந்து விடும். காசியில் அலகாபாத் என்னும் இடத்தில் இவை மூன்றும் சங்கம் ஆகின்ற நர்மதையைப் பார்த்தாலே பாவம் நீங்கும். தேவ லோகத்திலுள்ள தபதி நதியை நினைத்தாலே பரிசுத்தமாகி விடும்.

*- சிவஸ்ரீ சோமாஸ்கந்தா குரு -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவத்தால் வளர்கிறோம்,
## சைவத்தை வளர்ப்போம்

சத்தியசாயி பகவானில் இருந்து ஆதி பராசக்தியை வணங்கி வேண்டிய தேவைகள் பலவற்றைப் பலர் அடைந்து வருகிறார்கள். நோய்வாய்ப்பட்டவர்கள் குணமடைகிறார்கள். உரியவர்களை உரிய இடத்திற்கு வரவழைக்கிறார்கள். மனதில் எண்ணும் பல சம்பவங்களைப் பலரும் இலகுவில் பெற்று விடுகிறார்கள். கறிக்கு உப்புத் தேடியவர்களும், பெரும்போரின் நடுவே இருந்தும் உயிர்ப் பிச்சை கேட்டவர்களும் பேரருள் பெற்று வேண்டியதைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

மறுபுறம் முக்காலமும் முழுகிக் குளித்தும், நோன்பிருந்தும், தெய்வீக வழிபாடுகளில் தம்மை ஈடுபடுத்தியும் கேட்டவரங்கள் கிடைப்பதில்லை. பதில் வேதனையும், சோதனையும், தினமும் சூரியபகவான் காலையில் காட்சி தருவதுபோல் ஏற்பட்ட வண்ணம் இருக்கிறது. அவர்கள் வார்த்தைகளில் குறிப்பிட்டால் ஊரைக் கொள்ளையடித்தவர்களுக்கு அம்பாள் அள்ளிக் கொடுக்கிறாள். கண்ணகி வேடம் போட்ட பலருக்கு நல்வாழ்வு அமைகிறது. ஏழை அழுத கண்ணீர் இறைவன் பாதத்தைக் கழுவவில்லை. பணக்காரனின் பன்னீர் இறைவனை மகிழ்விக்கிறது என்கிறார்கள் பலர். அப்பாவிப் பொதுமக்கள் பலர் திடீர் செல்லடியில் கால், கை இழந்து, வீடுவாசல் அழிந்த நிலையில் தவிக்கிறார்கள். அவர்கள் வார்த்தையில் கடவுளுக்குக் கண்கெட்டுப் போய்விட்டது, அநியாயத்தைக் கேட்டும் பேசாமல் இருக்கிறாரே என்றெல்லாம் பலவிதமான உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டும் உள்ளத்தடாகத்தில் புதைக்கப்பட்டும் உள்ளன. பகவான் சாயிபாபா சிலருக்கு நோயைக் குணப்படுத்துகிறார். அரசியல் வாதிகளுக்குத் தரிசனம் கொடுக்கிறார். ஏனையோரைக் கவனிப்பதில்லை எனவும் கேட்கிறார்கள்.

சைவமதம் பூரண சுதந்திரம் மிக்க மதம். இறைவனை பித்தா! உள்ளம்கவர் கள்வன் ! என்றும் அழைக்கலாம். தினமும் வழிபடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடாமலே இருக்கலாம். உபவாசம் இருக்கலாம். வயிறார உணவு உண்டு களிக்கலாம். மங்கையர் மடியே சுவர்க்கமென வாழலாம். மண், பெண், பொன் ஆசைகள் அழித்து ஆண்டவனை நாடி ஓடிச் சிக்கெனப் பிடிக்கலாம்.

சைவம் இயற்கை நியதியிலும் ஆத்மிக பலத்திலும் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது. இயற்கை நீதி விதிமுறைகளில் இருந்து அணு அளவும் அசைவதில்லை. பூமி ஒரு குறிப்பிட்ட பாதையில் குறிப்பிட்ட வேகத்தில் சுழல்கிறது. பூமி ஈர்ப்புச் சக்தி எம்மையெல்லாம் நிலையாக நிலையற்ற உலகில் வைத்திருக்கின்றது. உலகின் அத்தனை உயிர் இனங்களும் உடலுடன் உயிரை வைத்துக் கொள்ள, சில இயற்கை நியதிப்படி செயற்படுகின்றன.

மறுபுறம் ஆத்மா ஒரு தெய்வீகசக்தி. அந்தச் சக்தியால் சாதிக்க முடியாதவை எதுவும் இல்லை. இது வெறும் நடைமுறைக்குச் சாத்தியமற்ற வேதாந்தமல்ல. அந்த ஆத்மீக சக்தியால் நான் எனது என்ற உடல் உணர்வில் இருந்து விடுதலை பெற்று உலக நியதிகள் அத்தனையும் கடந்து அருவ நிலையில் சாதிக்கக்கூடிய சாதனைகள் பல. அந்த ஆத்மீக சக்தியை அனுபவரீதியில் தான் உணரமுடியும். அதனை உணர்ந்தவர்களால் வார்த்தைகளால் எடுத்தியம்ப முடியாது.

அந்த ஆத்மீக சக்தியில் இறைவன் குடிகொள்ளுவர். அவர் குடி கொள்வதினால் ஏற்படும் பேரானந்தம் ஓர் அற்புதமானது. இறைவன் வந்து எந்தப் புழுத்தலைப் புலையனையும் ஆட்கொள்வார். அவரது ஆட்கொள்ளும் காலம், இடம் ஆத்மா எதுவாகவும் இருக்கலாம். அதனால் ஏற்படுகின்ற அனுபவம் அந்த ஆத்மாவினால் தான் உணரமுடிகிறது. அந்த சில வினாடிகள் உடல் தன்பாட்டில் இயங்குகிறது. ஆத்மா உடலியல் நிறை குறைகளில் இருந்து விடுபட்டு இறைவனுடன் கலந்துவிடுகிறது. இறைவன் ஆத்மாவுடன் கலந்து விடுகிறார்.

இந்த அனுபவத்தில் இருந்து விடுபட்ட பின்னர் அந்த ஆத்மா குடிகொண்ட உடல் உடன் மீண்டும் உலகியல் வாழ்வில் ஈடுபட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கிறது. போட்டி, பொறாமை, வஞ்சகம், சூது உலகியல் ஆசைகள் மீண்டும் குடிகொண்டு விடுகின்றன.

அந்த அனுபவத்தை மீண்டும் பெற இடைவிடாது கிடைக்கும் நேரமெல்லாம் இறைவனிடம் வேண்டியபடி இருத்தல் வேண்டும். நீ என்னுடன் சில வினாடிகள் தொடர்பு கொள்வாயா? என மனமுருகக் கேட்க வேண்டும். அவ்வாறு கேட்பதற்கு எனக்கு என்ன தகுதி இருக்கிறது என்று நீங்கள் கேட்கக்கூடும். உங்களுக்குத் தான் உங்கள் ஆசைகள், கெட்ட குணங்கள் தெரியும். அகத்தின் அழகை, பவுடர் போட்டு முகத்தில் மறைத்து விடலாம், ஆண்டவனுக்கு மறைத்துவிட முடியாது. ஆனால் நாம் என்றாவது முற்று முழுதாகத் தூய்மையாக இருந்தால்தான் இறைவன் எம்மிடம் வருவார் என்பது தவறு. உங்கள் நற்செயல்கள், சிந்தனைகள் சில இருந்தாலே போதும். இறைவன் உங்களுக்குத் தன் கதவுகளை அகலத் திறந்து விடுகிறார். நீங்கள் திருந்தினால் மேற்கொண்டு அவர் அடிக்கடி வருவார். அவ்வாறு இறைவன் வந்து ஆன்மாவுடன் கலந்த அனுபவத்தைக் கூறுமிடத்து அதனை உரிய பக்குவநிலையில் உணர்ந்து ஏற்றுக் கொள்ளவும் ஒரு பக்குவம் வேண்டும். இல்லையேல் தற்புகழ்ச்சிக்காக அல்லது சுய விளம்பரத்துக்காக அல்லது தனது தீய குணாதிசயங்களை மறைக்க எடுக்கும் கபட நாடகம் என வசைபாடப்படக்கூடும். இதனால் இத்தகைய அனுபவத்தினை தம் வழிபாட்டின் போது பெற்றவர்கள்கூட பலருக்கும் எடுத்தியம்பாது மௌனம் சாதிக்கலாம்.

மேலே கேட்கப்பட்ட பல கேள்விகளுக்கு விடையாக எமது மதத்திலும் புத்த மதத்திலும் கர்மவினை என்றொன்று இருக்கிறது. வாழ்க்கை என்ற நாடகத்தில் எமது தற்போதய வாழ்க்கை ஒரு கட்டமே. அதற்கு முன்னைய கட்டங்களும், பின்னைய கட்டங்களும் எமக்குத் தெரிவதில்லை. முன்னைய பிறவியில் செய்த நல்வினை, தீவினை என்பவற்றின் எஞ்சியது இப்பிறப்பில் இந்த உடலில் ஆத்மாவுடன் கூடி இயங்குகிறது. துன்பம் விரும்பியோ விரும்பாமலோ அனுபவிக்கப்பட வேண்டியது. துன்பத்தை ஆசைகளால் வளர்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியுமே தவிர அறுக்க முடியாது. அடைந்த இன்பங்கள் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்து விடுகின்றன. துன்பம் தொடர்கின்றன.

வெளிப்பகட்டினால் சிலர் ஏமாந்து இறைவன் நம்பிக்கையில் அவநம்பிக்கை கொள்கிறார்கள். இவர் இறைவனைக்கூட சக்தி குறைந்தவனெனக் கருதி ஏதேதோ மாற்றங்கள் செய்கிறார்கள். இறைவன் பற்று அற்றவன். அவனைத் திட்டி ஒதுக்கியோரும் போற்றிப் புகழ்ந்தோரும் அவனை மகிழ்விக்கவில்லை. எங்கள் ஆத்மா ஈடற்ற பாதையில் முன்நோக்கியோ அன்றி பின்நோக்கியோ செல்கிறது. இறைவன்மேல் என்று ஒருவன் நம்பிக்கையில் ஈடாட்டம் கண்டு கொள்கிறானோ அல்லது மாயை வித்தைகளைக் கண்டு மயங்குகிறானோ அவன் தான் விட்ட பிழையை உணர இறைவன் ஒரு சந்தர்ப்பத்தை நல்கித்தான் ஆவான்.

இறைவன்மேல் நாம் நம்பிக்கை கொண்டிருப்பின் இறைவன் திருவிளையாடல்களுக்கு விளக்கம் தரவோ வினா எழுப்பவோ தேவையில்லை. அவ்வாறு செய்வது அறியாமையில் இருந்து கொண்டு அறிவுபெற்றதாகக் கருதும் அறியாமை, அறியாமையில் இருப்பதில் தவறு இல்லை, அறியாமை அறியர்து இருப்பதே தவறு.

இறைவழிபாட்டினை இயற்கை நியதிப்படி செய்ய விதிமுறைகள் உண்டு. அவற்றை முறையே கடைப்பிடிக்க வேண்டும். உணவுக்குப் பதில் கல்லை முண்டி விழுங்க முடியாது. ஒன்பது . வாயிலாலும் உண்ண முடியாது. அதேபோல இறைவனை விதிமுறைப்படி வழிபட வேண்டும்.

இறைவன் ஆன்மீக சக்தியுடன் கலந்தபின்பு விதிமுறைக்கு அப்பால் அச்சக்தி உங்களை இயக்கி விடுகிறது. அதற்கு நீங்கள் வரம்புகட்டத் தேவையில்லை.

அதனையே, சத்திய சாயிபகவான் அற்புதங்களைத் தெய்வீக சக்தியால் செய்யும் அதேவேளை மருத்துவமனை ஒன்றை அமைத்துக் கற்றுத்தேறிய வைத்திய நிபுணர் மூலம் சிகிச்சைகளைச் செய்விக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளை எப்படி வாழவைப்பது ?

ஓர் ஊரில் ஒரு முனிவர் இருந்தார். தினமும் கோயிலுக்குப் போவார். சாமி கும்பிடுவார். ஆனால் ஒன்று..... அவருக்கு சிவனைப் பிடிக்கும். பார்வதியைப் பிடிக்காது. எனவே, சிவனை மட்டும் கும்பிட்டு வந்துவிடுவார்.

கோயிலில் சிவனும் பார்வதியும் ஒன்றாக உட்கார்ந்திருந்தாலும் இவர் என்ன செய்வார் தெரியுமா? அவர்கள் இருவருக்கும் நடுவிலே புகுந்து சிவனை மட்டும் மூன்று சுற்றுச் சுற்றிவிட்டு வந்துவிடுவார்.

பார்வதிக்கு எரிச்சல். தன்னைப் புறக்கணிப்பதை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. என்ன செய்யலாம் என்று யோசித்தாள். பிறகு ஒரு முடிவுக்கு வந்தாள். அதை அமல்படுத்தவும் செய்தாள்.

அதாவது - ஒருமுறை அந்த முனிவர் வந்த சமயத்தில்..... பார்வதி, சிவனோடு இணைந்து அர்த்தநாரீஸ்வரராகக் காட்சியளித்தாள்.

ஒரே உடலில் பாதி சிவன், பாதி பார்வதி. இதைக் கண்ட முனிவர் திகைத்தார்.

இந்த சங்கடத்தை எப்படி சமாளிப்பது? யோசித்தார்.

உருவத்தை மாற்றிக்கொள்ளக் கூடிய சக்தி அவருக்கு இருந்தது. எனவே அவர் ஒரு வண்டாக மாறினார். அவர்கள் இருவருக்கும் இடையே ஒரு துளையைப் போட்டார். அதன் வழியே உள்ளே புகுந்தார்.

மூன்று முறை சிவனை மட்டும் சுற்றிவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார்.

பார்வதிக்குக் கோபமான கோபம். அவளால் சும்மா இருக்க முடியவில்லை. சிவனைப் பார்த்துச் சொன்னாள்: "இதோ பாருங்கள்..... நான் என்ன செய்தாலும் நீங்கள் அதில் தலையிடக்கூடாது! என்ன.....?"

"சரி"

பார்வதி அந்த முனிவரைக் கூப்பிட்டார். "இதோ பாரப்பா.....! நீ என்னை அவமானப்படுத்தினாய்! சக்தியான என்னை நீ அவமதித்ததால் இந்த விநாடியிலிருந்து உன் உடம்பில் உள்ள சக்தி போகட்டும்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவுதான், அந்தக் கணமே சக்தியெல்லாம் இழந்து வெறும் சக்கையாகி விட்டார் முனிவர்.

பரம்பொருளான சிவனைப் பார்த்து அலறத் தொடங்கினார். "நமசிவாயா.... தவிக்கும் உன் பக்தனைக் காப்பாற்று.....?"

"பக்தனே! உன் அறியாமைக்காக வருந்துகிறேன்?"

"என்ன சொல்கிறீர் ஈசா?"

"நானும் சக்தியும் ஒன்றுதான்?"

"அடக்கடவுளே! இத்தனை நாளா கும்பிட்டுக்கிட்டு இருக்கேன். இதை அப்பவே சொல்லித் தொலைக்கறதுக்கு என்ன?"

இன்றைய பக்தர்களின் நிலையும் இப்படித்தான் இருக்கிறது!

"எல்லாம் ஒன்று" என்கிறான் இறைவன். "இல்லை..... வேறு வேறு!" என்கிறான் மனிதன்.

இந்த மனிதனை நல்வழிப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் மதங்களை உண்டாக்கினார்கள்.

ஆனால் இன்றைய மதங்களுக்கு இருக்கிற கவலை - மனிதனை எப்படி வாழவைப்பது என்பதல்ல! கடவுளை எப்படி வாழவைப்பது என்பதுதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏது தமிழ்த் தொண்டு



எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! அதுவே தமிழ் பக்தி. அதை வெளிக்காட்ட தமிழில் அர்ச்சனை கட்டாயமாக்கப்பட வேண்டும் என்கிறார்கள்.

அவர்களது கோரிக்கை நியாயமானது: ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். ஏனெனில், மொழியும் பேச்சும் கடவுள் நமக்களித்த வரம். மொழியின் பணி, உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது: நமது எண்ணத்தை உணர்த்துவது.

அதேசமயம், தமிழில் அர்ச்சனை செய்வதோடு தமிழின் அழியாத ஆன்மிக இலக்கியங்களை சாமானிய பக்தர்களுக்குக் கொண்டு செல்லவும் வழிவகுக்க வேண்டும். சாதாரண இலக்கியங்களா அவை!

இறைவனின் பரந்து விரிந்த தோள்கள், ஒரு முறை விம்மிப் பூரிப்படைந்ததாம். எப்போது தெரியுமா?

பாற்கடலைக் கடைந்து, அமிர்தத்தை தேவர்களுக்கு வழங்கிய வெற்றியின்போதோ, இரணியன், ராவணன் ஆகியோரை அழித்து வெற்றி பெற்றபோதோ, கிருஷ்ணாவதாரத்தில் பெற்ற வெற்றியின்போதோ - பூரிப்படையாத அவன் தோள்கள், வேதம் மற்றும் உபநிஷதங்களின் உண்மைப் பொருளை அழகு தமிழில் நம்மாழ்வார் பாடியபோதுதான் பூரித்து விரிந்தனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமங்கையாழ்வாரின் திருப்பணியால் மனமகிழ்ந்த ஸ்ரீரங்கநாதன், அவர் முன் தோன்றி "உமக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

அதற்கு அவர் "நம்மாழ்வார் உட்பட ஆழ்வார்களின் பாசுரங்கள் அனைத்தும் வேதத்துக்குச் சமமாக மதிக்கப்படவேண்டும். அவர் அருளிச் செய்த திருவாய்மொழிக்கு திருவிழா நடத்தவேண்டும்" என்றார்.ஸ்ரீரங்கநாதனும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்.

வைகுண்ட ஏகாதசிக்கு முன்பாகப் பத்து நாட்கள் மற்ற ஆழ்வார்களின் திவ்வியப்பிரபந்தம் ஓதப்படும். வைகுண்ட ஏகாதசியிலிருந்து பத்து நாட்கள் நம்மாழ்வாரின் திருவாய்மொழி ஓதப்படுகிறது. இதுவே தமிழ் விழா, தமிழ்ப் பாசுரங்களின் திருவிழா!

வேதங்களையும் வேதாந்தங்களையும் விளக்கும் இந்த இலக்கியங்களை ஒருமுறை படித்தாலே போதும்..... நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஏறக்குறைய 1,500 முதல் 1,600 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்த் தீபத்தை ஏற்றியது புரியும். தேவாரம், திருவாசகம், திவ்வியப்பிரபந்தம் முதலான தமிழ் இலக்கியங்களை ஒவ்வொரு கோயிலும் நாள்தோறும் விதிமுறைப்படி கட்டாயமாக இசைக்கவேண்டும் என்பதையும் கட்டாயமாக்க வேண்டும். தமிழில் அர்ச்சனை செய்யவேண்டும் என்பதை வலியுறுத்துவோர், இதையும் தங்கள் கோரிக்கையில் சேர்த்து வற்புறுத்தலாமே!

அப்படிச் செய்தால் அதுவே தமிழ்மொழியின் மீதுள்ள உண்மையான பக்தி: அதுவே தமிழுக்குச் செய்யும் உண்மையான தொண்டும் ஆகும்!

*- என். ஸ்ரீநிவாஸன் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை விஞ்சி நிற்கும்
# காஞ்சி ஸ்ரீசங்கர மடம்!



ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மை உடையது காஞ்சி ஸ்ரீசங்கர மடம். இந்த மடத்தின் 68வது பீடாதிபதியாக வீற்றிருந்தவர் தான் மகாபெரியவர் என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் ஸ்ரீசந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்.

ஆதிசங்கரர் ஸ்தாபிதம் செய்த இந்த மடத்தின் பெருமைகள் எண்ணிலடங்கா! ஆதிசங்கரர் - ஓர் அவதார புருஷர். அத்வைதம் நம் நாட்டில் தழைத்தோங்க அடிகோலியவர்.

ஆதிசங்கரரின் அவதாரம் குறித்து 1955ம் வருட விகடன் தீபாவளி மலரில் வெளியான கட்டுரையில் இருந்து சில பகுதிகளை இங்கே வெளியிடுகிறோம்.

இந்திய தேசத்தில் எத்தனையோ மன்னாதி மன்னர்கள் எல்லாம் தோன்றியிருக்கிறார்கள். செயற்கரிய அருஞ்செயல்கள் செய்து புகழும் பெற்றிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் மிஞ்சக்கூடிய வகையில் சங்கரர் என்னும் மகான் தோன்றினார். முப்பத்திரண்டு வருடங்களே வாழ்ந்தார் என்றாலும், அவர் ஸ்தாபித்த அத்வைத வேதாந்தம் உலக தேசங்களையெல்லாம், அறிஞர்களையெல்லாம் பிரமிக்க வைத்தது! அது சாஸ்வதமாக நின்று, என்றென்றும் அந்த மகானின் பெயரும் மகிமையும் மேதாவிலாசமும் நிரந்தரமான தொரு ஸ்தானத்தைப் பெறும்படி செய்தது.

சங்கரர் என்னும் அவதாரத்தினுள்ளே சச்சிதானந்தமே உருவெடுத்து நின்றது என்று இந்திய நாடு நம்புகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ்ணு "அடி காணமுடிய வில்லை!" என உண்மையை ஒப்புக்கொண்டு நின்றார்.

மொத்தத்தில் இருபெரும் தெய்வங்களின் அகங்காரம் அழிந்தது. ஆணவம் அழிப்பவன் அருணகிரி அழகன் என்பதைக் கூடியிருந்து பார்த்தோர் உணர்ந்தனர்.

இப்படி சிவன் ஜோதிப் பிழம்பாக நின்று அருள்பாலித்ததை நினைவுகொள்ளும் விதமாக திருவண்ணாமலையில் தீபமேற்றப்பட்டு சிவனுக்குரிய விழாவைக் கொண்டாடப்படுகிறது.

இன்னொரு கதையும் நடைமுறையில் உள்ளது. சிவன் திரிபுராசுரர்களையும் அவர்களின் உறைவிடமான திரிபுரங்களையும் அழித்து தேவர்களைக் காப்பாற்றி அருள் புரிந்தார். இந்தக் கார்த்திகைத் திருநாளில்தான் திரிபுர சம்ஹாரம் நடந்தது. எனவே, இது சிவனுக்கு விருப்பமான நாளாகக் கொண்டாடப்படுகிறது.

விண்ணுக்கும் மண்ணுக்குமாக நெருப்புப் பிழம்பாக சிவபெருமான் உயர்ந்தோங்கி நின்ற திருத்தலம்தான் திருவண்ணாமலை. நிகழ்வு நடைபெற்ற மாதம் கார்த்திகை; திதி பௌர்ணமி; நட்சத்திரம் கிருத்திகை.

இந்தப் புனித நாளைச் சிறப்பிக்கும் விதமாக வருடந்தோறும் மலைமீது மகாதீபம் ஏற்றப்படுகிறது.

## மூன்று தெய்வத் திருவிழா!

மொத்தத்தில் குறிப்பிட்ட தெய்வத்துக்குரிய திருநாள் என்றில்லாமல் சிவன், முருகன், விஷ்ணு என்ற மூன்று தெய்வங்களுக்கும் உரிய திருநாளாகக் கொண்டாடப்படுவது கார்த்திகைத் திருவிழா எனலாம்.

இதைக் கருத்தில் கொண்டே, பரணிதீபம், மகாதீபம், விஷ்ணுகார்த்திகை என மூன்று நாட்கள் கார்த்திகை விழா கொண்டாடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சாரதா தேவியார் உபதேசங்கள்

❁ உன் சாதனப் பயிற்சியிலும், சொல்லிலும் செயலிலும் உண்மையாக இரு. அப்போது எவ்வளவு இன்பமாக உள்ளோம் என்பதை உணர்வாய். உலகிலுள்ள எல்லாப்பிராணிகளின் மீதும் ஆண்டவனது கருணை மழைபெய்கின்றது. அது வேண்டும் எனக் கேட்பது அவசியம் இல்லை. நீ உண்மையாகத் தியானம் பழகு. அப்போது ஆண்டவனின் அளவற்ற கருணையின் இயல்பை உணர்ந்து கொள்வாய். ஆண்டவன் நேர்மையையும், சத்தியத்தையும், அன்பையுமே விரும்புவான். வெளிப்பகட்டான வாய் வார்த்தைகள் அவனைத் தீண்டுவதில்லை.

❁ ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் நம்பிக்கை வை. அவர் உன் துன்பங்களை நீக்கி மன அமைதியளிப்பார். கடவுள் நாமத்தை ஜெபி. பிறருடைய பாவங்களையெல்லாம் தாம் தாங்கிக் கொண்டதால், ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடைந்த துன்பங்களை எண்ணிப்பார். அப்போது உன் உடலும் உள்ளமும் பரிசுத்தமடைந்து விட்டதை நீ உணர்வாய். பரிசுத்தமான தெய்வப் பிறவியாக இருந்த போதிலும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிறர் பொருட்டு துன்புற்றதையும், ஆயினும் அதே சமயம் தமது ஆனந்த பரவசத்தையும், தேவியினைப் பற்றிய தியானத்தின் இன்பத்தையும் ஒரு கணமும் இழக்காமல் வாழ்ந்ததையும் மட்டும் நீ நினைத்தாயானால் உன் துக்கமும், துன்பமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.

❁ நான் உனக்கு ஒன்று கூறுவேன். உனக்கு மன அமைதி வேண்டுமானால் பிறரிடத்துக் குற்றம் காணாதே. அதற்குப் பதிலாக உன் குற்றங்களையே எண்ணிப்பார். இவ்வுலகம் முழுவதையும் உன்னுடையதாக்கிக் கொள்ளப் பழகு. குழந்தாய் ! இவ்வுலகில் யாரும் உனக்கு அன்னியரல்ல. இவ்வுலகம் முழுவதும் உனதே. ஒருவன் பிறரிடத்துக் குற்றங்காணப் புகுவானேயாகில் அவனது மனமே முதலில் மாசடைகின்றது.

❁ ஒருவன் வார்த்தையாலும் பிறரை துன்புறுத்தக் கூடாது. அனாவசியமாக ஒருவன் பிறருக்கு பிரியமாயிராத மெய்யை உரைத்தலாகாது. கடுமொழிகள் பேசுவதால் ஒருவனது சுபாவமே கொடுமையாக மாறுகிறது. நாவை அடக்கும் சக்தி ஒருவனுக்கு இல்லாது போயின், அவன் தனது மன நுண்மையை இழக்கிறான். ஒரு **"நொண்டியைப் பார்த்து, அவன் எப்படி முடமானான் என்று வினவக் கூடாது"** என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவது வழக்கம்.

❁ ஒரு மனிதனுக்கு இச்சைகள் இருக்கும்வரை அவனது பிறப்புச் சுழலுக்கு முடிவேயில்லை. அவ்விச்சைகளே, அவனை ஒன்றன்பின் ஒன்றாகப் பல பிறப்புகளை எடுக்கச் செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபீடம்

## முழுமையான தவம் எது ?

நல்ல உணவை விரத நாட்களில் உபவாசமிருந்து, மற்ற நாட்களில் குறைந்த அளவு எளிமையுடன் உண்ண வேண்டும். இது சீரர் கடைப்பிடிக்கும் தவம். நாம் பேசுகின்ற பேச்சு எல்லோருக்கும் பயன்படுகின்ற மேலான பேச்சாக இருக்க வேண்டும். அதற்காக, நாவை அடக்கிப் பழக வேண்டும். இது வாக்கின் மூலம் நாம் செய்கின்ற தவமாகிறது. மனத்தில் எழும் எண்ணங்களை நல்லவனாக வகைப்படுத்திக் கொண்டால் மனத்தால் நாம் தவம் செய்தவர்களாவோம். இவ்வாறு மனம், வாக்கு காயம் ஆகிய திரிகரணங்களையும் மேலான வாழ்விற் செலுத்திப் பழகுவது நம்மைப் பெருநிலைக்குக் கொண்டு செல்லும் முழுமையான தவமாகிறது.

## வழிபட ஏற்ற நேரம் எது ?

காலைதான் இறைவழிபாட்டிற்கு ஏற்ற நேரம். காலையில் மனம் தெளிந்து இருக்கும். அப்போது இறைவனை வழிபடுவது நல்லது. வெள்ளைத்துணியில் சாயம்படுவது போல் தெளிந்த உள்ளத்தில் இறையுணர்வு படியும். சூரிய வணக்கம் செய்த பிறகு வழிபாடு செய்ய வேண்டும். மாலையில் கோயில் வழிபாடு செய்யலாம். இரவு படுக்கைக்கு முன் தியானம் செய்யலாம்.

## சிவபக்தியைக் காட்டிலும் சக்தி வழிபாட்டிற்கு அதிகமான மதிப்பு இருப்பது ஏன் ? சக்தி, சிவத்தின் ஒரு அங்கமா ?

இரண்டு பக்கம் இல்லாத நாணயம் இல்லை. சிவமும் சக்தியும் ஒன்றே. தங்கமும் ஆபரணமும் ஒன்றே. தங்கத்திற்கு நிறம் உண்டு. ஒளி உண்டு. மதிப்பு உண்டு. ஆனால் உபயோகப்படுத்த முடியாது. அதற்கு வடிவம் அமைத்துக் கொடுத்தால் பிரயோசனமாக இருக்கும். நகையை அணிந்து கொள்ளலாம். கட்டித் தங்கமான்னால் பெட்டிக்குள் தான் வைக்க முடியும். சிவம் என்பது கட்டித்தங்கம். சக்தியென்பது அணிமயமான தங்கம். உருவமில்லாத கட்டித் தங்கம் சிவம். சிவத்திற்கு உருவம் தந்தது சக்தி.

சர்க்கரைச் சாடியில் இருக்கும் ; பாகாகச் செய்து கோலா போட்டால் கவர்ச்சியாகவும், உருசியாகவும் இருக்கும். சர்க்கரையைக் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவம் கொடுத்து மிட்டாயாகச் செய்து கொடுத்தால் தான் குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள். உருவம் பெற்றால் தான் மனதில் பதியும். அதனால் தான் சிவபெருமான் சக்தியாலே உருவம் எடுத்துக் கொண்டார். சிவத்துக்கு உருவம் தந்தது சக்தி. **"ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு"** என்பது திருவாசகம். ஆண்டவனுக்குச் சக்திதான் வடிவம். அதனால் சிவத்தைவிட, சக்திதான் நமக்கு அதிகமாகப் பிரயோசனப்படுகிறாள். சிவத்தை நாம் ஒரு இராத்திரி வழிபடுகிறோம். அது சிவராத்திரி. சக்தியை நாம் ஒன்பது நாட்கள் வழிபடுகிறோம். அது நவராத்திரி. சிவராத்திரிக்கு ஒருதுளி தண்ணீர் கூடக் குடிக்காமல் விரதமிருக்கிறோம். மிக அவசியமானால் இளநீர் குடிப்போம். ஆனால் நவராத்திரியிலே பொங்கல், சுண்டல், பிரசாதம், அவல் என எவ்வளவு பிரமாதம்? அப்பா கொஞ்சம் அடிப்பார். அம்மா கொஞ்சம் அணைப்பாள். அப்பா மகன் திருந்த வேண்டும் என்ற கருணையால் தான் அடிப்பார். ஆனால் அடி வலிக்கும். அம்மா அணைப்பாள்; அதனால் சக்திக்கு அதிகமான கௌரவம் உண்டு.

**வீடு அல்லது முத்தி என்றால் என்ன ?**

உலகப் பற்றுக்களிலிருந்து விடுபட்ட நிலையே. இதுபற்றிய சித்தாந்தக் கருத்து யாது? சித்தாந்தம் முத்திக்கு மேலாக சிவானந்த அனுபவத்தில் அழுந்துவதைக் கூறி வீடுபேறு என்பது முடிந்த பயன் என்பதைக் கூறும். வீடு என்பது பாசநீக்கமும் பேறு என்பது சிவானந்த அனுபவமும் ஆகும்.

**அத்து விதமாவது யாது?**

இறையும் உயிரும் கலக்கும் நிலையே அத்துவிதமாகும். துவிதம் என்றால் இரண்டு. அத்துவிதம் என்றால் இரண்டல்லாதது ; ஆனால் ஒன்றல்ல. சித்தாந்தம் கூறும் இந்தக் கலப்பு நீரும் உப்பும் கலப்பது போல் என்று கூறல் பொருந்தும்.

**சைவசமயமாவது யாது?**

சிவனையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலிய நான்கு நெறிகளினாலும் சிவனை அடையும் சமயம் சைவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூஜ்யத்துக்குள்ளே ஒரு ராஜ்யம்

"ஓம் பூர்ணமத, பூர்ணமிதம், பூர்ணாத் பூர்ண முதச்யதே பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவ ஸிஷ்யதே"

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

என்று தொடங்குகிறது ஈஸா வாஸ்ய உபநிடதம்

பரிபூரணமான வஸ்துவிடமிருந்து பூர்ணத்தைச் சேர்ந்தாலும், எடுத்தாலும், பூர்ணத்தால் பெருக்கி, வகுத்தாலும், கிடைப்பது பரிபூரணமே. அதுவே பரிபூரண ஆனந்த நிலை என்பது இதன் நேரடிப் பொருள்.

பூஜ்யம் எனும் "0" (Zero) உடன் மற்றொரு பூஜ்யத்தைக் கூட்டினாலும், கழித்தாலும், வேறொரு பூஜ்யத்தினால் பெருக்கினாலும், வகுத்தாலும் முடிவில் கிடைப்பதும் பூஜ்யம்தான்! இது கணிதத் தத்துவம்.

இதில் அடங்கியுள்ள கணிதத் தத்துவத்தைவிட, இது விளக்கும் தெய்வத் தத்துவமும், ஆத்ம தத்துவமும், அதனின்று பிறக்கும் அமைதித் தத்துவமே சிறப்பானது.

உருவமில்லாத பரப்பிரம்மமும், உருவமுள்ள சச்சிதானந்தமும், பரிபூரண தத்துவம்தான். எல்லையற்ற தன்மையிலிருந்து எல்லையில் அடங்கம் வஸ்துக்கள் பிறந்து, எல்லையற்று வியாபிக்கின்றன. எல்லையற்ற பொருள்களையும், புவனங்க்ளையும் படைத்த பின்பு, அது எல்லையற்று வியாபித்திருப்பதுதான் விசித்திரம் என்று மேலே சொன்ன வரிகளுக்கு விளக்கம் தருகிறார் **ஸ்வாமி சரவணானந்தா!**

உடலோடு ஒட்டிக்கொண்டு செயல்பட்டுக்கொண்டிருக்கும் வரைதான் "கை" எனும் அங்கத்தை நாம் கையாகப் பாவிக்கிறோம். அதனைத் தனியாகப் பிரித்து உடலிலிருந்து எடுத்துவிட்டால், கையோ விரலோ செயல்பட முடியாது. அதுபோல் உலகில் வாழும் ஜீவன்கள் அனைத்தும் பரப்பிரம்மம் என்னும் பகவானின் அங்கங்கள். அவரினின்றும் த்னித்துப் பிரித்துப் பார்த்தால், அவை வெட்டிப்போட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையைப்போல், பயனற்றதாக ஆகிவிடும். எனவே பூரணமான இறைவனிடமிருந்து, பிரிக்க முடியாததே ஜீவாத்மாக்கள்.

இந்தக் கருத்துப்பட மேற்கண்ட உபநிடத வாக்கியங்களுக்கு விளக்கம் தந்திருக்கிறார் **ஸ்ரீ வேதாந்த ப்ரபுபாத்** அவர்கள்.

இரவில் வழி நடந்து செல்லும் வழிப்போக்கன் இருட்டில் மரம் ஒன்றைப் பார்த்து, பேய் என்று பயப்படுகிறான். அந்த வினாடி மரமும் அதன் கிளைகளும், இலைகளும் பேயாகி, அவனைப் பயமுறுத்துகின்றன. திடீரென அந்த இடத்தில் வெளிச்சம் வந்து விழும் போது, பேய் மறைந்து மரம் மட்டும் தெரிகிறது.

பரமாத்மா என்பவன் அமைதியின் வடிவம், சாந்தியின் உருவம். அதனைப் புரிந்து கொள்ள முடியாதவன், பரமாத்மாவின் உலகப் பந்தங்களையும், பிரச்சினைகளையும் மட்டும்கண்டு, பேயைக் கற்பனை செய்து கொண்டு பயப்படும் மனிதனைப்போல, கவலையுறுகிறான். பரமாத்மாவின் உண்மைகளை அவன் உணரும் போது, உலகம் அவனுக்கு அமைதி நிறைந்ததாகவே தோன்றும் என இந்த வரிகளுக்கு விளக்கம் தருகிறார் **ஸ்வாமி சின்மயானந்தா.**

பூஜ்ஜியம் என்பது சூன்யமல்ல. அது ஒரு பரிபூரணத் தத்துவம். அந்த பூஜ்ஜியத்துக்குள் இருந்து கொண்டு, இந்த உலக ராஜ்ஜியங்களை எல்லாம் ஆளுகின்றவன்தான் இறைவன்.

## சான்றோர் சொல்லமுதம்

1. நினைவும் எண்ணமும் மெழுகுவர்த்தியைப் போன்றவை, அதை அணைக்கலாம், மீண்டும் ஏற்றலாம்.

   *- தத்துவ மேதை கிருஷ்ணமூர்த்தி*

2. மனித குலத்தைவிட உயர்ந்தது எதுவுமில்லை, தன்னையோ பிறரையோ இழிவாக எண்ணக்கூடாது.

   *- மகாபாரதம்*

3. உரிமையை அனுபவிக்க வேண்டுமானால் கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும்.

   *- தமிழ்த்தாத்தா உ.வே. ஐயர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையாரிடம் மாட்டிக்கொண்ட சனீஸ்வரனார்........!

ஒரு காரியத்தைச் செய்ய தொடங்கும்போது நாம் பிள்ளையாரை நினைத்து தோப்புக்கரணம் போட்டு பிள்ளையாரை வணங்குவோம். அது சிலவேளை பிழைத்து விட்டால் போதும், சி இது என்ன சனியன் பிடித்த கதையாப் போச்சு என்று சனிஸ்வரனின் செயலை எண்ணி கவலைப்படுவோம் அல்லவா.....? அதனால் பலருக்கு காரியம் பிழைப்பதற்கு கதை கெட்டு விடுவதற்கு, அந்த சனிஸ்வரனாரே பொறுப்பாளி ஆகி விடுகிறார் என்பது நமது நம்பிக்கை மட்டுமல்ல சரித்திர வரலாற்று ரீதியான உண்மை. தெய்வத்துள் அதிக தீங்கு செய்யும் தெய்வமும், கடைசியில் அதிக நன்மையைத் தருவார் என்ற நம்பிக்கையுமுண்டு. இவர் ஒரு நேரம் சிவனையே அலைய வைத்த கதையை நாம் படித்து இருக்கின்றோம். ஆனால் இவரையும் ஏமாற்றி அலைய வைத்துவிட்டார் நமது மோதகவயிற்றுப் பிள்ளையார் அவர்கள். அப்படி ஒருநாள் மனம் புழுங்கிய பிள்ளையார் ஏதோ விடயத்தில் தவறு நடந்துவிட அட சனியன் பிடித்த வேலையாப் போச்சு என்று வார்த்தையால் சத்தமாய்ச் சொல்லிவிட அதே நேரம் அந்த இடத்துக்கு வந்துகொண்டிருந்த சனிஸ்வரனுக்கு கேட்டு விட்டதும் பெரும்கோபத்தோடு சண்டைக்கு போனாராம். இதைக்கண்ட பிள்ளையார் சிரித்தபடி சனிஸ்வரனாரே எல்லோரையும் பிடித்து ஆட்டுவது போல் என்னையும் எண்ணி விடாதீர். நானும் என்பலத்தை காட்ட வேண்டிய நேரம் வந்துவிட்டது. இருவரும் மோதித்தான் ஆகவேண்டும். ஆனால் இன்று எனக்கு தலைக்கு மேலே வேலை இருக்கிறது.

அதனால் இன்னொரு நாளைக்கு வைத்துக் கொள்வோம் என்றார். இன்னொரு நாளை என்றால் அதுதான் எப்போ என்று எனக்கு எழுத்தில் தரவேண்டும் என்றார். எனக்கும் பல வேலை உண்டு. நான் அடிக்கடி இங்கு வந்து மினக்கட முடியாது. எனக்கு எழுத்தில் உறுதியாக எழுதித்தர வேண்டும் என்றார் சனிஸ்வரனார். உடனே வெளியில் வந்த பிள்ளையார் என்னிடம் பேப்பரும் இல்லை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேனையும் இல்லை, இந்த எழுத்தாணி தான் உண்டு. இதனால் என் தொப்பையில் நீயே உன் கையால் எழுதிவைத்து விட்டுபோ என்று தனது தொப்பபையை காட்டினார். அதன்படி சனிஸ்வரனார் நாங்கள் போர் செய்வது நாளை மாலை என்று எழுதி விட்டு மகிழ்ச்சியோடு கைகளைத் தூக்கி ஆரவாரித்தபடி வெளியில் சென்றார். பிள்ளையார் சிரித்தபடி ஆசனத்தில் அமர்ந்து மோதகத்தைக் கடித்தார் எழுதியதைப் பார்த்து சிரித்தபடி.

காலை விடிந்தது. கதிரவன் உச்சி வந்து பின் மேற்கு திருப்பியபடி இருந்தது. நேரம் நெருங்கிய வண்ணம் நடந்தது. சனிஸ்வரனாரும் பெரிய மகிழ்ச்சியோடு தன் திறமையைக் காட்ட தன்பரிபாலத்துடன் பிள்ளையாரின் இருப்பிடம் நோக்கி பவனி வந்தார். உள்புகுந்து எங்கே பிள்ளையார் தயாரா என்று கேட்டார். பிள்ளையார் சிரித்தபடி என்ன விடயம் என்று கேட்க, சனிஸ்வரனார் என்ன வேடிக்கை காட்டுகிறீரா இன்று மாலை தானே நமது போர் என்றார். உடனே பிள்ளையார் சிரித்தார். என்ன சிரிப்பு கிடக்கு எழுத்தில் தந்தபடி சண்டை ஆரம்பம் என்றார். பிள்ளையார் மீண்டும் சிரித்தபடி மடச்சனியே.... இதோ பார். நீதானே உன் கையால் தானே இதை எழுதியது வாசித்துப்பார் என்று தன் சட்டையை தூக்கி தனது தொப்பையைக் காட்டினார். அதில் நாளை மாலை என்றே இருந்தது. அதை படித்த சனிஸ்வரனார்க்கு அதி உச்ச கோபம் வந்தது. ஆனால் அவரால் ஏது செய்ய முடியும். வெட்கி தலை குனிந்தபடி, அம்மை அப்பனையும், அம்மையையும் ஏமாற்றி மாம்பழம் பறித்த மாதிரி என்னிடமும் நீ விளையாடி விட்டாய். நான் நாளை வருகின்றேன் என்று கூறிச் சென்றவர் இன்றுவரை சென்றபடியே இருக்கின்றாராம்.

தேடல் செய்தவர் : **பொன்மணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரம்மத்தை அறிந்தவன் பிராமணன்

இந்து மதம் அணுவைக்குடையும் விஞ்ஞானிகளை குழப்பும் - பரம்பொருளைத் தேடும் மெஞ்ஞானிகளைக் கவரும் - இந்த மாபெரும் மதத்தினுள் - உலகம் வியக்கும் தத்துவங்கள் ஆயிரம் இருந்தும் - மனச்சாந்தி கொடுக்கும் உபதேசங்கள் ஆயிரம் இருந்தும் - வாழ்க்கைக்கு வழிகாட்டும் பாதைகள் ஆயிரம் இருந்தும் - சுயலாபத்திற்காக - சுயநலத்திற்காக - திரிக்கப்பட்ட சடங்குகளையும் - வித்தை காட்டும் திருவிழாக்களையும் மட்டுமே நம்மீது திணித்து - மதத்தைப் பற்றிய ஒரு முழுமையற்ற பார்வையை நம்முன் உருவாக்கி - நமது அன்றாட வாழ்வில் தேவையற்ற பல சிக்கல்களை ஏற்படுத்தும் எண்ணற்ற காரணிகளுள் - மிக முக்கிய இடத்தை வகிப்பது பிராமணியம் என்ற உண்மை - இன்று பலராலும் - எழுதப்பட்ட ஒரு உண்மை - ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு உண்மை - உணரப்பட்ட ஒரு உண்மை.

அதே சமயம் - இங்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயம் : பிராமணர்கள் வேறு - பிராமணியம் வேறு.

பிராமணர்கள் என்பவர்கள் யார்? இவர்களை அடையாளம் காண்பது எப்படி? பிராமணர்கள் அல்லாதவர்களை - பிராமணர்கள் என்ற எண்ணத்துடன் நாம் பார்ப்பதால் - அவர்களுடன் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்வதனால் - உருவாக்கும் நமது பார்வை - நமது அன்றாட வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கிறது? - என்பது போன்ற கேள்விகளுக்கு பதில் கூற முயல்கிறது இந்த இதழ் கட்டுரை. அதற்கு அத்திவாரமாக அமைகிறது பின்வரும் சிறு விளக்கம் :

இன்றைய காலகட்டத்தில் - கம்ப்யூட்டர்கள் செய்யும் விடயங்களுக்கு - அவற்றால் செய்ய முடிந்த விடயங்களுக்கு - அவை இனியும் செய்யப்போகும் விடயங்களுக்கு அளவே கிடையாது என்பது இந்தத் துறையில் பரிச்சயமுடையவர்களுக்கு நன்கு விளங்கும். அதே சமயம் - இந்தத் துறையில் பரிச்சயமற்றவர்கள் கூட - அன்றாட வாழ்வில் நாம் பார்க்கும் எத்தனை எத்தனையோ விடயங்களை கருத்தில் கொண்டு அவற்றின் தகுதிகளை ஊகித்துக் கொள்ளலாம்.

இன்று - கம்யூட்டர்கள் மாணவர்களுக்குப் பாடம் கற்பிக்கின்றன - நோயாளிகளுக்குச் சத்திர சிகிச்சை செய்கின்றன - நாம் பயணம் செய்யும் மாபெரும் விமானங்களை இயக்குகின்றன - பிரமாண்டமான தொழிற்சாலைகளை பரிபாலித்து காவல் புரிகின்றன - பலரின் காமக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களியாட்டங்களுக்குத் துணையாக இருந்து அவர்களின் இச்சைகளைப் பூர்த்தி செய்கின்றன - அடுக்கிக்கொண்டே போகலாம்.

அதே சமயம் - சிறிது சிந்தித்தால் - மாணவர்களுக்குப் பாடம் கற்பிக்கும் ஒரு கம்யூட்டரை நாம் விரிவுரையாளர் என்பதில்லை - நோயாளிக்குச் சத்திர சிகிச்சை செய்யும் ஒரு கம்யூட்டரை நாம் டாக்டர் என்பதில்லை - நமது விமானத்தை இயக்கும் ஒரு கம்யூட்டரை நாம் பைலட் என்பதில்லை - காமக் களியாட்டங்களுக்குத் துணையாக இருக்கம் ஒரு கம்யூட்டரை நாம் டார்லிங் என்பதில்லை.

ஒரு கம்யூட்டரை டார்லிங் என்று அழைப்பதில் என்ன தவறு இருக்கிறது? ஒரு கம்யூட்டரை டாக்டர் என்று எதற்காக அழைக்கக் கூடாது? எதற்காக அவை செய்யும் தொழிலைப் பார்த்து பெயர் மாற்றம் செய்வதற்கு நாம் தயங்குகிறோம்? ஒரு பெயரில் அப்படி என்ன பெரிய விடயம் அடங்கியிருக்கிறது?

இப்படியான கேள்விகளை நாம் கேட்பதில்லை. காரணம் - நாம் சிந்திக்கத் தெரிந்த மனிதர்கள்.

ஒரு பெயரில் - ஒரு பெயருடன் இணைந்து - அந்தப் பெயருக்குப் பின்னால் - ஆயிரமாயிரம் அர்த்தங்கள் - ஆயிரமாயிரம் இயல்புகள் இருப்பது நமக்குத் தெரியும். உதாரணமாக - கற்பு என்ற பெயருக்கும் - அதற்கு நாம் கொடுக்கும் அர்த்தத்தையும் மையமாக வைத்துத்தான் சிலப்பதிகாரம் அர்த்தமுடையதாகிறது.

சூதாட்டம் என்ற சொல்லுக்கும் - அதற்கு நாம் கொடுக்கும் அர்த்தமும் தான் மகாபாரத்திற்கு முதுகெலும்பாக அமைகிறது. ஆகவே - பெயர் தான் இங்கு எல்லாமே. ஆழ்ந்து சிந்தித்தால் - பெயர்களையும் அதற்கு நாம் கற்பிக்கும் அர்த்தங்களையும் மையமாக வைத்துத்தான் மனித வாழ்க்கையே இங்கு இயங்குகிறது - இயக்கமடைகிறது.

அப்படியானால் - இந்தச் சந்தர்ப்பத்தில் நமது மனதில் எழும் - பிராமணர்கள் என்னும் பெயருடையவர்கள் யார்? - அவர்களை அடையாளம் காண்பது எப்படி? - என்பது போன்ற கேள்விகளுக்கு - இந்திய முன்னாள் ஜனாதிபதி - மாபெரும் தத்துவ ஞானி - டாக்டர் ராதாகிருஷ்ணனால் எழுதப்பட்டு - இன்று பல பல்கலைக்கழகங்களில் பாட நூலாக உபயோகிக்கப்படும் - "இந்திய தத்துவம்" என்ற பிரபல நூல் - பின்வருமாறு பதில் கூறுகிறது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பகலில் பிரகாசிக்கும் அந்தச் சூரியனைப் போல - இரவில் ஜொலிக்கும் அந்தச் சந்திரனைப் போல - சதா காலமும் தியானத்தில் மூழ்கியதால் - மூழ்கியிருப்பதால் - தீப்பிழம்பு போல ஜொலிக்கும் பிராமணனே! நான் உன்னைச் சிரம் தாழ்த்தி - கைகூப்பி வணங்குகிறேன். நீ பிரம்மத்தை அறிந்தவன் - உணர்ந்தவன் - அதனால்தான் உன் பெயர் பிராமணன். பிரம்மத்தை அறிந்ததால் - நீ வேடம் போடாதவன் - உண்மை பேசுபவன். வானமே கூரை - என வாழும் நீ - உலக மனிதர்கள் ஆசைப்படும் பொருட்களை வெறுப்பவன். அதனால் தான் உனக்கென எதையுமே நீ சேர்ப்பதில்லை. நீ ஸம்சார சாகரத்திலிருந்து விடுபட்டவன் - அதனால் தான் உனக்கு இனி பிறவிகளில்லை. நிர்வாணமடைந்த நீ - உன்னை மட்டுமல்ல உனது முன்னைய பிறவிகளையும் அறிந்தவன். இக்கரைப் பச்சை அக்கரைப் பச்சை - என எந்தப் பச்சையிலும் நாட்டமற்றவன் நீ. பற்றற்றவன் நீ - அதனால் தான் - தாமரை இலைத் தண்ணீர் போல - உலக செல்வங்களில் - உலக போகங்களில் ஒட்டாது நீ வாழ்கிறாய். அச்சமற்றவன் நீ. உனது நன்மை வேண்டி யாருக்கும் தலை வணங்காதவன் நீ. தளைகளிலிருந்து விடுபட்டதால் - திரிகரண சுத்தியுடன் காரியம் செய்பவன் நீ. பலனை எதிர்பாராது காரியம் செய்யும் நீ - மனம் வாக்கு காயத்தால் யாருக்குமே தீங்கிழைக்காதவன். கடைந்தெடுத்த ஞானியாகிய நீ - யாருடைய மரணத்திற்கும் ஒரு போதும் காரணமாக இருந்ததில்லை. எந்த உயிருக்கும் நீ தீங்கு விழைவித்ததில்லை - விழைவிப்பதில்லை. உனக்கென கொடுக்காத எதையும் நீ எடுத்துக் கொள்ளாதவன். ஒரு ஜீவாத்மா செய்ய வேண்டியவற்றையெல்லாம் செய்து முடித்த தூய பிராமணனே! பிரம்மத்தை அறிந்தவனே! பிரமத்துடன் சங்கமமாக விருப்பவனே! நான் உன்னைச் சிரம் தாழ்த்தி - கைகூப்பி வணங்குகிறேன்".

அபாரமாக இல்லை? ! அற்புதமாக இல்லை? ! படிக்கும் பொழுதே பிரம்மத்தைத் தரிசித்த சுகானுபவத்தை ஏற்படுத்தும் இவை தான் பிராமணன் என்னும் பெயருடைய ஒருவனின் இயல்புகள் - இந்த இயல்புகளைக் கொண்டவனின் பெயர் தான் பிராமணன் - இந்த இயல்புகளைக் கொண்டிருந்தால் தான் ஒருவனை நாம் பிராமணன் என அழைக்க முடியும். அவன் வணக்கத்துக்குரியவன். எந்த நூலைப் புரட்டினாலும் - எந்த ஆய்வைப் படித்தாலும் - பிரம்மத்தை அறிந்தவன் தான் பிராமணன் - என்ற இந்தக் கூற்றில் எதுவித மாற்றமுமில்லை.

ஆகவே - பிராமணன் என்ற சொல்லுக்கு ஒரு தனிப்பட்ட அர்த்தமுண்டு - ஒரு விஷேட அர்த்தமுண்டு - ஒரு புனிதமான அர்த்தமுண்டு அந்தச் சொல்லுக்குரிய அந்தஸ்தை அதனுடன் இணைந்துள்ள தர்மத்தை - அதைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோகிக்கும் முறையை - நமது பார்வை பிரதிபலிக்க வேண்டும் - அது நமது அன்றாட வாழ்வில் உபயோகிக்கப்பட வேண்டும்.

நாம் விரும்பினாலும் சரி - விரும்பாவிட்டாலும் சரி - நாம் தெரிவு செய்தாலும் சரி - தெரிவு செய்யாவிட்டால் சரி - நம்பில் பெரும்பாலோரினது வாழ்க்கையின் ஒவ்வொரு திருப்பு முனையும் பிராமணர்களுடன் சம்பந்தப்பட்டதாகவே இருக்கிறது - ஒவ்வொரு திருப்பு முனையிலும் பிராமணர்களே நிற்கிறார்கள். நினைத்துப் பார்த்தால் - பிறந்தவுடன் ஏற்படும் இந்தத் தொடர்புகள் - இல்லை - பிறக்கும் முன்னரே ஏற்படும் இந்தத் தொடர்புகள் - இறப்பில் மட்டுமல்ல - இறந்த பின்பும் தொடர்கின்றன.

நம்மில் பலருக்கும் பிராமணர்களுக்கும் இருக்கும் இந்த உறவினால்தான் - நம்பில பலரது வாழ்க்கையில் அவர்கள் எந்நேரமும் சம்பந்தப்பட்டு இருப்பதனால் தான் - நமது வாழ்க்கையில் அவர்களும் எங்களுடன் தொடர்ந்து வருவதனால்தான் அவர்களைப் பற்றிய நமது பார்வை சரியாக அமைய வேண்டும் - முழுமையாக அமைய வேண்டும். ஏனெனில் - கணவனைப் பற்றிய மனைவியின் பார்வை சரியாக அமையாதபோது வீட்டில் பிக்கல் பிடுங்கல்கள் - மக்களைப் பற்றிய மந்திரியின் பார்வை சரியாக அமையாத போது நாட்டில் பிக்கல் பிடுங்கல்கள் - ஒரு நாட்டைப் பற்றி இன்னொரு நாட்டின் பார்வை சரியாக அமையாத போது உலகில் பிக்கல் பிடுங்கல்கள். பிராமணர்களைப் பற்றிய தமது பார்வை சரியாக அமையாத போது வாழ்க்கை முழுவதுமே பிக்கல் பிடுங்கல்கள்.

இந்த இடத்தில் நாம் கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயம்: மாணவர்களுக்கு பாடம் கற்பிப்பதனால் மட்டும் எவ்வாறு ஒரு கம்யூட்டர் விரிவுரையாளராகி விடுவதில்லையோ - ஒரு நோயாளிக்குச் சத்திர சிகிச்சை செய்வதனால் மட்டும் எவ்வாறு ஒரு கம்யூட்டர் டாக்டராகி விடுவதில்லையோ - காமக் களியாட்டங்களுக்கு துணையாக இருப்பதால் மட்டும் எவ்வாறு ஒரு கம்யூட்டர் தாசியாகி விடுவதில்லையோ - அது போலவே - அப்படியே - ஒருவன் பிறந்த குலத்தைப் பார்த்து அவனைப் பிராமணனாகப் பார்ப்பது ஒரு முழுமையற்ற பார்வை - ஒருவன் செய்யும் தொழிலைப் பார்த்து அவனைப் பிராமணனாகப் பார்ப்பது ஒரு முழுமையற்ற பார்வை - ஒருவன் படித்த ஏடுகளைப் பார்த்து அவனைப் பிராமணனாகப் பார்ப்பது ஒரு முழுமையற்ற பார்வை - ஒருவன் தெரிந்து வைத்திருக்கும் சடங்குகளைப் பார்த்து அவனைப் பிராமணனாகப் பார்ப்பது ஒரு முழுமையற்ற பார்வை. அது மட்டுமல்ல - அணியும் உடை - போடும் ஆபரணங்கள் நீண்ட தலை முடி - உண்ணும் உணவு - உணவு இவை எவற்றாலும் கூட ஒருவன் பிராமணனாகிவிடுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த முழுமையற்ற பார்வையுடன் கடந்த காலத்தில் நாம் சில மனிதர்களை எடை போட்டபோது · இப்பொழுதும் எடை போடும் போது - இந்த முழுமையற்ற பார்வையுடன் கடந்த காலத்தில் நாம் சில மனிதர்களுடன் தொடர்புகள் ஏற்படுத்திக் கொண்ட போது - இப்பொழுதும் ஏற்படுத்திக் கொள்ளும் போது - நமது வாழ்க்கையில் எத்தனை எத்தனை பிக்கல்கள் பிடுங்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நிதானமாகச் சிந்தித்து - நமது தவறுகளை ஏற்றுக் கொள்வதற்கு நமக்கு ஒரு துணிவு வேண்டும் - ஒரு பக்குவம் வேண்டும்.

இன்றிலிருந்து - நமது வாழ்க்கை இங்கு அன்றாடம் ஒரு கொண்டாட்டமாக அமைய வேண்டுமானால் - ஒரு பண்டிகையாக அமைய வேண்டுமானால் - தேவையற்ற பயங்களும் அர்த்தமற்ற தயக்கங்களும் நமது அன்றாட வாழ்க்கையைச் சீர்குலைக்காது இருக்க வேண்டுமானால் - எதற்குமே அஞ்சாத ஒரு மனப்பான்மை நமக்கு வேண்டுமானால் - பிரம்மத்தை அறிந்த பிராமணர்களை அடையாளம் கண்டு - அமுதம் இது - நஞ்சு இது - என்று முடிவு செய்யும் ஆய்வுத்திறன் நமக்கு வேண்டும் - அதை அமுல்படுத்தும் துணிவு நமக்கு வேண்டும். இந்தத் திறன் மட்டும் நமக்கு வந்து விட்டால் - இதற்கு மட்டும் நாம் துணிந்து விட்டால் - அன்றிலிருந்து நமது வாழ்க்கையில் - அர்த்தமற்ற பயங்களில்லை - ஆதாரமற்ற தயக்கங்களில்லை - தேவையற்ற பொருட்செலவுகளில்லை.

வாழ்க்கையில் மகிழ்ச்சி வேண்டி - அமைதி வேண்டி - ஆனந்தம் வேண்டி - நேற்று ஏதேதோ செய்தோம் - இன்று ஏதேதோ செய்கிறோம் - நாளையும் ஏதேதோ செய்வோம்.

எதையுமே இழந்துவிட மாட்டோம் இதையும் ஒரு தடவை முயற்சி செய்து பார்ப்பதனால் - நிச்சயமாக.

**காரணம் - எதையுமே நாம் இங்கு கொண்டுவரவில்லை - அதை நாம் இழந்துவிடுவதற்கு.**

**போர்வைகளற்ற நிர்வாணம் இந்த அவதானம்.**
**அகத்தே மாசில்லாதவனுக்கு நிர்வாணம் ஒரு புனிதம்.**
**அது ஒரு சத்தியம்.**

*சமூக ஆய்வாளர் :*

***டாக்டர் ஸ்ரீதரன் அவர்கள்***
*இங்கிலாந்து.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப்பை மறந்த மனிதர்கள்

அந்தி சாயும் பொழுதில் - மாந்தோப்பிலிருந்து வரும் அந்தக் குயிலின் பாட்டு ஆனந்தம் மேகம் கறுக்கும் வேளையில் - மலையடி வாரத்தில் தோகை விரித்து ஆடும் அந்த மயிலின் நடனம் அற்புதம். எகிறிக் குதிக்கும் அந்த மானை - கச்சிதமாகப் பாய்ந்து கவ்வும் அந்த வேங்கையின் லாவகம் அதிசயம்.

குயிலுக்குப் பாட்டு - மயிலுக்கு ஆட்டம் - வேங்கைக்குப் பாய்ச்சல் - இப்படி இப்படியே - தான் படைத்த ஒவ்வொரு உயிரினத்திற்கும் - எதை எதையோ - ஏதேதோ காரணத்திற்காக ஈந்த இயற்கை - சிரிப்பு என்ற அற்புதத்தை - அருமருந்தை மனிதனுக்கு மட்டுமே அளித்திருக்கிறது. இயற்கை சிருஷ்டித்த உயிரினங்களிலேயே சிரிக்கத் தெரிந்த ஒரே ஒரு உயிரினம் மனிதன் தான்.

உடலை உலுப்பி - உள்ளத்தை மலர வைத்து - மூளையின் அதிர்வலைகளை அமைதியாக்கி - இதயத்தின் சுமைகளைக் குறைத்து - தசைகளைத் தளர வைத்து - உடலின் இரசாயனத்தையே நமக்குச் சாதகமாக மாற்றும் - நம்மிலிருந்து வெடித்துச் சிதறும் அந்தச் சிரிப்பு - இயற்கை மனிதனுக்கு அளித்த ஒரு மாபெரும் மருந்து. சிரித்துக் கொண்டேயிருப்பவனை நரை அணுகுவதில்லை - பிணி நெருங்குவதில்லை. வாய்விட்டுச் சிரிப்பவன் கவலைப்படுவதில்லை - மரணத்தைக் கண்டு அஞ்சுவதில்லை. அங்கம் குலுங்கச் சிரிப்பவனுக்கு தூக்க மாத்திரைகள் தேவையில்லை - வைத்தியரின் துணை அவசியமில்லை.

ஊரை மறந்து - உலகத்தை மறந்து - தன்னையே மறந்து சிரிக்கும் அந்தச் சிரிப்பு ஒரு மாபெரும் மருந்து மட்டுமல்ல - அது ஒரு உன்னத தியானம் - ஒரு மோனம். வாய்விட்டுச் சிரிக்கும்போது நமது உடல் மறைகிறது - உள்ளம் மறைகிறது. சிரிப்பு - சிரிப்பவன் இரண்டுமே ஒன்றாகி பிரபஞ்ச சூத்திரம் புலனாகிறது. அது சுயதரிசனத்தின் வாசல் படி. எண்ணற்ற யோகிகள் - ஞானிகள் - சிரிப்பை ஒருவகைத் தியானமாகப் போதித்ததற்கு ஆதாரங்கள் ஏராளம். உபாதைகளுக்கு மருந்தாக - கவலைகளுக்கு எதிரியாக - தியானத்தின் ஒரு வடிவாக சுய தரிசனத்தின் வாசற்படியாக - இயற்கை கொடுத்த அந்தச் சிரிப்பை நம்மில் பெரும்பாலானோர் மறந்து எத்தனை எத்தனையோ வருடங்களாகின்றன.

இயற்கை கொடுத்த எதையுமே - எதுவுமே மறக்கவில்லை. குயில் பாட மறக்கவில்லை மயில் ஆட மறக்கவில்லை - வேங்கை பாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்கவில்லை. ஆனால் நாம் மட்டும் இயற்கை கொடுத்த அந்தச் சிரிப்பை - குழந்தைப் பருவத்தைத் தாண்டியதுமே மறந்து விட்டோம்.

அன்றாடம் நாம் எல்லோருமே சிரிக்கிறோம். ஆனால் அது சிரிப்பல்ல. அது நடிப்பு. நமது சுயரூபத்தை மறைக்க - நமது மன அழுக்குகளை மறைக்க - நம்மைச் சுற்றியிருப்பவர்களை ஏமாற்ற - உதடுகளை அசைத்து - பற்களைச் சிறிது நேரம் காட்ட முயலும் முயற்சிக்குப் பெயர் சிரிப்பல்ல.

நம்மவர்கள் கூடும் எந்த ஒரு பொது இடத்திற்கு - நிகழ்ச்சிக்குச் சென்றாலும் - ஒரு அபிஷேகம் - ஒரு அரங்கேற்றம் - ஒரு இசை நிகழ்ச்சி - ஒரு நாடகம் - ஒரு பிரசங்கம் - அங்குள்ள நம்மவர்களில் பெரும்பாலானோர் - சிரிக்கத் தெரியாத மனிதர்களாக - உதடுகளை மட்டுமே அசைத்துக் கொண்டு - எதையோ பறி கொடுத்தவர்கள் போல - சதா நேரமும் எதைப் பற்றியோ தீவிரமாக சிந்தித்துக் கொண்டு - முகத்தைத் தொங்கப் போட்ட வண்ணம் - மிகவும் "சீரியஸாக" - மிகவும் இறுக்கமாக இருக்கிறார்கள்.

பரமனையே பயப்படுத்தும் இறுக்கம் நம்மவர்களின் இந்த இறுக்கம்!

சற்று உற்று நோக்கினால் - குருஷேத்திரத்தில் பார்த்திபனின் ரதத்தை நாளை இவர் தான் ஓட்ட வேண்டும் என்று பரமனால் பணிக்கப்பட்டதைப் போலவும் - செவ்வாய் கிரகத்திற்கு முதன் முதலாகச் செல்ல இருக்கும் செய்மதியை இயக்குவதற்கு அரசாங்கத்தினால் பலவந்தமாகக் கட்டளையிடப்பட்டது போலவும் - பக்தர்கள் பலரின் முன்னிலையில் சிவலிங்கம் சிருஷ்டிக்கப்போகும் சாமியாரைப் போலவும் - அவ்வளவு இறுக்கமாக - அவ்வளவு அழுத்தமாக - அவ்வளவு "சீரியஸாக" இருக்கிறார்கள். அப்படி என்ன கவலை நம்மவர்களுக்கு? ஏன் இந்த இறுக்கம்? எதற்காக இந்த அழுத்தம்?

இந்த இறுக்கத்தின் - அழுத்தத்தின் மூலகாரணம் நமது அறியாமை. பிரபஞ்ச விதிகளைப் பற்றிய - நாம் வாழும் இந்த உலகைப் பற்றிய - நமது வாழ்க்கை நியதிகளைப் பற்றிய நமது அறியாமையின் மறுவடிவே வாய்விட்டுச் சிரிக்கத் தெரியாத நமது முகங்கள்.

கீதையின் வடிவில் பரமன் சொல்கிறான் - கேட்கிறான்

**எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது - எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறத - எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும். எதற்காக நீ அழுகிறாய் ?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களை மூடி - சிறிது நேரம் அமைதியாக அமர்ந்து - பரமனின் விளக்கத்தை தியானித்தால் - அப்பொழுது ஓடும் நமது இறுக்கம் - அதில் தோன்றும் நமக்கு சிரிப்பு.

நான் பிறக்க முன்னும் இந்த உலகம் இருந்தது - சீராகவே இயங்கியது. நான் இறந்த பின்பும் இந்த உலகம் இருக்கும் - சீராகவே இயங்கும். இடையில் வந்த நான் இங்கு எதைச் செய்து விடப் போகிறேன்? வரும் பொழுது ஆடையின்றி வந்த நான் - போகும் பொழுதும் அப்படித்தான் போகப் போகிறேன். இடையில் அமைந்த இந்த வாழ்க்கை அந்த இயற்கை ஈந்த கொடை. அதை உல்லாசமாக - மகிழ்ச்சியாக - பண்டிகையாக - கொண்டாடாமல் - அனுபவிக்காமல் எதற்காக அழுது வடிகிறேன்? எதற்காக கவலைப்படுகிறேன்? கவலைப்பட்டு என்னால் இங்கு எதைத்தான் செய்துவிட முடியும்?

கீதையின் வடிவில் பரமனின் பிரகடனம்

**நீ எதை எடுத்தாயோ அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது. நீ எதைக் கொடுத்தாயோ அது இங்கிருந்தே கொடுக்கப்பட்டது. இன்று உன்னுடையது நாளை மற்றொருவருடையதாகிறது.**

அப்பா - அம்மா - மனைவி - பிள்ளைகள் - வீடு - தோட்டம் - கார் - பட்டம் - பதவி - எல்லாமே நான் உலகிற்கு வந்த பின் உருவாக்கிய வெறும் பந்தங்கள் - சொல்லித் தெரிந்த பந்தங்கள் - கேட்டுப் புரிந்த பந்தங்கள் - வெறும் சொற்கள் - நான் மறைந்ததும் தானாக மறையும் சொற்கள்.

எதுவும் புரியாமல் - புரிய மறுத்து - வாழ்க்கையின் சாரதி நான்தான் என்று முட்டாள்த்தனமாக நினைத்து - நான் இல்லாவிட்டால் என்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு வாழ்க்கையே இல்லை என்று நினைத்து - நான் போகும்போது நான் சேர்த்த இத்தனை பொருட்களும் கப்பலில் அனுப்பப்படும் என்பது போல - தேவையற்ற எத்தனை எத்தனையோ சுமைகளை தலையில் ஏற்றிக் கொண்டு - பொதிமாடுகள் போல உலகில் உலவாமல் - முகத்தை "உம்" என்று வைத்துக் கொள்ளாமல் - படைத்தவன் செலுத்துகிறான் எனது ரதத்தை என்ற உண்மையை நினைத்து - நமது வாழ்க்கையை ஒரு கொண்டாட்டமாகக் கருதினால் - அப்பொழுது பொங்கும் அந்தச் சிரிப்பு. அதுதான் இயற்கை நமக்கு ஈந்த கொடை. மாறிய நமது சிந்தனையுடன் வெடித்துக் கிளம்பும் அந்தச் சிரிப்பு - உண்மையை அறிந்து விட்ட - சத்தியத்தைத் தரிசித்து விட்ட ஞானச்சிரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சிந்தனை மட்டும் நமக்கு வந்துவிட்டால் - அந்தப் பக்குவம் மட்டும் நமக்குக் கிட்டிவிட்டால் - இங்கு நடக்கும் எல்லாமே சிரிப்பு - எல்லோருமே சிரிப்பு - எப்போதுமே சிரிப்பு. நாம் செய்யும் அத்தனையும் வேடிக்கை - நம்மைச் சுற்றி நடப்பவை யாவும் வேடிக்கை.

புரியவில்லை! இதோ ஒரு உதாரணம் :

எல்லைகளற்றுப் பரந்து கிடக்கிறது ஆதி அந்தமற்ற பிரபஞ்சம் - அதில் ஒரு மிகச் சிறிய கோளமாக மிதக்கிறது. நாம் வாழும் இந்தப் பூமி - அதில் எங்கோ ஒரு சிறிய இடத்தில் நாம் இலங்கை என்று பெயரிட்ட ஒரு சிறு தீவு - அதற்குள் ஒரு சிறிய யாழ்ப்பாணம் - யாழ்ப்பாணத்திற்குள் ஒரு அச்சுவேலி - அங்கே - இரு மனிதர்கள் - வேலுப்பிள்ளையும் சுப்பிரமணியமும் சண்டையிடுகிறார்கள்! சண்டையோ சண்டை - அப்படி ஒரு சண்டை! என்ன சண்டை? எதற்காகச் சண்டை?

இருவரின் காணிக்கும் நடுவில் - இடையில் வளர்ந்த வேப்ப மரத்தை விலக்கி வேலி அடைப்பதா? அல்லது உள்ளடக்கி வேலி அடைப்பதா?

ஊர்ப் பெரியவர்களின் முடிவு: மரம் இருவருக்கும் சொந்தம். எனவே வேலி மரத்தின் இரு பக்கத்திலும் - மரத்தை முட்டியவாறு - தொடாமல் இரு துண்டுகளாக - இரு புறமும் நிற்க வேண்டும்.

இருபது வருடங்களின் பின்பு - இன்று - வேலுப்பிள்ளை மண்ணோடு மண்ணாகிவிட்டார். சுப்பிரமணியம் சாம்பலோடு சாம்பலாகி விட்டார். காணியில்லை - வேலியில்லை. வேப்பமரம் மட்டும் இன்றும் நிற்கிறது.

சிரிப்பு வரவில்லை! நினைத்து நினைத்துச் சிரியுங்கள். நமக்குள் இருக்கும் அந்த எண்ணற்ற வேலுப்பிள்ளைகளை நினைத்து - நமக்குள் இருக்கும் கணக்கற்ற அந்தச் சுப்பிரமணியங்களை நினைத்து நினைத்து சிரியுங்கள்.

இதுதான் நாம் மறந்து விட்ட சிரிப்பு - இதுதான் இயற்கை நமக்குக் கொடுத்த சிரிப்பு. இப்பொழுது நமக்கு நரையில்லை - பிணியில்லை - அச்சமில்லை - ஆணவமில்லை.

**போர்வைகளற்ற நிர்வாணம் இந்த அவதானம்.**
**அகத்தே மாசில்லாதவனுக்கு நிர்வாணம் ஒரு புனிதம்.**
**அது ஒரு சத்தியம்.**

*அறிவாளர் :*

***டாக்டர் ஸ்ரீதரன் அவர்கள்***
*இங்கிலாந்து.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில், விக்கிரக அமைப்புகளும் பூசை, வழிபாட்டு முறைகளும்

உலகெலாமாகி வேறுமாய் உடனுமாய் எங்கும் நிறைந்திருக்கும் இறைவனின் உருவத்தைப் பண்டைத் தமிழ் மக்கள் கல்லில் வடித்து, முதன் முதல் மரத்தடியில் வைத்து வணங்கினர். இதனாலேயே பழைய தமிழ் நூல்கள் இறைவனை "ஆல் அமர் செல்வன்" எனக் குறிப்பிடுகின்றன. பின்னர் நாகரிகம் முதிர முதிர. சிற்பம் வளர வளர, ஆகமம் பெருகப் பெருக. மரத்தடிகள் மாளிகைகளாய், மண்டபங்களாய், கோபுரங்களாயின.

ஆதித் தமிழகத்துக் கோவில்கள் அழியத்தக்க மண், மரம், உலோகம், செங்கல், சுண்ணாம்பு இவற்றால் ஆனவை. பின்னர் மலையைக் குடைந்து கோவில் கட்டும் கலை பரவிற்று. விசித்திரசித்தன் என்ற பட்டப்பெயர் பெற்ற பல்லவ அரசன் மகேந்திரவர்மன் காலத்தில் என்றும் அழியாத நிலையில் இருக்கத்தக்க குகைக் கோவில்கள் கட்டப்பட்டன. பாடல்பெற்ற கோவில்கள், ஈசுவரம், பெருங்கோவில், ஆலக்கோவில், சுரக்கோவில், ஞாழற்கோவில், கொகுடிக்கோவில், இளங்கோவில், மாணிக்கோவில், தூங்கானைமாடம் எனப் பல பெயர் பெற்றிருந்தன என்பது அப்பர், சுந்தரர், ஆளுடைய பிள்ளையார் ஆகிய மூவரினதும் திருப்பதிகங்களிலிருந்து அறியலாம். பண்டைய அரசர் பற்பல கோவில்களை அமைத்திருப்பினும் ஒரே அரசன் இறைவனுக்கு எழுபது ஆலயங்கள் எழுப்புவித்தான் என்பதை,

*"............இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோளீசற்கு*
*எழில்மாடம் எழுபது செய்துலகம் ஆண்ட*
*திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்*
*திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே."*

என்று திருமங்கையாழ்வார் போற்றிப் பரவுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் வழிபாட்டு வழிகளும்
# திருமண கலாச்சார முறைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பொருள் வீற்றிருக்கும் இன்றைய திருக்கோவில்கள், சக்தியை அதிகரித்துப் பக்தர்கள் பயனடைவதற்காகவும் நல்லெண்ணத்தை வளர்ப்பதற்காகவும் சிற்பசாஸ்திர முறைப்படி அமைந்துள்ளன. ஆகம விதியின்படி அமையாத ஆலயங்கள் மடாலயங்கள் எனப்படும்.

ஆலயங்களின் அமைப்புப் பற்றி அனுபூதிமான்கள் கூறி வைத்துள்ளனர். அவற்றின் அடிப்படையில் பெரியோர்கள் கூறிய குறிப்புக்களைக் கொண்டு சிலவற்றைக் காணலாம்.

*"குறிகளும் அடையாளமும் கோயிலும்*
*நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்*
*அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்*
*பொறியிலீர் மனம் என்கொல்புகாததே."*

என்கிறார் அப்பர் சுவாமிகள் தமது தேவாரத்தில். கோவில் வெறுங்கட்டிடமன்று. அது தத்துவ அமைப்பு. அவ்வமைப்பின் நுட்பம் தெரியாது கும்பிட்டால் அது கல்லாக. மண்ணாக. வேடிக்கையாகவே தோன்றும். ஒரு யோகி காலை நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கும் முறையாக அமைந்துள்ளது கோவில். யோகி கோவில்; யோகியின் காலைப் போன்றது. முன்கோபுரம்; மூலாதாரத்தை ஒத்தது. கொடிக்கம்பம்; தோப்புகளை நிகர்த்தது பலிபீடம்; சிரசு போன்றது கர்ப்பக்கிரகம்; சிரசின் மத்தியை ஒத்தது மூலஸ்தானத்திலுள்ள தாமரைப்பூக் கண்ணாடியும் விளக்கும். அங்குள்ள தீபஒளி இறைவனின் அருவுருவத்தை நினைவூட்டும். புறக்கோவில் அமைப்பு உடற்கோயிலின் பரிணாமம் என்பதற்கு திருநாவுக்கரசரின் **"காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக"** என்ற தேவாரமும் **"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்"** என்ற திருமூலர் திருமந்திரமும் சான்றாகும்.

கோவில்களில் கோபுரம் கடவுளது விராடசொரூபம், ஸ்தூபி - இறைவனுடைய ஸ்தூல ரூபம், உள்ளிருக்கும் திருமேனி - சூக்குமலிங்கம். கோவில்களில் உள்ள முக்கிய மண்டபங்கள் கர்ப்பக்கிருக மண்டபம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்ருபன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபம், அலங்கார மண்டபம், சபாமண்டபம் என்று ஆறாகும். இவ்வாறு மண்டபமும் முறையே மூலாதாரம். சுவாதிட்டானம். மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை என்ற ஆறு ஆதாரங்களையும் குறிக்கின்றது என்பர். கோவில்களில் அமைந்துள்ள மூன்று வீதி-தூலசூக்கும, காரண தேகங்களையும், ஐந்துவீதி- அன்னமயம், பிராணமயம் மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்ற பஞ்சகோசங்களையும், ஏழு வீதி - உடம்பிலுள்ள இரசம், இரத்தம், மாமிசம், மேதை, எலும்பு, மச்சை, சுக்கிலம் என்ற ஏழு தாதுக்களையும் குறிப்பதாகும், இவை எல்லாவற்றையும் குறிக்கக்கூடிய ஒரு வீதி அமைந்த கோவில்களுமுண்டு. இங்குள்ள கதவுகள் கோபம், ஆசை, அவா, அகங்காரம் என்பவைக்கு காரணமான அவித்தையை உணர்த்துகின்றன. சிவசந்நிதானத்தில் மறைவுக்காக இடப்படும் திரைச்சீலை மாயையைக் குறிக்கும். மூலமூர்த்தி, நந்தி, பலிபீடம் முறையே பதி, பசு, பாசத்தை குறிப்பவையாகும். கொடிக்கம்பம் மூலத்தான விம்பத்திற்கு நேராக நிறுத்தப்பட்டிருக்கும். கம்பத்தைப் போலச் சீரம் நேராக இருந்து அசையாது தியானிக்கையில் பரமானந்த சொரூபியாகிய பரமசிவன் தரிசனமாகும் என்பதை அறிவிக்கின்றது இக்கொடிக் கம்பம். இப்படியாக நமது திருக்கோவில்களின் அமைப்பு பல நுட்பமான உண்மைகளைச் சொல்லாமல் சொல்கின்றது.

உருவமற்ற கடவுளை உணர்வதற்கு உருவத் துணை வேண்டும். உருவம் உள்ளத்தில் பதிவது போல் அருவம் பதிவதில்லை. ஆதலின் மக்களுக்குச் சமயப் பற்றையும் அறிவையும் உண்டாக்க கண்ணையும், கருத்தையும் ஈர்க்கும் அழகிய விக்கிரகங்களைப் சைவப் பெருமக்கள் பல வடிவில் அமைத்து கோவில்களில் வைத்து வணங்கினர். விக்கிரகங்கள் மூலவர் விக்கிரகம், உற்சவர் விக்கிரகம் என இரு வகைப்படும். மூலவர் விக்கிரகங்கள் மரம், சுதை, கல் படிகம், மண் முதலிய பலவகைப் பொருட்களாலும் செய்யப்பட்டிருக்கின்றன. இராமேச்சுரத்து இலிங்கமாகிய இராமநாதசுவாமி மணலால் ஆனதென்றும் பழனிமலை மீதுள்ள தண்டாயுதபாணி நவபாஷாணத்தால் ஆனதென்றும் அறிகிறோம். உற்சவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரகங்கள் செம்பு, பித்தளை, வெள்ளி, வெள்ளீயம், பொன் ஆகியவை கலந்த பஞ்ச உலோகங்களால் செய்யப்பட்டன. விக்கிரகங்கள் பலவாக இருந்தாலும் அவை ஒவ்வொன்றிலும் தத்துவ அறிகுறிகள் அமைந்துள்ளன. விக்கிரகங்களில் உயர்வு தாழ்வு கருதக்கூடாது. ஒருவித மண்ணில் பலவகையான பாண்டங்கள் வனையப்பட்டாலும், அவைகள் உடைந்ததும் ஒரே மண்ணாவது போலவும், பொன்னால் பல நகைகள் செய்தாலும் அவை உருக்கப்பட்டதும் பழையபடி பொன்னாகுவது போலவும் **"மறிகடலும் குலவரையும் மண்ணும் விண்ணும் திருந்தொழிய தாரகையும் திசைகளெட்டும் ஓரிரண்டும் பிறவுமாய பெருந்தகை"** யாம் இறைவனை அவரவர் மனநிலைக்கு ஏற்ப பல திற விக்கிரகங்களில் ஆராதித்து வருகின்றனர். அநுபூதிமான்கள், அர்ச்சாவதாரமாம் இவ்விக்கிரகங்களுக்குத் தரும் தத்துவங்கள் சிலவற்றை இங்கு காண்கிறோம்.

## சிவலிங்கம் :

இது எங்கும் வியாபகமாய் அருவமாய் காணமுடியாத இறைவனைக் காணுவதற்கு ஏற்பட்ட மூர்த்தம், லிங்கம், பீடம் என்பன உலகத்தோற்றத்தைக் குறிக்கும் சிவ சக்திகளின் குறிகள் என்று புராணங்களும், மற்றைய நூல்களும் கூறும். பீடம் வேள்விக் குண்டத்தையும், லிங்கம் அனற்பிழம்பையும் குறிக்கின்றன என்று கூறுவாருமுளர். லிங்கங்கள் பஞ்சலிங்கம், எட்டுப்பட்டை லிங்கம், 16 பட்டைலிங்கம், 108 பட்டைலிங்கம் எனப் பலவகைப்படும்.

## அம்பாள் விக்கிரகம் :

பாதி ஆண் பாதி பெண்ணாகக் கருதப்படுபவர் இறைவன், பெண் பாதி சக்தியாக உருப்பெற்றது. அச்சக்தி சிவனிடத்தில் அமைதியான நிலையில் உமையாகவும் பார்வதியாகவும் கடுமையான நிலையில் துர்க்கை, காளி, சாமுண்டி, பைரவி முதலியோராகவும் விஷ்ணுவிடத்தில் இலக்குமியாகவும், பிரமனிடத்தில் சரசுவதியாகவும் இணைக்கப்பட்டுள்ளது. அம்பிகை எல்லாத் தேவர்களுக்கும் தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று உலகத்தையும் ஆட்சி செய்து திரிபுவனேசுவரியாகவும் பேரும் புகழும் தண்ணளியும் கொண்டு இராஜராஜேஸ்வரியாகவும் வேறும் பல நாமங்களையும் கொண்டு கருணைத் தெய்வமாக விளங்குபவளும் எம்பெருமாட்டியே.

## விநாயக விக்கிரகம் :

விநாயக விக்கிரகம் நினைக்க எளிது, மறக்க முடியாதது. இவரது பேரருளைக் குறிக்க நீண்ட தும்பிக்கை. எமது குறைகளை நன்றாகக் கேட்கப் பெரும் காதுகள், சர்வவியாபக சக்தியின் நினைவுக்குறி பெருவயிறு. உயர்திணை, அஃறிணை என்ற பாகுபாட்டிற்கு அப்பாற்பட்டது. பரம்பொருள் என்ற உண்மையையும் விநாயக விக்கிரகம் உணர்த்துகிறது. விநாயக விக்கிரகங்கள் வலம்புரி விநாயகர், இடம்புரி விநாயகர், நர்த்தன விநாயகர் எனப் பலவகையில் அமைந்துள்ளன.

## சுப்பிரமணியர் விக்கிரகம் :

கருணை விழியும், பொன்மேனியும், மயிலூர்தியும் சேவற்கொடியும், வள்ளியும், தெய்வயானையும் வேலுங்கொண்ட உருவம் முருகப்பெருமான். வள்ளியும் தெய்வானையும் வேலும் முறையே இச்சாகிரியா ஞானசக்திகளையும், மயில் விந்துவையும் சேவல் நாதத்தையும், வேல் கலையையும் உணர்த்துகின்றன. **"நாதவிந்து கலாதீ நமோ நம"** என்பார் அருணகிரிநாதர். முருகப்பெருமான் உயிர்கட்கு வள்ளி நாயகி மூலம் இகத்தையும், தெய்வானையின் மூலம் பரத்தையும், தம்கரத்தில் விளங்கும் வேலாயுதத்தின் மூலம் வீடுபேற்றையும் அருள்புரிகிறார் என்பர். தமிழ்க் கடவுளாகிய முருகன் வள்ளி தெய்யவானையுடன் கூடிய சுப்பிரமணியனாகவும், தண்டாயுதபாணியாகவும் ஆறுதிருமுகங்களையுடைய பெருமானாகவும் காட்சியளிக்கக் காண்கிறோம்.

## அரங்கநாதன் விக்கிரகம் :

திருப்பாற்கடலில் அரவணையில் அறிதுயில் செய்யும் கோலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கநாத வடிவம். அப்பெருமான் உந்தியில் அயனின் தோற்றமும் அழகாகக் காட்சியளிக்கிறது. இது திருமாலின் மூர்த்தங்களில் ஒன்று. திருப்பாற்கடல் விந்து தத்துவத்தையும் அரவணை நாததத்துவத்தையும் உணர்த்துகின்றன. அரங்கநாத தெய்வம் நாகபாம்பின் மீது பள்ளி கொண்டிருக்கிறது. அரங்கநாதனின் நாபிக் கமலத்தில் உள்ள அயனது தோற்றம் படைப்புக்கு அறிகுறி என்ப திருமாலின் வேறு பல மூர்த்தங்களில் கோதண்டராமன், இலட்சுமி நாராயணன், வேணு கோபாலன், சந்தான கோபாலன், கண்ணபிரான் முதலியவை அடங்கும்.

## நடராஜர் விக்கிரகம் :

சிவபிரானுக்கு சந்திரசேகரர், தட்சணாமூர்த்தி அர்த்தநாரீஸ்வரர், உமாமகேசர், பிட்சாடனர், சோமாஸ்கந்தர், கஜசம்காரர், ரிஷபாரூடர், கங்காதரன், திரிபுராந்தகர் போன்ற மூர்த்தங்கள் உள. அவற்றுள் ஒன்று நடராஜர் விக்கிரகம். ஐந்தொழில் நிகழ அப்பன் கூத்தாடுகிறான். அவரது திருநடனங்களில் பிரதானமானவைகள், கால் மாறியாடு நடனம், பாண்டரங்கம், கொடுகொட்டி, சந்தியாநிருத்தம், சண்டதாண்டவம், வீரட்டாகாசம், கௌரிதாண்டவம், ஆனந்தநடனம், அனவரத தாண்டவம், பிரதம மகாசங்காரநிருத்தம் என்பவைகளாம். எம்பெருமானின் இரண்டு முக்கிய நடனக்கோலத்தில் ஒன்று நடராஜனின் தூக்கிய கால், வான் நோக்கி நிற்கும் திருவாலங்காட்டு நெடுங்கோலம். மற்றையது எடுத்த பொற்பாதமாக இருக்கும் தில்லைத்திருக்கோலம். முன்னையது இரத்தப் புரட்சிக்கும் பின்னையது படைப்பாதி தொழில்களின் நிகழ்ச்சிக்கும் அறிகுறியென்பர்.

நமது கோவில்களில் உள்ள விக்கிரகங்கள் அனைத்தும் உருவம் இல்லாத கடவுளுக்கு உருவம் கொடுக்கும் முயற்சிகளிலும் தத்துவசோதனைகளிலும் தோன்றியவைகளே எனலாம். இத்தனை ஆண்டுகளாக பலகோடி மக்கள் இவ்விக்கிரகங்களை நினைத்தும் வாழ்த்தியும் வணங்கியும் வந்துள்ளனர். நன்மக்களின் நோக்கும், ஞானிகளின் நோக்கும் குருமார்களின் நோக்கும் இவ்விக்கிரகங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளக்கொணா ஆற்றல் வாய்ந்த சக்தியைக் கொடுத்துள்ளன. சமயகுரவர் நால்வராலும், பன்னிரண்டு ஆழ்வார்களாலும் வேறும் பலராலும் போற்றி வளர்க்கப்பட்ட தெய்வீக சக்தி வாய்ந்த விக்கிரக வழிபாடு எமது சமயத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும்.

உலகெலாமுணர்ந்து ஓதற்கரியவனான இறைவன் விரும்புவது சிவாகமத்தினால் செய்யப்படும் பூசை என்பதை உணர்ந்து காஞ்சிபுரத்தில் உமாதேவியார் சிவபெருமானைப் பூசித்ததை,

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனையென உரைத்தருள
அண்ணலார்தமை அர்ச்சனைபுரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லவளாயின பெருந்தவக்கொழுந்து"

என்று பெரியபுராணத்தில் போற்றுகிறார் சேக்கிழார். அருச்சுனன் சிவபூசை செய்து பாசுபதாஸ்திரம் பெற்றான். முருகப்பெருமான் சிவபூசை செய்த இடம் திருச்செந்தூர். விநாயகப்பெருமான் பூசித்த தலம் திருச்செங்காட்டங்குடி. பிரமன் பூசித்த இடம் சீர்காழி. திருமாலின் அவதாரமான இராமச்சந்திரமூர்த்தி இராமேஸ்வரத்தில் சிவனைப் பூசித்ததாகவும் அறிகிறோம். இவர்களையன்றி மேலும்,

"இயக்கர் கின்னரர் யமனொடுவருணர்
இயங்குதீவளி ஞாயிறு திங்கள்
மயக்க மில்புலி வானர நாகம்
வசுக்கள் வானவர் தானவரென எண்ணற்றோர்
இறைவனை அர்ச்சித்து அருள் பெற்றதாக"

சுந்தரமூர்த்திசுவாமிகள் தனது தேவாரத்தில் வலியுறுத்துகிறார்.

கோவில்களில் நடைபெறும் பூசைகள் நித்யம், நைமித்திகம், காமியம் என மூன்று வகைப்படும். கோவில்களில் தினந்தோறும் நடைபெற்று வரும் பூசை நித்தியபூசை எனப்படும். வெள்ளிக்கிழமை, பிரதோஷதினம், கிருத்திகை, சதுர்த்தி மற்றும் ஆடிப்பூரம், ஆவணிமூலம், நவராத்திரி, விஜயதசமி போன்ற விசேட தினங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறும் பூசை நைமித்திக பூசை எனப்படும். குறிக்கோள் ஒன்றினை மனதில் கொண்டு அது நிறைவேறியதும் தாம் எண்ணிய அர்ச்சனை அபிஷேகம் திருவிழா முதலியவற்றை கோவில்களில் செய்விப்பதைக் காமியப்பூசை என்பர்.

பூசைகள் மூன்று வகையாக அமைந்தாலும் அபிஷேகம், அலங்காரம், வைவேத்தியம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம் கூறி வாழ்த்துதல் முதலியன அவற்றின் பொது அம்சங்களாகும். எம்பெருமானுக்கு அபிஷேகம் செய்யும் திரவியங்கள் இருபத்தைந்தாகும். இதைச் சுருக்கி 16 அல்லது 12 திரவியங்களாலும் செய்வதுமுண்டு. எண்ணெய், அரிசிமா, மஞ்சள்மா, பஞ்சகவ்வியம், பஞ்சாமிருதம், பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சாறு, பழவகைகளின்சாறு, இளநீர், அன்னம், வெந்நீர், விபூதி, குங்குமம், சந்தனம், பன்னீர், கும்பஜலம் என்பன அபிடேகத்திற்குரிய சில திரவியங்களாகும். இவற்றின் அளவும் இவ்வபிஷேகங்களினால் நாம் அடையும் பயன்களும் ஆகமத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தீர்த்தாபிடேகத்தினால் பத்துக் குற்றங்களையும், பாலினால் நூறு குற்றங்களையும், தயிரினால் ஆயிரம் குற்றங்களையும், தேனினால் பதினாயிரம் குற்றங்களையும், நெய்யினால் இலட்சம் குற்றங்களையும், இளநீரினால் எண்ணிறைந்த குற்றங்களையும் இறைவன் பொறுத்துக் கொள்கிறார் என்பர். அபிஷேகம் முடிந்த பின்னர் அலங்கரிக்க உபயோகிக்கும் ஆடை, பட்டாடைகளாகவோ அநேக வர்ணமுள்ள வஸ்திரமாகவோ இருத்தல் வேண்டும். பழமையான கிழிந்த வஸ்திரங்கள் அலங்காரத்திற்கு உகந்ததல்ல. இறைவனுக்குச் சாத்தும் புஷ்பங்கள் தாமரை, அலரி, வில்வம், துளசி, நந்தியாவட்டை, மந்தாரை, முல்லை, சண்பகம், கொன்றை, மருக்கொழுந்து எனப் பலவாகும். உரோமம், புழு இவைகளால் தீண்டப்பட்டதும், வாடியவையும், அசுத்தமான பாத்திரத்தில் கொண்டு வரப்பட்டவையும், பூமியில் விழுந்த புஷ்பங்களும் பூசைக்கு விலக்கப்பட்டனவாகும். விஷ்ணுவை வெள்ளெருக்கம் பூவால் பூசிக்கலாகாது. சிவனுக்கு தாழம்பூ உகந்ததல்ல. தேவிக்கு மந்தாரை கூடாது. விநாயகருக்கு துளசி ஏற்றதல்ல.

இறைவனுக்கு நிவேதனம் திரைபோட்ட பின்னர் நிகழும், நிவேதனம் செய்யும் அன்னம் அரை அரிசி உள்ளதாகவோ, துர்நாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையதாகவோ, உமி, கல், மணல், புழு உள்ளதாகவோ இருத்தல் கூடாது. இவை இருக்குமாகில் தரித்திரமும், வியாதியும், மரணமும், சம்பவிக்கும் என்பர்.

பூசையில் முக்கிய நிகழ்ச்சி தீபாராதனை. எமது அறியாமையை ஒழித்து, அறிவைப் பெருக்குவதற்காக தூபம், தீபம், அலங்காரதீபம், நாகதீபம், விருஷபதீபம், புருஷாமிருகதீபம், சூலதீபம், ஆமைத்தீபம், மயூரதீபம், கும்பதீபம், நட்சத்திரதீபம், மேருதீபம் போன்ற 16 தீபங்கள். இத்தீபங்களைக் காட்டும் முறையும் இவற்றால் அடையும் பெறுபேறுகளும் ஆகமத்தில் கூறப்பட்டுள்ளன. கண்ணாடி, குடை, சாமரை, விசிறி, கொடி, ஆலவட்டம் போன்ற உபசாரப்பொருட்களையும், தீபங்களைப் போல் காட்டிய பின்னர் பஞ்ச ஆரத்தி நடைபெறும். பூசைமுடிவில் ஆசார்யன் இறைவனுடைய மூலமந்திரத்தைச் செபம் செய்து இறைனிடம் சமர்ப்பணம் செய்தல் வேண்டும். இவ்வாறு சமர்ப்பணம் செய்யாத பூசைகளால் ஒருவித பயனுமில்லை. கோவில்களில் செய்யப்படும் பூசைகளில் அபிஷேகம் படைத்தல், நைவேத்தியம் காத்தல், பலிபோடுதல் அழித்தல், ஹோமம் செய்தல் அருளலும் ஆகிய ஐந்தொழிலையும் குறிப்பதாகும்.

இசைவடிவமாக இருக்கும் இறைவனை கோவிற்பூசை நேரங்களில் மகிழ்விக்க எத்தனையோ இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. இவற்றுள் மணிஓசை முக்கிய இடம்பெறுகின்றது. எல்லாப் பூசை வேளைகளிலும் தேவர்களைக் கூவியழைப்பதற்கும் அரக்கர்களைத் தூரவிரட்டுவதற்குமாகவே மணிஒலி எழுப்பப்படுகின்றது.

கோவிற்பூசை முறையைக் கூறும் ஆகமம் நுழையமுடியாத காடு என்பர். அங்கு நடைபெறும் ஒவ்வொரு கிரியைக்கும் விபரமான விளக்கமுண்டு. ஆதலின் பொறுப்பு வாய்ந்த தொண்டு செய்யும் அர்ச்சகர்கள் வடமொழி, தென்மொழிகளைப் பயின்று தேர்ச்சியடைந்து தத்துவஞான நூல்களில் நுண்புலமை பெற்றவர்களாயிருப்பின் மற்றவருக்கு எடுத்துக்காட்டாகத் துணை செய்யமுடியும்.

உயிர்களைப் பிணித்திருக்கும் ஆணவமலம், மாயாமலம் என்ற இருமாசுக்களினின்றும் விடுதலை பெற வழிபாடு ஒன்றே சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்தாகும். வழிபாடாற்றுவோர் யாதாயினும் ஒரு பொருளால் இறைவனை வழிபடுதல் மரபு. சாக்கியர் கல்லாலும், நாவரசர் சொல்லாலும், சம்பந்தர் தமிழாலும், சுந்தரர் பாட்டாலும், பாணபத்திரர் இசையாலும், மணிவாசகர் வாசகத்தாலும், குசேலர் அவலாலும், கண்ணப்பர் ஊனாலும், வந்திபிட்டாலும் வழிபாடாற்றிப் பெரும் பேறுபெற்றார்கள். தமிழ் நாட்டில் தோன்றிச் செந்தமிழை வளர்த்த நால்வரும் தமது பாடல்களில் வழிபாட்டின் சிறப்புக்களை வற்புறுத்தியுள்ளனர்.

திருக்கோவில் வழிபாடு மனதை ஒருவழிப்படுத்துவதற்கும், கீழ்ப்படிவு நீதிவழிநிற்றல், தன்னலமறுப்பு, பணிவு, இரக்கம் ஆகிய பல சிறந்த பண்பாடுகளையும் உண்டாக்குவதோடு ஈற்றில் மோட்ச சாம்ராச்சியத்தையும் அடைவதற்கு வழிபண்ணுகிறது. திருக்கோவிலுக்குச் செல்வோர் அகமும் புறமும் தூய்மையுடையவராய்ச் சென்று, கோவிலின் உள்ளிருக்கும் தெய்வத்தின் பருவவடிவமான கோபுரத்தை முதலில் வணங்கல் வேண்டும். உட்சென்றதும் திருச்சுற்றை வலம் வந்து கொடிமரம், பலிபீடம் முதலியவற்றை முறையே வணங்கல் வேண்டும். பலிபீடத்திற்கு இப்பால் நின்று வழிபடும் போது ஆணவமலத்தின் காரியமாகிய அகந்தை, மமதை, ஆசை, கோபம், மயக்கம், அஞ்ஞானம் இவைகளைப் பலியாக இடுகிறேன் ஏற்று இறைவனை வழிபடுவதற்கு ஞானஒளியைத் தந்தருளுவாயாக எனச் சிந்தித்தல் வேண்டும். பின்னர் கருவறையை அணுகி மூல மூர்த்தியை நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்குதல் வேண்டும். கையுறையாகக் கொண்டு வந்த மலர்கள் முதலானவற்றை அர்ச்சகரிடம் அளித்த பின் இறைவனை நாம் மனதினால் நினைந்து, வாயினால் பாடி, கைகளால் கும்பிட்டு வணங்குதல் வேண்டும். கும்பிடுவதன் கருத்து யாது? கும்பிடும்போது இரண்டு கைகளும் ஒன்று சேர்கின்றன. இயற்கையாக நம்முடைய கைகள் விரிந்து பல பல செய்கைகளைச் செய்கின்றன. இறைவனுடைய சந்நிதானத்தில் அந்தச் செய்கைகளெல்லாம் ஒழிந்து ஒன்று சேர்ந்து குவிகின்றன. கைகளைக் குவிப்பதனால் **"ஆண்டவனே இனி என்னுடைய செயல் ஒன்றுமில்லை என்பதை உணர்ந்தேன். எல்லாம் உன் அருட்செயலே என்று உணர்த்தும் அறிகுறியே கும்பிடு"** எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனைகள்

**அதிகாலையில் உறக்கத்தினின்றும் விழித்தவுடன் செய்யவேண்டிய பிரார்த்தனை :**

இறைவா நான் இப்பொழுதுதான் உறக்கத்தின் கருப்பையினின்றும் பிறந்திருக்கின்றேன். இன்று நான் ஆற்றும்பணிகள் அனைத்தையும் என் உள்ளத்தில் என்றும் நீங்காது நிலைத்திருக்கும் தங்களுக்கு அர்ப்பணிக்க உறுதிகொள்கின்றேன். என்னுடைய எண்ணங்கள், சொற்கள், செயல்கள் அனைத்தையும் தூய்மைப்படுத்தி புனிதமாக்குவீராக. எவரொருவரின் துன்பத்திற்கும், துயரத்திற்கும் என்னை காரணகர்த்தா ஆக்காதீர். துன்பமும் துயரமும் என்னையடைய விடாதீர். இவ்வழிகளில் என்னை நடத்திச்செல்வீராக.

**இது தூங்கப்போகும்போது இறைவனை வேண்டுதல் :**

எங்கும் பரிபூரணமாய் நிறைந்து எண்பத்து நான்கு லக்ஷ ஜீவராசிகளிலும் சாசஷி சொரூபமாய் ஜீவாத்துமாவாய் வியாபித்திருக்கும் ஓ பரப்பிரமமே ! நான் இன்று காலை தூங்கி எழுந்ததுமுதல் மறுபடியும் சயனிக்க இப்பொழுது படுக்கையில் உட்காரும்வரையில் அடியேன் கைகளாலும், கால்களாலும், மனத்தினாலும், வாக்கினாலும் தெரிந்தும் தெரியாமலும் செய்த புண்ணிய பாவங்களையெல்லாம் உமக்கே அற்பணம் செய்துவிட்டேன். நீர் என்னுள்ளே இரகசியமாகவும் சாசஷி சொரூபனாகவும் இருதயகமலத்தில் நீ வசதிகொண்டிருப்பதால் நான் இன்று இரவு தூங்கி எழுந்ததுமுதல் மறுபடியும் நாளை இரவு படுக்கும்வரையும் என்மனதைப் பாவகாரியங்களைச் செய்யவிடாமலும் பொய் சொல்லாமலும், நல்ல காரியங்களையே செய்யும்படி செய்ய உன் கருணையென்னும் சாவியைக் கொடுத்து திருப்பக்கடவாய்.

ஓ பகவானே, பரப்பிரமமே, பரந்தாமா என்னைக்காத்து ரட்சியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமொரு பிரார்த்தனை :

ஓ இறைவா மற்றவர்களின் குறைகளைக் காணும் வழக்கத்தை, என்னிடமிருந்து நீக்கிவிடும். நான் என்றுமே பிறரிடம் குற்றம்காணாமல் இருக்க அருள்செய்யுங்கள். குறைகாணல் ஒருவனை இழிந்த நிலைக்கு இட்டுச்செல்லுமே தவிர உயர்த்தாது.
ஓபகவானே! என்னை உங்களிடம் இழுத்துக் கொள்ளுங்கள். எனக்கு மன அமைதியைத் தாருங்கள்.

ஏ மனமே! ஏன் சஞ்சலப்படுகின்றாய்? எல்லாம் ஈசன் செயல். நம் சித்தத்தின்படி இங்கு எதுவும் நடைபெறுவதில்லை. நல்லது கெட்டது இரண்டும் கலந்ததுதான் உலகம். இன்பம் துன்பம் இரண்டும் கலந்ததுதான் வாழ்க்கை. பிறக்கும்போது எதுவும் கொண்டுவந்ததில்லை. இறக்கும்போதும் கொண்டுபோவதில்லை. உலகமே மாயை நடக்கும் நிகழ்ச்சிகள் நாடகம். சூத்திரதாரி அவன். நாம் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கின்றோம். நம் இஷ்டத்திற்கு இந்த உடம்பை எடுத்தோம் இல்லை. முதல், இறுதிமுடிவும் நம்வசமில்லை. நாம் செய்யத்தக்கதெல்லாம் ஒன்றுதான். உயிர்களிடத்தில் அன்பு வேண்டும். தெய்வம் உண்மையென்று தானறிதல் வேண்டும். சத்தியவழி நின்று தெய்வ பக்திசெய்வதே நமது கடமை. பகவானை அடையப் பலவழிகளுண்டு. எனினும் பக்திவழியே எளிமையானது. இதுவே சாஸ்த்திரங்களின் சாரம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி ! ஓ பகவானே! என் குழந்தைகளுக்கு அன்பையும், அருளையும், ஆனந்தத்தையும், மெய்மை உண்மையையும், நோயற்ற வாழ்வையும், குன்றாத புகழையும், குறைவற்ற செல்வத்தையும் கொடுத்து காத்து இரட்சிப்பீராக !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வழிபடும் முறை

கோயில் வழிபடுவோர் நீராடி, தூய ஆடை அணிந்து, சமயச் சின்னங்கள் தரித்து, அன்புடனும் ஆசாரமுடனும் கோயிலுக்குச் செல்லுதல் வேண்டும்.

கொடி மரத்திற்கு வெளியே விழுந்து வணங்குதல் வேண்டும் உள் பிரகாரங்களில் விழுந்து வணங்குதல் குற்றம்.

விநாயகரை ஒரு முறையும், சிவமூர்த்தியை மூன்று முறையும், அம்பிகையை நான்கு முறையும் வலம் வருதல் வேண்டும்.

கோயிலில் ஒருமைப்பட்ட மனத்துடன் வழிபாடு செய்ய வேண்டும். கோயிலில் வழிபடுவோர் வீண் வார்த்தைகள் பேசுவதும், எச்சில் துப்புதலும், பிற தீமைகள் செய்தலுங்கூடாது. அர்ச்சகர் தரும் விபூதி, பிரசாதங்களைப் பயபக்தியுடன் இரு கரங்களாலும் ஏந்திப் பெறுதல் வேண்டும். பெற்ற பிரசாதத்தைக் கீழே சிந்துதலும், ஒரு புறத்தில் எறிவதும், பெரும் பாவமாகும். சண்டேசுவர் மீது நூல் இடுவதும், சிவலிங்கத்திற்கும் நந்தி தேவருக்கும் இடையே போவதும் குற்றமாகும்.

கோயிலில் பிரசாதங்களை உண்டு, கோயில் தூண்களில் துடைப்பது அனுசிதமாகும். கோயிலில் படுத்து உறங்குவோர் மறுபிறப்பில் மலைப் பாம்பாகப் பிறப்பார்கள். வழிபாடு முடிந்தபின், கொடிமரத்தின் அருகிலிருந்து வடதிசை நோக்கியமர்ந்து மூல மந்திரம் ஜெபிக்க வேண்டும். நன்கு இனிமையாகத் தோத்திரப் பாடல்களை, அதிகம் சப்தம் போடாமல், இனிய குரலில் பாடித் துதிக்க வேண்டும். கோயில் விளக்குகளில் எண்ணெய் இடுதல் வேண்டும்.

விளக்கிட்டார் பேறுசொல்லில் மெய்நெறி ஞானமாகும் – அப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலில் அணைகின்ற விளக்கை, அபுத்தி பூர்வமாகத் தூண்டிய எலி பலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்து புகழ் பெற்றது.

நீளுகின்ற நெய்யருந்த நேரெலியை மூவுலகும்
ஆளுகின்ற மன்னவனாய் ஆக்கினையே
– திருவருட்பா

## வீட்டு வழிபாடு :

இனி நாள்தோறும் குடும்பத்தில் உள்ளோர் அனைவரும் ஒன்றுகூடி, காலை அல்லது மாலையில் வழிபடவேண்டும். வீட்டுத்தலைவன் ஒரு பாடலைச் சொல்ல ஏனையோர் அதனை வழிமொழிந்து சொல்ல, இறைவனைக் காதலுடன் வழிபாடு செய்ய வேண்டும். இதனால் குடும்பத்தில் ஒற்றுமை உண்டாவதுடன், அந்த வீட்டில் தெய்வ கடாக்ஷமும், திருமகள் விலாசமும் உண்டாகும்.

## கூட்டு வழிபாடு :

ஒரு தனி இழையை எளிதில் அறுத்து விடலாம். பல இழைகள் ஒன்றுபட்டுத் திரித்த கயிறு (வடம்) தேரை இழுத்துவிடும். அதுபோல, பல அன்பர்கள் வாரத்திற்கொருநாள் கோயிலில் ஒன்றுபட்டுக் கூட்டு வழிபாடு செய்தால், திருவருளை ஈர்த்துவிடலாம். முஸ்லிம் அன்பர் தினம் ஒன்றுக்கு ஐந்துவேளை தவறாமல் தொழுவதும், கிறிஸ்தவ அன்பர்கள் ஞாயிறுதோறும், ஆண் - பெண் அடங்கலும், தங்கள் தேவாலயத்திற்குச் சென்று நியதியாகத் தொழுவதும்போல், இந்துக்களாகிய நாமும் குறிப்பிட்ட நாட்களில் ஆங்காங்குள்ள ஆலயங்களில் நியதியாக வழிபடுவது மிகமிக அவசியமாகும். அண்ணல் காந்தியடிகள், இறுதியாகப் பிரார்த்தனைக் கூட்டம் நாள்தோறும் நடாத்தி, முடிவில் பிரார்த்தனைக் கூட்டித்திலேயே ஆத்ம சாந்தியடைந்தார். ஆதலால் அன்பர்கள், காதலாகிக் கசிந்து, கடவுளை வழிபட்டு, இகபர நலன்களை எளிதில் பெறுதல் வேண்டும். இறைவழிபாடு செய்து, பிறவிப்பிணியை ஒழித்துப் பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவார்களாக.

(திருமுருக கிருபானந்த வாரியார் வரைவில் இருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தின வழிபாட்டு வேண்டுதல் முறை



ஓ இறைவா ! அச்சத்தில் இருந்தும், கவலையில் இருந்தும் நான் விடுபடுவேனாக. ஏனெனில் அப்போதுதான் என்னால் தங்களுக்கு இயன்ற அளவுக்கு சேவை செய்ய முடியும்.

இறைவா ! உன்னை உணர்ந்து தெளிவதற்கான தகுதியை பெற பூரணமான, தெளிவானதான ஒழுங்கான, நேர்மையான பலத்தை எனக்கு கொடு.

இறைவா ! எல்லா விதமான தன்முனைப்பான பலவீனங்களில் இருந்தும், உணர்வற்ற நேர்மையின்மையில் இருந்தும் விடுபடு வதற்கு நான் பெரிதும் விழைகின்றேன். இறைவா ஒருமுறை செய்யப்பட்ட முட்டாள்தனமான செயல், இனி எப்போதும் நிகழாமல் இருக்க அருள்வாயாக.

அன்னையே.....! எல்லா இடர்பாடுகளையும் வெல்லக்கூடிய உனது மேல் உள்ள அமைதியான நம்பிக்கை எனக்கு அருள்வாயாக.

அன்னையே.....! ஆழ்ந்த நம்பிக்கையை அமைதியான வலிமையை இடைவிடாத பக்தியை எனக்கு அருள்வாயாக.

அன்னையே.....! நான் முழுமையாக நிலையாக உன்மேல் நம்பிக்கை உள்ளவனாக விளங்க அருள்வாயாக.

ஓ அன்னையே.....! என் உணர்வைத் தெளிவாக, துல்லியமாக ஆக்கு. என்பேச்சை முழுக்க முழுக்க உண்மையானதாக, என் சரணாகதியை முழுமையாக, அமைதியை பூரணமாக தந்துவிடு. என் முழு ஜீவனையும் ஒளிமிக்கதாக்கு. அன்பு கொண்டதாகவும் மாற்றிவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ அன்னையே.....! என் காலடிகள் சரியான பாதையில் செல்வதற்கு வழி காட்டு! என் மனத்திற்கு அறிவூட்டு. ஒவ்வொரு கணமும் நீ எதை விரும்புகிறாயோ அதையே நான் செய்வதற்கு அருள் புரிய வேண்டும்.

அன்னையே.....! எனக்கு முழுமையான நேர்மையைக் கொடு. அந்த நேர்மையே என்னை தங்களிடம் நிரந்தரமாக கொண்டுவந்து சேர்க்கும்.

ஓ அன்னையே.....! நான் எப்படி இருக்க வேண்டும் என்று நீ விரும்புகின்றாயோ அப்படியே நான் இருக்க அருள் புரிவாயாக.

## காலை வழிபாடு.....!

### படுக்கையில் இருந்தவண்ணம்

ஓ அன்னையே.....! என் இனிய அன்னையே.....! நான் எல்லா வரம்புகளையும் கடந்து ஐயத்துக்கே இடமில்லாது முழுமையாக உங்களுக்கு உரியவனாக இருக்க அருள் புரிக!

உங்களின் சக்தி உங்களின் ஒளி உங்களின் பேரன்பு என்னை எல்லாத் தீய சக்திகளையும் எதிர்த்து பாதுகாக்க அருள் தருவாயாக!

## நண்பகல் வழிபாடு.....!

ஓ என் இனிய அன்னையே.....! நான் உன்னுடையவன் என்னை மேலும் மேலும் உன்பணிக்கே முழுமையாக உருத்துடையவனாக்கு.

உருக்குலைந்து உடல் நலிந்து உருவிழந்து இருக்கும் உன் பிள்ளையைக் காப்பதுன்பணி.

ஓ இறைவா.....! இனிய அன்னையே.....! என் வாழ்வில் எதிர்வரும் அத்தனை இன்னல்களுக்கும் உங்கள் துணையின்றி சீர்பெற மாட்டாது அருள்புரிவீராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவு வழிபாடு.....!

அன்னையே.....! நான் உங்களிடமே இருப்பதாகக் நினைவில் கொள்ளுங்கள்.

அன்னையே.....! நீங்கள்தான் என் அறிவின் ஒளி !

என் ஆன்மாவின் தூய்மை !

என் பிராண உடலின் வலிமை !

என் உடலின் திண்மை !

நான் உங்களை மட்டுமே நம்பி உள்ளேன்.....!

முழுமையாக தங்களின் பிள்ளையாக செயல்படவே விரும்புகின்றேன்.....!

இடையில் எதிர்ப்படும் தடைகளை தாண்டிச்சென்று வெற்றிகொள்ள அருள்தருவீராக.....!

இறைவா உன்மீது வைத்திருக்கும் முழுமையான நம்பிக்கையின் மூலம் வெளிப்படும் அசைக்க முடியாத தைரியத்தை எனக்கு தருவீராக.

ஓ இறைவா.....! அன்புள்ளம் கொண்ட அன்னையே உங்கள் உதவியும் அருளும் இருக்கும் போது எனக்கு என்ன பயம் வரப்போகின்றது. எல்லா எதிரிகளையும் தோற்கச் செய்யும் நீங்கள்தான் எனக்கு மேன்மையான பாதுகாப்பு கேடயம் என நம்புகின்றேன்.

ஓ இறைவா.....! பேரன்புத்தாயே.....! உங்களின் பேரன்பு எம்மால் புரிந்து கொள்ள முடியாத உயர்ந்தது. அளவில் பெரியது. மிக மிக தூய்மையானது. அளவிடற்கரியது. நாங்கள் அதை வணங்கி போற்றி மிகுந்த பக்தியுடன் பாதுகாக்கின்றோம். எங்களை உங்கள் பாதடியில் ஏற்றுக்கொள்வீராக என வேண்டுகிறோம்.

*அன்புடன்,*

***தொகுப்பு: வேலணையூர் பொன்னண்ணா***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கும்பாபிஷேகம்"

புனித நீரைக் கும்பங்களிலிருந்து குறிப்பிட்ட நாளிலும் நேரத்திலும் இராஜகோபுரம், விமானம் ஆகியவற்றில் வார்ப்பதே கும்பாபிஷேகத் திருவிழாவின் முக்கிய கட்டம்.

கும்பாபிஷேகம் புதிய கோவில்கள் கட்டப் பெறும்போதும், பழைய கோவில்கள் புதுப்பிக்கப் பெறும்போதும் நடைபெறும் திருவிழாவாகும். இதனை **"குடமுழுக்கு", "குடநீராட்டு"** என்றும் கூறுவர்.

பஞ்ச பூதங்களாகிய நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகியவற்றினால் ஆனவையே இவ்வுலகம் என்று நினைப்பவர்கள் இந்துக்கள். பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருத்தின் சின்னம்.

நிலம் - பொருளைக் குறிக்கும். நீர் - உயிர் ஓட்டத்திற்கு அறிகுறி. தீ - மனதை நினைவூட்டும். காற்று - அறிவியலுக்கு அப்பாற்பட்ட சக்திகளைக் குறிக்கும். வானம் - பேரின்பத்துக்கு அடையாளம்.

இப் பஞ்சபூதங்கள் சமயச் சடங்குகளில் பல நிறங்களால் உருவகப்படுத்தப்படுகின்றன.

நிலம் - மஞ்சள், நீர் - வெள்ளை, தீ - சிவப்பு, காற்று - கறுப்பு, வானம் - நீலம்.

சமயச் சடங்குகளில் நீருக்கும் காற்றுக்கும் முக்கிய இடம் கொடுக்கப்படுகின்றது. காரணம் இவ்விரண்டும் இன்றி யாரும் உயிர் வாழ இயலாது என்பதனால்தான்.

இவ்வாறு நீரைச் சிறப்பிக்கும் சடங்குதான் கும்பாபிஷேகம். புனிதமான ஆறுகளில் இருந்து தெளிவான தூய்மையான நீரைப் பக்தி நிறைந்தவர்கள் சுத்தமான பாத்திரங்களில் எடுத்து வருவார்கள்.

இவை கும்பங்கள் எனப்படும் குடங்களில் ஊற்றப்படும். மலர்களால் அலங்கரிக்கப்படும். கும்பாபிஷேக விழாவிற்கென்று போடப்பட்ட யாகசாலையில் கும்பங்கள் வரிசையாக வைக்கப்படும். நீருக்கு மேலும் சக்தியும், புனிதமும் ஊட்டுவதற்காக புலமையும், ஒழுக்கமும் உடையவர்கள் மந்திரங்களை ஓதுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது புறக்கண்களுக்கு கும்பமாகிய குடம்தான் தெரிகின்றது. ஆனால் அதில்தான் கும்பாபிஷேகக் கர்த்தாவாகிய கடவுள் மூலஸ்தானத்திலிருந்து எழுந்தருளி கும்பத்தின் உள்ளே புகுந்து தங்குகின்றார்.

கும்பம் - கும்பாபிஷேகக் கடவுள் தங்குவதற்குரிய உடம்பு. கும்பமாகிய குடம் மாமிசம். குடத்திலுள்ள தண்ணீர் இரத்தம். கும்பத்தினுள் போடப்படும் கும்ப ரத்தினங்கள் சுக்லம்.

கும்பத்தின் உள்ளே இருக்கும் அந்தக் கூர்ச்சம் என்ற தர்ப்பைக் கட்டு நாடி. கும்பத்தின் மேல் நெருக்கமாகச் சுற்றப்பட்டுள்ள முப்புரி நூல்களே நரம்புகள். கும்பத்தைப் போர்த்திக் கட்டியுள்ள வஸ்திரமே தோல்.

உச்சரிக்கப்படும் மந்திரங்களே பிராணன். கும்பத்தின் மீதிருக்கும் தேங்காய் சிரசாகவும் முகமாகவும் கொள்ளப்படுகிறது.

தேங்காயின் மேலே விரிந்துள்ள லம்ப கூர்ச்சம் சிகை. மாவிலைகள் கும்பாபிஷேகக் கர்த்தாவின் ஜடாபாரங்கள்.

கும்பாபிஷேகம் அல்லது குடமுழுக்கு என்னும் சடங்கு, இறைவனுக்குக் கோயில் கட்டும் சீரிய முயற்சியின் மங்கலமான முடிவு.

கும்பாபிஷேகத்தின் தத்துவம் என்னவென்றால் நம் மனதில் இறைவன் குடியிருக்கிறான். எனவே நாம் மனத்தில் ஆன்மிக உணர்ச்சி நிறைந்தவர்களாய், மனதாலும், மொழியாலும், மெய்யாலும் தூய்மையாக நடந்து கொள்ளவேண்டும்.

கும்பாபிஷேகம் கருவறையை அவ்வப்போது பேணுவதற்கு ஒரு வாய்ப்பினைத் தருகிறது. பீடத்தில் வைக்கப்பட்டிருக்கும் திருவுருவங்கள் ஆடாமல் அசையாமல் உறுதியாக நிலைத்து இருக்க வேண்டும் என்பதற்காக அஷ்டபந்தனம் என்ற மருந்தைச் சாத்துவது மரபு.

அஷ்டபந்தனம் என்னும் மருந்து, கொம்பரக்கு, சுக்கான் தூள், குங்கிலியம், கற்காவி, செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன் மெழுகு, எருமையின் வெண்ணெய் ஆகிய எட்டுப் பொருட்களைக் கொண்ட ஒரு கலவை.

இம் மருந்தைச் செய்ய நியமிக்கப்படுபவர்கள் சுத்தமாகக் குளித்து, தூய மனதுடனும், பக்தியுடனும் செய்ய வேண்டும். அத்துடன் எந்த இறைவனுடைய கோவிலுக்குக் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றதோ அந்த இறைவனின் நாமத்தைச் சொல்லிய வண்ணமும் அவன் புகழ் பாடும் பாடல்களைப் பாடிய வண்ணமுமே இந்த மருந்தை இடிக்க வேண்டும். இவ்விழாவைக் காண அனைத்து மக்களும் கூடுவார்கள். இதனைத் தமது வாழ்நாளில் ஒரு புண்ணியமாக இவர்கள் எண்ணுவதிலும் தவறில்லையல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளக்கு பூஜை !

நாம் பூஜைக்குப் பயன்படுத்தும் திருவிளக்கை மகாலட்சுமியின் உருவமாக மனதில் நினைத்து பூஜை செய்ய வேண்டும்.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளை ஜோதிவடிவமாக வழிபடுவது நெடுங்காலமாக நம் மரபில் இருந்து வருகிறது. "இருளிலிருந்து ஒளியை நோக்கி இட்டுச் செல்" என்பதே நமது நிரந்தரப் பிரார்த்தனை. அறியாமை இருள் நீங்கவேண்டும் என்பதை நினைவுறுத்தவே நம் வீடுகளில் காலையிலும் மாலையிலும் விளக்கு ஏற்றும் பழக்கம் உண்டானது.

திருவிளக்கு பூஜை செய்தால் குடும்பத்தில் செல்வம் நிலைத்திருக்கும் என்பது நம்பிக்கை. தினமும் இதைச் செய்ய இயலாதவர்கள், வெள்ளிக்கிழமைகள் அல்லது பௌர்ணமி தினத்தில் செய்யலாம்.

திருவிளக்கு பூஜை செய்யும் எளிய முறை இது:

முதலில் திருவிளக்கைச் சுத்தமாகத் துலக்கி, தூய துணியால் துடைக்க வேண்டும். திருவிளக்கு வைக்கும் மணையை நன்கு மெழுகி மாக்கோலம் இடவேண்டும். பிறகு திருவிளக்கை அதன்மீது வைத்து சந்தனம், குங்குமம் இட்டு மலர்ச்சரங்களால் அலங்காரம் செய்யவேண்டும்.

பின்னர் ஒரு கலசத்தில் நீரை நிரப்பி, அதற்கு சந்தனம் - குங்குமத்தால் பொட்டுகள் இடவேண்டும்.

விளக்கின் ஐந்து முகங்களிலும் திரிகள் இடுவது மிகச் சிறந்தது. குறைந்தது இரண்டு திரிகளாவது இடவேண்டும். பிறகு எண்ணெய் விட்டு ஏற்றவேண்டும்.

பூஜை செய்வதற்குமுன் விளக்குக்கு நமஸ்காரம் செய்யவேண்டும்.

விநாயகரை வணங்கி எவ்வித இடையூறுமின்றி பூஜை நிறைவே வேண்டிக்கொள்ள வேண்டும்.

கலசத்தில் உள்ள நீரை சிறிது எடுத்து எச்சில்படாமல் உட்கொண்டு பிறகு வழிபாட்டுக்காக வைக்கப்பட்டுள்ள (கற்பூரத்தட்டு, மணி போன்ற) பொருள்களின் மீது தெளித்துவிட்டு, பூஜை செய்பவர் தன்மீதும் தெளித்துக் கொள்ளவேண்டும்.

திருவிளக்கை ஏற்றும்போது தீக்குச்சியின் மூலம் நேரடியாக ஏற்றுவதை விட, சிறு காமாட்சிவிளக்கின் மூலம் ஏற்றுதல் நலம். விளக்குக்கு நல்லெண்ணெய் அல்லது நெய் பயன்படுத்துவது நல்லது.

தீபம் ஏற்றும்போது "ஓம் ஒளிவளர் விளக்கே போற்றி" என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். பிறகு கீழ்க்கண்ட மந்திரத்தைக் கூறி விளக்கின் அடிப்பகுதியின்மீது மலர் மற்றும் அட்சதைய (முனைகூட முறியாமல் உள்ள முழு அரிசி - அட்சதை) போடவேண்டும்.

*"வழிபட வேண்டி நாளும்*
*நின்னையே மனதில் பதித்து*
*திருவிளக்கு ஏற்றி வைத்தேன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விழுமிய தீபந் தன்னில்*
*விளங்கு நீயும் வாராய்*
*ஓம் ஆதிபராசக்தி அம்பிகையே!*

"திருவிளக்கு அகவல்" என்று ஒன்று உண்டு. அதைக் கூறுதலும் சிறப்பு. இதோ அந்தப் பாடல்,

*"விளக்கே திருவிளக்கே வேந்தன் உடன்பிறப்பே*
*ஜோதி மணிவிளக்கே ஸ்ரீதேவிப் பொன்மணியே*
*அந்தி விளக்கே அலங்கார நாயகியே*
*காந்தி விளக்கே காமாட்சி தாயாரே*
*பசும்பொன் விளக்கு வைத்து பஞ்சுத் திரிபோட்டு*
*குளம்போல எண்ணெய் விட்டு கோலமுடன் ஏற்றி வைத்தேன்*
*ஏற்றினேன் திருவிளக்கு எந்தன் குடிவிளங்க*
*மாளிகையில் ஜோதியுள்ள மாதாவைக் கண்டு மகிழ்ந்தேன் யான்"*

பிறகு கீழே உள்ளதுபோல் கூறி அர்ச்சனை செய்யவேண்டும். ஆள்காட்டி விரல் தவிர, மீதி விரல்களால் குங்குமத்தையும் மலர்களையும் எடுத்து இடதுபக்க நெஞ்சோடு சேர்த்து வைத்து, திருவிளக்கின் அடிபாகத்தை தேவியின் பாதங்களாக எண்ணி அர்ச்சனை செய்யவேண்டும்.

*ஓம் பொன்னும் மெய்ப்பொருளும் தருவாய் போற்றி*
*ஓம் இயற்கையாய் அறிவெளி ஆனாய் போற்றி*
*ஓம் அளவிலாச் செல்வம் தருவாய் போற்றி*
*ஓம் இருள் கெடுத்து இன்பருள் எந்தாய் போற்றி*
*ஓம் ஒளிக்குள் ஒளியாய் உயர்வாய் போற்றி*
*ஓம் குளா மணியே சுடரொளி போற்றி*
*ஓம் இடரைக் களையும் இயல்பினாய் போற்றி*
*ஓம் கற்பனை கடந்த ஜோதி போற்றி*
*ஓம் அற்புதக்கோல விளக்கே போற்றி*
*ஓம் நந்தா விளக்கே நாயகியே போற்றி*
*ஓம் தீபமங்கள ஜோதி போற்றி*
*ஓம் நலமெலாம் உயிர்க்கு நல்குக போற்றி*
*ஓம் போற்றி போற்றி திருவிளக்கே போற்றி*

தூப, தீபம் காட்டி நிவேதனம் செய்த பிறகு, விளக்குக்கு மூன்றுமுறை கற்பூர ஆரத்தி காண்பிக்க வேண்டும். அப்போது அனைவருமாகச் சேர்ந்து

*திங்களில் ஜோதி நீ தினகரன் ஜோதி நீ*
*அங்கியில் ஜோதி நீ அனைத்திலும் ஜோதி நீ*
*எங்களுள் ஜோதி நீ ஈசுவர ஜோதி நீ*
*கங்கிலா ஜோதி நீ கற்பூர ஜோதியே*

என்று கூறி திருவிளக்கை வலம்வந்து வணங்க வேண்டும். இறுதியாக கற்பூரதீபத்தைக் கண்களில் ஒற்றிக் கொள்ளவேண்டும்.

விவரித்தவர் : ***ஆர். பி. வி. எஸ். மணியன்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருவ வழிபாடு

இந்து தர்மத்தின் வழிபாட்டு முறைகளில், தனிச்சிறப்பு வாய்ந்தது விக்கிரக ஆராதனை அல்லது உருவவழிபாடு என்பது. அவரவர்கள் மனதுக்குப் பிடித்த இஷ்ட தேவதைகளை, சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற முறையில் மூர்த்தியாகவோ, படமாகவோ, பிம்பமாகவே வைத்து வழிபடுகின்றோம். ஆலயங்களில் மூலவர் என்றும், உத்ஸவர் என்றும் பல்வேறு வடிவங்களில், இறைவனுக்கு உருவஅமைப்புக் கொடுத்து, அபிஷேகம் செய்து, சிறப்பாக அலங்கரித்து ஆராதனை செய்கின்றோம். இது தொன்று தொட்டுப் பாரம்பரியமாக வந்து கொண்டிருக்கிறது. பூஜிப்பவர்களுக்கும் பிரார்த்திப்பவர்களுக்கும் இதனால் கிடைக்கும் சௌபாக்கியங்களை அவர்கள் அடைந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

சிலர் **"விக்கிரக ஆராதனை (உருவ வழிபாடு) என்பது சாஸ்திரத்தில் கூடாது என்று சொல்லப்பட்ட ஒன்று"** எனக் கூறுவர். மேலும் **"மூர்த்தியை ஆராதிப்பது என்றால், ஒரு கல்லைத்தானே எடுத்துக் கொண்டு ஆராதனை செய்கிறீர்கள்? யார் எதை ஆராதனை செய்வார்களோ, அவர்கள் அப்பொருளாகத்தானே ஆகிவிடுகிறார்கள்? நீங்கள் கல்லை ஆராதனை செய்தால், நீங்களும் கல்லாகத் தானே ஆக வேண்டும். அதனால் உங்களுக்கு என்ன கிடைக்கிறது?"** என்று சிலர் அஞ்ஞானத்தால் வாதம் செய்யலாம். இதற்குச் சரியான பதில் இருக்கிறது.

நம் தாயாரும், தகப்பனாரும் யார்? மாமிசம், இரத்தம், எலும்பு, மற்றும் தசைகள் சேர்ந்த உருண்டைதான் அவர்கள் என்று நாம் கூறுவதில்லை. பெற்றோர்களை உயிருள்ள ஜீவன்களாகவே எண்ணுகின்றோம். தெய்வமாகப் போற்றுகின்றோம். அப்படியானால் நாம் மாமிசத்தின் உருண்டையை ஆராதிக்கிறோம் என்றா பொருள்? நாம் அவ்வாறு கருதுவதில்லை.

தாயாரிலும், தகப்பனாரிலும் ஒரு சைதன்யம் உள்ளது. அந்த சைதன்யத்தை நாம் பார்க்கமுடியாவிட்டாலும், அதை மனதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக்கொண்டு போற்றுகிறோம். அதுபோலத்தான் பகவானின் விக்கிரகமும்

விக்கிரகங்களிலும் உருவங்களிலும் ஜீவனில்லை என்று சொல்வது அறியாமை.

ஆத்மா என்பது உள்ளே அடங்கியிருப்பது. **"நான் எல்லாவற்றையும் துண்டு பண்ணிப் பார்த்தேன். ஆனால் ஆத்மாவைப் பார்க்கவில்லை"** என்றான் ஒருவன். இது சரியாகாது. எல்லா இடத்திலும் காற்று உண்டு. "நான் எங்கும் துண்டு பண்ணிப்பார்த்தேன். காற்றைப் பார்க்கவில்லை" என்று ஒருவன் கூறினால், அதை ஒத்துக்கொள்ள முடியுமா? காற்றை மூச்சாக உள்ளிழுக்கும் போதே அதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட பொருள்தான் ஆத்மா !

நாம் அத்தகைய ஆத்மாவிடம் தான் அபிமானம் வைத்துக் கொண்டிருக்கிறோம். **"அந்த ஆத்மாவுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?"** என்று கேட்டால் **"அபிமானம் தான் சம்பந்தம்"** என்று பதில் கூறவேண்டி வரும். அத்தகைய அபிமானம் இருக்கின்றவரையில், நாம், நமது தாய் தந்தையரை மரியாதையோடு நோக்குகின்றோம். அதேபோல் நாம் இறைவனுடைய மூர்த்தியையும் ஆராதிக்கும் போது, அதைக் கல் என்று நினைக்காமல், சாக்ஷாத் பகவான் நம் எதிரில் நின்று கொண்டிருக்கிறான் என்றுதான் நினைக்கின்றோம்.

கல் என்று நினைத்திருந்தால், பிரார்த்தனைப்பண்ணிக் கொண்டிருப்போமா ?


எல்லா உருவமும் இறைவனின் உருவமேயாகும். நம் உள்ளத்தில் பகவானைக் கண்டால், நாம் வழிபடும் வடிவத்திலும் அவனைக் காணலாம்.

உலகிலுள்ள எல்லா அணுக்களிலும் இறைவன் தான் வியாபித்திருக்கிறான். அந்த அடிப்படையில் தான் நாம் உருவ வழிபாடு செய்கிறோம்.

*- ஸ்ரீ அபிநய வித்தியாதீர்த்தர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலணை மக்களின் மகிமை கொண்ட பெரும்படை
ஐயனார் ஆலயம்



தொண்டர் பிள்ளையினரால் செய்து நீண்டகாலம் அம்மன் வீதி வலம்
வந்த கட்டுத்தேர் கடமை முடிப்பில் அமைதியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ ராமன்



மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்,
செம்பொன்னே
கன்னிநன் மாமதிள் புடைசூழ் கணபுரத்தென் கருமணி
என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேயே

(பெரியாழ்வா

**சொற்பொருள் :**

தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்
- இராவணனின் கிரீடங்களை (தலைகளை)
வீழ்த்தினாய்; நன்மாமதிள் - பெரியமதில்,
கணபுரம் - கணபுரம் என்ற இடத்தில்

**பொழிப்புரை :**

நிலைத்த புகழையுடைய கௌஸல் தேவியின் புண்ணிய வயிற்றில் உதித்தவளே தென்திசையிலுள்ள இலங்காபுரியின் அரசனான இராவணனின் பத்து தலைகளும் தரையில் உருளும்படியாகச் செய்தவனே, செம்பொன்னாலாகிய மதில்சுவர்கள் சூழ்ந்த கணபுரத்துக் கோயிலுள் உறை நீலமேகசியாமளனே, எனக்கு இனிய அமுதம் போன்றவனே (பால) இராமச்சந்திரா நீ கண்ணுறங்காய்

## ஐயப்பன்



களிறொடு பிடியும் கூடிக்களித்திடும் பம்பையாற்றின்
வளநிறை மருங்கில்மன்னும் மாண்புடைச் சபரிகிரியோன்,
வளர்பிறை சூடுஞ் சிவனும் விண்டுவும் தந்த மகனாம்
ஒளிநிறை உருவின் ஐயன் உபயமென் பாதம் சரணே !

**சொற்பொருள் :**

களிறு - ஆண்யானை; பிடி - பெண்யானை
உபயமென் பாதம் - மென்மையான இரு பாதங்கள்

**பொழிப்புரை :**

ஆண்யானையும் பெண்யானையும் கூடிக்களித்திடும், பம்பையாற்றின் வளமைமிக்க கரையோரத்தில் நிலைபெற்ற பெருமை மிக்க சபரி மலைக் கோயிலுள் வாழ்பவனும், சந்திரப் பிறையைத் தலையிற் சூடிய சிவபிரானுடையவும், ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடையவும் மகனானவனும், ஜோதிசொரூபவனுமாகிய ஸ்ரீ ஐயப்பனது இரண்டு திருவடிகளையும் சரணடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஞ்சநேயர்



ஆஞ்சனேயம் அதிபாடலானனம்
காஞ்சனாத்ரி கமனீய விக்ரஹம்
பாரிஜாத தருமூல வாஸினம்
பாவயாமி பவமான நந்தனம்

(நாமராமாயணம்)

**சொற்பொருள் :**

அதிபாடலானனம் - மிகவும் சிவப்பான முகம் ;
காஞ்சனாத்ரி - பொன்மலை; கமனீய - அழகிய;
விக்ரஹம் - வடிவம்;
பாரிஜாத தரு மூலவாசினம் - பாரிஜாத மரத்தடியில்
வசிப்பவர்; பாவயாமி - தியானிக்கிறேன்;
பவமான நந்தனம் - வாயுகுமாரன்.

**பொழிப்புரை :**

அஞ்ஜனாதேவியின் மகனும், மிகச் சிவந்த முகத்தையுடையவனும், பொன்மலை போன்ற அழகிய மேனியையுடையவனும், பாரிஜாத மரத்தினடியில் வாழ்பவனும் ஆகிய வாயு புத்திரனை தியானிக்கிறேன்.

# சாரதாதேவி



கருங்குழல் அவிழ்ந்து தொங்கும்
கண்களில் கருணை பொங்கும்
அருங்குண நாணம் ஓங்கும்
ஆடையும் தலைமேல் வாங்கும்
கரங்களில் வளைகள் தங்கும்
கற்பினுக்கரசி பூவின்
சரங்கொடு காமன் தீண்டாச்
சாரதா அன்னை வாழ்க !

**அருஞ்சொற்பொருள் :**

பூவின்சரம் - காமதேவனுடைய கணைகளாகிய
தாமரை, அசோகு, மா, முல்லை, கருங்குவளை
ஆகிய மலர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமி விவேகானந்தர்



சிரமதில் முண்டா சேந்தி, சிறிதுமெய் இடமே சாய்த்து,
விரைமிகு முளரித் தாள்போல் விழியிணை வலமே சாய்த்து,
கரமொடு கரமுஞ் சேர்த்துக் காவியின் சொக்காய் போர்த்து,
அரசிளங் குமரனே போல் நின்றிடும் அடிகள் வாழ்க.

**அருஞ்சொற்பொருள் :**

விரைமிகுமுளரி - மணமிக்கதாமரை
தாள் - இதழ்

## காளி



காலத்தை வென்றவளாக, என்றுமிறுப்பவள் ஆதலாய் **'காலி'** அல்லது **'காளி'** என்று தேவி அழைக்கப்படுகிறாள்.

நீல நிறம், நிர்வாணக் கோலம், வெட்டுண்ட தலைகளாலான மாலை, துண்டித்த கரங்களாலான அரைஞாண், இரத்தம் சொட்டும் வாளும், நாவும் இவை காளியின் ரூபமாகும். காளி சிவன் மீது நின்று தாண்டவம் புரிகிறாள். இத்தகைய காளியின் உருவம் இவளா இறைவி என்று எண்ணத்தோன்றும். ஆனால் இந்த உருவ அமைப்பின் அர்த்தத்தை புரிந்து கொண்டவர்கள் இறைதத்துவத்தின் பேருண்மையை அறிந்து இன்புறுவார்கள்.

(உலக நாதனாகிய சிவன், மாயாசக்தியாகிய தேவியின் திருநடனத்துக்கு ஆதாரமாக இருக்கிறாள். தேவி அனைத்து உயிர்களையும் ஓயாது அழித்து, ஆட்கொண்டவண்ணம் இருக்கிறாள் என்பதை, இரத்தம் சொட்டுகின்ற நாவும், வாளும் விளக்குகின்றன. மக்கள் செய்யும் செயல்கள் யாவற்றிற்கும் சக்தியாக இருப்பவள் காளியே என்பதை, கரங்களாலான அரைஞாண் விளக்குகிறது. தன்னிலிருந்து தோன்றிய உயிர்கள் அனைத்தையும் எந்த வயதிலும், எந்த நேரத்திலும் தேவி தன்னோடு சேர்த்துக்கொள்வாள் என்பதை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவித வயதுடைய தலைமாலை விளக்குகிறது. அவள் எங்கும் நிறைந்திருப்பவள் என்பதை நீல நிறம் காட்டுகிறது. இயற்கையை மூடிமறைக்க முடியாது என்பதையும் எல்லாத்திசைகளிலும் அவள் நிறைந்திருக்கிறாள் என்பதையும் அவளது நிர்வாணக் கோலம் காட்டுகிறது.)

## நாராயணன் அல்லது மகாவிஷ்ணு



நீலநிறத் திருமேனியும், சங்கு, சக்கரம், கதை, தாமரைப்பூ தாங்கிய நான்கு கைகளும் நாராயணனின் திருவுருவமாகும். ஆதிசேஷன் என்ற பாம்பின் மீது பள்ளி கொள்ளுகிறான்.

எங்கும் **வியாபகமாக** இவர் **இருப்பதை நீலநிறம்** காட்டுகிறது. **ஆதிசேஷன் மூலப்பிரகிருதியைக்** குறிக்கும். உலகம் யாவும் அழிந்த பிறகு மூலப்பிரகிருதி எஞ்சியிருக்கிறது. நாராயணன் மூலப்பிரகிருதியை இருப்பிடமாக கொண்டுள்ளான்.

**நான்கு கைகள்** அவனது **பேராற்றலைக்** குறிக்கும். **சங்கு ஓங்காரம்** என்ற நாதப்பிரம்மத்தை குறிக்கும் உலகம் **'ஓம்'** என்ற ஓசையிலிருந்து துவங்குகிறது உலகம் இயங்கும் பொழுது **'ஓம்'** என்ற பிரணவ சத்தம் உண்டாகிறது.

**சக்கரம் சுழற்சியைக்** காட்டுகிறது. ஆக்கல் அளித்தல், அழித்தல் போன்ற செயல்கள் தொடர்ந்து சுற்றிசுற்றி வருகின்றன. அறம் செய்வோரைக் காத்து அல்லோரைத் துன்புறுத்துவதால் இதற்கு **'அறவாழி'** என்று பெயர். காலங்கள் சுழன்று சென்ற காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று சுற்றி வருவதால் **'காலச்சக்கரம்'** என்று பெயர்.

**'கதை'** இறைவன் தவறு செய்வோரைத் **தண்டித்து திருந்தும் இயல்பைக்** காட்டுகிறது.

**'தாமரை** இறைவனின் **அன்பைக்** காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனுக்கு விருப்பமான நாள்


கார்த்திகைத் திருவிழா சிவபெருமானுக்கு உகந்தது. சிவனைச் சரணடைந்து.... அகங்காரம் அழியப்பெற்று, ஆன்மிக பலம் பெறும் விழா என்று இதைக் கூறுவர். இதற்கு ஒரு புராணக் கதையும் உண்டு.

பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் தங்களுக்குள் யார் பெரியவர் என்பதில் போட்டி! நடுவர் வேறு யாருமல்ல, சிவன்தான்!

"என்னுடைய அடி (பாதம்) மற்றும் முடி (தலை) யை யார் முதலில் பார்க்கிறாரோ அவரே பெரியவர்" என்று நிபந்தனை விதித்து விண்ணுக்கும் மண்ணுக்குமாக விஸ்வரூபம் எடுத்து மிகமிக உயர்ந்து நின்றார் சிவன்!

தேவர்களும் முனிவர்களும் ரிஷிகளும் கூடி நின்று வேடிக்கை பார்த்தனர். இந்தப் போட்டியில் யார் வெற்றி பெறுவார்கள் என்று தெரிந்துகொள்வதில் அனைவருக்குமே ஆர்வம் அதிகமாக இருந்தது.

"படைக்கும் தொழிலுக்கு நானே அதிபதி!" என பறைசாற்றிக் கொண்ட பிரம்மா, "ஜெயிப்பது நானே!" என்று கூறி, அன்னப்பறவையாக உருமாறி உயரே....... இன்னும் உயரே..... விரைவாகப் பறக்கலானார். முடியைப் பார்க்க மேல்நோக்கிச் சென்றார்.



அடுத்த கணம் "காக்கும் தொழிலின் மூலவன் நானே! வெற்றியைத் தவிர எதையும் பெறமாட்டேன்!" என்று சொல்லி, பன்றி உருக்கொண்டார் விஷ்ணு! சிவனின் அடி காணக் கீழ்நோக்கிப் பயணமானார். பூமியைத் துளைத்தார்..... துளைத்தார்..... துளைத்துக் கொண்டே சென்றார்.

காலம் நகர்ந்து கொண்டிருந்தது. அன்னப்பறவையின் உடல் தளர்ந்தது; வராகத்தின் தேகமும் திணறியது. இருவருமே அடி - முடியைக் காணாமல் தவித்தனர்.

பிரம்மா தாழம்பூவைப் பொய் சாட்சியாக உருவாக்கி முடியைக் கண்டதாக உரைத்தார். சாட்சியுடன் அவரும் நடுவரின் சாபத்துக்கு உள்ளானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணபொருத்தம்

கணவன், மனைவி ஒற்றுமையாக இருப்பதற்கும் அவர்களது நல்வாழ்விற்கும் ஜாதகப் பொருத்தமும் மிகவும் முக்கியமாகும். பொருத்தம் இரண்டு வகைப்படும். ஒன்று ஜாதக கிரக அமைப்புப் பொருத்தம். மற்றையது நட்சத்திரப் பொருத்தம் என்பனவாகும். இதில் மிக மிக முக்கியமானது ஜாதக கிரக அமைப்புப் பொருத்தமேயாகும். ஆனால் பொதுவாக எல்லாச் சோதிடர்களும் நட்சத்திரப் பொருத்தம் மட்டுமே பார்க்கிறார்கள். இதை மட்டும் நம்பிச் செய்கின்ற விவாகங்கள் தான் பொருத்தம் பார்த்தும் குழம்பிய குடும்பம் என்ற அகராதியில் சேர்கின்றன. சரியாக கிரக அமைப்புப் பொருத்தம் பார்த்துச் செய்தால் குழம்பவே முடியாது என்பது எனது அசையாத நம்பிக்கையாகும். ஜோதிடத் துறைக்கு ஒரு தகுதிகாண் பரீட்சை முறை இல்லாத படியால், இன்று பஞ்சாங்கம் பார்க்கத் தெரிந்த பலரும் தாங்கள் சோதிடர்கள் என்று கூறிக்கொள்கின்றார்கள். எனவே மிகவும் விழிப்பாக இருக்க வேண்டியது மக்கள்தான். ஆற்றலும், அறிவும், பண்பும் மிக்க சோதிடரை நீங்கள்தான் தேடிப்பிடித்து நாடவேண்டும். எதிர்காலப் பலாபலன்களை கூடிய வீதம் சரியாக உரைக்கின்ற ஜோதிடர்களை நீங்கள் ஜாதக கிரக அமைப்புப் பொருத்தம் பார்க்கக் கூடிய ஜோதிடர் என நம்பலாம். உங்கள் நல் வாழ்விற்காக எம்பெருமான் சீதாராமபிரானை மனமுருகி வேண்டுகிறேன்.

39, அபொன்சோ அவனியூ,
தெஹிவளை.

ஆயர்பாடி ஜோதிடர்
**த. ம. ராமகிருஷ்ணன்**

அவனருளின்றி ஏதும் அடைய முடியாது. நாங்கள் எவ்வளவோ ஜபம் செய்தோம். ஆத்ம ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தோம். ஆயினும் பயன் என்ன? மகாமாயை வழி திறவாவிடில் விடுதலை எவ்வாறு கிட்டும்? மனிதனே! கடவுளை சரணடை. அப்போதே மகாமாயை கருணை கொண்டு விடுதலை வழியைத் திறப்பாள்.

**அன்னை சாரதாதேவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்து சமய திருமணச்சடங்கு பற்றிய பாரம்பரிய கலாச்சார முறைகள்

மானிடப் பிறப்பு எடுத்ததற்கு அர்த்தபுஷ்டியாய் அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற நற்பயன்கள் அடைவதற்கு ஒரு வாழ்க்கைத் துணையை தேடிக் கொள்வது திருமணம் என்கின்ற இருமனம் இணையும் இனிய நாளாகும்.

## திருமணத்திற்கு முன் நிகழ வேண்டிய கருமங்கள் :

பருவம் அடைந்த ஆண், பெண் ஆகிய இருவரின் சாதகப் படி விவாகப் பொருத்தம் உரிய சோதிடர் மூலம் முறைப்படி பார்த்து பொருத்தம் நிச்சயம் பண்ணின பிற்பாடு பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்கு நன்னாளில் சென்று தாம்பூலம் பரிமாற்றம் செய்தல், அதாவது மங்களப் பொருட்களாகிய மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்கு, பழவகைகள் இனிப்புப் பலகாரத்துடன் சென்று திருமணத்தை நிச்சயித்தல்.

அதன் பின் திருமண நாளை நிச்சயித்து விட்டு பெண்வீட்டுக்கு மாப்பிள்ளை வீட்டாரும் சென்று மேற்குறிப்பிட்டபடி தாம்பூலம் மாற்றியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் பொன்னுருக்கல் வைபவம் செய்தல், அதாவது மாங்கல்யம் தாலி செய்வதற்கு நல்ல நாள் பார்த்து மாப்பிள்ளை வீட்டில் அல்லது ஆசாரி வீட்டில் பொன்னுருக்கல் செய்தல் வேண்டும். பின்புதான் பெண்ணுக்குரிய கூறைபுடைவை போன்றவற்றையும் கடையில் நல்ல நாளாகப் பார்த்து வாங்க வேண்டும். பின் திருமண நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன் முகூர்த்தக்கால் (அதாவது பந்தல்கால்) ஊன்றுதல் நடைபெற வேண்டும். இது முள்முருங்கை மரத்தைப் பயன்படுத்தி சுமங்கலிப் பெண்களால் வீட்டு வளவில் ஈசான மூலையில் ஊன்றி நவதானியம் இடுதல். இதே மாதிரி பெண் வீட்டிலும் இடுதல் வேண்டும். இதன் பின்புதான் திருமணக் கிரியைகள்.

முதற் கிரியையாய் மணமகன் மணவறைக்கு (திருமண மண்டபத்திற்கு) அழைத்து வருதல் வலது பக்கமாக அழைத்து வருதல் வேண்டும். (அதாவது சிவாச்சாரியார் இருக்கும் பக்கமாக) முதலில் சங்கற்பம் பிள்ளையார் பூஜை புண்ணியாகம் பஞ்சகவ்விய சுத்தி போன்ற கிரியைகள் நடைபெற்று அதன் பின் அங்குரார்ப்பணம் நடைபெறும்.

## அங்குரார்ப்பணம் :

எனப்படுவது முளைப்பாலிக இடுதல். அது படைத்தலைக் குறிக்கும். அதில் சக்தியம் பெற்ற சந்திரன் பூசிக்கப்படுவது மரபு குறிப்பாக பயிர்கள் எனப்படும். தாவரங்களுக்கு அதிபதி சந்திரன். எனவே சந்திரன் கும்பத்தைச் சுற்றி ஐந்து அல்லது மூன்று என்ற கணக்கில் மண்போட்ட சட்டிகள் சுற்றி வைத்து மேற்கூறிய கணக்கில் 5 அல்லது 3 சுமங்கலிப் பெண்களை வரவழைத்து அவர்கள் கையால் முளைப்பாலிகையை சட்டியில் இடுவதே அங்குரார்ப்பணம். மங்களக் கிரியா வைபவங்கள் அனைத்திலும் அந்தக் கிரியை உண்டு. திருமணத்தில் அதைச் செய்வதன் பொருள் சந்ததி பெருகும் பொருட்டும் நவதானியம் எனப்படும் முளைப்பாலிகைகள் மனிதனால் விதைக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தேவைக்கே பயன்படுவது போல இல்வாழ்க்கையில் கணவன், மனைவி மற்றோருக்கும் தம்மால் இயன்ற உதவி புரிந்து அறத்தோடும் என்றும் பாலிகை இடும் சுமங்கலிகள் போல் மங்களமாய் வாழ வேண்டும் என்பதற்காகவே மணமகன், மணமகள் என இருவருக்கும் தனித்தனியாக அங்குரார்ப்பணக் கிரியை செய்வது மரபு. மணமகள் மணமகனுக்கு வலப்பக்கத்தில் இருப்பாள்.

## ரட்சாபந்தனம் :

இதைக் காப்புக் கட்டுதல் எனக் கூறுவதுண்டு. மணமகன், மணமகள் இருவருக்கும் தனித்தனியாக இந்தக் காப்புக் கட்டப்படும். அதாவது எடுத்த கருமம் இடையூறின்றி இனிது நிறைவேறவும், வேறு செயல் சிந்தனையின்றிக் குறித்த கரும சிந்தனையில் மூழ்கி இருக்கவும், எல்லாப் பாவங்களையும் நீக்கிப் புனித மயமாக்க இந்த ரட்சாபந்தனம் செய்யப்படுகின்றது.

மணமகனுக்கு ரட்சாபந்தனம் (காப்புக்கட்டி) முடித்து பிறிதொரு இடத்தில் இருத்திப் பெண்ணை அழைத்து வருவதுண்டு. இதற்குரிய காரணம் பெண்ணுக்குக் கட்டாமல் மணமகனைப் பார்க்கக் கூடாது என்கின்ற ஒரு நியதில் மணமகனை பிறிதொரு இடத்தில் அமரச் செய்கின்றனர். ஆனால் பெண் அழைத்து வரப்படும் போது முகத்தில் திரை போட்டே அழைத்து வருவதால் மணமகன் மணவறையில் இருக்கவே பெண்ணையும் வைத்துக் காப்புக் கட்டலாம் என்கின்ற மரபிலும் இருவிதமாய் இக்கிரியை செய்வதுண்டு. மாங்கல்யம் பெண்ணின் கழுத்தில் கட்டப்படும்வரை இலக்குமி நாராயணராக மணமகனையும், மணமகளையும் பாவனை செய்து கிரியை நிகழ்த்தி தாலி கட்டிய பின் சிவசக்தி ரூபமாக அமர்த்தி கிரியை நிகழ்த்துவர். அதற்காகவே பெண் வலது பக்கமும், ஆண் இடது பக்கமும் தாலி கட்டிய பின் ஆண் வலப்பக்கமாகவும், பெண் இடப்பக்கமாகவும் மாற்றி இருத்துவார்கள். விஷ்ணு தனது வலது மார்பிலே இலட்சுமியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளார், சிவன் தனது உடம்பில் இடது பாகத்தை சக்திக்கே கொடுத்துள்ளார் என்கின்ற தத்துவம் இதனைப் புலப்படுத்தும்.

## கன்னிகா தானம் :

பெண்ணை முறையாகப் பெற்றோர்களால் **"தாரதத்தம்"** ஒரு பொருளை அறுதியாகக் கொடுப்பதற்கு தண்ணீர் விடுதல் முன்னாள் மரபு இதற்குரிய கிரியை ஆனது மணமகன், மணமகள் இரு பகுதிப் பெற்றோரையும் அழைத்துச் சங்கல்ப்பம் செய்து அவர்களுடைய சந்ததி வம்சாவழிப் பிதுர்களை நினைவு கூர்ந்து திருப்தியுறும் வகையில் நாந்தி தானம் (அரிசி, மரக்கறி உட்பட பணம் வைத்து) நவக்கிரகபிரீதி தானம் (வஸ்திரம், பணம்) போன்றவற்றைக் குருக்களுக்கும் உதவிக் குருமாருக்கும் தானமாகக் கொடுத்தல்.

அதன்பின் சம்பந்திகள் ஒருவருக்கு ஒருவர் உபசாரம் செய்தல். (இது கிரியை முறையில் சொல்லப்படவில்லை. சபைச் சிறப்பிற்காகச் செய்யப்படும் ஒரு சிறப்பாகும்) அதன் பின் கிழக்குமுகமாய் (மணவறையில் இருந்து சபையோரைப் பார்க்கும் வண்ணம்) மணமகள் தந்தை அமர்ந்து ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், எழுமிச்சம் பழம், தேங்காய், மஞ்சள் தூள், சில்லறைக்காசு, பொன், மலர் போன்ற பொருட்கள் தட்டில் வைத்து பெண்ணின் கையைத் தட்டிலே வைத்து தந்தை தட்டையும் மகள் கையையும் சேர்த்துப் பிடிக்க சிவாச்சாரியார்கள் மணமகளின் வம்சாவழியைச் சபையோருக்கு எடுத்துக் கூறி மங்களஸ்லோகம் கூறித் தாயார் மூன்று முறை தண்ணீர் விட மங்கள வாத்தியங்கள் முழங்க கன்னி கையை தானமாய் மணமகன் கையில் கொடுப்பார். (கையிலே தண்ணீர் விடுதல் என்பது ஒருபொருளை இறுதியாகக் கொடுப்பதற்கு முற்காலத்தில் அறிகுறியாய் இருந்தது. நிலம் முதலியவற்றை விற்கும் போதும் இவ்வாறே நடந்தது. தண்ணீர்த் தாரையோடு கொடுத்ததால் இதற்கு தாரதத்தம் என்பர். தத்தம் கொடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாலி கட்டல் :



தாலியிலே சிவலிங்கம், விநாயகர் அல்லது இலட்சுமியை திருவுருவம் அமைத்தல் சிறந்தது. அதன் பின் ஒரு தட்டிலே கூறை, மாங்கல்யம், கால்மிஞ்சி மற்றும் மங்களப் பொருட்கள் வைத்து மணமகனின் தந்தை, தாய் சபையோரிடம் ஆசி பெறுதல். மணமகன் தனது கையால் மணமகளிடம் கொடுத்து கூறை மாற்றி வரச் செய்தல். கூறை மாற்றி வந்ததும் மாங்கல்ய பூஜை செய்து மணமகன் எழுந்து வலப்பக்கத்திற்கு வந்து சிவாச்சாரியார்கள், அவையோர் ஆசீர்வதிக்க கெட்டி மேளம் முழங்க கழுத்தில் தாலி கட்டுதல் நடைபெறும். மங்கள நாண் பூட்டுதல் என்றும் அதைக் கூறுவர். அதன் பின் மணமகள் மணமகனுக்கு இடப்பக்கம் அமர்வாள். ஆதிகாலம் மஞ்சட் கயிற்றிலே தான் தாலி கட்டப்பட்டு வந்தது. தற்போது தங்கத்திலே கட்டுகின்றனர். இருப்பினும் பிராமண குலத்தைச் சார்ந்தோர் மற்றும் இசைவேளாளர் போன்றோர் இன்றும் மஞ்சட் கயிறு மாங்கல்யத்திற்குப் பாவிப்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவிலும் பெரும்பாலும் மஞ்சட் கயிற்றுத் தாலியே கட்டுகின்றனர்.

1) வாழ்க்கையை உள்ள படி புரிந்து கொள்ளுதல்
2) மேன்மை
3) ஆற்றல்
4) தூய்மை
5) தெய்வீக நோக்கம்
6) உத்தம குணங்கள்
7) வீடு வேகம்
8) தன்னடக்கம்
9) தொண்டு

இவற்றை ஒரு பெண் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தில் மாங்கல்யம் அமைக்கப்பட்டதாக காயத்திரி மந்திரத்தில் குறிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலை மாற்றுதல் :



தாலி கட்டி முடிந்த பின் மாலை மாற்றுதல். வாழ்க்கையில் உடலாலும், உள்ளத்தாலும் நாம் இருவரும் ஒருவரே என்ற தத்துவத்திற்கு ஏற்ப பெண்ணின் கழுத்தில் இருக்கும் மாலை ஆணுக்கும், ஆணின் கழுத்தில் இருக்கும் மாலை பெண்ணுக்கும் ஆக மூன்று முறை கழற்றி மாற்றுவார்கள். அதன் பின் பெண் இடப்பக்கமாகவும், ஆண் வலப்பக்கமாகவும் மாறி இருந்து உமாமகேஸ்வர பாவனையாக கிரியை நிகழ்த்தப்படும். பால், பழம் பருகுதல் வாழ்க்கைத்துணை ஒருவருக்கொருவர் அமைந்த வேளை வாழ்க்கை என்றும் இனிப்பாக வாழ்வு அமைய முதல் பானமாய் பாலும், பழமும் பருகுதல். அதன் பின் மங்கள தரிசனமாக **"கா"** எனப்படும் கன்னிப்பசுக்கன்று காணப்பிப்பார்கள். (பசுக்கன்று வசதியற்ற இடங்களில் திருவிளக்கு தரிசனம் செய்யலாம் என்பது மரபு)

## ஏழடி நடத்தல் (ஸ்ப்தபதி) :



மணவறை முன் இருக்கும் கும்பங்களையும் அக்கினியையும் சுற்றி வருவதற்காகவும் முதல் ஏழடி நடத்தல். அக்கினி எரியும் ஓம குண்டத்தில் இருந்து அம்மிவரை ஏழு இடங்களில் நெல் போட்டு அந்த இடங்களில் மணமகன் தன் கையால் பெண்ணின் வலக் காலைத் தூக்கி வைத்து நடத்தி வருதல் **"ஸப்தம"** எனக் கூறப்படுவது ஏழு எனப்படும். ஸப்தஸ்வரங்கள் ஸப்தரிசிகள் (7) ஸப்தஸாகரங்கள் (7) சப்தலோகங்கள் (7) ஸப்தநாடிகள் (7) ஸப்தகன்னிகைகள் (7) ஸப்த வாரங்கள் (7) எனக்குறிப்பிட்ட அனைத்தும் ஞானிகளால் வகுக்கப்பட்டன. இவை வாழ்க்கைக்கு முன்னுதாரணமாகவும் செயற்படவும் கேட்கவும் ரசிக்கவும் உதவுவன.

கணவனானவனை தன் இஷ்டங்களுக்குப் பிரியமானவனாய்த் தன்னைச் சார்ந்தவனாய் இந்த ஏழடி மூலம் தன்னோடு சேர்த்துக் கொள்வதே இதன் பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) இஷ ஏக பதீபவ

2) ஊர் ஜே த்விபத்பவ

3) ராயஸ்போசாய த்ரிபதீபவ

4) மாயோபவ்யாய சதுஷ்பதீபவ

5) ப்ரஜாப்ய பஞ்சபதீபவ

6) ருதுப்ய ஷட்பதீபவ

7) சகா சப்தபதீபவ

## அம்மி மிதித்தல் :

நான்கு மூலையில் விட்டமுள்ள ஒரு கல்லை (அம்மி) வைத்து அதன் மேல் பெண்ணின் காலைத்தூக்கி வைத்து தனது கையால் கணவன் மிஞ்சியைப் பெருவிரலுக்கு அடுத்துள்ள விரலில் அணிவது முறை. கல்லிலே உள்ள நான்கு விட்டங்களும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்கின்ற நால்வகைக் குண இயல்பைக் குறிக்கும். அதன் நடுப்பகுதியில் கணவன் பெண்ணின் காலைத்தூக்கி வைக்கும் போது, இந்தக் கல்லைப்போல் உறுதியாய் தன் நிலையில் நின்று பிரியாது இளகாது தனது கணவன் மேல் உள்ள பற்றும் நீங்காது கற்பு நெறியில் நின்று விலகாது தன்னை உறுதியாய் நிலைப்படுத்த வேண்டும் என்பது பொருளாகும். அதன் ஞாபகம் வாழ்க்கையில் என்றும் இருக்கவே தினமும் நடக்கும் போதும் கால் மிஞ்சி ஞாபகமூட்டும் என்பதாகும்.

## அருந்ததி பார்த்தல் :



கற்பு நெறியில் மிகச் சிறந்தவளாய் விளங்கியவள் அருந்ததி என்னும் மங்கை. இவளின் சிறப்பினால் வானிலே நட்சத்திரமாக இன்றும் ஜொலித்துக் கொண்டிருக்கின்றாள். பெண்ணின் கற்பு நெறி பெருமையை உணர்த்தவே அருந்ததி இருக்கும் திசை பார்த்து நமஸ்காரம் செய்வது மரபு. சில இடங்களில் அருந்ததிக்கெனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பம் வைத்து, கும்பத்திலே பூப்போட்டு வணங்குவதும் உண்டு.

## மோதிரம் போட்டு எடுத்தல் :

இது கிரியையிலே கூறப்படவில்லை. மணமக்களுக்கு கூச்சம் தெளியவும் சபை சிறப்புக்காகவும் மோதிரத்தை மஞ்சள் கலந்த நீரில் போட்டு இருவரும் ஒரே சமயத்தில் கைவிட்டு எடுக்க வேண்டும். மணமக்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்ற தத்துவத்தையும் குறிக்கும்.

## அரசாணி :

இது பத்ததியிற் கூறப்படவில்லை. இது தேசவழக்கம் போலும், அரசிலே சிவபிரானையும், வேம்பிலே உமாதேவி யாரையும் வழிபடும் வழக்கம் இன்றும் உண்டு. ஒரே இடத்தில் அரசும், வேம்பும் நடப்பட்டு அரசால் என்ற பேருண்டாகி அரசாணி என்றும் மாறியிருக்கலாம். இப்போது இவைகளுக்குப் பதிலாக முருக்கு நடப்படுகின்றது. முருக்கு, அரசு, ஈல் முருக்கு ஆகிய மூன்றும் பிரமா, விஷ்ணு, ருத்திரனாகிய மும்மூர்த்திகளையும் பூசிப்பதற்குரிய மரங்கள் என்றும் இவை மூன்றையும் நடும் வழக்கமும் உள்ளதென்றும் கூறுவர்.

## அறுகு அரிசி போடுதல் :

இந்த நிகழ்ச்சி மணமக்கள் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வேண்டும் எனப் பெரியோர்கள் மனமுவந்து ஆசீர்வதிப்பதாகும். அறுகானது நன்றாக பரவும் தன்மையும் இலகுவில் அழியாத தன்மையும் உடையதால் மணமக்கள் இருவரும் அதே தன்மையோடு சிறப்புற்று, வாழ வேண்டும் என்ற நோக்கில் அறுகைச் சேர்த்து அரிசி போடுவதில் மாறுபட்ட தன்மையைக் காணமுடியும். சிலர் கீழ் இருந்து மேல் நோக்கியும் சிலர் மேல் இருந்து கீழ்நோக்கியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசீர்வதிப்பதுண்டு. இதில் சரியான முறை முழந்தாளிலும், புஜத்திலும், சிரசிலும் அறுகரிசி இட்டு ஆசீர்வதிப்பதே சரியான முறையாகும். மனிதனுடைய உடல் பஞ்சபூத அமைப்பை உடையது. முழந்தாளுக்குக் கீழே **"பிருதுவி தத்துவம்"** பூமியோடு சம்மந்தமுடையது. **"அப்பு தத்துவம்"** மனிதனின் இகபர சுக வாழ்வின் ஆரம்பம். எனவே தான் முழந்தாளில் இருந்து ஆசீர்வாதம் தொடங்க வேண்டும். அத்தோடு மேல் இருந்து கீழே போடுவது தோஷ பரிகாரம் நீங்க வியாதிகள் நீங்க செய்யப்படும்.

**"சீக்கழிப்பே"** மேல் இருந்து கீழ் போடுதல். ஆசிர்வாதம் முழந்தாள், புஜம், சிரசு என மூன்று இடங்களில் இடுவதே சரியான முறையாகும்.

## ஆராத்தி எடுத்தல் :

திருமணச் சடங்கின் முடிவில் இது செய்யப்படுவதாகும். மணமக்களுக்கு **"கண்ணூறு"** (கண் திருஷ்டி) கழியும் பொருட்டு ஒரு தட்டிலே குங்குமம் தூவி அதன் மேல் கற்பூரம் ஏற்றி இரு சுமங்கலிகள் வலது பக்கத்திலிருந்து இடப்பக்கமாக மூன்று முறை சுற்றிக் கற்பூரத்தை அணைத்து மணமக்களுக்கு அக்குங்குமத்தை நெற்றியில் திலகமிட்டு விடுதல்.

## நாமகரணம் :

பூமியிலே பிறக்கும் மனிதனுக்கும் முதன்முதல் நடாத்தப்படும் கிரியை **"நாமகரணம்"** எனப்படும். பெயர் சூட்டுதல் எனவும் கூறலாம். இது குழந்தை பிறந்து ஆசௌசக் கழிவன்று நடாத்தப்படும் கிரியையாகும். குழந்தை பிறந்த நட்சத்திரத்தின் எழுத்தொழிலிற்கேற்பவும் தெய்வாம்சம் பொருந்திய பெயராகவும் சந்ததி வழித்தோன்றல் பெயராகவும் அமைதல் நன்று. குழந்தையின் பெயரை வலது காதிலே மூன்று முறை ஓதி கற்கண்டு தண்ணீர் பருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுமியிருப்போருக்கும் இனிப்பு பானம் வழங்க வேண்டும். இதன் பொருள் எமது வம்சத்தில் தோன்றியுள்ள இக்குழந்தையை எமது வம்சாவழி செயல் தொழில் கொள்ள கண்கண்ட தெய்வமும் சைத்திரிய வம்சமும் நிறைந்த சூரிய பகவானை வணங்கி சூரியன் போல் பெயரும், வாழ்வும் பிரகாசிக்க வேண்டும் என்ற மரபு முறையில் நடாத்தப்படுவதாகும்.

## காதுகுத்தல் (கர்ணவேதனம்) :

பிறந்த குழந்தை ஆசௌசக் கழிவன்று அல்லது 6, 7, 8, 10 மாதங்களிலும் **"காது குத்தல்"** வைபவம் நடாத்தப்படும். இதற்கு பூசை கிரியை எனச் செய்ய வேண்டியதில்லை. பிள்ளையார் வைத்து நிறைகுடம் வைத்து வணங்கிச் செய்தல் வேண்டும். இது குழந்தைகட்கு ஏற்படும் அரிட்டதோஷம் நிவர்த்திக்கவும் தமிழர் பாரம்பரிய கலாச்சாரங்களில் கடுக்கண் முக்கியமானதாக இருப்பதாலும் குழந்தைகட்கு அழகு சேர்க்கும் வகையிலும் இக் **கர்ணவேதனம்** என்ற விழா எடுக்கப்படுகின்றது மரபு.

## தீட்சை :

தீ கொடுத்தல், சை கெடுத்தல் அதாவது ஞானத்தைக் கொடுத்து மலத்தைக் கெடுத்தல், தீச்சுடர் போல் பிரகாசமான ஞான அறிவைப் புகட்டி மந்தமாய் மனதில் படிந்திருக்கும் மலங்களை நீக்கி விடுதலை தீட்சை எனப்படும். இதில் சமயதீட்சை விஷேடதீட்சை, நிர்வாணதீட்சை, வாசக தீட்சை, மான தீட்சை, யோக தீட்சை, சாத்திர தீட்சை, ஔத்திரி தீட்சை எனப்படும் முறையே கண்ணால் அருட்பார்வையினாலும் பரிசம் தொடுவதாலும், உபதேசத்தினாலும், ஹோமத்தினாலும் ஒரு மாணாக்கனைப் பரிசுத்த ஆத்மீக ஞானவாதியாக குருவால் ஆக்குவதே. இத்தீட்சை பெறாதவன் சைவசமயி எனக் கூறுவதற்குத் தகுதி அற்றவன் என்பது ஆகமங்களின் கூற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சான்றோர் சொல்லமுதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ருதுசாந்தி :

ஒரு பெண்குழந்தை பிறந்து வளர்ந்து பருவமடைந்த இல்வாழ்க்கைக்கும் தாய்மைக்கும் தகுதியுடையவளாய் மாறும் நாளே பூப்படைதல் எனப்படும். பெண் பூப்படைந்து ஆசௌசம் கழியும் நாளில் சுத்தி புண்ணியாகம் செய்து கும்ப ஜலத்தால் ஸ்நானம் செய்வித்து கண்ணூறு கழியும் பொருட்டு நிறைகுடம், நிறைநாளி, புட்டுக்கூம்பு, திருஷ்டி உருண்டை, குத்து விளக்கு போன்றவற்றால் ஆராத்தி எடுத்து திருஸ்டி செய்வது மரபு.

### பண்புச் செயல்கள் :

தகுந்தவர்களுக்குத் தானம் செய்

ஒழுக்க போதனைகளைப் பின்பற்று

நல்லெண்ணங்களைப் பின்பற்று

நல்லெண்ணங்களை நினை

பிறருக்குப் பணிசெய் பிறரைக் கவனித்துக் கொள்

பெற்றோரையும் மூத்தோரையும் மதித்து நட

அவர்களுக்கு வேண்டுவன செய்

உன் புண்ணியங்களில் ஒரு பகுதியைப் பிறருக்குக் கொடு

பிறர் உனக்குக் கொடுக்கும் புண்ணியங்களை ஏற்றுக் கொள்

நல்ல கருத்துக்களைக் கேட்டு உணர்

நல்ல கருத்துக்களைப் பிறருக்குக் கற்றுக் கொடு

உன் குற்றங்களை நீக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சான்றோர் சொல்லமுதம்

கேள்வி : இறைவனது சக்தியை ஏற்பதற்குரிய திறனை வளர்ப்பது எங்ஙனம்?

அரவிந்தர் : முதல் தேவை மனதில் அமைதி. பிறகு ஆர்வமும் அப்பியாசமும்.

கேள்வி : அமைதியான மனம் என்றால் எண்ணங்களே இராவா?

அரவிந்தர் : இல்லை. எண்ணங்களே இருக்கக்கூடாது என்பது அவசியமில்லை. எண்ணங்களே இல்லாத நிலை மோனம். மனத்தினூடு எண்ணங்கள், உணர்ச்சிகள் முதலியன செல்லும் போது கலங்காதிருந்தால் அதற்கு அமைதியான மனம் என்று பெயர். மனம், எண்ணங்கள் தன்னுடையவை அல்ல என உணர்கிறது. அது அவற்றைக் கவனிக்கலாம். ஆனால் எதற்கும் கலங்கக்கூடாது.

– ஸ்ரீ அரவிந்தர், பூரணயோக வினாவிடை

உன்னுயிர் போவதாயினும் சரி, நீ பிற உயிரைப் போக்காதே

– திருவள்ளுவர்

'ஓம்' என்பது இறைவனின் கையெழுத்து – ஸ்ரீ அரவிந்தர்

'பிரபக்தி' என்ற வடமொழிச் சொல்லுக்கு, ஆண்டவனைச் சரணாகதி அடைவது என்பது பொருள்.

நம்பிக்கையின் உச்சியிலேதான் தெய்வதரிசனம் பூர்த்தியாகிறது.

– கண்ணதாசன்

யானையை எலி இழுத்துக் கொண்டு போகிறது - இது காளமேகப்புலவரின் கிண்டல் (சிலேடை) அதாவது, விநாயகர் யானை உருவம், அவரது வாகனம் எலி.

எத்தொழிலைச் செய்தாலும் ஏது அவஸ்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தில் – பட்டினத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவ முத்துக்கள்.....!

- உலகிலேயே பூக்கள் இல்லாது போனால்..... ஐயையோ உலகத்தில் அழகே போய்விடும்.
  அன்பு இல்லாது போனால்....! மனிதனின் அழகே போய்விடும்.
  அன்பில்லா வாழ்க்கை இறக்கை இல்லா பறவை.

- அன்பு என்பது தியாகமே....! அது எதையும் எடுத்துக் கொள்வதில்லை. கொடுத்துக் கொண்டே இருப்பது தான் அதன் இயல்பு.

- மக்களில் கரைபவர்கள், மக்களுக்காக, மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்பவர்கள் மனித வரலாற்றில் இறைவன் பேசுகின்றார் என நம்புகின்றவர்கள், அதற்கு செவிசாய்ப்பவரே.....!

- மனிதனாக பிறந்த ஒவ்வொரு ஜீவனும் குழந்தையாக மாறவேண்டும். இது என்று நடந்து எப்போ சபையேறி உலகம் அமைதி அடையப் போகின்றதோ.....?

- சூழலுக்கு தகுந்த விதத்தில் எந்த ஒரு பூவும் தன் நிறத்தை மாற்றிக் கொள்வதில்லை. ஆனால் மனிதனுக்கு புத்தி சொல்லும் மனிதனின் மனமோ.....! அடிக்கடி மாறுவதேன்.....?

- ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்ளும் போதே அவர்களின் ரம்மியமான நாவல் முடிகிறது. ஆனால் அவர்களின் சரித்திரம் அன்றே தொடங்குகின்றது !

**யார் யார் சிவம்**
**நீ நான் சிவம்**
**வாழ்வே தவம்**
**அன்பே சிவம்**

தேடல் : **க. மனோகரன் வீபோ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூ என்றால் அன்பு

பூக்களில் அழகாகவும், நறுமணமாகவும், பல வர்ண நிறமாகவும் கடவுள் நிறைந்திருக்கின்றார். தாமரையில் இருப்பவர் மஹாலட்சுமி மட்டுமல்ல மற்றக் கடவுளர்கள் எல்லாருமே தாமரை மலர் பீடத்தில்தான் இருக்கின்றார்கள். அதனால் தான் ஆலயத்தில் அன்புப் பரிசாக பிரஸாதமாக பூவைக் கொடுக்கின்றார்கள்.

*- சிவஸ்ரீ சோமாஸ்கந்தா குரு -*

# வீபூதியின் மகத்துவம் என்ன தெரியுமா ?

நாம் எல்லாரும் அழிந்து சாம்பலாகி விடும் நிலையாமையை திருநீறு குறிக்கின்றது என்று அறியாதவர்கள் பேசுவார்கள். அது தவறு. நெருப்பில் போடப்படும் பொருட்கள் எல்லாம் நீறாகிவிடும். ஆனால் அந்த நீற்றையே நெருப்பிலிட்டால் அது அப்படியே மாற்றமடையாது தன்னிலையிலேயே நிலைத்து நிற்கும், என்பதனால் அழியாத சாஸ்வதத்தை நீறு பலப்படுத்துகின்றது. ஆனால் நாம் அணியும் திருநீறு சாதாரண சாம்பல் எனப்படும் நீறு அல்ல. நோய்களைத் தீர்க்கவும், பாவங்களைப் போக்கவும், உடலுக்கும், உள்ளத்துக்கும் தூய்மையைத் தரவும் வல்லதே விபூதி என்னும் மருந்து ஆகும். இத்தனை மகிமை விபூதிக்கு எப்படி வந்தது என ஆராய்ந்து பார்த்தால் தாவர உணவை உண்ணும் பசுவின் சாணத்தில் இருந்து விபூதி தயாரிக்கப்படுவதே ஆகும். இந்துக்கள் பல அசிங்கமான இடங்களை புனிதமாக்க பசுவின் சாணத்தை பயன்படுத்துவதும், கரைத்து தெளித்து சுத்தம் செய்வதும், சிவாயநம என்னும் மந்திரத்தை ஜெபித்து தயாரித்துக் கொள்வதும், மீண்டம் மந்திரம் ஜெபித்து திருநீறு மந்திரம் ஜெபித்த பிரசாதமாக நம்மை வந்தடைவதும், பக்தியுடன் நாம் அதை நெற்றியில் தடவி பல பிணிகளை காவல் செய்வதும், அதை அணிபவர்கள் அழகாகவும், ஆரோக்கியமாகவும், அறிவு, செல்வம் பெறுவதும் விபூதியின் மகத்துவமே.

*- சிவஸ்ரீ சோமாஸ்கந்தா குரு -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறுபிறவி

பழையதாகி விட்ட சட்டையை கழற்றி எறிந்து விட்டுப் புதிய சட்டையை அணிந்து கொள்வதைப்போல உடலுக்குள் இருக்கும் ஆத்மா பழைய உடலை உதறிவிட்டு புதிய உடலை நாடி புகுந்து விடுகின்றது. இதுவே **மறுபிறவி** என்பதாகும்.

*- பகவத்கீதை -*

## தீர்த்தம், சந்தனம், குங்குமம் பிரசாதமாக வழங்குவதன் தத்துவம் என்ன தெரியுமா?

நமது பாவங்களை போக்கும் தன்மை கொண்டது அபிஷேக தீர்த்தம். மந்திரங்களின் சக்தியை ஈர்ந்து வைத்திருக்கும் தன்மை கொண்ட விக்கிரகங்களில் பட்டு வெளியேறி வரும் அபிஷேக தீர்த்தம் தெய்வீக சக்தி கொண்ட மந்திர நீரை உட்கொள்வதால் நமது உடலின் உள்புறமும், வெளியே நம் உடலின் வெளிபுறத்தில் பிரசாதமாக பூசிக் கொள்வதால் எமது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆன அந்தகக் கரணங்களும் பரிசுத்தம் அடையும். கடவுளின் சக்தி ஆகிய ஆற்றலை சிகப்பு நிற குங்குமம் குறிக்கும். மேலும் இது மங்கலம், செல்வம் ஆகியவற்றின் சின்னமாகவும் சொல்லப்படுகின்றது. எனவே திருமணத்தில் முக்கிய இடம் வகிக்கின்றது. சந்தணம் கடவ்ளின் தன்கருணையை நினைவூட்டுகின்றது. மேலும் இது உடலுக்கு குளிர்ச்சியையும், உள்ளத்துக்கு மகிழ்ச்சியையும் தருகின்றது, என்பதால் இவைகளை தெய்வத்தின் பிரசாதமாக வழங்கப்படுகின்றது. மேலும் சிகப்புநிற குங்குமம் நெற்றியில் அணிந்தால் தீய மந்திரம் சூனியம் முதலியன அணுகாது.

*- சிவஸ்ரீ சோமாஸ்கந்தா*




# வாழைப்பழம்

வாழைப்பழம் அடிமுதல் நுனிவரை மக்களுக்கு பயன்படுகின்றது. வாழைப்பழத்தில் மூளை வளர்ச்சிக்கு அவசியமான செரோடினின் என்னும் பொருளை உருவாக்கும் சக்தி நிறையவே உள்ளது. இது இருந்தால் தான் மனதில் மகிழ்ச்சி, முகத்தில் புன்னகை உண்டாகும். எனவே வாழைப்பழம் மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும். திருமணவீட்டில் வாழைமரம் கட்டுவதும், பெண் மாப்பிள்ளைக்கு பசுவின் பாலோடு, பழம் கொண்டு செல்வதும் ஏன் என்று எண்ணிப்பார்த்தால் உண்மை தெரியும். பழங்களில் முதல்தர பழம் வாழைப்பழம். இதை கூடுதலாக புசிக்கும் சமுதாயம் அறிவுள்ள சமுதாயமாக விளங்கும் என்பது கண்கூடு.

- *பொன்மணி* -

# மாவிலைத் தோரணம் ஏன் கட்டுகின்றோம்?



மாவிலையும், குருத்தோலையும், பாளைகூந்தலும் அழுகி துர்நாற்றம் வீசாமல் முறையாக நின்று காய்ந்து உலரும் தன்மை கொண்டவை. இது போலவே நமது வாழ்க்கையும் இடையில் கெட்டுப்போகாமல், நீண்டகாலம் மங்கள கரமாக நடைபெற்று முற்றுப் பெற வேண்டும், என்பதற்காகவே மங்கலம் பொங்க மாவிலை குருத்து கூந்தல் தோரணம் கட்டுகின்றோம்.

- *சிவஸ்ரீ சோமாஸ்கந்தா குரு* -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்கையூர் கண்ணகி அம்மன் கோவில் வரலாறு

புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்மன் கோவில் மிகவும் தெய்வீகம் நிறைந்தது. சுமார் இருநூற்றாண்டு காலத்துக்கு முன் பசுமாடுகள் புல்மேய சென்றுவிட்டு வழமை போல மாலையில் வீடு திரும்பாமல் போகவே ஊர்மக்கள் தேடிச்சென்று பார்க்கும்போது கடற்கரையில் மிதந்து வந்து ஒதுங்கி கிடந்த ஒரு பெட்டகத்தை சூழ்ந்து பசு மாடுகள் எல்லாம் படுத்துக் கிடந்ததை பார்த்த ஊர்மக்கள் பெட்டகத்தை திறந்து பார்க்கையில், சிதைந்த நிலையில் ஒரு கண்ணகி சிலை இருப்பதைக் கண்டு ஆச்சரியம் உற்றனர். இங்கு நின்ற ஒரு பெண்மணி ஆவேசக் கலைகொண்டு தன்னை கோவில் அமைத்து வழிபட்டால் தான் அந்த ஊரைக் காப்பாற்றுவேன் என கூறியதைக்கேட்ட ஊர்மக்கள் அப்படியே கோவில் அமைத்து வழிபட ஆரம்பித்ததாக வரலாறு சொல்கிறது.

*- சிவஸ்ரீ சோமாஸ்கந்தா குரு -*

# கோவில் பூஜாதத்துவம்

கோவிலில் நடைபெறும் பூஜையின் தத்துவம் என்ன தெரியுமா? படைத்தல், காப்பாற்றுதல், அஞ்ஞானத்தை அழித்தல், முன்வினைகளை மறைத்தல், மெய்ஞானத்தை அருளுதல் ஆகிய கடவுளின் ஐந்து தொழில்களையும் நமக்கு அறியத்தருகின்றது. நாட்டில் நீர்வளம், நிலவளம் பெருகவும், தானியங்கள், பழமரங்கள் செழிக்கவும் அபிஷேகம் செய்கின்றோம். எல்லா வகை உயிர்களையும் காப்பாற்றுவதற்காக ஆடை ஆபரணங்களால் அலங்காரம் செய்கின்றோம். உடல் மனம் ஆகியவற்றில் உள்ள அழுக்குகளை சுட்டெரித்து புனிதமாக்குவதற்காக கடவுள் தனது படைப்புக்களை அழிக்கின்றார் என்பதற்கொப்ப ஓமகுண்ட அக்கினியில் எல்லாவற்றையும் ஹோமமம் செய்கின்றோம். தூபம் போடுதல் உலக இன்பங்களில் ஆழவைத்து அனுபவம் பெற்று பின்பு மறைப்பதற்காக செய்யப்படுகின்றது. இறைவன் எமக்கு பிரகாசமான ஞானத்தை அருளுகின்றான் என்பதை நாம் புரிந்து வணங்குவதற்காகவும் கோவில்களில் தீபாராதனை வழிபாடு செய்யப்படுகின்றது.

*- சிவஸ்ரீ சோமாஸ்கந்தா குரு -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவமே வராமல் இருக்க வழி இல்லையா ?

அதற்கு வழி நாம் கையை அசைத்தாலும், தும்மினாலும் கூட ஜீவ அணுக்கள் அதிர்கின்றன. அப்படியானால் யாருக்குமே துன்பம் ஏற்படாமல் வாழ இயலுமா ! அதனாலே நாம் செய்கின்ற அனைத்தையும் தெய்வத்துக்கே அர்ப்பணமாக மனத்தினாலேயே கொடுத்துவிட்டால், அதனாலே வரக்கூடிய புண்ணியமோ அல்லது பாவமோ நமக்கு சொந்தமாக வராது. இதுதான் பாவம் சேராமல் தடுக்க ஒரே வழி.

*- சிவஸ்ரீ சோமாஸ்கந்தா குரு -*

## ஆஞ்சநேய பகவானுக்கு பிடித்த விடயங்கள்

ஆஞ்சநேயருக்கு துளசி மாலையும், வெற்றிலைச் சுருள் மாலையும், வடைமாலையும், ஸ்ரீராம ஜெயம் என்று எழுதிக் கட்டிய ஸ்ரீராம மாலையும் மிக மிக பிடித்தமானவை. எலுமிச்சம் பழமாலை ஆஞ்சநேயரை குளிர்விக்கும். வெண்ணை சாற்றி வழிபடுவோரின் துயர்கள், வெண்ணை உருகுவது போன்று உருகிவிடும். சந்தணாபிஷேகம், அன்னாபிஷேகம் மிகவும் விஷேடமானது. குங்கும அர்ச்சனை பாதத்திற்கு செய்யலாம். சக்கரைப்பொங்கல், புளியோதரை, தயிர்ச்சாதம், சுண்டல் ஆகியவற்றை நெய்வேத்தியம் பண்ணிய பின்பு பிரசாதத்தை பக்தருக்கு வழங்கி மகிழலாம்.

*- சிவஸ்ரீ சோமாஸ்கந்தா குரு -*

## விபூதியின் வேறு பெயர்கள்

மனிதனை பிரகாசிக்க செய்வதால் **"பஸிதம்"** என்றும் பாவங்களைச் சாம்பல் ஆக்குவதால் **"பஸ்மா"** என்றும் செல்வங்களை கொடுப்பதினால் **"பூதி"** என்றும் உடலைக் காப்பதால் **"ரக்ஷை, ரட்சை"** என்றும் சொல்லப்படுகின்றது.

*- ஸ்மிருதி பாஸ்கரம் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

- வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் : அதை நழுவ விடாதீர்கள்.
- வாழ்க்கை ஒரு பயணம் : அதை சென்று முடியுங்கள்.
- வாழ்க்கை ஒரு விடுகதை : அதை விடுவியுங்கள்.
- வாழ்க்கை ஒரு விளையாட்டு : அதில் ஈடுபடுங்கள்.
- வாழ்க்கை ஒரு போராட்டம் : அதை வென்று காட்டுங்கள்.
- வாழ்க்கை ஒரு வெகுமதி : அதை ஏற்றுக்கொள்ளுங்கள்.
- வாழ்க்கை ஒரு போட்டி : அதில் வெற்றி பெறுங்கள்.
- வாழ்க்கை ஒரு கலை : அதை அழகுபடுத்துங்கள்.
- வாழ்க்கை ஒரு வேதனை : அதை தாங்கிக் கொள்ளுங்கள்.
- வாழ்க்கை ஒரு சவால் : அதை எதிர் நோக்குங்கள்.
- வாழ்க்கை ஒரு சோகம் : அதற்கு மனம் தளராதீர்கள்.
- வாழ்க்கை ஒரு பிரச்சினை : அதற்கு தீர்வு காணுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கியமான மூன்று

* மதிக்க வேண்டிய மூன்று –
**முதுமையானோர், மார்க்கம், சட்டம்**

* நேசிக்க வேண்டிய மூன்று –
**நேர்மை, தூய்மை, கடின உழைப்பு**

* போற்ற வேண்டிய மூன்று –
**அறிவு, அழகு, பண்பு**

* பேணி வளர்க்க வேண்டிய மூன்று –
**திருப்தி, தைரியம், மனமகிழ்ச்சி**

* தவிர்க்க வேண்டியது –
**புகைத்தல், மதுவருந்துதல், சூதாடல்**

* அடக்க வேண்டிய மூன்று –
**நா, வேதனை, கோபம்**

* கட்டாயம் கவனிக்க வேண்டிய மூன்று –
**பேச்சு, நடைமுறை, செயல்கள்**

* ஆதரிக்க வேண்டிய மூன்று –
**வாக்குறுதி, நட்பு, பண்பு**

* ஒழிக்க வேண்டிய மூன்று –
**திருட்டு, சோம்பல், பொய்**

* விரும்ப வேண்டிய மூன்று –
**கருணை, நற்குணம், மன அமைதி**

* வெறுக்க வேண்டிய மூன்று –
**பெருமை, அநீதி, வாக்கு மீறல்**

* தப்பித்துக் கொள்ள வேண்டிய மூன்று –
**தீயஎண்ணம், பொறாமை, பிடிவாதம்**

* அஞ்ச வேண்டிய மூன்று –
**களவு, கோள், பொய்**

* எதிர் கொள்ள வேண்டிய மூன்று –
**கவலை, மரணம், பயணம்**

* போரிட வேண்டிய மூன்று –
**தேசம், கண்ணியம், நட்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று எச்சரிக்கைகள்

☛ எண்பதோ எண்ணூறோ, நூறோ வயதடைந்த ஒரு கிழவனோ, கிழவியோ மெலிந்து உடைந்த பற்களோடும் நரைத்த குடுமியோடும், உடல் தளர்ந்து போய் இருந்ததை ஒருநாளும் நீ கண்டதில்லையா?

✳ நீயும் அழிவுக்கு உள்ளாவாய், உன்னாலும் அதிலிருந்து தப்ப இயலாது என்ற நினைவு உன்னிடம் ஒருபோதும் எழுந்ததில்லையா?

☛ ஆணோ, பெண்ணோ நோயுற்று, துன்புற்று படுக்கையில் வீழ்ந்து, தன் சொந்த மலத்தில் புரண்டு எழக்கூடப் பிறரது தயவை நாட வேண்டிய நிலைமையில் இருப்பதை ஒருநாளும் நீ கண்டதில்லையா?

✳ நீயும் நோய்க்கு உள்ளாவாய். உன்னாலும் அதிலிருந்து தப்ப இயலாது என்ற நினைவு உன்னிடம் எழுந்ததில்லையா?


☛ ஆணின் பிணமோ, பெண்ணின் பிணமோ ஓரிரு நாட்களிற்குப் பிறகு ஊதிப்போய் கருநீல நிறம் பெற்று அழுகி விடுவதை ஒருநாளும் நீ கண்டதில்லையா?


✳ நீயும் சாவுக்குள்ளாவாய் உன்னாலும் அதிலிருந்து தப்ப இயலாது என்ற நினைவு ஒரு போதும் எழுந்ததில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருத்தோலை, மாவிலைத் தோரணங்கள்




# இறைவனைத் துதிப்போமாக

வாழ்க்கையில் இறைவழிபாடு முக்கியம் இறைவன் ஒருவனே எம்முள் நின்று எம்மனைவரையும் இயக்குபவன்.

இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதை நாம் உணர்ந்து நடக்கவேண்டும். அவனுடைய செயல்கள் எல்லாவற்றையும் நாம் அறிந்து நடக்கவேண்டும்.

நாம் எந்த மதத்தினராயும் அவ்வவர் மதத்தினைப் பின்பற்றி ஆண்டவனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துதிசெய்து அவன் வழி நடப்போமானால் எல்லாம் வல்ல இறைவன் கண்திறந்து இன்னருள் சுரப்பான் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

உலகிலேயே கொடிய நோய்களாகக் கொள்ளப்படும் கொலை, கொள்ளை, சூது, பொய் போன்றவை தீர்ப்பதற்கும் அவற்றுக்கு முதல் காரணமாகிய கொடிய மதுவை ஒழிப்பதற்கும், கோயில்களுக்கு தினம், தினம் சென்று வழிபடுவோமானால் எமது உள்ளம் தூய்மையடையும் மேற்கூறிய நோயிலிருந்து விடுதலை பெற்று நல்வழி நடக்கலாம். எனவே நாம் அனைவரும் எப்போதும் இறைவன் சிந்தையில் ஆழ்வோமாக.

## இறைபக்தியில் இன்புறும் இதயம்

நாயன்மார்களுடைய வாழ்க்கை நெறியும் பக்தி நிலை அடைவதற்கு வழிகாட்டியாக இருக்கின்றது. அவர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நால்வகை நெறிகளில் ஒன்றைப் பயன்படுத்தி தங்கள் அன்பை வளர்த்துக் கொண்டார்கள். ஈற்றில் ஞானநிலையை அடைந்து ஆன்மாவின் பாசங்கள் நீங்கி, பதியைச் சென்றடைந்தார்கள்.

மனம், வாக்கு, காயம் என்பன மூலம் இறைவழிபாடு செய்தும் பக்தி நிலையை அடையலாம் என்பதும் பொருத்தமானதாகும்.

ஒவ்வொரு அவயவமும் இறைவனுக்கே தொண்டு செய்ய வேண்டுமென நாவுக்கரசர் திருவங்கமாலை என்னும் திருப்பதிகத்தில் கூறியுள்ளார்.

குறிப்பாகச் சொல்லின் தலை இறைவனை வணங்க வேண்டும். வாய் இறைவனை வாழ்த்த வேண்டும். கண்கள் இறைவனின் திருவுருவத்தையே காணவேண்டும். செவிகள் இறைவன் திருப்புகழைக் கேட்கவேண்டும். நெஞ்சம் எப்போதும் ஈசனை நினைக்க வேண்டும்.

வாக்கினால் இறைவன் திருநாமத்தை ஜெபிக்கவும் வேண்டும். ஜெபத்திற்கு வலிமை பொருந்த கருவியாயுள்ளது. “**நமசிவாய**” என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவைந்தெழுத்து மந்திரம். இம்மந்திரத்தின் பெருமையை திருமுறைகளில் காண்கிறோம். **"நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே"** எனச் சுந்தரரும் **"நற்றுணையாவது நமச்சிவாயவே"** என அப்பரும், **"நாதன் நாமம் நமச்சிவாயவே"** எனச் சம்பந்தரும், **"நமச்சிவாய வாழ்க, நாதன் தாழ் வாழ்க"** என மணிவாசகரும் பாடியிருக்கின்றார்கள்.

பக்தி வளர வேண்டுமானால் மனத்தை ஒரே வழியில் நிறுத்தி இறைவன் திருவடியிற் பதித்து, வைத்திருக்கவேண்டும். இதை யோகநிலை என்றும் கூறலாம்.

உண்மையான இறைபக்தி என்ற மலர், மலர்ந்து அன்பருள் என்னுங் காயாக முற்றி இன்ப அன்பு எனுங் கனியாகப் பழுத்து, இறுதியில் முத்தியை அளிக்கும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

**- எஸ். ஆர். எஸ். தேவதாசன்**

உதயவாக்கு :

எந்த ஒரு கடவுளை வணங்கினாலும் அதை எல்லாக் கடவுள்களும் ஏற்றுக்கொள்வார்கள்.

**- ஷிண்டோ -**

"ஒன்றே குலம்; ஒருவனே தேவன்"

**மதுவையும் போதைவஸ்து**
**பாவிப்பதையும் கைவிடுங்கள்.**
**இவை உடல்நிலையைப் பாதிக்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் வடிவில் சில விபரம்

## அரிய வடிவு

விநாயகர் தோற்றம் அபூர்வத் தோற்றமாகும். விலங்கு, மனிதர், பூதம், தேவர் என்ற நான்கின் இணைப்பாக இவர் உள்ளார். யானைத்தலை, சுளகுச்செவி, தும்பிக்கை விலங்கின் வடிவமாகும். புருவமும் கண்களும் மனித வடிவமாகும். பேழை வயிறும் குறுகிய கால்களும் பூத வடிவாகும். இரண்டுக்கு மேற்பட்ட கரங்கள் கொண்டிருத்தல் தேவ வடிவாகும். வேறு எத்தெய்வமும் இவ்வாறு அமைதல் இல்லை.

பிள்ளையாரின் திருவுருவம் யாவையும் அடக்கிய திருவுருவம். அங்கிங்கெனாதபடியெங்கும் பிரகாசமாய் விநாயகர் உள்ளார்.

சிவனுக்கும் உமைக்கும் மகனாகப் பிறந்த பிள்ளையார் ஆர் விகுதியுடன் சேர்த்து வழங்கப்படுகிறார். மூத்தபிள்ளை எனவும் இவர் அழைக்கப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவின் பிம்பம்

அம்மையப்பனை வலம் வந்து உலகைச் சுற்றியதாகக் கூறி அரிதாகக் கிடைத்த மாங்கனியை விநாயகர் பெற்றுக்கொண்டார் என்று புராணம் கூறும். அறிவின் பிம்பமாக பிள்ளையார் விளங்குகிறார் என்பதே அதன் தாற்பரியமாகும். ஒரு நொடியில் உலகைச் சுற்றிவர மயில்மீது அமர்ந்து முருகன் சென்ற செயல் ஆற்றலின் வடிவு என்று குறிப்பிடலாம்.

## கணநாதன்

கணங்களின் தலைவனாக விநாயகர் இருப்பதால் கணபதி என வழங்கப்படுகிறார். இப்பெயரை ஞானசம்பந்தரும்,

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே. *1-123-5*

என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

விநாயகர் என்று சிலரும் வினாயகர் என்று சிலரும் எழுதுவதைப் பார்க்கிறோம். இரண்டுமே பொருத்தமானதாகும். தமக்கு மேற்பட்ட நாயகர் இல்லாதவர் என்றும் வினையை விரட்டுபவர் என்றும் மேற்படி சொற்களுக்கு முறையே பொருள் கூறலாம்.

## நரமுக விநாயகன்

யானை முகத்துடன் கூடிய விநாயகரே நம் சிந்தனையில் இருப்பினும் உமை உருவாக்கிய முதல் கணபதி பால நரமுக விநாயகரே ஆவார். சிதம்பரம் தெற்கு வீதியில் நரமுக விநாயகர் கோயில் தற்போதும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகக் கட்டுரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகரின் வடிவங்கள்

பாலகணபதியாக, நர்த்தன கணபதியாக, வல்லப கணபதியாக, ஞான கணபதியாக, யோக கணபதியாக, சித்திபுத்தி கணபதியாக என்றெல்லாம் பலவாறு தோற்றம் கொள்ளும் கணபதிக்கு நூற்றுக்கு மேற்பட்ட வடிவங்களும் பெயர்களுமுண்டு.

விநாயகர் கோயிலிலும் கொலுவிருப்பார்; வெட்டவெளியிலும் அமர்ந்திருப்பார். மூலவராகவும் வீற்றிருப்பார்; கன்னிமூலையிலும் காட்சி தருவார்.

## தும்பிக்கையாழ்வார்

சைவத்தில் மட்டுமின்றி வைணவத்திலும் தும்பிக்கையாழ்வாராக இவர் விளங்குகிறார். விக்னேஸ்வரராக மட்டுமின்றி, விக்னேஸ்வரியாகவும் இவர் எழுந்தருள்கிறார். (சுசீந்திரம் தாணுமாலயப் பெருமாள் கோயிலில் பெண்வடிவில் விநாயகர் சிற்பமுண்டு).

விநாயகர் திருவிளையாடல்கள் பலவாகும். அவருடன் தொடர்புடைய கதைகள் ஏராளம்.

## பல்லவர் காலம்

தமிழ்நாட்டில் விநாயகர் வழிபாடு எப்போது தோன்றியது என்ற கேள்விக்கு ஒரு சிலர் பல்லவர் காலம் தொடங்கி என்பர். சங்க இலக்கியங்களில் விநாயகர் பற்றி செய்தி இல்லை என்றும் அவர்கள் கூறுவார்கள். காவிரியின் தோற்றமே பிள்ளையாரின் செயலால்தான் என்று மணிமேகலை குறிப்பாகக் கூறுகிறது.

## வேதங்களில் விநாயகர்

வடமொழி என்று எடுத்துக்கொண்டால் இருக்குவேதம் 11 - 13 **'கணாநாம் த்வா கணபதி'** என்ற தொடர் மூலம் கணபதி குறிக்கப்படுகிறார்.

ஐத்ரேய பிரமாணயத்தில் அறிவின் தலைவராக விநாயகர் கூறப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைத்திரீய ஆரண்யத்தில் **'துந்தின்'** உடைய கடவுள் கூறப்படுகிறார்.

கணபதி காயத்திரியில் **'தந்நோ தந்திப் பிரசோதயாத்'** என்று கூறப்படுகிறது. பல்வேறு புராணங்களிலும் விநாயகர் கூறப்படுகிறார். ஒவ்வொரு சிவாலயத்திலும் குறிப்பிட்ட பெயரில் தல விநாயகர் உண்டு.

## ஆகம நூல்களில் விநாயகர்

சுப்ரபேதாகமம் விக்கினேச ஸ்தாபன விதிப்படலத்தில் விநாயகர் பிறப்பு கூறப்படுகிறது.

வாதுளாகமத்தில் தத்துவப் படலம் 199ஆம் சுலோகத்தில் மகேசனுடைய கண்டத்தில் இருந்து கணேசர் தோன்றினார் என்று கூறப்பட்டு உள்ளது.

உமையம்மை ஒருமுறை மண்ணால் உருச்சமைத்து உயிர் கொடுத்து கொஞ்சிக்கொண்டிருந்தார். தேவர்கள் வந்தனர். சனியனும் வந்தான். அவன் பார்வை பட்டு குழந்தை தலை அறுபட்டு போயிற்று. தலையும் மறைந்தது. வடக்கில் தலைவைத்து உறங்கும் ஓர் உயிரினைக் கொண்டு வருமாறு சிவன் கூற, பூத கணங்கள் யானைத் தலையைக் கொண்டுவர இறைவன் அதைப் பொருத்த வேழமுகன் தோன்றினான். இறைவன் வேழமுகனைக் கணநாதன் ஆக்கினார் என்று சிவபுராணம் கூறுகிறது.

## மத்ஸ்ய புராணம்

உமையன்னை ஜயை, விஜயையுடன் நீராடச் சென்றபோது ஜயை **'நமக்கென்று தனியாகக் காவலரை உருவாக்கிக் கொண்டால் நல்லது'** என்று கூற அன்னை அழுக்கினை உருட்டி உருவாக்கி உயிர் கொடுத்து, காவலுக்கு வைத்தார். அப்போது இறைவன் அங்கே வர புதுக் காவலன் தடுக்க, இறைவன் அவன் தலையை வெட்டினார். நடந்ததை அறிந்து தேவி துயர்கொள்ள யானைத்தலையைப் பொருத்தி உயிர் உண்டாக்கினார் சிவன் என்று மத்ஸ்ய புராணம் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுப்ரபேதாகமம்

உமையும் சிவனும் உய்யாவனம் சென்றனர். அங்கே பிடியும் களிறும் தம்முட் கலந்து இன்பம் அனுபவிக்க இவர்களும் பிடி, களிறாக மாறி இன்பம் அனுபவிக்க விநாயகர் பிறந்தார் என்று சுப்ரபேதாகமம் கூறுகிறது.

### காஞ்சிப்புராணம்

சிவனும் பார்வதியும் மந்திரசாலா என்ற மண்டபத்தில் ஒரு பிரணவம் எழுதப் பெற்றிருந்ததை நோக்கினர். சமஷ்டி பிரணவமாகிய அது பிரிந்து இறைவன் எழுத்தாகிய **'அகரம்'** களிறாகவும், இறைவி எழுத்தாகிய **'உகரம்'** பிடியாகவும் ஆயிற்று. அவ்விரண்டும் கூடி கணபதியாயிற்று என்று காஞ்சிப்புராணம் கூறுகிறது.

### கந்தபுராணத்தில் கணபதி

கந்தபுராணக் கயமுக உற்பத்திப் படலத்தில் விநாயகர் தோற்றம் கூறப்படுகிறது. உய்யாவனத்திலிருந்த சித்திர மண்டபத்தில் ஒரு பிரணவம் எழுதப் பெற்றிருந்தது. அதனை உமாதேவியார் நோக்கினார். சிவனும் பார்த்தார். பிரணவம் பிடியும் களிறுமாகப் புணர்ந்தன. கஜபதி பிறந்தார்.

### விநாயக புராணம்

பரமசிவன் உலகைப் புனருற்பத்திச் செய்ய விருப்பம் கொண்டு விநாயகராக உருக்கொண்டார். முக்குணங்களையும் பிரம்ம, விஷ்ணு, உருத்திரர்களாகப் படைத்தார். மூவரும் தத்தம் தொழில் கைவர விநாயகரை வழிபட்டனர் என்று விநாயக புராணம் கூறுகிறது.

### சிந்தாமணி விநாயகர்

கபில முனிவர் தவம் செய்து பெற்ற சிந்தாமணியைக் **"கணன்"** என்பவன் எடுத்துச் சென்றான். அதை மீண்டும் பெற கபிலர் கடுமையாகத் தவம் செய்தார். விஷ்ணுவின் மாயையாகிய சாருஹாசனி வெளிப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'விநாயகரை நோக்கித் தவம் செய்' என்று கூற அவரும் அவ்வாறே செய்ய சிந்தாமணி விநாயகர் தோன்றினார் என்று விநாயக புராணம் கூறும்.

## பராசிவ முனிவர்

பராசிவ முனிவருக்கும் அவர் மனைவி பன்னியர்க்கும் குமரனாக விநாயகர் மடுக்கரையில் தோன்றினார். அவர்கள் அதை எடுத்து வளர்த்தனர் என்று புராணம் கூறும்.

## மல்லாளன்

கமலாசுரன் வேதங்களைக் கவர்ந்து கொண்டு கடலில் மறைய பிரமன் தவம் செய்ய விநாயகர் தோன்றி அசுரனை வென்று வேதங்களை மீட்டனர். மல்லாளன் என்னும் பிராமணச் சிறுவனாகவும் தோன்றி வேதங்களைப் பயிற்றுவித்தார் விநாயகப் பெருமான் என்றும் பௌராணிகர் கூறுவர்.

## பால விநாயகர்

உமாதேவி ஏகாக்ஷர மந்திரத்தைச் சிவபெருமானிடம் உபதேசம் கேட்டார். கணபதியை உபாசிக்க விநாயகர் ஆறு கரங்களுடன் யானை முகத்துடன் பாலசந்திர விநாயகராகப் பிறந்தார் என்றும் விநாயக புராணம் கூறும். பல்வேறு புராணங்களில் விநாயகர் பிறப்பை வெவ்வேறு விதமாகக் காண்கிறோம். இனி, தமிழ்நாட்டில் காணப்படும் தொன்மையான விநாயகர் கோயில்களையும், சிற்பங்களையும் காண்போம்.

## முதல் குடைவரைக் கோயில்

விழுப்புரம் - செஞ்சிப் பாதையில் அமைந்துள்ள மண்டகப்பட்டு என்ற ஊரில் முதல் மகேந்திர வர்மன் குடைவித்த குடைவரைக் கோயில் கல்வெட்டுடன் உள்ளது. இங்கு வடமொழியில் வெட்டப்பட்ட கல்வெட்டை வைத்துக்கொண்டு, முதல் மகேந்திர வர்மனே குடைவரைக் கோயிலைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்தியவன் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர் பலரும் கூறியுள்ளனர். தற்போதும் கூறுகின்றனர். அக்கல்வெட்டு வருமாறு :

*ஏதத் அநிஷ்டகம் அதர்மம் அலோகம் அசுதம்*
*விசித்ர சித்தேன நிர்மாபிதம் நிர்பேன*
*ப்ரம்ம ஈஸ்வர விஷ்ணு லட்சதாயதனம்*

**'செங்கல், சுண்ணாம்பு, மரமின்றி விசித்திர சித்தன் என்ற அரசன் பிரம்மனுக்கும், சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் குடைவரைக் கோயில் எடுப்பித்தான்'** என்று பொருள் கூறலாம். ஆயின் இவனுக்கு முன்பே பாண்டிய நாட்டில் பிள்ளையார்பட்டி மற்றும் குன்றக்குடி ஊர்களில் குடைவரைக் கோயில்கள் குடைவிக்கப்பட்டுள்ளன. பல்லவர்களில் வேண்டுமானால் முதல் மகேந்திரன் குடைவரைக் கோயில்களை மும்மூர்த்திகளுக்கு எடுத்திருக்கலாம். தமிழகத்தைப் பொறுத்தவரை பாண்டியரே இதில் முன்னோடி என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

## பரஞ்சோதியும் விநாகரும்

நரசிம்மவர்மனுடைய படைத்தலைவன் பரஞ்சோதி என்ற சிறுதொண்டர், சாளுக்கிய நாட்டில் படையெடுத்து சென்று போரிட்டு வெற்றி பெற்றபின், அங்கிருந்து பிள்ளையார் சிலையைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்ததாகவும் அதனைத் திருச்செங்காட்டங்குடியில் ஸ்தாபித்ததாகவும் அதன்பிறகே தமிழ்நாட்டில் விநாயகர் கோயில்கள் கட்டப்பட்டு விநாயகர் வழிபாடு உருவாயிற்று என்றும் சில ஆய்வாளர்கள் குறிப்பிட்டனர். இன்றும் சிலர் பிள்ளையார் வழிபாடு மராட்டியத்திலிருந்து வந்த வழிபாடு என்றே குறிப்பிடுகின்றனர். அவர்கள் ஒன்றை மறந்துவிட்டார்கள், பரஞ்சோதிக்கு முன்பே ஞானசம்பந்தர் திருச்செங்காட்டங்குடியைப் பாடியுள்ளார் என்பதை. திருச்செங்காட்டங்குடியிலும் திருவாரூரிலும் வாதாபி கணபதி என்ற பெயரில் சிலைகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சர்வம் சக்தி மயம்

சக்தி இருந்தால்தான் உலகமே இயங்கும். சக்தி இல்லையென்றால் சிவனே என்று இரு என்று சாதரணமாக அனைவரும் கூறுவார்கள். சக்தி = இயங்குசக்தி சிவம் = நிலைச்சக்தி ஆற்றல் கிடைக்க வேண்டுமானால் சிவம் + சக்தி இணையவேண்டும். உயிரினங்கள் அனைத்தையும் ஈன்றெடுக்கின்றவள் தாய்சக்திதான். அதனால்தான் அபிராமிப்பட்டர் சக்தியை பூத்தவளே புவனம் பதின்நான்கினையும் பூத்தவண்ணம் காத்தவளே என்று அழைக்கிறார். அனைவரும் தாயின் வயிற்றிலிருந்து தோன்றி தாயின் மடியில் (பூமாதேவியின் மீது) மடிகிறோம். எனவே உயிரினங்களினது தோற்றமும் முடிவும் தாயிடமே.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது ஔவையார் வாக்கு. அம்மையே அப்பா ஒப்பிலா மணியே என்று அருளாளர் அன்னைக்கு முதலிடம் அளித்தார். இவ்வுலகில் வாழ்க்கையை சிறப்பாக நடத்த மிக முக்கியமான தேவை பலம் என்ற சக்தி தான். அதன் அம்சமாகத் திகழும் துர்க்காதேவிதான் நமக்கெல்லாம் பலத்தை அருள்கிறாள். ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாதத்தில் அம்பிகைக்காக கொண்டாடும் நவராத்திரி பூஜையில் முதல் மூன்று நாட்களும் துர்க்காதேவியை வணங்கி பேறு பெறுகிறோம். அடுத்த நிலையிலுள்ள செல்வத்தை அருளும் செல்வத்திருமகளாம் லட்சுமி தேவிக்காக இடை மூன்று நாட்களும் விழா கொண்டாடுகிறோம். கல்வியையும் கலையையும் அருள்கின்ற கலைமகள் சரஸ்வதி தேவிக்கு கடைசி மூன்று நாட்கள் விழா எடுத்து வணங்கிப் பேறு பெறுகின்றோம்.

மனித வாழ்க்கைக்கு தேவைப்படும் கல்வி, செல்வம், வீரம் மூன்றையும் அருள்கின்றவள் அன்னை பராசக்தியே. உதாரணமாக மின்சாரம் ஒன்றுதான். அதே மின்னசாரம் குளிர்சாதனப்பெட்டியில் குளிர் சக்தியாகவும், மின்சார அடுப்பில் வெப்ப சக்தியாகவும், மின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசிறியில் இயங்கு சக்தியாகவும் நமக்கு பயன்படுகின்றது. ஒரே மின்சாரம் இன்னும் எத்தனையோ விதங்களில் நமக்கு பயனளிக்கின்றது. அன்னை பராசக்தி எமக்கு எல்லாமாக இருந்து அருள் பாலிக்கின்றாள்.

ஆதிசங்கரர் பிச்சைக்காக ஒரு வீட்டின் முன் நின்றார். அந்த வீட்டில் வறுமை தாண்டவமாடியது. வீட்டிலுள்ளவர் சாப்பிட்டு பல நாட்களாகின்றது. ஆதிசங்கரருக்கு பிச்சை கொடுக்க அவர்கள் வீட்டில் எதுவும் இல்லை. வீட்டார் வீட்டில் எல்லா இடமும் தேடி அங்கு காய்ந்த நெல்லிக்கனியை தவிர வேறு பொருட்கள் இல்லாததால், இல்லை என்று சொல்லாமல் அவ் காய்ந்த நெல்லிக்கனியை மிகவும் வருத்தத்துடன் ஆதிசங்கரரின் பிச்சைப் பாத்திரத்தில் இட்டு வணங்கினார்கள். ஆதிசங்கரனார் ஞான திருஷ்டியால் அவர்களின் வறுமையைக் கண்டார். அவர் திருமகளை இருபத்தோரு கனகதாரா தோத்திரம் கூறித் துதித்தார். திருமகள் தோன்றினாள். அவ் வீட்டுக்காரரின் வறுமையை போக்குமாறு வேண்டினார். அவர்களுக்கு முன் வினை இருப்பதாக திருமகள் கூற அவர்கள் அனுபவிக்க வேண்டிய வினையை தனக்காக நீக்கி அவர்களுக்கு செல்வம் தரவேண்டும் என்று வேண்டினார். திருமகளும் இரக்கம் கொண்டு தங்க நெல்லிக்கனிகளாக அவர்கள் வீட்டில் மழை பொழிவது போன்று பொழியச் செய்தார். பின்பு அவர்கள் வீட்டில் வறுமை நீங்கியது. கனகதாரா தோத்திரம் கவிஞர் கண்ணதாசனால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஆக்கல் அளித்தல் காத்தல் அருள்நிறை
இறைவன் சக்தி அன்னவன் தோளில்
நீயும் அனைத்துமாய் விளங்கும் சக்தி
ஆக்கலில் வாணியாவாய் அளித்தலில்
திருவாய் நிற்பாய் அழிக்கின்ற வேளை
வந்தால் அந்தமில் துர்க்கையாவாய்
தீக்கொண்ட கரத்து நாதன் திருப்பராசக்தியாக
திரிபுரம் ஏழுலோகம் திருவருள்
புரிந்து நிற்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குயர் கமலச்செல்வி வாடைநீ தென்றல்
நீயே வளமென இரப்போர்க்கெல்லாம்
வந்தருள் புரிகின்றாயே

உலகியலிலும் இறைநிலையிலும் அன்னைதான் தந்தையைக் காட்டிலும் மிகவும் இரக்க குணம் உடையவர்.

ஒரு சமயம் சிவபெருமானை பிரம்மஹத்தி தோஷம் பிடித்து அவருடைய கையைக் கபாலம் கவ்விக்கொண்டது. விடவில்லை. கடைசியில் அன்னபூரணியிடம் வந்தார். அன்னை உணவு உருண்டையை தரையில் உருட்டினார். அவ்வுணவைக் கவ்வுவதற்காக கபாலம் கீழே விழுந்தது. சிவபெருமான் மாயமாய் மறைந்தார். இறைவனையே அம்பிகைதான் காப்பாற்றினாள். எங்கும் எதிலும் அன்னையின் அருளாட்சிதான் நடைபெறுகிறது.

ஓம் சக்தி !

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

*சமூக ஜோதி*
*ஆன்மீகத் தென்றல்*
*சிவநெறிக் காவலர்*
***தம்பி. புவனேந்திரன்***
*ஜேர்மனி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயில்

**சிவப்பேறெய்திய**

**தவத்திரு குன்றக்குடி அடிகளார், தமிழ்நாடு**

தமிழினத்தின் சமய வாழ்வியலில் மிகவும் சிறப்பானதோர் இடத்தைப் பெற்று விளங்குகிறது. தமிழினம் வரலாற்று அறிவிற்கெட்டிய முற்காலம் தொட்டே இறைவனைக் கைப்பொருளாகக் கண்ணுக்கினிய பொருளாக ஏற்றுத் திருக்கோலத் திருமேனி அமைத்து வழிபட்டு வந்திருக்கிறது. எந்த ஒரு சிந்தனைத் தத்துவத்துக்கு, சின்னமும் சடங்கும் இன்றியமையாதன. ஒரு கருத்தின் பரிணாமவளர்ச்சியே சின்னத்திலும் சடங்கிலும் கொண்டுபோய் விடுகிறது. நம்முடைய சமயச் சார்பிலுள்ள சின்னங்களை, சடங்குகளைக் கண்டிக்கின்ற பிற சமயங்களும் கூடச் சின்னங்கள் சடங்குகளிலிருந்து முற்றிலும் விடுபட்டவை அல்ல என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஏன்? பகுத்தறிவுவாதிகளுங்கூட இதற்கு விலக்கல்லர். தம்முடைய சிந்தனையைக் கருத்தைப் புறத்தே வெளிப்படுத்த மற்றவர்களுக்கு உணர்த்த - தம்முடைய உணர்வை நிலைநிறுத்திக் கொள்ளச் சின்னங்களும் சடங்குகளும் பெரிதும் துணை செய்யும் என்றே கொள்கின்றனர். இது ஓரளவு வளர்ந்தவர்களுக்கு, வளர வேண்டியவர்களுக்குச் சின்னங்கள் சடங்குகளின் வாயிலாகவே பெற வேண்டிய உணர்வைப் பெற முடியும்.

திருக்கோயில் வழிபாட்டில் நம்முடைய சமுதாயம் மிகவும் சிறப்புற ஓங்கி வளர்ந்திருந்தது. சங்க காலத்திலேயே நகரமெனக் கருதத் தக்க பெருங்கோயில் இருந்ததாகப் புறநானூறு பேசுகிறது. தமிழகத்தை ஆண்ட பேரரசுகள் தாம் வாழ்ந்த மனைகளைக்கூட வளமனைகளாகப் பெரும்பாலும் எடுக்கவில்லை. குடிமக்களோடு குடிமக்களாக ஒன்றித்து வாழ்ந்த அவர்களுடைய எளிமையை என்னென்று கூறிப் பாராட்டுவது? ஆயினும் இந்த உலகுக்கு அம்மையப்பராக விளங்கும் இறைவனுக்கு விண்ணளந்து காட்டி வெவ்வினை நீக்கி வேண்டிய வரம் கொடுக்கும் கோயில்கள் நிறைய எடுத்தார்கள்.

திருக்கோயில் வழிபாடு நமக்கு இன்றியமையாதது. நமது உணர்வு பரபரப்பானது சென்ற இடங்களில் செல்லும் இயல்புடையது. இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்துப் பிடித்து நிறுத்தி உணர்வு கலந்த வழிபாட்டில் ஈடுபடுத்துவதற்குத் திருக்கோயில் ஏற்ற இடம். உயிர்கள் உய்ந்தி உயர்வதற்கு உறுதுணையாக இருப்பன ஐம்புலன்களைப் பற்றி இன்புறும் ஐம்பொறிகளேயாம். இவற்றில் ஒன்று வழிபாட்டில் ஈடுபட்டுப் பிறிதொன்று ஈடுபடாது போனாலும் பலனில்லை. இந்த ஒருமைப்பாட்டினை உருவாக்கும் ஆற்றலும் சூழலும் உடையது திருக்கோயில். திருக்கோயில் வழிபாடு நமது வழிவழி மரபு. அதனாலன்றோ அப்பரடிகள் திருக்கோயில் சூழ்தலை உடன்படுமாறு வற்புறுத்த, **"ஒரு காலும் திருக்கோயில் சூழாராகில்....."** என்று திருக்கோயில் சூழாதாரை உறவுகொள்ள மறுக்கிறார்.

இங்ஙனம் வழிவழிச் சிறந்துவரும் திருக்கோயில் வழிபாட்டில் வரவர வணிகப் போக்கு மேம்பட்டு வருகிறது. ஆங்கும் வேண்டத்தக்க அமைதிக்குப் பதில் ஆரவாரம் தலைகாட்டுகிறது. **"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி"** நின்று அரற்றக்கூடிய திருக்கோயிலில் இன்றைய சூழல் என்ன? ஆங்குக் காதலும் கனிவும் இன்று அரும்புகிறதா? எந்தத் திருமுறைப் பாடல்களை இறைவன் கேட்க விரும்பிக் காமுற்றானோ, அந்தத் தனித் தமிழ்ப் பாடல்கள் ஆங்கு ஓதப் பெறுகின்றனவா? இறைவனே **"அருச்சனை பாட்டேயாகும்"** என்று தெளிவுற எடுத்துக்காட்டிய பிறகும், இன்று திருக்கோயில்களில் நடைபெறுவது திருமுறை அருச்சனையா? அப்பரடிகள் அருளிய போற்றித் திருத்தாண்டகம் ஐந்தும் அருச்சனைப் பதிகம் எனப்படும். அவை என்ன ஆயிற்று? அதுபோல் திருவாதவூரடிகள் மொழிந்த போற்றித் திருவகவலும், காருணியத்து இரங்கலும் என்ன ஆயிற்று?

போற்றி மந்திரம் ஓதிப் பூத்தூவுவார்க்கன்றி ஏனையோர்க்கு இறைவன் அருளான் என்னும் உண்மையினைப் பின்வருமாறு உணர்த்துகின்றன திருமுறைகள்:

*"செழுந்தண் மால்வரை எடுத்த செருவலி இராவணன் அலற*
*அழுந்தவூன்றிய விரலான் போற்றி என்பார்க் கல்லதருளான்*
*கொழுங்கனி சுமந்துந்திக் குளிர்புனர் நிவர்மலகு கரைமேல்*
*அழுந்துஞ் சோலை நெல்வாயில் அரத்துறையடிகள் தம் அருளே"*

*(2.90.8)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"ஆக்கை யாற்பயனென் - அரன்*
*கோயில் வலம்வந்து*
*பூக்கையால் அட்டிப் போற்றியென் னாத இவ்*
*ஆக்கை யாற் பயனென்" (4.9.8)*

*"தெருளு மெய்க்கலை விளங்கவும் பாருளோர் சிந்தை*
*இருளும் நீங்கவும் எழுதுசொல் மறை அளிப்பவர் தாம்*
*பொருளும் ஞானமும் போகமும் போற்றி*
*என்பாருக்கருளும் அந்தணர் திரு அரத்துறையை வந்தணைந்தார்"*
*(12.சம்பந்தர், 224)*

தேவரெல்லாம் தொழும் தேவன், நம் தலைவன், தமிழோடிசை கேட்கும் இச்சையால் காசு நித்தம் நல்கினான். மொழிக்கு மொழி தித்திப்பான மூவர் சொல்லும் தமிழ் கேட்டான் தண்ணளி சுரந்தான். இன்றோ இறைவனுக்கும் நமக்கும் இசைவை உருவாக்கச் சக்தியற்ற அருச்சனை முறைகளே நடைமுறையிலிருக்கின்றன. சிவ சிந்தனையில் திருக்கோயில்கள் அனைத்திலும் திருமுறை அருச்சனையே நடைபெறச் செய்ய வேண்டும். இதற்குக் கிளர்ச்சியே செய்தாலும் தவறில்லை. ஏனெனில் சிவபெருமானே செந்தமிழ்ப் பாட்டுக் கேட்கக் கிளர்ச்சி செய்திருக்கிறான். அமைந்திருந்து கேட்டு அளவிலா இன்புற்றுப் பூட்டிய கதவைத் திறந்து கொண்டு வெளிவந்திருக்கிறான். இதனைத் திருமறைக்காட்டுத் திருக்கோயில் வரலாறு பேசும். பண் சுமந்த பாடற் பரிசு பெறக் கலிமதுரையில் மண் சுமந்தான். சுந்தரரின் சுந்தரத் தமிழ்ப் பாட்டுக் கேட்டு மகிழ்ந்ததில் சேரமான் பூசனைக்குச் செல்லும் செயலையும் மறந்தான். பெண்ணும் பொன்னும் பெருஞ் சோறுஞ் சேர்த்துக் கொடுத்துச் செந்தமிழ் கேட்டான். அப்பரடிகளின் அமுதத் தமிழை ஆர்ந்து அநுபவிக்க அவர்தம் உரிமையாகிய வீடும் அப்பொழுதே கொடுக்க வேண்டியும் காலம் தாழ்த்தினான்.

நம் இறைவன் ஆடுகின்ற அரசு தெற்கு நோக்கியே ஆடுகின்றான். தென்திசை நோக்கியே நகர்ந்து நகர்ந்து ஐம்பெரும் மன்றத் திருத்தலம் அமைத்துக் கொண்டு ஆடுகிறான். தெற்கில் என்ன புதுமை? வடகரையிலன்றோ கயிலாயம் இருக்கிறது! வடமலையில் கயிலை இருக்கலாம். ஆனால் அங்கு சந்தனப் பொதியத் தென்றலில்லை. அத்தென்றலோடு அளாவும் தேமதுரத் தமிழையும் ஆர்ந்து அனுபவிக்கவே அண்ணல் தென் திசையை நோக்கி ஆடுகிறான். இது வடபுலம் வெற்றி கண்ட நற்றமிழ்க் குமரகுருபரரின் கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலால் இறைவனை மகிழ்வித்து நாம் மகிழத் திருமுறை அருச்சனையே துணை.

நம்முடைய சமயம் சாதிப்பிரிவினைகளுக்கு அப்பாற்பட்டது. ஒரு குலநெறியே, உயர் சைவநெறி. ஆனால், இன்னமும் நம்முடைய திருக்கோயில்களில் இடையே புகுந்த சாதிமுறை அமைப்பைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறோம். இது ஓர் அவலம் என்பதை இன்னமும் நாம் உணராதது ஏனென்றே விளங்கிக்கொள்ள முடியவில்லை. நம்முடைய ஞானாசிரியர்கள் **"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள், கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்?"** என்று இடித்துக் கேட்ட பிறகும், **"சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலிநாயேன்"** என்று இரங்கத்தக்க நிலையை எடுத்துக்காட்டிய பிறகும் நாம் சாதி உணர்வுகளிலிருந்து விடுபட்டோமில்லை. **"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"** என்ற அப்பரடிகளின் பாட்டைப்பாடி மகிழ்ந்தோமேயன்றி அப்பாட்டுணர்த்தும் பொருளை உணர்ந்தோமில்லை. அப்பரடிகளும், அப்பூதியடிகளும் கொண்டுள்ள அன்பின் உறவைச் சேக்கிழாரின் செஞ்சொற் காவியத்தில் படித்து மகிழ்ந்தோமேயன்றி, சமுதாய அமைப்பில் அத்தகைய நல்லிணக்க உறவுகள் உருவாகவில்லை. அன்பிற்கோர் திருவுருவமாய் விளங்கிய கண்ணப்பர் வரலாறு காவியத்தில் கண்டோமேயன்றி வாழ்க்கையில் கண்டோமில்லை. கண்ணப்பர் வரலாறு நம்முடைய சமுதாய சமய வரலாற்றில் ஒரு மையம் - ஒரு வரலாற்றுத் திருப்பு முனை. கண்ணப்பர் சிவகோசரியார் பாத்திரங்கள் மூலம் இறைவன் நமக்கு உணர்த்தியது அன்பு கலந்த வழிபாடேயாகும்.

இறைவன் அடியார்களின் தூய அன்பைத் துய்த்து மகிழ்கின்றான். அடியார்களின் தூய அன்பை ஆரத்துய்த்து அனுபவிப்பதில்தான் அவனுக்கு ஏக்கம் அதிகம். நாம் இறைவனோடு கொள்ளும் காதல் உறவு ஒருபோதும் கைக்கிளை அல்ல. நாம் அவனைக் காதலித்துத் தேடும் ஆர்வத்திலும் பன்னூறு மடங்கு அவன் நம்மைக் காதலித்துத் தேடி வருகிறான். நாம் அவனது திருவருளுக்கு ஏங்கிக் கிடப்பதுபோலவே அவனும் நமது அன்புக்கு ஏங்கிக் கிடக்கிறான். அதுதானே **இரு தலையும் ஒத்த எழிற்பெருங்காதல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதுதானே அன்பு.** திருவள்ளுவர் அகனைந்திணை வாழ்க்கையில் எச்சில் அமுதமாவதை எடுத்துக் காட்டினார். குமரகுருபர அடிகள் ஞான வாழ்க்கையில் எச்சில் அமுதமாவதையும் பண்டார மும்மணிக்கோவையில் எடுத்துக் காட்டினார். இறைவனோடு கொண்ட இன்ப அன்பு உறவில் கண்ணப்பரின் எச்சில் இறைவனுக்கு அமுதமாவதைச் சேக்கிழார் வடித்துக் காட்டினார்.

விதிமுறைகள் வளர்ச்சிக்கு இன்றியமையாதன. பயிருக்கு வேலி போல்வன. ஆனால் விதிமுறைகளையே சமயமெனக் கருதி மூழ்கி விடுதல் கூடாது. நம்மை முறுகிய அன்பு நெறியில் வளர்க்கவே விதிமுறைகள் துணை செய்ய வேண்டும். மாறாக ஆணவத் தடிப்பையும், சாதிப் பிணக்கையும், பகையையும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையான இழிவு மனப்பான்மையையும், உயர்வு மனப்பான்மையையும் விதிமுறைகள் என்ற பேரால் அனுமதிப்பது பெரும் குற்றமாகும்.

சாதிசடங்கு வழிபாட்டின் சின்னமாக சிவகோசரியாரையும், ஆரா அன்பு வழிபாட்டின் சின்னமாக கண்ணப்பரையும் காட்டிச் சிவகோசரியார் வழிபாட்டிலும் கண்ணப்பர் வழிபாடு அறிவாலும் அன்பாலும் தனக்கு மிகவும் உகந்தது என்று இறைவனே நன்கு எடுத்துக் காட்டி உணர்த்திய பிறகும் கூட நம்முடைய கோயில்களில் அன்பு வழிபாட்டுக்குரிய சிறந்த சூழலை உருவாக்கினோமில்லை. இதற்கு வரலாறு நிகழாத - அப்பரடிகள் திருவவதாரம் செய்யாத வடபுலத்துக் காசியில் கூடப் பலரும் இறைவனைத் தொட்டுத் தாமே பூம்புனலும் வார்த்தும் பூ தூவியும் வழிபாடு செய்யும் உரிமை இருக்கிறது. ஆனால் நம்முடைய நாட்டிலோ **"மோகமாய் ஓடிச் சென்றார், உச்சிமோந்தார்"** என்ற கண்ணப்பர் வரலாற்றைக் கனியக் கனியப் பேசுகின்றோம். அங்ஙனம் பேசும் நம்நாட்டில் உள்ள திருக்கோயிலில் இறைவனுக்கு நேரடியாகப் பூவும் நீரும் இட்டு வழிபாடு செய்யும் உரிமை நமக்கு இல்லை.

நம்முடைய திருமுறைகள் எல்லாம் இறைவனுக்குப் பூவும் நீரும் இட்டு வழிபாடு செய்தலை எடுத்துக் காட்டுகின்றன. திருவையாற்றுத் திருப்பதிகத்தில் அப்பரடிகள் **"போதொடு நீர் சுமந்து ஏத்திப் புகுவார் அவர் பின் யான் புகுவேன்"** என்று அருளிச் செய்துள்ளமையும், **"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றருளிச் செய்தமையையும் ஓர்க. இதனால் நம்முடைய திருக்கோயில்களில் உள்ள சிவாச்சாரியார்களுடைய உரிமையையும் தகுதியையும் மறுக்கின்றோமில்லை. மறுக்கவும் இயலாது. இறைவனே வழிபாடு செய்யும் முறையை உணர்த்திக்காட்ட **"ஐயாறதனில் சைவனாக வந்தார்"** என்று திருவாசகம் பேசுகிறது. இன்றும் திருவையாற்றில் தன்னைத்தானே பூசித்தல் என்ற திருவிழா நிகழ்ந்து வருகிறது. ஆதலால் சிவாச்சாரி யார்கள் நம்முடைய சமயத் திருக்கோயில் வழிபாட்டு முறைக்கு இன்றியமையாதவர்கள். நாமெல்லாம் திருக்கோயிலுக்குச் சென்று பூவும் நீருமிட்டு வழிபட்டாலும் ஒவ்வொரு போதே செய்ய இயலும். அவர்கள் முப்போதும் திருமேனி தீண்டித் திருவருட் காப்பைப் பேணுபவர்கள். வருகிறவர்களுக்கும் வழிபாட்டுணர்வைத் தூண்டிச் செய்து காட்டிச் செய்யச் செய்பவர்கள். இதனால் மரபும் காப்பாற்றப்படும். வழிபாட்டில் ஈடுபடுபவர்கள் அனைவரும் நினைந்து நினைந்து, நனைந்து நனைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து வழிபாட்டில் ஈடுபடவும் முடியும். ஆவியோடாக்கை புரை புரை கனிய என்புத் துளைதொறும் திருவருளின்பம் பாய வழிபாட்டின்பம் பெற முடியும். இந்த மாற்றம் இன்றைய உடனடியான தேவை.

திருக்கோவில்களில் மெய்யடியார்கள் சென்று பூவும் நீருங்கொண்டு வழிபாடு செய்யுமாறு திருமுறை சித்தாந்த நூல்களுக்கியையத் தொன்மையில் நம்நாட்டில் நிகழ்ந்த பெரிய புராண இலக்கியச் சான்றுகள் பல. அவற்றுள் சில வருமாறு: கண்ணப்பர், சாக்கியர், திருநீல நக்கர், திருமுருகர், முதலியோர் இவற்றை வரும் வெண்பாவில் நினைவு கூரத் தருகின்றோம்.

*"நன்னெறிக்கிங் காசான்நூல் நால்வரசர் எண்முறையும்*
*துன்னுதுணை நான்கேனை தொல்சிவன்றாள் – மன்னுவிக்கும்*
*சீலமுதல் நாற்படியும் போற்றி மறை பூத்தூவல்*
*சால்பெழுத்தைந் தோதல் வழிபாடு"*

(எண்முறை – எட்டுத் திருமுறை)

*"கோவில் வழிபாட்டில் குறைவில்சமு தாயத்தார்*
*யாவர்க்கும் பூநீர் எழிற்கையார் தூவி ஐந்தும்*
*ஓதுரிமை நாட்டினர்நம் கண்ணப்பர் சாக்கியனார்*
*ஓதுநக்கர்பூ முருகர் ஓர்."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயில் வழிபாட்டில் எளிய சடங்குகள் இடம்பெற வேண்டும். காலமும் பொருளும் மிச்சமாக வேண்டும். கால விரிவும், பொருள் விரிவும் மட்டுமே கடவுள் விரும்புவன அல்ல. **"சட்டோ, நினைக்க மனத்தமுதாம்"** என்றார் மாணிக்கவாசகப் பெருமான். திருமுறைகள் காட்டும் வழிபாட்டு நெறி முறைகள் திருக்கோயில்களில் மிகுதியும் இடம்பெற வேண்டும். நமது வழிபாட்டு முறைகள் இறைவனுக்குப் பூவும் நீரும் மிகவும் உரியன. தூபமும் தீபமும் உரியன. இவற்றோடு நெஞ்சை நெகிழச் செய்யும் பண்ணிசையும் தேவை. இவை தம்மோடு இன்றியமையாதது தேவைப்படுவது நெஞ்சம் ஆகும். (பலர் நெஞ்சினைத் தவிர மற்றும் தேங்காய், பழம், ஏன்? முடியே கூடத் தருகிறார்கள் ஐயோ, பாவம்) இவை கொண்டு நிகழ்த்துவதே உண்மையான வழிபாடு.

மூவர் தமிழில் மடைப்பள்ளியைக் காணோம். ஆங்கே பிரசாத மகிமையையும் காணோம். இன்றோ நம்முடைய கோயில்களின் பெரும் நிதிகளை மடைப்பள்ளிகளே விழுங்கிக் கொண்டிருக்கின்றன. ஆதலால் எல்லாருக்கும் எளிமையில் இயலும் பூவும் நீருமிட்டு நால்வர் தந்த நற்றமிழால் பாடி வழிபாடு செய்தலே சிறந்த வழிபாடு. இதற்குரிய சூழல் உருவாக வேண்டும் என்பது நமது பெரு விருப்பம். திருக்கோயில் வழிபாட்டில் பயனற்ற மரபு தவறிய வழிகளில் நிதியைச் செலவழிக்காது சிக்கனம் கையாளப் பெற வேண்டும். எஞ்சிய தொகையை இறைவனின் கருணைக்கு ஆளாகக் கூடிய உயிர்வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு உரிய ஆக்கப் பணிகளில் செலவிட வேண்டும்.

வழிபாட்டில் இறைவன் ஏற்றுக் கொள்வது வழிபடுவோரின் தூய அன்பினையேயாம். வழிபடுவோரால் செய்யப்படும் வழிபாட்டுத் துணைகள் அவனுடைய அன்பை வெளிப்படுத்தும் புறக்கருவிகளேயாம். இவ்வுண்மை வருமாறு:

*"வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக்*
*காட்டவும் நாமிலோம் காலையும் மாலையும்*
*ஊட்டவி யாவன உள்ளங் குளிர்விக்கும்*
*பாட்டவி காட்டுதும் பாலவி யாமே"*

- *திருமந்திரம்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு திருக்கோயிலும், திருக்கோயில் அமைந்துள்ள ஐந்து மைல் வட்டத்திற்குள் உள்ள எல்லா மக்களையும் அந்தக் கோயிலிற்கு உரிமையுடைய மக்களாக ஏற்றுப் பதிவு செய்ய வேண்டும். அவர்களின் நலன்களைப் பேணி வளர்த்துப் பாதுகாக்கும் பெட்டகமாகத் திருக்கோயில்கள் அமைய வேண்டும். அக்கோயிலைச் சார்ந்த மக்கள் நலமார வாழ்ந்து நன்றுடையானைச் சூழ்ந்து ஊனினிக்க, உயிரினிக்கப் பாடிப் பரவி மகிழ்ந்து வாழ்ந்திடுதல் வேண்டும். இதுவே உண்மையான சமய அமைப்பு. இன்றோ நம்முடைய திருக்கோயில்களிலும் திருமடங்களிலும் காணி, பூமி, அண்டா சட்டி உடைமைகளின் பட்டியல் புத்தகம் உண்டு. இல்லாது போனாலும் இந்துமத அறநிலைய இலாகா விடாது. சமய நிறுவனங்களின் பொருள் நிலை, வளருமியல்புடைய ஆன்மாக்களின் அருளாதாரத்திற்கு அடிப்படையாகும். இதனை மறந்து பொருளாதாரம் போற்றிப் பயனென்ன?

நம்முடைய திருக்கோயில்கள் திருமடங்கள் காலத்தினாற் தோன்றிய சமய அமைப்புகள் அனைத்தும் ஓரணியில் ஒருங்கு இணைக்கப்பட்ட ஓரமைப்பாக உருப்பெறுதல் வேண்டும். இவைகளை மையமாகக் கொண்ட பொருளாதாரமும் மனித சக்தியும் ஒருமுகப்படுத்தப் பெறவேண்டும். நம்முடைய சமுதாயத்தின் ஏழ்மையையும் வறுமையையும் மாற்ற வேண்டும். நம்முடைய சமுதாயத்திற்குப் பயிற்றிப் பல கல்வி தர வேண்டும். உற்ற பிணிக்கு மருந்து தர வேண்டும். ஆறுதலற்று அலமரும்பொழுது அணைத்து ஆதரவு கூறித் தேற்றிட நாடெங்கும் நம் சமயத் தொண்டர்கள், கையில் வலிமையும் நெஞ்சில் தொண்டுணர்வும் உயிரில் சிவச்சிந்தனையும் தாங்கித் திருத்தொண்டு செய்தல் வேண்டும். சைவத் தமிழ் மகனுக்கு இது புது நெறியோ? இல்லை, தொன்மைநெறி. திருவிழிமிழலையில் கண்ட பஞ்சம் கனிவுறு தொண்டால் மாற்றப் பெறவில்லையா? கண்ணுதற் கடவுளும் தோள் கொடுக்கவில்லையா? திருச்செங்குன்றூரிற் கண்ட நடுங்கு குளிர் சுரம் மாற்றவில்லையா? செங்குன்றூர் மேய பிரான் துணை செய்யவில்லையா? நான் மாடக்கூடலில் தாழ்வான பன்றிக் குட்டியின் பசியும் பொறுத்திடாது தாய்ப்பன்றியாகவே வந்துதித்த கருணையின் திருமேனியை வழிபடும் நமது சமுதாயத்தில் வறுமையும் பிணியும் நமக்கு ஓர் அறைகூவல் அல்லவோ? அன்பு கூர்ந்து அனைவரும் எண்ணுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டென்மார்க் சித்திவிநாயகர் ஆலயத்தில் நடந்த நவராத்திரி விழாவில் தொகுப்பாசிரியர் உரையாற்றுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதம் கூறும் பாவச் செயல்கள்.....!

மனிதன் மனிதாபிமான உணர்வுடன் வாழவேண்டும் என்பது இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவங்களில் ஒன்று. மனபலத்தை விட, ஆன்ம பலமே மனிதனை பலவீனத்தில் இருந்து காப்பாற்றும் என்ற நம்பிக்கை உள்ள மதம் எம் மதம். ஆன்ம பலம் உள்ளவனே உண்மையான பலத்தை உடையவன். அப்படி ஆன்ம பலம் இல்லாதவர்கள் அதை அடைய இறைவழிபாட்டை மேற்கொள்ள வேண்டும்.

மனம் வேறு. ஆன்மா வேறு. மனம் என்பது ஆசாபாசங்களில் உழல்வது. ஆன்மா என்பது, ஆசாபாசங்களை அடக்கி ஆளும் திறன் படைத்தது. மனித இனத்துக்கு இரு மனங்கள் உள்ளன. அவையாவன உள்மனம் வெளிமனம் என்பதாகும். வெளிமனம் எப்போதும் அலையும் தன்மை கொண்டது. ஒரு பொருளின் மீது ஆசை கொண்டு அதை எப்படியாவது அடையவேண்டும் என்று நினைப்பது வெளிமனம். உள்மனம் அப்பொருளை அடைவது அவசியமா....? அப்படி அடைய முயலும் வழி சரியானதா.....? என சிந்திக்கும் தன்மை கொண்டது. இன்னும் எளிமையாகச் சொல்வதானால் ஒரு தவறான காரியத்தை செய்யத் தூண்டுவது வெளிமனம். அதை அப்படி செய்யாதே அது தவறானது என தடுத்துரைப்பது ஆன்மா என்ற உள்மனம் என்பதாகும். இதையும் மீறி அங்கும் இங்கும் அலைந்து திருட்டுவழியில் விழித்துக்கொண்டு செயல் படுவதே வெளிமனமாகும். பொறுமை, இரக்கம், அடக்கம், பெருந்தன்மை, தீவிர சிந்தனை ஆகிய ஆற்றல் படைத்தது ஆன்மா என்ற உள்மனம். ஆசை, காமம், குரோதம், விருப்பு, வெறுப்பு, பொறாமை ஆகிய பொல்லாத குணங்களைக் கொண்டது வெளிமனம்.

ஆன்மாவுக்கு அழிவில்லை, மரணமில்லை.

உடலும் வெளிமனமும் உடல் பிரிந்த பின் அழிந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணிய காரியங்களை செய்யத்தூண்டுவதும், செய்யவைப்பதும், சிந்திக்க வைப்பதும் உள்மனம் என்ற ஆன்மாவே ஆகும்.

இப்படி மனங்களால் ஆளப்படுபவனே மனிதனாகும். வெளிமனத்தை அடக்கி உள்மனத்தின் வலிமையை அதிகப்படுத்தி வாழ்பவனே மனிதனாவான். ஆன்மாவில் தான் இறைவன் குடிகொண்டிருக்கிறான். அதனால்தான் இறைவனை கடவுள் என்கின்றோம். கடவுள் என்றால், வெளிமனத்தைக் கடந்து உள்மனமான ஆன்மாவைத் பார் என்று பொருள். அதைத்தான் நாம் கடவுள் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றோம்.

வெளிமனத்தில் ஆதிக்கம் அதிகமாகும்போது உள்மனமாகிய ஆன்மா நாளடைவில் பலவீனம் அடைகின்றது. ஆன்மபலம் குறைந்தவன் வெளிமனத்தால் ஆட்டு விக்கப்பட்டு பாவச் செயல்களைச் செய்கின்றான். இதைத்தான் வேற்று மதம் சாத்தான் செயல் என்கின்றது. தவறு எனத் தெரிந்தும் தயங்காமல் கொடூரமான செயல்களை செய்வதையே குறிக்கோளாகக் கொள்கின்றான்.

ஆன்மா வைப்பற்றி விளக்கமாக ஆதாரத்தோடு எடுத்துக் கூறுவது இந்து மதம் மட்டுமே !

இந்து மதம் மட்டுமே மானிட வாழ்வியலோடு பின்னிப் பிணைந்துள்ளதும் மனித வாழ்வியலில் பாவ புண்ணியம் பற்றி போதித்து உள்மனத்தை திறக்க வழிகூறி நிற்கும் மதமுமாகும்.

பாவங்கள் ஆவன பல கோடி. அவற்றுள் சில புராணகாலத்தில் பாவம் செய்தவர்கள் பின் பரிகாரம் பெற்று தண்டனை பெற்றவர்களையும் உதாரணம் காண்போமாக.

## புராண காலமும் பாவச்செயல்களும் :

புராண காலத்தில் ஒருவன் ஒரு பாவச்செயலைச் செய்தால், அதனால் சாபம் பெறுவதும்... பின் சாபம் கொடுத்தவனை வணங்கி பணிந்து வரம் கேட்டால் சாப விமோசனம் கிடைப்பதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திரங்களில் படித்து உள்ளோம். அவைகளைப் படித்து உதாரணமாக எடுத்து நாமும் நாம் தெரிந்தோ, தெரியாமலோ பாவங்கள் செய்திருந்தால் அன்னை பராசக்தியிடம் பாதம்பணிந்து இனிநான் இப்படி செய்யமாட்டேன் என அவர் பாதம்பணிந்து உண்மையான, பக்தியோடு உள்மனம் தெரிந்து கொள்ளும் உள்ளன்போடு மன்னிப்பு கேட்டால் பலனைப்பெற்று மோட்சத்தை அடையலாம் என்பது உறுதி.

1. அகலிகையின் பாவமும் அதனால் ஏற்பட்ட சாபமும், சாப விமோசனமும்.

2. அகலிகையின் கற்பைப் பறித்த இந்திரனுக்கு ஏற்பட்ட பாவமும், விமோசனமும்.

3. தந்தையின் சொல்லை மந்திரமாய் ஏற்று தாயைக் கொன்றதின் பாவமும், அது தீர்ப்பதற்காக பரசுராமன் செய்த கோவில் தரிசன யாத்திரையும் பரிகாரங்களும்.

4. மகாபாரதத்தில் திருதிராஷ்டிரன் பெற்ற சாபமும், சாப விமோசனமும். துரியோதனன் பெற்ற சாபமும் சாப விமோசனமும் என பல ஆயிரக்கணக்கான நிகழ்வுகளை நாம் சரித்திரங்களில் படித்து அறிந்திருக்கின்றோம். இவற்றை அடிப்படையாக வைத்து நாம் நம் வாழ்க்கையில் பாவம் செய்வதை ஒரு பொல்லாத செயலென எண்ணி நடந்தால் வாழ்க்கையில் விமோசனம் காண வழி உண்டு.

5. பரிகார முறைகள் தான் இருக்கின்றனவே என்று பாவத்தைச் செய்து விட்டு பரிகார முறையைத் தேடி செய்து தீர்த்துவிடலாம் என்று நினைக்கக் கூடாது. அப்படி நினைத்து செயல்படுபவர்கட்கு பாவம் மேலும் மேலும் பெருகும். பாவம் செய்பவர் எவரோ அவரே அந்த பாவத்துக்குரிய பாவ விமோசனத்தை செய்தாக வேண்டும். பாவவிமோசனம் செய்பவர் மீண்டும் பாவம் செய்யாதவராக இருக்க வேண்டும் என்பது கட்டாயமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தாய் செய்த பாவங்களுக்கு மகளும், தந்தை செய்த பாவங்களுக்கு மகனும், பரிகாரம் செய்தால் அது ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால் பிள்ளைகள் செய்த பாவங்களுக்கு பெற்றவர்கள் பரிகாரம் செய்தால் அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. கணவன் செய்த பாவத்துக்கு மனைவியோ, மனைவி செய்த பாவத்துக்கு கணவனோ பரிகாரம் செய்ய முடியாது. அவர் அவர் பாவத்துக்கு அவர் அவரே பரிகாரம் செய்தாக வேண்டும். இறந்தவர்கள் தாய்தந்தையாக இருந்தால் பிள்ளைகள் மூலம் பரிகாரம் செய்து கொள்ளலாம்.

பரிகாரம் செய்தவர்கள் மீண்டும் பாவம் செய்தால் அது இரட்டிப்பாக்கி மன்னிப்பற்ற தண்டனை ஏற்றாக வேண்டும். பரிகார முறைகளை கூட்டி செய்யலாமே தவிர குறைக்கக் கூடாது. பரிகார முறையில் சிக்கனமோ கஞ்சல் தனமோ இருக்கக் கூடாது.

இன்ன காரணத்துக்காக இன்ன பரிகாரங்களை செய்தேன். செய்யப்போகின்றேன் என்று விளம்பரப்படுத்தக் கூடாது என்பதை தெரிந்து கொண்டு வாழ்க்கையை வாழ முயற்சி செய்வீர்களாக.

தேடித்தந்தவர் : ***பொன்னண்ணா டென்மார்க்***

❋ வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை

❋ கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது

- *திருக்குறள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயத்தில் பெண்களின் கடமையும் இடமும்

**மனோன்மணி சண்முகதாஸ், எம். ஏ.**

மனிதன் அறிவுத் திறம் பெற்று வாழத் தொடங்கிய காலத்தில் இருந்தே சமயம் என்ற கோட்பாடும் உடன் வளர்ந்து வந்துள்ளது. பழங்கால மக்களிடையே சமய உணர்வு குறைவாகக் காணப்பட்டாலும் ஏதோ ஒரு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் வாழ்வு நடத்தி வந்தனர்.

சமய உணர்வு என்பது பல்வேறு நிலைகளில் உலகின் பல பாகங்களிலும் காணப்பட்டு வந்துள்ளது. மேலை நாடுகளிலும் கீழை நாடுகளிலும் இன்றும் சமய உணர்வு நிலைபெற்றிருப்பது இதற்குச் சான்று. மனித வாழ்வின் நெறி அல்லது வழி என்ற பொருளில் பல சமயங்கள் தோன்றி வளர்ந்து வந்துள்ளன.

தமிழ் நூல்கள் பலவற்றில் சமயம் என்ற சொல்லுக்குத் திருநெறி, செந்நெறி என்ற சொல்லாட்சிகள் காணப்படுகின்றன. இதனால் மனிதனது வாழ்வை நெறிப்படுத்துகின்ற ஒரு பணியினைச் சமயம் பெற்றிருந்ததை உணர முடிகிறது.

சமயம் என்பது மனிதனுக்கும் மனித நிலைக்கும் அப்பாற்பட்டதாக உள்ள ஆற்றல் அல்லது அந்த ஆற்றலுக்குள்ள தொடர்பு என்று கொள்ளலாம். இவ்வாற்றல் பற்றி அறிகின்ற உணர்வு மக்களிடையே தோன்றியபோதே சமயங்கள் பற்றிய கருத்துக்களும் உருவாகியிருக்க வேண்டும்.

சமயம் புனித உணர்வினை மக்களிடையே ஏற்டுத்தும் ஓர் அம்சமாகவும் காணப்பட்டது. பொதுவாகச் சமயங்களிற் கடவுள் பற்றிய நம்பிக்கை காணப்பட்டாலும் வாழ்க்கையின் நன்னோக்கத்தை நிறைவேற்ற உதவும் கொள்கையாகவே சமயம் விளங்கி வருகிறது. இதனால் சமயம் மனித வாழ்க்கையில் **“நெறிப்படுத்தல்”** என்ற கோட்பாட்டை உருவாக்குகிறது. இந்நெறிப் படுத்தல் மனிதனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமானது என்பதை உணர்ந்து யாவரும் ஏதோ ஒரு சமயத்தைத் தமது வாழ்வின் ஆதாரமான நம்பிக்கையாக்கி வாழ்கின்றனர்.

உலகிலுள்ள பல்வேறு சமயங்களில் இந்து சமயம் தொன்மை வாய்ந்த சமயமாக விளங்குகின்றது. இந்து சமயம் என்னும்போது பொதுவாக இந்தியாவில் தோன்றிய சமயங்களைக் கருதலாம். ஆனால் இன்று இப்பெயர் சிறப்பாக சைவ வைணவ சமயங்களுக்கே வழங்கப்பட்டு வருகின்றது.

சைவ, வைணவக் கோட்பாடுகள் பற்றி அறிவதற்கு ஆதாரமாக உள்ள வேத இலக்கியங்களும் உபநிடதங்களும் தர்மசாஸ்திரங்களும் திவ்விய பிரபந்தங்களும் இந்து சமய நெறிகளை உணர்த்தும் சான்றுகளாக விளங்குகின்றன. மனித வாழ்வை நெறிப்படுத்தும் நோக்கத்திற்காகவே அவை எழுந்திருக்கவேண்டும் என்று கொள்கை அவை கூறும் விடையங்களிலிருந்து இன்று வலுப்பெற்று வருகின்றது.

இவ்வாறாக வாழ்க்கை நெறிப்படுத்தும்போது இந்து சமயம் பெண்களுக்குரிய சமூக அந்தஸ்தினைப் பற்றிய தகவல்களையும் கூறியுள்ளது. பெண்களுக்கு இந்து சமயம் எத்தகைய கடமைகளையும் உரிமைகளையும் கொடுத்து வந்துள்ளது என்பதை நாம் இன்று உணர்வதற்கு மேற்குரிய சான்றுகளே பெரிதும் உதவுகின்றன.

உபநிடதத்தில் பெண்கள் மேலான நிலையில் வைத்துக் கூறப்பட்டுள்ளனர். அவர்களுக்குப் புரோகிதர்களாகும் வாய்ப்புக் கொடுக்கப்படாவிட்டாலும் தவவாழ்வை மேற்கொள்ளும் உரிமை வழங்கப்பட்டிருந்தது. வேதங்களிலே சில சுலோகங்கள்கூடப் பெண்களால் இயற்றப்பட்டுள்ளன. பிரகதாரண்ய உபநிடதத்தில் கார்கி, வாஸக்நவி என்ற இரு பெண்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அக்காலத்தில் பெண்கள் மிகுந்த கல்வியறிவுடன் இருந்ததை இவ்வுபநிடதம் உணர்த்துகின்றது. ஆனால் பிற்காலத்தில் பெண்களது நிலை தாழ்த்தப்பட்டதை அறியமுடிகிறது.

பெண்ணைத் தெய்வமாக்குகின்ற ஒரு நிலையும் தொடர்ந்தது. இந்த நிலையும் பின்னர் மாற்றமடைந்தது. பெண். பெருமையும் மதிப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையவளாக உயர்த்தப்பட்டாள். செல்வத்துக்கும், கல்விக்கும் அதிதேவதைகளாகப் பெண்கள் சரஸ்வதியாகவும் இலட்சுமியாகவும் கொள்ளப்பட்டனர். பக்திநெறியிலே சக்தி என்ற புதிய கோட்பாடு உருவாகத் தொடங்கியது. ஆண்டவனுக்கே அர்த்தநாரீசுவரவடிவம் கற்பிக்கப்பட்டது. இந்த உலகிலுள்ள அனைத்தையுமே படைத்தவள் சக்தி என்ற நம்பிக்கை உருவாகியது.

பல்லவர் காலத்தில் எழுந்த பக்திப் பாடல்கள் பெண்களுக்குச் சமய ரீதியாகச் சற்று மேலான தகைமைகளைக் கொடுத்தன. சைவ சமயத்தையே வளர்க்கின்ற அரும்பணியில் அவர்களை ஈடுபடுத்துகின்ற நிலையும் காணப்பட்டது.

காரைக்கால் அம்மையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார் என்ற மூவரும் சைவசமயத்தின் வளர்ச்சியிலே பெரும் பங்கு கொண்டவர்களாக அமைகின்றனர். திருத்தொண்டர் புராணத்தில் இவர்களுக்கு இடமளிக்கப்பட்டது.

**"வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே"** எனச் சிவனே காரைக்காலம்மையாரைப் புகழ்வதாகக் காணப்படுகின்றது.

**"தூண்டு தவ விளக்கனையார்"** என்று திலகவதியாரும், **"தென்னர்குலப் பழி தீர்த்த தெய்வப்பாவை"** என மங்கையர்க்கரசியாரும் போற்றப்பட்டுள்ளனர்.

இம்மூவருள்ளும் காரைக்காலம்மையார் தனிச்சிறப்புப் பெற்றவராகப் பெண்ணின் பெருமையை உலகுக்கு உணர்த்துபவராகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளார். இறைவனைப் பற்றி அவர் பாடிய பாடல்கள் பெண்கள் புலமைக்கு எடுத்துக்காட்டாக மட்டுமன்றி சைவ சமயத்தை வளர்ப்பதற்கு வித்திட்டவர் என்ற பெருமையையும் உணர்த்தி நிற்கின்றன.

பக்தி இயக்கம் பல்லவர் காலத்திலே தமிழ் நாட்டில் தோன்றுவதற்குக் காரணமானவராக காரைக்காலம்மையார் திகழ்கிறார். சைவ சமயத்தைப் பிற மதங்களின் தாக்குதலிலிருந்து காப்பாற்றுவதற்காக எழுந்த பக்தி இயக்கம் இவரது பாடல்களினாலே வலுப்பெற்றது. பக்திப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசாரஞ் செய்வதற்கான பக்திப் பாடல்களை இயற்றுவதற்கு வழிகாட்டியாக விளங்கியவரும் இவரே. மக்கள் மனதில் இறைவனைப் பற்றிய சிந்தனையை அவனுடைய கோலவழகு, அருட்சிறப்பு ஆகியவற்றைப் பாடுதல் மூலமாக ஏற்படுத்தினார்.

பக்தி இயக்கத்தின் வளர்ச்சியில் முக்கிய இடம்பிடித்த சம்பந்தப் பெருமான் பணிக்குப் பெரிதும் உதவியவராக மங்கையர்க்கரசியார் விளங்குகின்றார். தம் கணவரின் மதமாற்றத்தைத் தடுக்க மங்கையர்க்கரசியார் எடுத்த முயற்சிகள் இந்து சமயத்திற் பெண்கள் சமயப் பணியினை எடுத்துக்காட்டுகின்றன.

இதே போன்று திலகவதியாரும் திருநாவுக்கரசர் என்ற சைவ நாயனார் உருவாவதற்குத் தொண்டு புரிந்தவராக விளங்குகின்றார்.

குடும்ப நிலையில் பெண்கள் சமயப் பணி செய்த வகையினைப் பெரியபுராணம் என்ற நூல் தெளிவாக விளக்குகின்றது. இந்து சமய வளர்ச்சிக்காகப் பெண்கள் தத்தமது குடும்ப நிலையில் இருந்தே பணி செய்யலாமென்பதைக் காலத்தின் தேவைக் கேற்ற வகையில் இந்து சமயம் உணர்த்தி வந்துள்ளது.

சமய நெறிகளுள் பெண்களுக்காக இந்து சமயம் வகுத்த சில நெறிமுறைகள் இவர்களை ஒழுக்கச் சீர்கேடுகளிலிருந்து பாதுகாக்கப் பெரிதும் உதவின. கணவனை இழந்துவிட்ட நிலையில் பெண்ணின் வாழ்வு சமயத்தோடு தொடர்புபடுத்தப்பட்டது. துறவியைப் போலத் தூய வாழ்வையே அவர் மேற்கொள்ள வேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

**"வெறுந்தரையிலே தான் படுக்கலாம். ஒரேயொருவேளை எளிய உணவுதான் கொள்ளலாம். வர்ண ஆடைகளோ அணிகளோ பூணக் கூடாது. மலர் சூடவோ, வாசனைப் பொருள்களை உபயோகிக்கவோ கூடாது. மறு பிறவியில் மீண்டும் தம் கணவருடன் சேரும் நம்பிக்கையுடன் கடுமையான விரதங்களைக் கடைப்பிடித்து எஞ்சிய வாழ்நாளை ஓட்ட வேண்டும். இதற்கு மாறாக நடந்தால் மறு பிறவியில் கஷ்டப்பட நேருவதுடன் கணவனுடைய ஆத்மாவிற்கும் கேடு செய்தவள் ஆவாள்"** என்று சாஸ்திரங்கள் விதித்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய ஒரு கட்டுப்பாடான வாழ்க்கை முறை பெண்களுக்கு அவைவிதிக்கப்பட்ட காலத்தில் பொருத்தமாக இருந்திருக்கலாம். ஆனால் தற்காலத்தில் சமயம் பற்றிய நோக்கும் போக்கும் வேறுபட்டதனால் இக்கட்டுப்பாடுகள் பெண்களை அடிமைகளாக்க முயல்வதாகச் சிலர் கருதுகின்றனர்.

பெண் தன் நிலையுணர்ந்து கடமையாற்றும் ஆற்றல் நிரம்பியவள். தன்னாற் பாதுகாக்கப்பட வேண்டிய ஒழுக்க நெறிகளை அவள் நன்கு உணர்ந்தவள் என்பதையே இந்த சமயம் பெரிதும் வலியுறுத்துகின்றது. திலகவதியார் வாழ்வு நெறிமூலம் இதனை உணரமுடிகிறது. பெற்றோர் மறைவுக்குப் பின்பு தனக்குக் கணவனாக வரவிருந்தவரையும் போரிலே பறிகொடுத்த திலகவதியார் தன் நம்பிக்கை வாழ்வு நடத்துகின்றார். அவர் வாழ்வு சேவை நிலையில் அமைகின்றது. தனக்கென்று இன்பங்கள் கிடையாதவிடத்து மற்றவர்க்கு நலமளிக்கும் செம்மை வாழ்வாக மாறுகிறது. திருமணம் ஆகாமலே துறவு பூண்டு தவ வாழ்வு வாழும் அவர் வரலாறு பெண்கள் வாழ்வின் தத்துவத்தை விளக்குகின்றது. சமூகப் பணியிலே பெண் எத்தகைய நிலையில் ஈடுபடுகிறாள் என்பதை அவர் வரலாறு உணர்த்துகின்றது.

இந்த சமயம் பெண்களின் கடமைகளைத் தெளிவாக வரையறை செய்துள்ளது. பழைய புராணக் கதைகளிலும் இதிகாசங்களிலும் பெண்களின் வாழ்வு நிலை சித்தரிக்கப் பட்டிருக்குமாற்றை நோக்குமிடத்து இது புலனாகின்றது.

மகாபாரதம் பெண்ணின் கடமைகளை வற்புறுத்தும்போது அவள் அடையக்கூடிய சில கஷ்டங்களையும் விளக்கிக் காட்டுகின்றது. குந்திதேவி தன் இளமைக் காலத்திற் செய்த காரியத்தால் தன் குடும்பத்தவர்க்கு எத்துணைக் கஷ்டங்களைத் தேடினாள் என்பதை மகாபாரதம் உணர்த்துகின்றது. பெண்ணானவள் தன்கடமை எதுவென அறியாமல் இருப்பதால் ஏற்படக்கூடிய தீமையை இது விளக்குகின்றது. இன்னும் அவளது செயல் அவளோடு சம்பந்தப்பட்ட பெண்களையும் எவ்வாறு பாதிக்கின்றது என்பதையும் இது விளக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐவருக்கும் மனைவியாக வாழ்ந்த பாஞ்சாலி தன் கணவர்களைவிடக் கடவுளாலேயே காப்பாற்றப்பட்டாளென்ற தத்துவத்தையும் மகாபாரதம் எடுத்துக் காட்டுகின்றது. இராமாயணத்தில் சீதா தேவியில் குழந்தையின்மையால் ஏற்பட்ட பாரதூரமான விளைவுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இராம அவதாரத்தின் தேவையை உணர்த்தும் பாத்திரமாகச் சீதை உருவாக்கப்பட்டதோடு அல்லாமல் பெண்ணினத்தின் பண்புக்கு ஓர் எடுத்துக் காட்டாகவும் விளங்குகின்றாள்.

இந்து சமயம் பெண்களைப் பொறுத்த வரையில் கற்பு என்ற சிறப்பிலக்கணத்தைக் கொடுத்துள்ளது. கற்பினால் எதையும் சாதிக்கும் ஆற்றல் பெண்களுக்கு உண்டு என்பதையே இந்து சமயம் வலியுறுத்துகிறது. கணவனைத் தெய்வமாகப் பெண் வணங்கினால் அற்புத ஆற்றல் படைத்தவளாகிறாள். அந்த ஆற்றல் எதையும் அழிக்கும் தன்மை வாய்ந்தது.

பெண்களைப் பொறுத்த வரையில் இந்து மதம் ஒழுக்க நெறிகளைச் சமூகத்திற்கு ஆக்கிக் கொடுப்பவர்கள் பெண்களே என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது. பெண் தன் குடும்ப நிலையில் ஒழுக்கத்தைப் பேணினால் நாட்டின் ஒழுக்கம் தானாகவே பேணப்படும். இதற்காகவே பெண்ணின் பெருமை பற்றிய பல கதைகள் புராணக் கதைகளில் அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய மதங்கள் பெண்கள் துயரத்துக்கே துணையானவர்கள் என்ற கோட்பாட்டைக் கொண்டிருக்க இந்து சமயம் அவர்களது தனித்துவங்களை வெளிப்படுத்திக் காட்டியது.

வீட்டிலிருந்தே மனிதனை நெறிப்படுத்தும் வழிகளை இந்து சமயம் கூறுகின்றது. அதனால் குடும்பத்தில் செய்ய வேண்டிய பல்வேறு விதமான சடங்குகளையும் பெண்களுடனும் தொடர்புறுத்தி இந்து சமய நூல்கள் கூறலாயின.

குடும்பத்தில் நிகழும் எந்த விதமான முக்கி நிகழ்ச்சியும் சமயச் சடங்கு இல்லாமல் நடைபெறமாட்டாது. குழந்தையின் பிறப்பு, குழந்தைக்குப் பெயரிடுதல், குழந்தைக்கு முதல் முதலாகத் திட உணவு கொடுத்தல், கல்விக்கு அனுப்புதல், திருமணம், இறப்பு ஆகிய பல்வேறு நிலைகளிலும் பலவிதமான சடங்குகளை இந்து சமயம் வகுத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சடங்குகளைச் செய்வதற்கு இல்வாழ்வான் தன் வாழ்க்கைத் துணையான மனைவியை நாடுகின்றான். தான் செய்ய வேண்டிய ஐந்து நிவேதனங்களையும் ஒழுங்கு முறையிலே செய்வதற்கு ஆணுக்குப் பெண் உதவுகின்ற பணியினைச் செய்யும்படி இந்து சமயம் பெண்ணுக்குச் சில முக்கியமான கடமைகளை வகுத்துக் கூறியுள்ளது.

ஏனைய குடும்ப அங்கத்தவர்கள் ஆன்மீக நெறியிலே செல்வதற்கு அப்பெண்ணின் கடமைகள் சரிவர நிறைவேற்றப்பட வேண்டும். உணர்வும் அறிவும் குழந்தை நிலையிலிருந்து ஒருவனுக்கு ஊட்டப்படுவதற்கும் அவன் தொடர்ந்து தன் வாழ்நாள் முழுவதும் அந்நெறிச் செல்வதற்கும் பெண்ணே துணையாகின்றாள்.

இந்து சமயம் தன்னிலையைக் காலத்திற்குக் காலம் புதுப்பித்துக் கொண்டிருக்கின்றது. சமூகநிலைகளில் மாறுதல்கள் ஏற்படும்போது வாழ்க்கை முறையும் சிந்தனைகளும் மாறுபடுகின்றன. இதனால் வளர்ந்து கொண்டிருக்கும் ஒருநெறியாகவும் இந்து சமயம் இன்று விளங்குகின்றது. பெண்களுக்கு உரியதாக இந்துசமயம் வகுத்த கடமைகளில் மாற்றம் ஏற்படவேண்டிய தேவையும் ஏற்பட்டது. இதனால் இந்து சமயத்திலே சீர்திருத்தக் கொள்கைகள் பரவத் தொடங்கின.

ஆரிய சமாஜம் என்பதை நிறுவி, சுவாமி தயாநந்தா சில புரட்சிகரமான மாற்றங்களை இந்து சமயத்தின் நெறிகளிலே ஏற்படுத்தினார். அவற்றுள், பெண்களைப் பொறுத்த வரையில் விதவைகள் மறுமணம் செய்தல் பற்றிய சில கருத்துக்களை அவர் முன்வைத்தார். அவரைத் தொடர்ந்து பெண் மணியான திருமதி அன்னி பெஸண்டு அம்மையார் இந்து சமயத்தைப் பற்றிய சில சீர்திருத்தக் கருத்துக்களை இந்தியரிடம் கூறிச் சென்றார். **"இந்து சமயமின்றி இந்தியாவிற்கு எதிர்காலம் இல்லை. இந்தியாவின் வேர்கள் ஆழமாகப் பதிந்துள்ள மண்ணே இந்து சமயமாகும். அதிலிருந்து அதை வேறுபடுத்தினால் மண்ணிலிருந்து பிடுங்கப்பட்ட மரம் போலவே இந்தியாவும் மடிந்து விடும்"** அவர் கூறிய கருத்து இந்து சமயத்தின் வளர்ச்சிப் பாதையில் சிந்தனைச் சிதறல்களை ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமயம் பெண்களுக்குக் கொடுத்திருக்கும் உரிமைகளைப் பற்றி இன்று பலரும் அறியாததன் காரணத்தாலேயே இந்து சமயத்தின் மீதுள்ள நம்பிக்கை ஏனைய புதுமைக் கருத்துக்களால் தாக்கப் பெறுவதற்கும் காரணமாயிற்று. இந்நிலையைப் பாரதி நன்குணர்ந்திருந்தான். அதனால் தனது பாடல்களிலே பெண் தெய்வங்களைப் பற்றி கருத்துக்களைத் தெளிவாக எடுத்துக் காட்டினான். பழைய இந்து சமய இலக்கியங்களை நன்கு பயின்றிருந்தமையால் அவற்றை மற்றவர்க்கும் உணர்த்த வேண்டிப் பாடல்களைப் பாடினான். சக்தியைத் தன் நம்பிக்கையின் ஆதாரமாக்கினான். பாரதியின் சக்திப் பாடல்கள் பாரதியின் சமய நம்பிக்கையினை மட்டுமன்றி மற்றவர்களும் அந்த உணர்வினை அறிவதற்குப் பெரிதும் உதவின. காளி சரஸ்வதி இலக்குமி என்னும் முப்பெரும் பெண் தெய்வங்களைப் பற்றிய பாரதியின் பாடல்கள் பெண் தெய்வங்களது கோட்பாட்டை மட்டும் விளக்குவதோடு அமையாது இந்து சமயத்திற் பெண்ணுக்குக் கொடுக்கப்பட்ட சிறப்பினையும் மறைமுகமாக உணர்த்துகின்றன.

அறிவு, ஆக்கம், அழிவு என்னும் முப்பெரும் சக்திகள் பெண்களிடம் உள்ளன. அச்சக்திகளை ஏற்ற சந்தர்ப்பத்தில் ஏற்றவாறு பயன்படுத்துவதால் பெண் தன் ஆற்றலை வெளிப்படுத்துகிறாள். தன் மென்மைக் குணங்களையும் அறிவுத் திறனால் வாழ்வு நெறிக்காக அர்ப்பணிக்கும் பெண்மையின் உயர்ந்த இலட்சியம் இந்து சமயத்தின் கோட்பாடாகவே அமைந்து விட்டது. இந்த உலகையெல்லாம் காக்கின்ற அன்னை பராசக்தியாகப் பெண்களைப் போற்றும் மரபினை இந்து சமயமே ஆரம்பித்துவைத்தது. பாரதியின் பாடல் ஒன்று அதனை நன்கு விளக்குகின்றது.

*மலையிலே தான்பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்*
*உலையூதி உலகக் கனல் வளர்ப்பாள்*
*நிலையி லுயர்ந்திடுவாள் நேரே அவள்பாதம்*
*தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது சமயங்கள்

சீ. கிருஷ்ணன் - சிங்கப்பூர்

இப்பரந்த உலகிடைத் தோன்றிய மனிதன் தான் வாழும் சூழ்நிலைக்கு ஏற்பப் பல்வேறு மொழிகளைத் தோற்றுவித்தான். அவற்றுள் சில நன்கு வளர்ச்சியடைந்துள்ளன. சிறப்பு அடைந்துள்ள மொழிகளில் நம் தமிழ் மொழியும் ஒன்று. சமய இலக்கியங்கள் நிரம்பிய சுந்தர மொழி.

**"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே....."** என்று தொல்காப்பியம் கூறும். சாதாரண மனிதன் - உயர்ந்தவனாக, சிறந்தவனாக, மேம்பட்டவனாக ஆவதற்கு ஆவன செய்வது சமயம். அதோடு இந்து சமயத்தின் அறநெறி - உலக வாழ்க்கையோடு மத வாழ்க்கையும் இணைத்து மேற்செல்ல உய்கதி பெற வழிகாட்டுகிறது.

சமூகத்தில் மனிதன் சில கொள்கைகளை ஏற்பதனாலும் அவற்றில் நம்பிக்கை வைப்பதனாலும் ஒரு மேலான நிலைக்கு ஆளாகிறான். அதற்குக் காரணமாக அமைவது சமயமே. சமயத்தினைச் சார்ந்து வாழ்பவன் ஆதலால் சமயத்தினைச் சார்ந்து ஒழுக்கமானவனாகிறான்.

இன்ப துன்பங்களை ஏற்பதால் அவனது மனம் மாறுகிறது. ஒவ்வொருவனும் கொள்கைவாதியாக மாறுவதால் ஒழுங்கான மனிதனைச் சமயம் உருவாக்கிக் காட்டுகின்றது.

இந்து சமயம் விஞ்ஞானத்தால் உணரமுடியாத மெய்ப்பொருளாகத் தனது மெய்ஞானத்தால் இனிது இயம்புகிறது. தெய்வீகமான கருத்துக்களைத் தன்னுள் அடக்கி மறைத்து வைத்திருப்பதால் அது மறை எனப் பெயர் பெற்றது.

நமது சமய சித்தாந்தம் அறிவியல் நோக்கில் மெய்ப்பொருளை நிலைநிறுத்தும் உண்மைகளின் முடிபு. அறிவால் உண்மைகளை, பூவினுள் மணம்போல் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"*அண்டப் பகுதியின் உண்டைப்பிறக்கம்*
*அளப்பருந்தன்மை வளப் பெருங்காட்சி.....*" என்று மாணிக்கவாசகர் கூறுகிறார்.

முன்னோர்களின் அனுபவத்தில் தோன்றிய நெறிகள் பின்னோரின் வாழ்க்கைப்பாதைக்கு வழிகாட்டின. அவ்வாறு முன்னோரால் காட்டப்பெற்ற நெறிகள் பற்பல சமயநெறிகளாயின. சமயம், மதம், நெறி, என்னும் சொற்கள் பொருளுடையன. சமைத்துப் பக்குவப்படுத்தல் என்னும் பொருளில் சமயம் என்னும் சொல் தோன்றியது. கொள்கை, கோட்பாடு, குறிக்கோள் என்னும் பொருளில் சமயம் அல்லது மதம் என்ற சொல் அமைந்தது.

மனித வாழ்க்கைப் பயணத்திற்கு வழியாக அமையக்கூடிய காரண அடிப்படையில் நெறி, வழி ஆகிய சொற்கள் அமைந்தன. சமுதாயக் கூட்டுவாழ்க்கைக்கு மனிதன் பண்பட வேண்டும். தனிமனித வாழ்க்கையாகிய விலங்கு வாழ்க்கையிலிருந்து மனிதன் பண்படவேண்டும் என்று முன்னோர்கள் வகுத்துக் காட்டிய நெறிகளுக்கு துணையாக அமைந்தன.

உணவுப்பொருளை நேரடியாக உண்ணாமல் சமைத்த பிறகே அவற்றை அவித்து, வேகவைத்து உண்ணுகிறோம். அதுபோல் பக்குவமில்லாத பண்பில்லாத விலங்காக வாழும் மனிதனைச் சமைத்துப் பக்குவப்படுத்தத் தோன்றியவை சமயம்.

மதங்களுக்கு இரண்டு முகங்கள் :

ஒன்று, அதன் தத்துவம் சார்ந்தது. அன்பையும் மனித உறவுகளையும் போற்றும் சமயம். இன்னொன்று இந்த ஆன்மீகத்தன்மைகளைக் காப்பாற்ற உருவாக்கப்பட்ட சடங்கு. (பூசை, யாகம், பலி என்ற சடங்கு) மறைந்த ஆன்மீகம் முன்நின்றிருக்க வேண்டும். ஆனால், சடங்குதான் ஆன்மீகத்தை விழுங்கிவிட்டு முன்நிற்கிறது. மதம் மக்களுக்கு அபின். நோயுள்ள தருணம் மயக்கம் தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமயம் என்றால் என்ன?**

மனிதன் தன் வாழ்வு வளம் பெறவும், மக்கள் தன்மையிலிருந்து விடுதலை பெற்று, மக்கட் தன்மை பெறவும் செய்யப்பட்டது. இதனை வேறு வகையில் சொன்னால், மனிதனைப் பண்பாடு உடையவனாக ஆக்குவது சமயம். அனைத்திற்கும் ஆணிவேராய் அமைந்த ஒன்றை அறிகிறான். அவ்வறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு பொருள் உண்டு என்பதையும் அறிகிறான்.

ஐம்பூதங்களை வணங்கியவர்களை அவைகளுக்கு அப்பாலும் இறைவன் உண்டு என்று நெறிப்படுத்தியதே நமது சமயம். அவை அனைத்தும் ஒரு வரை முறைக்கு உட்பட்டு இயங்குவதையும் காண்கிறான்.

சமயம் என்பது வெறும் குறிகளும், அடையாளமும் அன்று. சமயம் என்பது இவற்றைக் கடந்து நிற்பது. குறிகள், அடையாளங்கள் என்று எதனையும் போற்றாமல் ஒருவன் சிறந்த சமயவாதியாக வாழமுடியும். மனித மனத்தின் மாசை அகற்றி, பண்புடையவனாய், ஒழுக்கம் உடையவனாய், பிறர்க்குப் பயன்படுபவனாய் வாழ முற்படுவதே சமய வாழ்க்கையாகும். இவற்றிற்கும் அப்பால் அனைத்தையும் கடந்து நிற்கின்ற ஒன்றை - கடவுள் என்ற ஒன்றை மனதில் கொண்டு வாழ்பவனே சமயவாதியாவான்.

எனவே, கடவுள் - மனித வாழ்வு என்ற இவை இரண்டிற்கும் உள்ள தொடர்பு, இவ்வாழ்விலிருந்து கடவுளை அடையும் நெறி மார்க்கங்களைத் தெளிவுப்படுத்துவதே சமயம். மனிதரை நெறிப்படுத்துவதற்கும் முறைப்படுத்துவதற்கும் தோன்றிய சமயநெறி. அவற்றின் நடைமுறையால் மாறுபட்டு முரண்பட்டுப்போயின. உண்மையில் சமயம் என்பது தூயவாழ்க்கை முறை. மனிதனை நெறிப்படுத்திப் பக்குவப்படுத்தும் வாழ்வியல் அனுபவமுறை. மனிதனுடைய குறைநீக்கத்திற்கும், நிறைநல பேற்றிற்கும் சமயவாழ்க்கையே துணை செய்யும். புலன்களைப் பக்குவப்படுத்தும்; தூய்மையடையச் செய்யும்; இன்பஅன்பு கனியும், அருள் பெருகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே நமது சமயங்கள் அன்பை மையமாகக் கொண்டது. ஆருயிர்க் கெல்லாம் அன்பு செயல் வேண்டும் என்னும் வள்ளலார் காட்டிய வாழ்வு நெறியுமிதுவே.

*அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே.*

**(திருமந்திரம் - 270)**

என்னும் திருமந்திரப் பாடல் இவ்வுண்மையை உணர்த்தும்பின் ஏன் இத்தனை சமயங்கள் என்று கேள்வி எழலாம்........? மக்கள் அனைவரும் ஒரு படியினராக இல்லை. அவர்கள் வாழும் இடம், அதன் தட்பவெப்ப நிலை, சுற்றுச் சூழ்நிலை, மொழி இவற்றால் மாற்றபட்டு இருந்தனர். மேலும், இவை அனைத்தும் ஒன்றாக உள்ள நிலையில் வாழும் பல்வேறு மனிதர்கள், அவர்கள் வளர்ச்சியும் பல்வேறு நிலையில் இருந்தது. எனவே, அவர்கள் அனைவருக்கும் ஒரே சமயம் பயன்படுமாறு இல்லை. ஆகவேதான், ஒவ்வொருவர் கருத்தையும் வலியுறுத்திக் கூறும் பல்வேறு சமயங்கள் அந்தந்தக் காலத்துக்கு ஏற்பவும் இடத்துக்கு ஏற்பவும் தோன்றலாயின.

சமய வேறுபாடுகள் தவிர்க்க முடியாதவே. மண்ணில் தோன்றிய சான்றோர்கள் தாங்கள் சார்ந்த மண்ணின் இயல்புகளை, காலச்சூழலுக்கு ஏற்பவும் தாங்கள் அனுபவித்த புலன் உணர்வுக்கு ஏற்பவும், பெற்ற ஞான அனுபவும், அருட்பேறு ஆகியவற்றுக்கு ஏற்ப சமய நெறிகளை வகுத்துக் கூறினர். ஒருவரது அனுபவம் போன்று மற்றவர் அனுபவம் இருக்க வேண்டும் என்பதில்லை. அனுபவங்கள் வேறுபடுவதால் அவர்கள் காட்டிய சமயநெறிகளிலும் வேறுபாடு ஏற்பட்டது. ஆயினும் இந்த வேறுபாடுகளைக் கடந்து மனித குலப்பொதுமையை நமது சமயம் வலியுறுத்தியது.

*"யாதும் ஊரே யாவரும் கேளிர்*
*தீதும் நன்றும் பிறர்தர வாரா"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் கணியன் பூங்குன்றனார் பாடல் உண்மை, சமயநெறியை உணர்த்துவது.

இந்த அடிப்படையில் தமிழ்மொழியின் பரப்பைக் காணவேண்டும். பிற்காலத்தில் வேற்றுநாடுகளில் தோன்றி இந்தியாவில் குடிபுகுந்த கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய இரண்டும் தவிர சைவம், வைணவம், ஜைனம், பௌத்தம் ஆகிய நான்கு இம்மொழியில் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. ஓர் இன மக்கள் பேசும் மொழிக்கு மட்டும் இலக்கணம் வகுக்காமல் அம்மக்கள் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்த பெருமை உலக மொழிகளில் தமிழ் மொழி ஒன்றுக்கு மட்டுமே உன்டு. வாழ்வுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியம் வாழ்வு நடைபெறுவதற்கும் நிலைகளாக உள்ளது.

குறிப்பிட்ட ஒரு சமயத்தின் சாயல் பெறாமல் கடவுட் கொள்கைபற்றிப் பேசும் ஆதிநூல் தொல்காப்பியம். அதில் சமயம் இடம்பெறுகிறது. அதனை அடுத்து திருக்குறளிலும் தனியொரு சமயத்தின் சாயல் இன்றிக்கடவுள் கொள்கையும், சமயமும் பேசப்படுகிறது.

இறைவனிடத்து மனிதன் வேண்டுவது என்ன என்பதைப் பரிபாடல் ஒன்று சிறந்த முறையில் கூறுகிறது. **"பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின் பால் அருளும் அன்பும் அறனும் ஒலி தாரோயே"** என்கிறது. கருதாத வழிபாட்டை வேண்டி, **"அன்பும், அறனும் அருளும்"** மூன்றும் வேன்டும் என வேண்டி விழையும் சமயம் நமது சமயம்.

தமிழ் மொழியைப் பொறுத்த மட்டில் அளவைகளின் உதவி கொண்டு சமயத்தை நிறுவுவதைக் காட்டிலும் அகத்தே நிகழும் உணர்வுகொண்டே சமயத்தைப் பரப்பும் நூல்களே மிகுதியாகும். அதனால்தான் போலும், சமய இலக்கியம் என்ற பெயரில் பக்தி இலக்கியங்களே தமிழில் மிகுதியாக தோன்றின. உலகமொழிகளில் பக்தி இலக்கியம் என்று எடுத்துக்கொண்டால், முதல் இடம் தமிழுக்குத்தான். இரண்டாவது இடம் ஹீப்ரு மொழியும், மூன்றாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தை சமஸ்கிருதமும் பெறுகிறது. வடமொழியிலிருந்து தமிழாக்கம் செய்த சில நூல்களும் உண்டு.

சமயநூல்கள் தமிழில் அதிகம் தோன்றக் காரணம் அன்புவழியாழும், பக்தி நெறியாலும் மட்டுமே சமயத்தை வளர்க்க முடியும் என்ற காரணத்தால்

***"அன்பென்னும் பிடியுள் அகப்படும் மலையே***
***அன்பென்னும் குடில் புகும் அரசே"***
என்கிறது அருட்பா.

அன்பின் வழியே, ஆண்டவனை அடையமுடியும் என்கிறது நமது சமயம். இந்த அடிப்படையை மனத்தில் கொண்டு பார்த்தால், தமிழ் மொழியில் சாத்திரங்கள் அதிகம் தோன்றாமல் தோத்திரங்கள் அதிகம் தோன்றியதற்கு உரிய காரணத்தை ஒருவாறு அறிய முடியும் என்றாலும் தமிழில் தோன்றிய பேரிலக்கியங்கள் அனைத்தும் சமயத் தொடர்புடையது.

காலத்தை வென்று நிலைபெறும் வன்மை இல்லைபோலும், பேரிலக்கியங்கள் ஒருபுறம் இருக்கச் சிற்றிலக்கியங்களாகிய பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, பள்ளு, உலா ஆகியவைகள் சமயத் தொடர்பு உள்ளதாகவே அமைந்துள்ளன. ஆதலால்தான் **"சமயமின்றித் தமிழில்லை"** என்று கூறுவது பொருள் பொதிந்த மொழியாக அமைந்துள்ளதாலேயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணம் ஓர் அறிமுகம்

பேராசியர் கலாநிதி நா. சுப்பிரமணியன்
தமிழ்த்துறை யாழ் பல்கலைக்கழகம்

தமிழ்ப் பேரிலக்கியங்களுள் ஒன்றான கந்தபுராணம் கந்த (ஸ்கந்த) என்ற கடவுளின் வரலாற்றை விரித்துரைப்பது. காஞ்சிபுரத்தைச் சேர்ந்த கச்சியப்ப சிவாச்சாரியாரால் இயற்றப்பட்ட இப்பேரிலக்கியம் வட மொழியில் கந்த மகா புராணத்தின் ஒரு பகுதியைத் தழுவியமைந்த ஆக்கம் ஆகும். தமிழில் எழுந்த புராணங்களில் பெரியதான இது சைவ வாழ்வுக்குப் பயன் தரவல்ல பல்வேறு அம்சங்களையும் தொகுத்துத் தரும் சைவக்களஞ்சியமாகத் திகழ்வது. ஈழத்துச் சைவர்கள் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தினர் இந்நூலைப் பெருமதிப்புக்குரிய வழிபாட்டு நூலாகவும், வழிகாட்டி நூலாகவும் பேணி வருகின்றனர். இதன் அடிப்படையில் யாழ்ப்பாணப் பிரதேச சைவத்தமிழ் கலாச்சாரம் கந்தபுராண கலாச்சாரம் எனச் சிறப்பித்து சுட்டப்படுகின்றது.

இந்நூல் எழுந்த காலம் தொடர்பாக ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள. கி.பி 8ம் நூற்றாண்டு முதல் 17ம் நூற்றாண்டு வரை பல்வேறு காலகட்டங்களுடன் இந்நூல் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. எனினும் கி.பி 13ம் நூற்றாண்டு தொடக்கம் 15ம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்ட காலப்பகுதியிலே இந்நூல் எழுந்திருக்க வேண்டும் என்ற எண்ணம் இன்றைய ஆய்வு நிலையில் வலுப் பெற்றுள்ளது.

இந்நூலின் முதன்மைக் கதையம்சம் கந்தக் கடவுளின் தோற்றம், அவரது அருட் செயல்கள் முதலியவற்றின் வரலாறு ஆகும். அவுணர் என்னும் இனத்தினரின் வல்லமைக் காற்றாது விண்ணகத் தேவர்கள் எய்திய துயரத்தைத் துடைப்பதற்கு சிவபிரான் தனது நெற்றிக்கண் தீப்பொறியினின்று கந்தனைத் தோற்றுவிக்கின்றார். கந்தன் அவுணரை அழித்து தேவர்களுக்கு வாழ்வளிக்கின்றார். தேவயானை, வள்ளி ஆகிய தேவியரை மணம் புரிகின்றார். இந்த மையக் கதையம்சத்துடன் 2352 கிளைக் கதைகள் இணைந்துள்ளன. இவற்றுட் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபிரானுடைய பரம்பொருள் நிலையை விளக்கும் நோக்கத்தில் சில கதைகளில், விநாயகர், வீர பத்திரர், வைரவர், ஐயனார் ஆகிய தெய்வங்களின் வரலாறு கூறப்படுகின்றது. திருமால், பிரமன், இந்திரன் ஏனைய தேவர்கள், முனிவர்கள், அசுரர்கள் என்போர் தொடர்பான பல செய்திகள், கதைகள் பலவற்றில் இடம் பெற்றுள்ளன. மனிதனான முசுகுந்தச் சோழனின் வரலாறும், இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

மேற்குறித்த மையக்கதை, கிளைக்கதை என்பன 6 காண்டங்களில் 141 படலங்களில் 10345 பாடல்களில் (விருத்தப்பாக்களில்) விரித்துரைக்கப் பட்டுள்ளன. முதலாவதான உற்பத்தி காண்டம் கந்தனது தோற்றம், இளமை விளையாடல்கள் அவுணரில் ஒருவரான தாரகனின் அழிவு ஆகியவற்றை உள்ளடக்கியது. இரண்டாவதான அசுர காண்டம் அவுணரின் தோற்றம் அவர்கள் பெற்ற வரங்கள், அவர்கள் தேவர்களை வருத்திய செய்திகள் என்பனவற்றைப் பேசுகிறது. முருகப்பெருமானின் கேள்விக்கு இணங்க தேவகுருவான வியாழபகவானால் விரித்துரைக்கப்படும் கதைப்பகுதியாகும். மூன்றாவதான மகேந்திர காண்டம் முருகப் பெருமானின் இளவலான வீரபாகுதேவர், சூரபத்மனிடம் தூது சென்ற வரலாற்றை மையமாகக் கொண்டது. தேவர்களைச் சிறை நீக்க மறுத்த சூரபன்மன் மீது முருகப்பெருமான் போர் தொடுத்து வெற்றி பெற்ற வரலாற்றை விரித்துரைப்பது நான்காவதான யுத்த காண்டம் ஐந்தாவதான தேவ காண்டம் முருகனுக்கும் தேவயானைக்கும் நடந்த திருமணத்தை மையக் கருப்பொருளாகக் கொண்டது. இக் காண்டத்திலே தேவ அரசகுமாரனான சயந்தன், தேவர்கள் அவுணர்களிடம் துன்பப்படுவதற்குக் காரணமாய் அமைந்தவற்றை அறிய முயன்ற போது அதற்கு விடை கொடுக்கும் வகையில் வியாழபகவானால் எடுத்துரைக்கப்படுவது. ஆறாவதான தட்ச காண்டம் தக்கனது வரலாற்றை மையப் பொருளாகக் கொண்டது. இக் காண்டத்தின் இறுதியில் முருகன் வள்ளியைத் திருமணம் செய்யும் செய்தியும் இடம்பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி காண்டங்கள், கதையம்சங்கள் என்பவற்றின் ஊடாக சைவ வாழ்க்கைக்கு இன்றியமையாத பல கூறுகள் எடுத்துப் பேசப்படுகின்றன. தருமம், தவம், வேள்வி முறைகள் மற்றும் இல்லக் கிரியைகள், ஆலயக் கிரியைகள் என்பன பற்றிய செய்திகளை உள்ளடக்கியதாக இப்புராணம் விரிவு பெற்றுள்ளது.

இந்நூலின் நாயகனான கருத்துப் படிமத்தின் வரலாற்றுத் தொன்மை வேத இலக்கியங்களுக்கு முற்பட்டதாகும். சிந்துவெளி அகழ் பொருட்களில் கந்தனோடு தொடர்பு படுத்தப்படுவனவும் உள என்பது ஆய்வாளர்களது ஊகம். வேத இலக்கியங்களில் இந்திரன், அக்னி, வருணன் முதலிய தெய்வங்களில் ஸ்கந்தனுக்குரிய மூலக்கூறுகள் ஆய்வாளர்களால் இனங்காணப் பட்டுள்ளன. அதர்வ வேதத்தில் இடம்பெறும் அக்னிபூ என்ற தெய்வத்தில் (அதர்வம் 11 : 3, Vi : 4, Vi : 67 : 2) ஸ்கந்தனது மூல இயல்பு ஓரளவு தெளிவாக இனங்காணக் கூடியதாக உள்ளது என்பது ஆய்வாளர்களது முடிவாகும். இவ்வாறு பண்டுதொட்டு வழங்கி வந்த ஸ்கந்தன் தொடர்பான சிந்தனை இதிகாசங்களும் புராணங்களும் எழுந்த காலப்பகுதியில் மேலும் விரிவாகவும் தெளிவாகவும் அமையலாயிற்று. தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் இடையிலான போராட்டத்திற் தர்மத்தின் சார்பாகத் தேவர் படைகளுக்குத் தலைமை தாங்கி வழி நடத்தும் தளபதியாக இதிகாச புராணகால ஸ்கந்தன் வடிவம் பெறுகிறார். இவர் சுப்பிரமணியன், கார்த்திகேயன், குமரன் முதலிய பெயர்களாலும் வழங்கப்பட்டார். இவ்வாறு வடமொழி மரபில் வழங்கி வந்த ஸ்கந்தன் தொடர்பான கருத்துப் படிமமும் தமிழ் நாட்டில் பண்டு தொண்டு நிலவிவந்த முருகன் என்ற தெய்வம் தொடர்பான கருத்துப் படிமமும் காலகதியில் ஒன்றிணைந்தன. இவ்வாறான இணைப்பு நிகழ்ந்து ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரே கச்சியப்பரது கந்தப்புராணம் தோன்றியது. இந்நூலுக்கு மூலமாகக் கருதப்படும் வடமொழி ஸ்கந்த மகாபுராணம் அதன் தொல் நிலையில் இன்று எமக்குக் கிடைக்கவில்லை. ஆய்வாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீவத்ஸ, வேஸோம தேவ சர்மா அவர்கள் தந்துள்ள தகவல்களின் அடிப்படையில் சிந்திக்கும் போது உத்தரஸ்காந்தம், தக்ஷிணஸ்காந்தம் என்ற பெயர்களில் வழங்கிவரும் ஸ்காந்தபுராண மரபுகளில் தக்ஷிணமரபு சார்ந்ததாகவே கச்சியப்பரின் கந்தபுராணம் அமைந்துள்ளதாக ஊகிக்க முடிகின்றது. இவை தொடர்பான ஆய்வு தனி நிலையில் நுனித்து நோக்கி மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

இந்நூல் ஒரு இலக்கிய ஆக்கம் என்ற வகையிலும் சமய தத்துவ ஆக்கம் என்ற வகையிலும் பல நிலைகளில் வெவ்வேறு துறைசார் ஆய்வுகளை வேண்டிநிற்பது, தமிழ் இலக்கியப் பரப்பிலே மூன்றாவது பெரிய நூல் இது. (நல்லாப் பிள்ளை - மகாபாரதம் : 15300, கம்பன் - இராமவதாரம் : 10480, கந்தபுராணம் : 10345) பொருளமைப்பில் புராண இயல்பும், காப்பிய இயல்பும் கலந்தது. கட்டமைப்பிலே காப்பிய இயல்பும் கலந்தது. கட்டமைப்பிலே காப்பிய அமைதி கொண்டது. இதனை ஒரு காப்பியம் என்ற வகையிலும் தமிழரின் பாரம்பரிய இலக்கிய மரபுகளைத் தழுவி அமைந்த ஆக்கம் என்ற வகையிலும் சமய இலக்கியம் என்ற வகையிலும் ஆய்வாளர் பலர் அவதானித்துத், திறனாய்வுக் குறிப்புக்களை முன்வைத்துள்ளனர். ஆய்வாளர், பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் இந்நூல் **"கம்பனது இராமாவதாரத்தை அடியொற்றி இயற்றப் பட்டதென்றும், இதுவே ஒரு ஆசிரியன் கம்பனுக்குச் செலுத்தக் கூடிய மாபெரும் வணக்கமும் வழிபாடும் ஆகும்"** என்றும் குறிப்பிட்டுள்ளார். (A History of Tamil Literature PP 119 - 120) **"சமய தத்துவம் கூறும் சைவ புராணங்களுள் இதுவே முதலாவது, இதுவே சிறந்தது"** என மு. அருணாசலம் என்ற ஆய்வாளர் குறிப்பிடுவர். (தமிழ் இலக்கிய வரலாறு - பதினான்காம் நூற்றாண்டு பக். 71).

இந்நூல் ஒரு இலக்கிய ஆக்கம் என்ற வகையில் கொண்டுள்ள சிறப்புக்கள் பற்றி ஆய்வாளர் க. த. திருநாவுக்கரசு அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ந்துள்ளார். (கந்த புராணம் - தமிழ் இலக்கியக் கொள்கை -3) இந்நூலின் காப்பியக் கட்டமைப்பு கம்பனது இராமாவதாரத்துடன் தனி நிலையில் ஒப்பு நோக்கி ஆராயப்பட வேண்டிய தேவை உள்ளது. தெ. பொ. மீ. அவர்கள் கூறியுள்ளபடி கச்சியப்பர் கம்பரை எந்த அளவிற்கு அடியொற்றினார். எந்த அளவுக்கு வேறுபட்டார் என்பவற்றைத் தெரிந்து கொள்ளவும், தமிழ்க்காப்பிய மரபின் உருவாக்கத்தில் சைவசமய நிலைக் கூறுகள் செலுத்தியுள்ள செல்வாக்கைக் கண்டுணரவும் இவ்வாறான ஆய்வு அவசியமாகின்றது.

ஒரு சைவ நூல் என்ற வகையில் இது சிவபிரானின் பெருமை பேசுவது, கந்தனை சிவனாகவே தரிசிப்பது, தரிசிக்க வைப்பது.

*ஆதலி னமது சக்தி யறுமுக நவனும் யாமும்*
*பேதக மன்றா னம்போற் பிரிவிலன் யாண்டு நின்றான்*
*ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்*
*போதமு மழிவில் வீடும் போற்றினாக் கருளவல்லான்*

***(திருவிளையாடல் படலம்)***

என்ற சிவபிரான் கூற்றாக அமையும் பாடல் இதற்கு தக்க சான்றாகும். சமய தத்துவ நிலையில் இந்நூல் சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருளுண்மையை விளக்கி நிற்பது. சைவ சித்தாந்தம் என்ற சொற்றொடர் இந்நூலில் பயின்றதாகத் தெரியவில்லை. ஆயினும் அத் தத்துவத்தையே இந்நூல் பேசுகின்றதென்பதை காசிவாசி செந்திநாதையர், சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார், இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சிவந்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, செ. தனபாலசிங்கம் முதலிய அறிஞர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

வழிபாட்டு முறைகள் என்ற வகையில் வேள்வி, தவம், விரதம், பூசை என்பன இந்நூலில் விரிவாகப் பேசப்படுகின்றன. சூரபத்மன் தன்னையே அர்ப்பணித்து நிகழ்த்திய பெருவேள்வி பற்றிய விபரம் (அசுரர் யாகப்படலம்) கற்போரை வியக்கவைப்பது, தவத்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபூசையாலும் கூற்றையும் கடக்கவல்ல ஆற்றல் கிட்டும் என்பதை மார்க்கண்டேயப் படலம் சிறப்பாக உணர்த்தி நிற்கிறது. ஆகம அடிப்படையிலான பூசை முறைகள், பல்வேறு தெய்வங்களுக்குரிய விரதங்கள் என்பன இந்நூலில் பல சந்தர்ப்பங்களில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

சைவ சமய நூல் என்ற வகையில் பிற சமயங்களையும், பிற தத்துவங்களையும் பற்றிய கண்டனம் நூலில் வெளிப்படையாகவே புலப்பட்டு நிற்கிறது. வைணவமதம், சங்கரரது அத்வைத தத்துவம், பூர்வ மீமாம்சை என்ற தரிசனம் ஆகியன இந்நூலிலே கடுமையான கண்டனத்துக்கு உள்ளாகின்றன. இந்நூலின் முக்கிய கதையம்சம் அத்வைத மறுப்பை நோக்கமாகக் கொண்டே புனையப்பட்டுள்ளது. சூர பத்மனுக்கு அவனது தந்தை உபதேசித்த முப் பொருளுண்மையை அசுரகுருவான சுக்கிராச் சாரியார் மறுத்து அத்வைதம் போதிக்கிறார். இப்போதனையை அவன் ஏற்றுக்கொண்ட நிலையே அவனது கொடுங்கோன்மைக்கு அடிப்படையாயிற்று எனத்தக்க வகையிலேயே கதைப்போக்கு புனையப்பட்டுள்ளது. ஈற்றில் சூரபத்மனின் வலிமை அடக்கியாளப்பட்ட நிலை அத்வைதத்தின் தோல்வியாக உணர்த்தப்பட்டுள்ளது. தக்ஷ காண்டத்தின் முக்கிய கதையம்சம் வைணவ மதகண்டனமாக விஷ்ணு பரத்துவத்தைச் சிவபரத்துவம் அடக்கியதாகப் புனையப்பட்டுள்ளது. வீரபத்திரர் தக்கனது யாகத்தை அழித்து மகாவிஷ்ணு முதலியவர்களைத் தண்டித்த நிலை இதனைத் தெளிவாக உணர்த்தும். இக் காண்டத்தில் ததீசியுத்தரப் படலத்தில் அமையும் **"தாருகாவன முனிவர் கதை"** செயல் மட்டுமே பலன் தரவல்லது - என்ற கருத்தினரான பூர்வமீமாம்சகர் செயல்களும், அவர்களைச் சிவன் வென்ற நிலையும் பேசப்படுகின்றன.

இந்நூலின் சைவ வாழ்க்கைக்குத் தேவையான பொது நிலை அறங்கள் பல பேசப்பட்டுள்ளன. இல்லறத்தின் இன்றியமையாச் சிறப்பு இந்நூலின் மார்க்கண்டேயப் படலத்தில் விளக்கப்பட்டுள்ளது. அத்துடன் நன் மனையாளுக்குரிய குணங்குறிகளும் அதில் பேசப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இப்படலத்தில் இடம்பெறும் இரசவாதம் பற்றிய கதை இந்தியப் பண்பாட்டின் வேதியியல் தொடர்பானது. இந்திரபுரி படலத்தில் ஆண்பெண் உறவான சிற்றின்பக்கலை விளக்கப்பட்டுள்ளது. காம சூத்திரத்தின் சுருக்கப்பதிப்பு எனத்தக்க வகையில் இது அமைந்துள்ளது.

இவை தவிர அரசியல், போரியல், கட்டிட சிற்பக்கலை மரபு முதலிய பலவும் இந்நூலிற் பேசப்பட்டுள்ளன. அண்டகோசப் படலம் என்ற பகுதியில் அண்டங்களின் இயல்பு, பரப்பு என்பன பொதுவாகச் சுட்டப்பட்டு குறிப்பாகப் பரத கண்டத்தின் பிரதேசப் பிரிவுகள், ஆட்சி மரபுகள் என்பன எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு இந்நூலில் இடம்பெற்றுள்ள பல்வேறு கூறுகளையும் தொகுத்து நோக்கும் போது இது ஒரு சைவ சமய தத்துவ நூல் என்ற எல்லைக்குள் மட்டும் அமையாமல் இந்துப் பண்பாடு சார்ந்த பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கிய **"பண்பாட்டுக் கருவூலம்"** ஆகத் திகழ்கின்றமையை அவதானிக்கலாம். இப் புராணத்துக்குரிய இச் சிறப்பு தமிழில் வேறெந்தப் புராணத்துக்கும் இருப்பதாகக் கூறுவதற்கில்லை. **"கந்த புராணத்தில் இல்லாதது எந்தப் புராணத்திலும் இல்லை"** என வழங்கும் பழமொழி இதனையே உணர்த்தி அமைகிறது எனலாம். கச்சியப்ப சிவாச்சாரியாரே தம் நூலைப் **"புராண நன்னாயகம்"** எனச் சுட்டியுள்ளார். (வள்ளியம்மை திருமணப்படலம் : 265) இது தற்புகழ்ச்சியல்ல. தக்கதொரு சுயமதிப்பீடேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

வேதாகம வித்தியா பூஷணம்

பிரம்மஸ்ரீ விஸ்வ நாராயண சர்மா

# விஞ்ஞான நோக்கில் இந்து மதம்

விஞ்ஞானம் என்பது மேலான அறிவு எனலாம் (வி + நாயகன்) (வி + ஞானம்) இன்றைய 21ம் நூற்றாண்டில் மிகவும் வளர்ச்சி அடைந்த துறை என்றால் அது விஞ்ஞானத் துறை என்பதே உண்மை. ஆயினும் தஞ்சைக் கோபுர நிழலும், நிலாவரைக் கேணியின் ஆழமும் விஞ்ஞான ஆய்வில் அகப்படாத பெரிய விஞ்ஞான சாதனையாக இன்றும் எம்மிடையே காணப்படுகின்றது. இந்து மதத்தின் பிரமாண நூல் வேதம். வேதம் என்றால் அறிவு எனப் பொருள்படும்.

வேதங்கள் அறிவே மதம் என்று வலியுறுத்துகின்றன. இவ்வாறான ஞானத்தை வளர்க்க உயிர்கள் தோன்றிய காலம் முதல் பரிணாம வளர்ச்சியில் (Evolution) விஞ்ஞானத் தெளிவும், மனித சிந்தனைகளும் மாறிக்கொண்டே இருக்கின்றன. உதாரணமாக 1960ம் ஆண்டு வரை பிரிக்க முடியாத பிளக்க முடியாத பொருளெனத் தெரிந்த அணுவை (Atom) விஞ்ஞானம் இன்று பிளந்து அளப்பரிய ஆக்க, அழிவுச் சக்தியைப் பெற்றுக் கொண்டுள்ளது. இயற்கையின் இயக்கம் முழுவதும் ஆண்சக்தி பெண்சக்தி எனும் இரண்டின் தொழிற்பாடுதான் என்பதை அணு ஆராய்ச்சி மூலம் விஞ்ஞானம் வெளிப்படுத்தியுள்ளது. எலக்ட்ரன் (Electron) ஆண் எனவும் நியூட்ரன் (Neutron) பெண் எனவும் கொள்ளப்படும். இரண்டும் செம்மையும் நீலமும் கொண்டவை. இரண்டும் இணைந்தால் பெறப்படுவது தான் மாபெரும் சக்தி. மேல் கீழ் வட்டமாகச் சுற்றும் நியூட்ரன் கிடைப்பாங்காகச் சுற்றும் புறோத்திரன் ஆகிய சக்தி முதல் காணப்படும் இடம் சதாசிவ திருமேனி எனும் சிவலிங்க வடிவாகும். இதனைச் சைவ சித்தாந்தமும் **“சதா சம் யோக பாவத்துவாத் சக்தி உத்கர காரிணம்”** எனக் கூறும் என்றோ பெறப்பட்ட மெய்ஞானக் கூற்று இன்று விஞ்ஞானத்தால் நிரூபிக்கப்பட்டுள்ளது. இது வொன்றே இந்து மதம் எத்தகைய மாற்றங்கள் வந்தாலும் வளைந்து கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிர்ந்து நிற்கும் பெருமையுடையது எனக் கூறுவதற்கு போதுமான காரணம் எனக் கூறலாம்.

அண்ட வெளியில் தீக்கோளாக அமைந்துள்ள சூரியனைப் பல கோள்கள் (கிரஹங்கள்) சுற்றி வருகின்றன. இவற்றிடையே உண்டாகும் தட்ப வெப்ப மாறுதல்களாலும், பிராணவாயுச் சேர்க்கையாலும் உண்டான ஓர் மண் பிண்டமே பூமியாயிற்று. இது புவித் தோற்றம் பற்றிய விஞ்ஞானத் தெளிவாகும். இப்படியான நீர், நிலம், தீ, காற்று, வெளி எனும் பூதபேத செயல்களின் தத்துவமே அண்டம் என்றும், பிரம்மம் என்றும் இந்து மதம் பெயரிட்டது. உருவகத்தில் பிரம்மன் ஆக்கச் சக்தியாக, (Creature) படைத்தல் தொழில் செய்பவராக கூறப்படுகின்றார். இவ்வாறாக படைக்கப்பட்ட அண்டத்தில் புல், பூண்டு முதல் மனிதன் ஈறான உயிரினங்கள் தோன்றி பிண்டம் என வழங்கலாயிற்று. இவற்றின் வளர்ச்சியும், செயற்பாடுகளும் காத்தல் என்றும் (**"Operation அதனை சர்வம் விஷ்ணு மயம்"**) காத்தல் தெய்வமாக விஷ்ணுவும் போற்றப்பட்டார். இப்பிண்டத்தில் ஜீவன்களை உண்டு பண்ணி வளர்த்து, பரிணாம வளர்ச்சியில் ஜீவன் புதிய வடிவம் பெறும் தன்மையை சிவம் என இந்து மதம் கூறும். இதனை மேலைநாடுகள் வர்ணித்து

| | | | | |
|---|---|---|---|---|
| Generation | - | படைத்தல் | பிரம்மா | மும்மூர்த்தியை |
| Operation | - | காத்தல் | விஷ்ணு | |
| Distruction | - | அழித்தல் | சிவம் (உருத்திரன்) | |

G.O.D. - GOD **"காட்"** கடவுள் எனும் பொதுப் பெயரால் அழைத்தார்கள்.

இதிகாசப் புராணங்களில் வரும் கதைகளில் கூட, விஞ்ஞானத் தொடர்பு உள்ளதை நாம் அறிய முடியும். **"சார்ள்ஸ் டாவின்"** எனும் மேலைத் தேய ஆய்வாளன் பரிணாம வளர்ச்சியை பற்றி எடுத்தாண்ட கொள்கையுடன் ஸ்ரீ விஷ்ணுவின் தசாவதாரத்தை வரிசைப்படுத்திக் கூறமுடியும். டார்வின் (Darvin) கூற்றுப்படி முதல் உயிரினம் நீரில் தோன்றிய **"அமீபா"** படிப்படியாக வளர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதராகியது போல், முதல் அவதாரமாக மச்சாவதாரம் (மீன்) ஆமை, பன்றி, குள்ள வடிவான வாமனர், நரசிம்மம் என்ற வகையில் செல்வதைக் காணலாம்.

இந்து சமயம் **"நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறை மொழி மந்திரம்"** என்று வரை விலக்கணம் தருகிறது. இம்மறை மொழி உள்ளத்தை இறைவன் பால் இசைவிக்கும் என்றும், வேண்டியதைத் தரும் என்றும் கூறுவர். இன்றைய மனித உளவியல், மனோவசிய விஞ்ஞானிகளும் இதனை ஏற்றுள்ளனர். குறித்த இவ்விடயத்தில் எம்முடைய சொல், செயல் நினைவு மூன்றும் ஒருமித்துத் தொடர்ச்சியாக ஈடுபடும் பொழுது நாம் அதில் லயித்துவிடுகிறோம். அவ்விடயம் சம்பந்தமான காரியங்களை ஆற்ற எமக்குப் பிறக்கும் புதிய மனோபலமே காரியத்தின் வெற்றியை பெரும்பாலும் தீர்மானிக்கும் எனக் கூறுவர். இதனால் இந்துமதம் பூசை வழிபாடு, விக்கிரக வழிபாடு என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கான காரணம் புலனாகின்றது.

இன்றைய ஆய்வாளர்களின் சிந்தனையில் தெளிவைத்தந்த இரண்டு இந்து மத செயற்பாட்டினையும் சிறிது ஆய்வது பொருந்தும். நாம் தினமும் அணியும் திருநீறு அதியுயர்ந்த பூச்சி கொல்லி என்பதும், நமது காலை, மாலை சூரிய வழிபாடு கண்ணுக்குப் பலத்தையும் உடலுக்கு விட்டமின் **D** என்னும் தாதுவையும் ஊட்டுகின்றன என்பதேயாம். மெய்ஞானம் சமயச் சடங்குகளின் பேரால் வலியுறுத்திய அனைத்து நடைமுறைகளும் விஞ்ஞான முறையில் கொடுக்கப்படும் கருத்து விளக்கங்களாக அமைக்கின்றன.

காலத்தாற் பிற்பட்ட விஞ்ஞானியான லவோய்சியர் (Lavoyzier) தாக்க மொன்றின் மூலம் எதனையும் அழிக்கவோ, உருவாக்கவோ முடியாது; அதன் கட்டமைப்பினையே மாற்ற முடியும் என நிறுவியுள்ளார். இதனைச் சைவ சித்தாந்தம் தனது மெஞ்ஞான வழிமுறைகளில் நின்று பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நிறுவித் தந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"உள்து இலதாகாது, இலது உளதாகாது உள்ளதில் இருந்தே உள்ளது தோன்றும். இல்லதிலிருந்து உள்ளது தோன்றாது"** எனும் சற்காரிய வாதமே சைவ சித்தாந்தத்தின் அடிநாதம். இத்தத்துவத்தின் பொருளையே மேற்கூறிய விஞ்ஞானியின் ஆராய்ச்சி முடிபும் விளக்கி நிற்கின்றது. விஞ்ஞான ஆராய்ச்சி முடிவிற்கும் மெய்ஞ்ஞான ஆராய்ச்சி முடிவுக்குமிடையில் வேறுபாடு ஏதும் இருக்கின்றதா?

விஞ்ஞானம் இயற்கை எனக் கூறுவதை இந்துமதம் இறைவன் என்கின்றது. எத்தகைய வடிவமைப்புகள் கொண்ட தெய்வ வழிபாடு இருந்தாலும், அவை யாவும் ஒரே தெய்வ சக்தி தான் என்பதை ஏற்றுக் கொள்ள மறுக்கும் அறிவு ஜீவிகள் மத்தியில் இவ்வாறான ஒப்பு நோக்கு விளக்கங்கள் சிறிதளவேனும் அவர்களுடைய சிந்தனையைச் சீர் செய்யுமாக இருந்தால் அதுவே போதும் என்ற நிறைவுடனும், **"கற்றது கைமண்ணளவு"** எனும் உணர்வுடனும் தோன்றிய காலம் துலங்காத இந்துமதம் இன்றும் நிமிர்ந்து நின்று அனைத்து ஆய்வுரைக்கும் கிடையாக அமைவதை உணர்ந்து விடையேறும் பெருமானைப் பணிந்தேத்தி மகிழ்கின்றோம்.

---

பிரார்த்தனைகள் ஐந்து. அவற்றை ஒரு நாளைக்கு ஐந்து முறை ஐந்து வெவ்வேறு பெயர்களுடன் பின்வரும் முறையில் செய்து வருவாயாக :

**முதலாவது - வாய்மை, இரண்டாவது - நீதி தவறாத முறையில் தினமும் உணவைத் தேடு, மூன்றாவது - பகவானது பெயரால் தானம் செய், நான்காவது - மனத்தூய்மை பெற ஓயாமல் முயற்சி செய், ஐந்தாவது - கடவுளை வழிபட்டு வா.**

*- வினோபா -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்
# தேவாரம்

அரியானை அந்தணர் தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள் தங்கோனை மற்றைக்
கரியானை நான் முகனைக் கனலைக் காற்றைக்
கனை கடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே !

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந் தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

# திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் த்ரசே
திருப் பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க் கெடுத் துரைப்பேன்
ஆண்ட நீ அருளிலை யானால்
வார் கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்றருள் புரியாயே !

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராண பதிகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே
உணர்வு சூள் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயே
தொண்டனேன் விளம்புமா விளம்பே !

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கடத்தொலி யேத்தொலி
எங்குங் குழாம் பெருகி
விழலொலி விண்ணளவுஞ் சென்று விம்மி
மிகு திரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழி யாளாய்
மணஞ் செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே !

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடி யார்கள் விரைந்துவம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றுமென்றும் உள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

ஐந்த பேரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங்கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றும்
திருநீதுசாத்துவிகமேயாக
இந்துவாழ் சடையானாடும் ஆனந்த
வெல்லையில் தனிப்பெருங்கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துட்டிழைத்து
மாறிலாமகிழ்ச்சியின் மலர்ந்தார்.

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் - போற்றி போற்றி

# திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தான சற் குணர் நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில் நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசைந்த போதென் துயர் கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தல மொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் மூட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனி தெனக்கு அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள் வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி யென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

**தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி**
**அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்**
**திருவாச சகமென்னும் தேன்**

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தை யடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற வதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங் கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகள்

திருப்பெருந்துறையில் அருளிய

# திருப்பள்ளி எழுச்சி

திருச்சிற்றம்பலம்

போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே;
ஏற்யர் கொடியுடையாய்எனை! உடையாய்!
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே ? 1.

அருணன் இந் திரன் திசை அணுகினன்; இருள்போய்
அகன்றது உதயம் நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ; நயனக்
கடிமலர் மலர; மற்றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன; இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகடலே! பள்ளி எழுந்தருளாயே! 2.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளிஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவ! நற் செறிகழற் றாளிணை காட்டாய்;
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
யாவரும் அறிவரி யாய்! எமக் கெளியாய்!
எம்பெருமான்! பள்ளி எழுந்தரு ளாயே! 3.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒரு பால்!
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்;
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர், ஒருபால்;
திருபெருந் துறையுறை சிவபெருமானே!
என்னையும் ஆண்டுகொண் (டு) இன்னருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே! 4

பூதங்க டோறுநின் றாய் எனின் அல்லால்
"போக்கிலன் வரவிலன்" என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம் உனைக் கண்டறிவாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா!
சிந்தனைக் கும் அரி யாய்! எங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே! 5

பப்பற வீட்டிருந் துணரும் நின் அடியார்
பந்தனை வத்தறுத் தார்அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார் அணங் கின்மண வாளா!
செப்புறு கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே! 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்!
இதுஅவன் திருவுரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டு கொண்டு இங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்! திருப் பெருந்துறை மன்னா!
எதுஎமைப் பணிகொளும் (ஆறு)? அது கேட்போம்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே! 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற்று அறிவார்?
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே!
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய்
ஆரமு தே! பள்ளி எழுந்தரு ளாயே! 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுபொரு ளே! உன தொழும்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச் செய்தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி அடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமுதே! கரும்பே! விரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே! 9

புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம்
போக்குகின் றோம் அவ மேஇந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திரும்பெருந் துறையுறை வாய்! திரு மாலாம்;
அவன் விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே! பள்ளி எழுந்தருளாயே! 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# திருவெம்பாவை

(சக்தியை வியந்து - மாணிக்கவாசக சுவாமிகள்)

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதேவளருதியோ வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே!
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்! 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய்? நேரிழையீர்!
சீசி இவையும் சிலவோ? விளையாடி
ஏசு மிடம்ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்? 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர்! ஈசன் பழ அடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம்அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்! 3

ஒள்நித் திலநகையாய் இன்னும் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய் ! 4

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்! 5

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ?
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந் தெம்மைத் தலை அளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனைப் பாடேலோர் எம்பாவாய் ! 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன்என்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என் அரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோம்
வன்னஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய் ! 7

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்! 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே !
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்றஉன்சீரடியோம்
உன்அடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்! 9

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர்? ஏதவன்பேர்? ஆருற்றார்? ஆரயலார்?
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்? 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேர்என்னக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயாவழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யாவெண் நீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்! 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நல் தில்லைச் சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கழல்கள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூர்த்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்! 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய் ! 13

காதார் குழை ஆடப் பைம்பூண் கலன் ஆடக்
கோதை குழல் ஆட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல் ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்! 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகால் எம்பெருமான் என்றேன்றேநம் பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆம்ஆறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்! 15

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையான்
என்னத் திகழ்தெம்மை ஆளுடையான் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலப்பின் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைக்குலவி நந்தம்மை ஆளுடையான்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்! 16

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்நம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்! 17

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்து ஆடேலோர்எம்பாவாய்! 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எம்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எம் கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்! 19

போற்றி அருள்கநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருள்கநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகாமம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்! 20





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம் பூ மாலைத்தூக்கி
முளைக்குடந்த தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமகளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன் அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 1

பூவியல் வார்சடை எம்பிரார்க்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியும் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்(கு)
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே 3

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 5

உலக்கை பலஒச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே 6

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்கும்மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமாலை அன்னகோவுக்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதரு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கையற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந்த தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடிநானுக்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடநைதநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடைக் ஆரமு(து) எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம் வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண்ம் இடித்துநாமே 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ(டு)
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவினுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடி
காலனைக்காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே 18

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம்பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருளா யினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினாருக்(கு)
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அந்தாதி

**கணபதி காப்பு**

தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும் தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்தனே உலகேழும்பெற்ற
சீரபி ராமிஅந் தாதிஎப் போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

**நூல்**

உதிக்கின்ற செங்கதிர், உச்சித் திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக் குங்குமத் தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழுத்துணையே. 1

துணையும், தொழுந்தெய்வ மும்,பெற்ற தாயும், சுருதிகளின்
பணையும், கொழுந்தும், பதிகொண்ட வேரும், பனிமலர்ப்பூங்
கணையும், கருப்புச் சிலையுமென் பாசாங் குசமும்,கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே. 2

அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன், உனது திருவடிக் கே,திரு வே!வெருவிப்
பிறிந்தேன், நின்அன்பர் பெருமைஎண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும்நர குக்குஉற வாய மனிதரையே! 3

மனிதரும், தேவரும், மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமள மே,கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும் பொருந்துகவே. 4

பொருந்திய முப்புரை, செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி! வார்சடையோன்
அருந்திய நஞ்சுஅமு தாக்கிய அம்பிகை! அம்புயம்மேல்
திருந்திய சுந்தரி, அந்தரி பாதம்என் சென்னியதே. 5

சென்னியது உன்பொற் றிருவடித் தாமரை; சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம்; சிந்துர வண்ணப்பெண்ணே!
முன்னிய நின்அடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னியது, என்றும்உந் தன்பர மாகம பத்ததியே! 6

ததியுறு மத்தின் சுழலும்என் ஆவி, தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்!கம லாலயனும்,
மதியுறும் வேணி மகிழ்நனும்; மாலும், வணங்கி என்றும்
துதியுறு சேவடி யாய்;சிந்து ரானன சுந்தரியே! 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரி எந்தை துணைவி, என் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி, சிந்துர வண்ணத்தி னாள்,மகி டன் தலைமேல்
அந்தரி, நீலி, அழியாத கன்னிகை, ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாள்மலர்த் தாள்என் கருத்தனவே. 8

கருத்தன எந்தைதன், கண்ணன, வனர்ணக் கனகவெற்பில்
பெருத்தன, பால்அழும் பிள்ளைக்கு நல்கின, பேர்அருள்கூர்
திருத்தன பாரமும், ஆரமும், செங்கைச் சிலையும், அம்பும்
முருத்தன மூரலும், நீயும்அம் மே,வந்துஎன் முன்நிற்கவே. 9

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை;
என்றும் வணங்குவது உன்மலர்த் தாள்;எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொரு ளே!அரு ளே!உமை யே!இமயத்து
அன்றும் பிறந்தவ ளே!அழி யாமுத்தி ஆனந்தமே! 10

ஆனந்த மாய்,என் அறிவாய், நிறைந்த அமுதமுமாய்,
வான் அந்த மான வடிவுடை யாள்,மறை நான்கினுக்கும்
தான்அந்த மான சரணார விந்தத் தவளநிறக்
கானம்தம் ஆடரங் காம்எம்பி ரான்முடிக் கண்ணியதே. 11

கண்ணியது உன்புகழ்; கற்பதுஉன் நாமம்; கசிந்துபத்தி
பண்ணியது உன்இரு பாதாம் புயத்தில் பகல்இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து; நான்முன்செய்த
புண்ணியம் ஏது?என்அம் மே!புவி ஏழையும் பூத்தவளே! 12

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும், பூத்தவண்ணம்
காத்தவ ளே!பின் கரந்தவ ளே!கறைக் கண்டனுக்கு
மூத்தவ ளே!என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவ ளே!உன்னை அன்றிமற்று ஓர்தெய்வம் வந்திப்பதே? 13

வந்திப் பவர்உன்னை, வானவர் தானவர் ஆனவர்கள்;
சிந்திப் பவர்,நல் திசைமுகர் நாராணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர்,அழி யாப்பர மானந்தர்; பாரில்உன்னைச்
சந்திப் பவர்க்குஎளி தாம்எம் பிராட்டி!நின் தண்ணளியே 14

தண்ணளிக்கு என்றுமுன் னேபல கோடி தவங்கள்செய்வார்,
மண்அளிக் கும்செல்வ மோபெறு வார்?மதி வானவர்தம்
விண்அளிக் கும்செல்வ மும்,அழி யாமுத்தி வீடும்அன்றோ?
பண்அளிக் கும்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே! 15

கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்துஒளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்குஇட மே!எண்ணில் ஒன்றும்இல்லா
வெளியே! வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தஅம்மே!
அளியேன் அறிவுஅள விற்குஅள வானது அதிசயமே! 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசய மான வடிவுடை யாள்!அர விந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தர வல்லி! துணைஇரதி
பதிசய மானது அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகஅன் றோ,வாம பாகத்தை வவ்வியதே. 17

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக் கோலமும், சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து,
வெவ்விய காலன்என் மேல்வரும் போது, வெளிநிற்கவே! 18

வெளிநின்ற நின்திரு மேனியைப் பார்த்து, என் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்டது இல்லை; கருத்தினுள்ளே
தெளிகின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ!
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே! 19

உறைகின்ற நின்திருக் கோயில்,நின் கேள்வர் ஒருபக்கமோ?
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோ?அமுதம்
நிறைகின்ற வெண்திங் களோ?கஞ்ச மோ?என்தன் நெஞ்சகமோ?
மறைகின்ற வாரிதி யோ?பூர ணாசல மங்கலையே! 20

மங்கலை, செங்கல சம்முலை யாள்,மலை யாள்,வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில், தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாள்,உடையாள்,
பிங்கலை, நீலி,செய் யாள்,வெளி யாள்பசும் பெண்கொடியே! 21

கொடியே! இளவஞ்சிக் கொம்பே! எனக்குவம் பேபழுத்த
படியே! மறையின் பரிமள மே!பனி மால்இமயப்
பிடியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்றஅம்மே!
அடியேன் இறந்துஇங்கு இனிப்பிற வாமல்வந்து ஆண்டுகொள்ளே! 22

கொள்ளேன் மனத்தில்நின் கோலம்அல் லாது, அன்பர் கூட்டம்தனை
விள்ளேன்; பரசம யம்விரும் பேன்;வியன் மூவுலகுக்கு
உள்ளே! அனைத்தினுக் கும்புறம் பே!உள்ளத் தேவிளைந்த
கள்ளே! களிக்கும் களியே! அளியஎன் கண்மணியே! 23

மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்குஅழ கே;அணு காதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை, நின்பத்ம பாதம் பணிந்தபின்னே! 24

பின்னே திரிந்துஉன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்;முதல் மூவருக்கும்
அன்னே! உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே!
என்னே? இனிஉன்னை யான்மற வாமல்நின்று ஏத்துவனே! 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏத்தும் அடியவர் ஈரேழு உலகினை யும்படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவ ராம்;கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல்அணங் கே!மணம் நாறும்நின் தாள்இணைக்கென்
நாத்தங்கு புன்மொழி ஏறிய வாறு நகையுடைத்தே! 26

உடைத்தனை வஞ்சப் பிறவியை; உள்ளம் உருகும்அன்பு
படைத்தனை; பத்ம பதயுகம் சூடும் பணிஎனக்கே
அடைத்தனை; நெஞ்சத்து அழுக்கை எல்லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை; சுந்தரி! நின்அருள் ஏதென்று சொல்லுவதே! 27

சொல்லும் பொருளும் என,நட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யே!நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க் கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே. 28

சித்தியும், சித்தி தரும்தெய்வம் ஆகித் திகழும்பரா
சக்தியும், சத்தி தழைக்கும் சிவமும், தவம்முயல்வார்
முத்தியும், முத்திக்கு வித்தும், வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும், புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தைஅன்றே. 29

அன்றே தடுத்துஎன்னை ஆண்டுகொண் டாய்;கொண்டது அல்லஎன்கை
நன்றே? உனக்கினி நான்என் செயினும், நடுக்கடலுள்
சென்றே விழினும், கரையேற்று கைநின் திருவுளமே
ஒன்றே! பலவுரு வே!அரு வேஎன் உமையவளே! 30

உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில்வந்திங்கு,
எமையும் தமக்குஅன்பு செய்யவைத் தார்;இனி எண்ணுதற்குச்
சமையங்களும் இல்லை; ஈன்றுஎடுப் பாள்ஒரு தாயும்இல்லை;
அமையும், அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே! 31

ஆசைக் கடலில் அகப்பட்டு, அருள் அற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற் படஇருந் தேனை,நின் பாதம்என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்!ஈசர் பாகத்து நேரிழையே! 32

இழைக்கும் வினைவழி யேஅடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்து, "அஞ்சல்"என் பாய்;அத்தர் சித்தம்எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே!
உழைக்கும் பொழுதுன்னை யே"அன்னை யே"என்பன், ஓடிவந்தே. 33

வந்தே சரணம் புகும்அடி யாருக்கு, வானுலகம்
தந்தே, பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்,
பைந்தேன் அலங்கற் பருமணி ஆகமும், பாகமும்பொற்
செந்தேன் மலரும், அலர்கதிர் ஞாயிறும், திங்களுமே. 34



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்கட் பசுவின் மணம்நாறும் சீறடி சென்னிவைக்க,
எங்கட் கொருதவம் எய்தியவா?எண் இறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம்எய்து மோ?தரங் கக்கடலுள்
வெங்கட் பணிஅணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே! 35

பொருளே! பொருள்முடிக் கும்போக மே!அரும் போகம்செய்யும்
மருளே! மருளில் வரும்தெரு ளே!என் மனத்துவஞ்சத்
திருள்ஏதும் இன்றி ஒளிவெளி ஆகி யிருக்குமுன்றன்
அருள்ஏது அறிகின்றி லேன்,அம்பு யாதனத்து அம்பிகையே! 36

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம்அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை; விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும்எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான்இடம் சேர்பவளே! 37

பவளக் கொடியில் பழுத்தசெவ் வாயும், பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது, துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீர்அம ராவதி ஆளுகைக்கே 38

ஆளுகைக்கு உன்தன் அடித்தா மரைகள்உண்டு; அந்தகன்பால்
மீளுகைக்கு உன்தன் விழியின் கடைஉண்டு; மேல்இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறை யேஅன்று; முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே! 39

வாணுதல் கண்ணியை, விண்ணவர் யாவரும் வந்துஇறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும்அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணம்அன் றோமுன்செய் புண்ணியமே! 40

புண்ணியம் செய்தன மேமன மே!புதுப் பூங்குவளைக்
கண்ணியும், செய்ய கணவரும் கூடி,நம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து, தம்அடி யார்கள் நடுஇருக்கப்
பண்ணி,நம் சென்னியின் மேல்பத்ம பாதம் பதித்திடவே. 41

இடங்கொண்டு விம்மி, இணைகொண்டு இறுகி இளகி, முத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்டு இறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி! நல்அரவின்
படங்கொண்ட அல்குல் பணிமொழி வேதப் பரிபுரையே 42

பரிபுரச் சீறடிப் பாசாங் குசை,பஞ்ச பாணி,இன்சொல்
திரிபுர சுந்தரி, சிந்துர மேனியள், தீமைநெஞ்சில்
பரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை,
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத்து இருந்தவளே! 43



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவளே இவள் எங்கள் சங்கர ன்ார்மனை மங்கலமாம்;
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள், ஆகையினால்,
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்;
துவளேன், இனிஒரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்தே. 44

தொண்டுசெய் யாது,நின் பாதம் தொழாது, துணிந்திச்சையே
பண்டுசெய் தார்உள ரோஇல ரோ?அப் பரிசடியேன்
கண்டுசெய் தால்,அது கைதவ மோஅன்றிச் செய்தவமோ?
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கைஅன்றே. 45

வெறுக்கும் தகைமைகள் செய்யினும், தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதுஅன் றே;புது நஞ்சைஉண்டு
கறுக்கும் திருமிடற் றான்இடப் பாகம் கலந்தபொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான்உன்னை வாழ்த்துவனே 46

வாழும் படிஒன்று கண்டுகொண் டேன்;மனத் தேஒருவர்
வீழும் படிஅன்று; விள்ளும் படிஅன்று; வேலைநிலம்
ஏழும், பருவரை எட்டும்எட் டாமல், இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில்ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடரும் தவிர்த்து,இமைப் போதுஇருப் பார்பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே? 48

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி,வெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும்அப் போதுவளைக் கைஅமைத்து
அரம்பை யடுத்த அரிவையர் சூழவந்து, “அஞ்சல்”என்பாய்,
நரம்பை அடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே! 49

நாயகி, நான்முகி, நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி, சாம்பவி, சங்கரி, சாமளை, சாதிநச்சு
வாயகி மாலினி, வாராகி, சூலினி, மாதங்கிஎன்று
ஆயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே. 50

அரணம் பொருள்என்று அருள்ஒன் றிலாத அசுரர்தங்கள்
முரண்அன்று அழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே,
“சரணம் சரணம்” எனநின்ற நாயகி தன் அடியார்,
மரணம் பிறவி இரண்டும்எய் தார்இந்த வையகத்தே. 51

வையம், துரகம், மதகரி, மாமகு டம்,சிவிகை,
பெய்யும் கனகம், பெருவிலை ஆரம், பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித் தாமரைக்கு அன்புமுன்பு
செய்யும் தவமுடை யார்க்குஉள வாகிய சின்னங்களே. 52



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும்,முத் தாரமும், பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்,கண் மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனிஇருப் பார்க்குஇது போலும் தவம்இல்லையே 53

இல்லாமை சொல்லி, ஒருவர்தம் பால்சென்று, இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்,நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே 54

மின்னா யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னாள், அகமகிழ் ஆனந்த வல்லி, அருமறைக்கு
முன்னாய், நடுஎங்கு மாய்,முடி வாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும் உன்னிலும், வேண்டுவது ஒன்றில்லையே 55

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து,இவ் வுலகுஎங்குமாய்
நின்றாள், அனைத்தையும் நீங்கிநிற் பாள்எந்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வா!இப் பொருள்அறிவார்
அன்றாலி லையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே 56

ஐயன் அளந்த படியிரு நாழிகொண்டு, அண்டமெல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி, ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்றுபொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்; இது வோஉன்றன் மெய்யருளே? 57

அருணாம் புயத்தும்,என் சித்தாம் புயத்தும், அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்நல் லாள்,/ கை சேர்நயனக்
கருணாம் புயமும், வதனாம் புயமும், கராம்புயமும்,
சரணாம் புயமும்அல் லாற்கண்டி லேன்,ஒரு தஞ்சமுமே 58

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல என்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேன்ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்குஅல ராகிநின் றாய்அறி யார்எனினும்,
பஞ்சஞ்சும் மெல்லடி யார்அடி யார்பெற்ற பாலரையே 59

பாலினும் சொல்இனி யாய்!பனி மாமலர்ப் பாதம்வைக்க,
மாலினும், தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்வடையின்
மேலினும், கீழ்நின்று வேதங்கள் பாடும்மெய்ப் பீடம் ஒரு
நாலினும். சாலநன் றோஅடி யேன்முடை நாய்த்தலையே? 60

நாயே னையும்இங்கு ஒருபொரு ளாக நயந்துவந்து,
நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய்,நின்னை உள்ளவண்ண
பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்!
தாயே, மலைமக ளே,செங்கண் மால்திருத் தங்கச்சியே! 61



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கச் சிலைகொண்டு, தானவர் முப்புரம் சாய்த்து,மத
வெங்கண் கரிஉரி போர்த்செஞ் சேவகன் மெய்அடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி, கோகனகச்
செங்கைக் கரும்பும், மலரும்எப் போதும்என் சிந்தையதே 62

தேறும் படிசில ஏதுவும் காட்டி,முன் செல்கதிக்குக்
கூறும் பொருள், குன்றில் கொட்டும் தறி,குறிக் கும்சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்,
வேறும் சமயம்உண் டென்றுகொண் டாடிய வீணருக்கே 63

வீணே பலிகவர் தெய்வங்கள் பால்சென்று, மிக்கஅன்பு
பூணேன் உனக்குஅன்பு பூண்டுகொண் டேன்;நின் புகழ்ச்சியன்றிப்
பேணேன், ஒருபொழு தும்திரு மேனிப்ர காசம்அன்றிக்
காணேன் இருநில மும்,திசை நான்கும், ககனமுமே 64

ககனமும் வானும் புவனமும் காண,விற் காமன் அங்கம்
தகனம்முன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்செம்
முகனும்முந் நான்குஇரு மூன்றுஎனத் தோன்றிய மூதறிவின்
மகனும்உண் டாயதன் றோ?வல்லி நீசெய்த வல்லபமே 65

வல்லபம் ஒன்றறி யேன்;சிறி யேன்நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றுஒன்று இலேன்;பசும் பொன்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்,வினை யேன் தொடுத்த
சொல்அவ மாயினும், நின்திரு நாமங்கள் தோத்திரமே 66

தோத்திரம் செய்து தொழுதுமின் போலும்நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மை,குலம்,
கோத்திரம், கல்வி, குணம்குன்றி, நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குஉழலா நிற்பர் பாரெங்குமே 67

பாரும், புனலும், கனலும், வெங் காலும், படர்விசும்பும்;
காலும், படர்விசும்பும்; ஊரும் முருகு சுவைஒளி ஊறுஒலி ஒன்றுபடச்
சேரும் தலைவி, சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாரும் தவம்உடை யார்படை யாத தனம்இல்லையே. 68

தனம்தரும்; கல்வி தரும்;ஒரு நாளும் தளர்வுஅறியா
மனம்தரும் தெய்வ வடிவும் தரும்;நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனம்தரும்; நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே,
கனம்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே 69

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்,கடம் பாடவியில்:
பண்களிக் கும்குரல் வீணையும், கையும், பயோதரமும்,
மண்களிக் குமபச்சை வண்ணமும் ஆகி, மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே 70



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி, அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்,பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க,
இழவுற்று நின்றநெஞ் சே!இரங் கேல்!உனக்கு என்குறையே? 71

என்குறை தீரநின்று ஏத்துகின் றேன்;இனி யான்பிறக்கின்,
நின்குறையே அன்றி யார்குறை காண்?இரு நீர்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்!
தன்குறை தீர,எம் கோன்சடை மேல்வைத்த தாமரையே 72

தாமம் கடம்பு; படைபஞ்ச பாணம்; தனுக்கரும்பு;
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது;எமக் கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கு,ஒளி செம்மை;அம்மை
நாமம் திரிபுரை; ஒன்றோடு இரண்டு நயனங்களே 73

நயனங்கள் மூன்றுடை நாதனும், வேதமும், நாரணனும்,
அயனும் பரவும் அபிராம வல்லி அடிஇணையைப்
பயன்என்று கொண்டவர், பாவையர் ஆடவும் பாடவும்,பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே 74

தங்குவர் கற்பகத் தாருவின் நீழலில் தாயர்இன்றி
மங்குவர், மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்,
பொங்குவர் ஆழியும், ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே 75

குறித்தேன் மனத்தில்,நின் கோலம்எல் லாம்;நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி; வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப் பிரான்ஒரு கூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே! 76

பயிரவி! பஞ்சமி! பாசாங் குசை!பஞ்ச பாணி!வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி! காளி! ஒளிரும்கலா
வயிரவி! மண்டலி! மாலினி! சூலி! வராகிஎன்றே
செயிர்அவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே 77

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும், வயிரக் குழையும், விழியின் கொழுங்கடையும்,
துப்பும் நிலவும் எழுதிவைத் தேன்என் துணைவிழிக்கே 78

விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு; வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு;அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்று,வெம் பாவங்க ளே,செய்து, பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடுஎன்ன கூட்டுஇனியே? 79



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டியவா என்னைத் தன்அடி யாரில், கொடியவினை
ஓட்டியவா, என்கண் ஓடியவா, தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா, கண்டகண்ணும் மனமும் களிக்கின்றவா,
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே 80

அணங்கே! அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை; வாழ்த்துகிலேன் நெஞ்சில்; வஞ்சகரோடு
இணங்கேன் எனதுஉனது என்றுஇருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன்; அறிவொன்றி லேன்;என்கண் நீவைத்த பேரளியே! 81

அளிஆர் கமலத்தில் ஆரணங் கே!அகி லாண்டமும்நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும்
களியாகி, அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின்,எங்ங னேமறப் பேன்நின் விரகினையே? 82

விரவும் புதுமலர் இட்டு,நின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்,இமை யோர்எவரும்
பரவும் பதமும், அயிரா வதமும், பகீரதியும்
உரவும் குலிசமும், கற்பகக் காவும் உடையவரே 83

உடையாளை, ஒல்குசெம் பட்டுடை யாளை, ஒளிர்மதிச்செஞ்
சடையாளை, வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்கும்நுண்ணூல்
இடையாளை, எங்கள்பெம் மான்இடை யாளை,இங் கென்னையினிப்
படையாளை, உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே 84

பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும், பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும்,என் அல்லலெல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும், சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்,முலை மேல்முத்து மாலையுமே 85

மாலயன் தேட, மறைதேட, வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு, கதித்தகப்பு
வேலைவெங் காலன்என் மேல்விடும் போது, வெளிநில்கண்டாய்!
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே! 86

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்தி, என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்;விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை, அண்டமெல்லாம்
பழிக்கும் படி,ஒரு பாகம்கொண் டாளும் பராபரையே! 87

பரம்என்று உனைஅடைந் தேன்தமி யேனும்,உன் பத்தருக்குள்
தரம்அன்று இவன்என்று தள்ளத் தகாது; தரியலர்தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில்அயன்
சிரம்ஒன்று செற்றகை யான்இடப் பாகம் சிறந்தவளே! 88



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறக்கும் கமலத் திருவே!நின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும், துரியமற்ற
உறக்கம் தரவந்து, உடம்போடு உயிர்உறவு அற்றுஅறிவு
மறக்கும் பொழுது,என்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே 89

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்து
இருந்தாள், பழைய இருப்பிட மாக; இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லை;விண் மேவும் புலவருக்கு
விருந்தாக, வேலை மருந்தா னதைநல்கும் மெல்லியலே! 90

மெல்லிய நுண்இடை மின்அனை யாளை, விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை யாளைப் புகழ்ந்து,மறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத் தொழும்அவர்க்கு
பல்லியம் ஆர்த்துஎழ, வெண்பகடு ஊரும் பதம்தருமே 91

பதத்தே உருகி,நின் பாதத்தி லேமனம் பற்றி,உன்றன்
இதத்தே ஒழுக, அடிமைகொண் டாய்;இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்;அவர் போன வழியும்செல்லேன்!
முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே! 92

நகையே இஃதுஇந்த ஞாலம்எல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே, முகிழ்முலை மானே முதுகண்; முடிவில்அந்த
வகையே பிறவியும் வம்பே; மலைமகள் என்பதுநாம்;
மிகையே; இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே 93

விரும்பித் தொழும்அடி யார்விழி நீர்மல்கி, மெய்புளகம்
அரும்பித், ததும்பிய ஆனந்த மாகி, அறிவிழந்து,
சுரும்பிற் களித்து, மொழிதடு மாறி,முன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென் றால்,அபி ராமி சமயம்நன்றே! 94

நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது
ஒன்றேயும் இல்லை; உனக்கே பரம்;எனக்கு உள்ளஎல்லாம்
அன்றே உனதென்று அளித்துவிட் டேன்;அழி யாதகுணக்
குன்றே! அருட்கட லே!இம வான்பெற்ற கோமளமே! 95

கோமள வல்லியை, அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை, ஏத மிலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகலக லாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வார்,எழு பாருக்கும் ஆதிபரே 96

ஆதித்தன், அம்பு, அங்கி, குபேரன், அமரர்தங்கோன்,
போதிற் பிரமன், புராரி, முராரி, பொதியமுனி,
காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே 97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைவந்து நின் அடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததுஎங்கே?
மெய்வந்த நெஞ்சின்அல் லால்,ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகல்அறி யாமடப் பூங்குயிலே! 98

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலவியன்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை; வந்துஉதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில்; கமலத்தின் மீதுஅன்னமாம்,
கயிலாய ருக்குஅன்று இமவான் அளித்த கனங்குழையே 99

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி,
கழையைப் பொருத திருநெடுந் தோளும், கருப்புவில்லும்,
விழையப் பொருதிறல் வேரிஅம் பாணமும், வெண்ணகையும்,
உழையைப் பொருகண்ணும், நெஞ்சில்எப் போதும் உதிக்கின்றவே! 100

**நூற்பயன்**

ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை, அண்டமெல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூநிறத் தாளை, புவிஅடங்கக்
காத்தாளை, அங்குச பாசாங் குசமும் கரும்பும்அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணி யைத்தொழு வார்க்குஒரு தீங்கில்லையே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி துதி



## சகல கலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப்பு இதம்தரு செய்யபொன்
பாத பங்கேரு கம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே?
நெடுந்தாள் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன் செந்
நாவும், அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசு! ஒத்து இருந்தாய்;
சகல கலாவல்லியே!

பண்ணும், பரதமும், கல்வியும்,
தீஞ்சொல் பனுவலும், யான்
எண்ணும் பொழுது எய்த நல்காய்,
எழுதா மறையும்,
விண்ணும், புவியும், புனலும்,
கனலும், வெங்காலும், அன்பர்
கண்ணும், கருத்தும் நிறைந்தாய்;
சகல கலாவல்லியே!

பாட்டும், பொருளும், பொருளால்
பொருந்தும் பயனும், என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய்
உளம் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ஓதிமப் பேடே
சகல கலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற்பனமும், அவதானமும்
கவி சொல்லவல்ல
நல்வித்தையும், தந்து அடிமைகொள்வாய்
நளின ஆசனம்சேர்
செல்விக்கு அரிதுஎன்று ஒரு காலமும்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே!
சகல கலாவல்லியே!

சொற்கும், பொருட்கும் உயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலம் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு
அரச அன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத் தாயே!
சகல கலாவல்லியே!

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.

சுபம் ! சுபம் !! சுபம் !!!

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைத் தாமரை

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்,
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்;
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்;
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்;
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள்.
(வெள்ளைத்)

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்;
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈத னைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேலடி வாகிடப் பெற்றாள்.
(வெள்ளைத்)

வஞ்ச மற்ற தொழில் புரிந்துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வ மாவாள்;
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்,
வித்தை யோர்ந்திடு சிற்பியர், தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்,
வீர மன்னர்பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம்.
(வெள்ளைத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்தர் சஷ்டி கவசம்

காப்பு

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

துதிப்போர்க்கு வல்வினை போம், துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து) ஓங்கும்
நிட்டையும் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டிக் கவசந் தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்;
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனார்
கையில்வே லால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரிகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணப சரஹ வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென

வசர ஹணபவ வருக வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும், உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்

சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈரறு செவியில் இலகு குண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நண்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகமென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று

உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேவல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனிவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம் பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க

முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என் பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி ஊருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்

சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீ எனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காய்
மண்ணாளரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தாகுகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என் நாஇருக்க யானுனைப் பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை

நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரக்ஷி அன்னமுஞ் சொர்ணமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ் வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்

வாழ்க வாழ்க வாரணத் துவஜம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனைப் பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய

பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்னை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்!
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடி பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்து அடி

அறிந்து, எனது உள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்து உணவு ஆக்க
சூரபத்தமாவைத் துணித்தகையதனால்
இருபத்தெழுவர்க்கு உவந்து அமுது அளித்த
குருபரன், பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
என்னைத் தடுத்து ஆட்கொள்ள என்றனது உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
தேவர்கள் சேனாதிபதியே போற்றி!

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே, இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனகசபைக்கு ஓர் அரசே!
மயில் நடனம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரஹண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு ஏகம்பமாலை

### திருச்சிற்றம்பலம்

பிறக்கும் பொழுது கொடுவந்தது
இல்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவது
இல்லை இடைநடுவில்
குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்தது
என்று கொடுக்க அறியாது
இறக்கும் குலாமருக்கு என்சொல்லு
வேன்கச்சி ஏகம்பமே

கல்லாப் பிழையும் கருதாப்
பிழையும் கசிந்துஉருகி
நில்லாப் பிழையும் நினையாப்
பிழையும்நின் அஞ்செலுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப்
பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்
வாய்கச்சி ஏகம்பனே

கொன்றேன் அனேக உயிரைஎல்
லாம்பின்பு கொன்று கொன்று
தின்றேன் அது அன்றியும் தீங்குசெய்
தேன்அது தீர்க்க என்றே
நின்றேன் நின்சன்னிதிக் கேஅத
னால்குற்றம் நீ பொறுப்பாய்
என்றே உனைநம்பி னேன்இறை
வாகச்சி ஏகம்பனே

அன்னை எத்தனை எத்தனை அன்னையோ?
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ?
பின்னை எத்தனை எத்தனை பெண்டிரோ?
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ?
முன்னை எத்தனை எத்தனை சென்மமோ?
மூடன் ஆய்அடி யேனும் அறிந்திலேன்
இன்னம் எத்தனை எத்தனை சென்மமோ?
என்செய் வேன்கச்சி ஏகம்ப நாதனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் திருவகவல்

நினைமின் மனனே! நினைமின் மனனே!!
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே
அலகைத் தேரின் அலமரு காலின்
உலகப்பொய் வாழ்க்கையை உடலை யோம்பற்க

பிறந்தன இறக்கும் இறந்தன பிறக்கும்
தோன்றின மறையும் மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்குஞ் சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கும் மறந்தன உணரும்
புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்

அருந்தின மலமாம் புனைந்தன அழுக்காம்
உவப்பன வெறுப்பாம் வெறுப்பன உவப்பாம்
என்றிதை யனைத்தும் உணர்ந்தனை யன்றியும்
பிறந்தன பிறந்தன பிறவிகள்தோறும்
கொன்றனை யனைத்தும் அனைத்துநினைக்கொன்றன

தின்றனை யனைத்தும் அனைத்து நினைத்தின்றன
பெற்றனை யனைத்தும் அனைத்துநினைப் பெற்றன
ஓப்பினை யனைத்தும் அனைத்துநினை யோம்பின
செல்வத்துக் களித்தினை தரித்திரத் தழுங்கினை
சுவர்க்கத் திருந்தனை நரகிற் கிடந்தனை

இன்பமுந் துன்பமும் இருநிலத் தருந்தினை
ஒன்றொன் றொழியாது உற்றனை யன்றியும்
புற்புதக் குரம்பைத் துச்சில் ஒதுக்கிடம்
என்னநின் றியங்கும் இருவினைக் கூட்டைக்
கல்லினும் வலிதாக் கருதினை யிதனுள்

கொன்றேனநேக உயிரைஎல்லாப் பின்பு கொன்று கொன்று
தின்றேனதன் றியுந் தீங்கு செய்தேனது தீர்க்கவென்றே
நின்றேநின் சந்நிதிக்கேயத னாற்குற்றம் நீ பொறுப்பாய்
என்றே உனைநம்பி னேனிறை வாகச்சி ஏகம்பனே

ஊரிருந் தென்நல் லோரிருந் தென்னுப காரமுள்ள
பேரிருந்தென் பெற்றதாயிருந் தென்மடப்பெண் கொடியாள்
சீரிருந் தென்னச் சிறப்பிருந் தென்னவித் தேயத்தினில்
யாரிருந் தென்னவல் லாயிறை வாகச்சி ஏகம்பனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனாட்சி பிள்ளைத்தமிழ்

காலத்தொடு கற்பனை கடந்த கருவூலத்துப்
பழம்பாடல் கலைமாச் செல்வர்
தேடிவைத்த கடவுள் மணியே
உயிர்
ஆலவாலத் துணர்வு நீர்பாய்ச்சி
வளர்ப்பார்க்கு ஒளி பூத்தது
அருள்பழுத்த மலர் கற்பகமே எழுதாச்சொல்
மழலை ததும்பு பசுங்குதலை
சோலைக்கிளியே உயிர்த்துணையாம் தோன்றாத்
துணைக்கோர் துணையாகி
துவாத சாந்தப் பெருவெளியில்
துரியங்கடந்த பரநாத
மூலத்தலத்து முளைத்த முழு முதலே
முத்தந் தருகவே
முக்கட் சுடர்க்கு விருந்திடு மும்முலையாய்
முந்தந் தருகவே.

## கற்பகவல்லியம்மைப் பதிகம்

இல்லாமை என்னுமொரு பொல்லாத பாவியாய்
எந்நேரமும் இடருறாமல்
ஏற்காமல் ஏற்பவர்க்கு இல்லை என்று உரையாமல்
இழிதொழில்கள் செய்திடாமல்
கல்லாத புல்லர் உறவு இல்லாமல் அடுபிணி
கனாவிலும் எனைத் தொடாமல்
கற்ற பெரியோர்களொடு தர்க்கித்து எதிர்த்து நான்
கடிந்த சொல் சொல்விடாமல்
கொல்லாது கொல்லுமட மங்கையர்கள் இங்கிதக்
கொள்ளையில் மயங்கிடாமல்
குறையொன்றும் வராமல் உனதடிமை செய்ய அருள்
கூட்டுவாய் மதவேளைமுன்
வெல்லாமல் வென்றவன் இடத்தில் வளர் அமுதமே
விரிபொழில் திருமயிலைவாழ்
விரை மலர்க் குழல்வல்லி மரை மலர்ப்பதவல்லி
விமலி கற்பகவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமி அம்மை பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே

## தக்ஷிணாமூர்த்தி துதி

பூங்கமல வதனமும் பொழிகருணை நயனமும்
புன்முருவல் நிலவெறிப்பும்
பொலிசடா வியுடமதில் உறைநிலா மதியும் ஒளி
புனைகுழை இலங்கு காதும்
தேங்கு பரமானந்த சின்மயா காயமாஞ்
சிந்தியருண் முத்திரையுமேற்
சிவாநுபவ நீங்கினோர் சேரவருள் செபமாலை
சிவஞான புத்தகமுமோர்
வேங்கையதளுடையும் சரற்கால மதிகோடி
வெள்ளமென நிறைவடிவமும்
மேலான தெய்வநீ யன்றி வேறில்லை மிது
மெய்யெடுத்த கனலும்
ஓங்க வடவாலடியில் உறைகின்ற தெய்வமே
உன்னையன்றி வேறு நினையேன்
ஒன்றாகியானந்த வுருவாகி யென்னுயிர்க்
குயிரான பரமசிவமே. - *சிவஞானதேசிகர்*

## தக்ஷிணாமூர்த்தி

கல்லானின் புடை அமர்ந்து நான்மறை ஆறங்கமுதல் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத் தொடக்கை வெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம், மங்களம்
# மங்களம், மங்களம்



மக்களாக வாழுகின்ற

மக்களுக்கு மங்களம்

நன்மை, தீமை அறிந்து வாழும்

அனைவருக்கும் மங்களம்

அன்பு செய்து அவனி காக்கும்

அன்பர்களுக்கு மங்களம்

உயிர்களெல்லாம் சக்தி எனும்

சகலருக்கும் மங்களம்

எல்லா உயிரும் ஏகன் வடிவே

என்பவர்க்கு மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுப்பாசிரியர் பற்றி......
# இவர்கள்..........!!



புலம் பெயர் நாடுகளில் வாழ்ந்து தமது இளஞ் சந்ததிக்கு நமது மொழி கலை, கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியங்களை புகட்டுவது எப்படி எனக் கவலை கொள்ளும் நம்மவர்களுக்கு ஒரு விடி வெள்ளியாய் கவிஞர் பொன்னண்ணா அவர்களின் முயற்சிகள் பெரிதும் உபயோகமாகிறது எனலாம்.

சிவஸ்ரீ நா - சோமாஸ்கந்த குருக்கள்
அவுஸ்திரேலியா
சர்வதேச இந்து குருபீடம்

பொன்னண்ணா தமிழுக்காய், தமிழருக்காய், ஆன்மீகத்துக்காய் ஆற்றும் பணிசிறக்க, தன்னொளி பயக்கும் முத்துமாரி அம்மன் அருள்பணி சிறக்க, அவர் வெளியிடும் அருளமுதம் மக்கள் கரம் சிறக்க, இந்து சமயத்தின் தத்துவங்கள் இல்லம் சேர தலைமுறை தலைமுறையாய் பொன்னண்ணா குடும்பத்தின் பக்தி நெறி சிறக்க, அன்னை முத்துமாரி அருள் புரிவாள் என மனப்பூர்வமாக நம்புகின்றேன்.

சிவஸ்ரீ - ம. கணேசக்குருக்கள்
டென்மார்க்

பெருங்குளத் தம்மன் பெருமைதனைப் பேசிட தம்பெருங்குணத்தாலே முன்வந்த பொன்னண்ணா வருங்கால சந்ததியும் அன்னை அருள் அறிந்திட இன்று வழங்கிடும் அருளமுதம் அன்னை புகழாரமாகும். பொன்னண்ணா பெருந்தொண்டு பொதுத்தொண்டு பொலிந்திட புரிந்துணர்வு கொடுதாயே. உன்னருள் வேண்டி தமிழ்பணி செய்யும் உன்னடிமை பொன்னண்ணா சுகத்துடன் வாழ வரம்கொடுதாயே.....!

கவிதாயினி
திருமதி. விக்னா பாக்கியநாதன் டீ.யு
ஜேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org